நல்லவை சுடர் விட.. தீயவை பொசுங்கிட..

# கனலி

2020



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் பயிற்சிச் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பேரிடர் சூழலிலும் செங்கதிர் பரப்பிட வரும் 'கனலி'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் இரண்டாம் வருட மாணவர்களாகிய நாம் எமது 'அறிக்கையிடல் நுட்பங்களும் திறன்களும்' மற்றும் 'செம்மையாக்கல் எண்ணக்கருக்களும் முறைமையும்' ஆகிய பாடப்பரப்புக்களின் வெளிக்கொணர்தலாக, இருள் நீக்கி ஒளி பரப்பும் செங்கதிரான 'கனலி'யை உங்கள் கரங்களில் சமர்ப்பித்துள்ளோம்.

பாடப்பரப்புகளின் பாடவிதானத்திற்கு ஏற்ப செயன்முறைசார் அனுபவங்களைப் பெறும் நோக்கில் இச்சஞ்சிகைக்கான அடித்தளம் இடப்பட்டது. எமது ஊடகக்கற்கைகள் துறை மாணவர்களின் 'பல்கலையன்', 'பதிவு', 'அடையாளம்', 'விசைச்சிறகுகள்', 'மைத்தூறல்', 'கனலி 2018' மற்றும் 'கனலி 2019' வரிசையில் 'கனலி 2020' கால்பதிக்கின்றது.

**"இணரூழ்த்தும் நாறா மலரனையார்**
**கற்றது உணர விரித்துரையா தார்"**

எனும் திருக்குறளுக்கமைய நாம் கற்ற விடயங்களை பிறருக்கு கொண்டு சேர்க்கும் நோக்கில் அனைவரும் விரும்பும் வகையில் சமூகத்தில் உள்ள பல விடயங்கள் தொடர்பாகக் கட்டுரைகள், பயணக்கட்டுரைகள், நேர்காணல்கள், கவிதைகள் மற்றும் கேலிச்சித்திரங்கள் எனப் பல்வேறு வடிவங்களை உள்ளடக்கிய வகையில் எமது படைப்பினை உருவாக்கியுள்ளோம்.

2020ஆம் ஆண்டு வெளியிடப்பட வேண்டிய இச்சஞ்சிகையை நாட்டில் ஏற்பட்ட பெருந்தொற்றுக் காரணமாக உரிய நேரத்தில் வெளியிட முடியாத சூழ்நிலை உருவானது. எனினும், பல இடர்பாடுகளின் மத்தியில் இப்படைப்பை இன்று வெற்றிகரமாக வெளியிட்டுள்ளோம்.

'கனலி–2020' இனை வெளிக்கொண்டு வர உதவிய எமது துறைத் தலைவருக்கும், விரிவுரையாளர்களுக்கும், உதவி விரிவுரை யாளர்களுக்கும் எமது பணிவு கலந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, எமது சொந்தப் படைப்பு என்ற பேரார்வத்தோடு 'கனலி–2020' இனை உங்கள் கரங்களில் தந்துள்ளோம்.

**இரண்டாம் வருட மாணவர்கள்**
**ஊடகக் கற்கைகள் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பீடம்


**மாணவ ஆசிரியர்கள்**

நா. சாருமதி
பி. ஸ்ரீவித்தியா

**உதவி ஆசிரியர்கள்**

நி. கஜேந்தினி
சு. கிசோபனா
அ. றுக்ஷி வினோதா
ப. துசியந்தி
ந. ரிலக்ஷனா
த. றெஜினா
வி. டதுர்சினி
ம. லர்ஷிக்கா
செ. நிரஞ்சனா
இ. தனுஷியா
கி. தீபாணி

**நிர்வாக ஆசிரியர்கள்**

பூ. ஜெயச்சந்திரன்
மை. டிலான்
ப. சுஜீபன்
யே. பிரதீபன்
எஸ்.எம். நிப்லான்
த. சஞ்ஜீப்
செ. மேரி ரெபேக்கா
அ. றுக்ஷி வினோதா
நி. கஜேந்தினி
பா. நிர்மலா
இ.அனுஷி
க. அரவிந்தன்
பா. கனகேஸ்வரி

**கருத்துப் படங்கள்**

தே. கவினயா
அ. சங்கீர்த்தனா

**அட்டைப் புகைப்படம்**

பி. ஸ்ரீவித்தியா

**பக்க வடிவமைப்பு**

பூ. ஜெயச்சந்திரன்
ப. சுஜீபன்
நா. சாருமதி
பி. ஸ்ரீவித்தியா
அ. ரோகினி
ந. ரிலக்ஷனா
ப. துசியந்தி
அ. றுக்ஷி வினோதா
தே. கவினயா
பி. துலக்ஷா
உ. நிந்தனா
அ. ஷர்மி
இ. தனுஷியா
சு. கிசோபனா
ஜெ. கல்கி
பா. நிர்மலா
ச. சதங்கனி
கி. செல்வி
பா. கனகேஸ்வரி
நி. கஜேந்தினி

**விளம்பரம்**

நா. சாருமதி
அ. ரோகினி
பி. ஸ்ரீவித்தியா
இ. தனுஷியா
தே. கவினயா
நி. கஜேந்தினி
பூ.ஜெயச்சந்திரன்
பா. கனகேஸ்வரி

**பொறுப்பு விரிவுரையாளர்**

திருமதி அனுதர்ஷி கபிலன்

**வழிகாட்டு விரிவுரையாளர்கள்**

- திரு. யூட் டினேஸ் கொடுதோர்
- செல்வி. முனியப்பன் துலாபரணி
- திருமதி பூங்குழலி சிறீசங்கீர்த்தனன்
- செல்வி. பரஞ்சோதி சிவதர்சினி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## "ஊடக உலகுக்குப் பயன்மிக்கவர்களாக உயருங்கள்"

ஊடகங்கள் ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படுகின்றன. ஒரு நாட்டின் ஜனநாயக பண்பாட்டு மரபை உறுதிசெய்யும் பிரதான காலரண்களாக இருப்பவை ஊடகங்கள். நாட்டின் ஆட்சியாளர்கள் தொடக்கம் அதிகாரிகள் வரை அதிகம் அச்சப்படும் நெற்றிக்கண் பொறி களாகவிருப்பவை ஊடகங்கள். தரமான நடுநிலையான ஊடகங்கள்தான் உலகின் செயற்றிறன் மற்றும் வினைத்திறன் மிக்க ஜனநாயக நீரோட்டத்தை உறுதிசெய்கின்றன என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

இருந்தும், இன்றைய தகவல் தொழில்நுட்ப உலகம் வாரித்தந்திருக்கும் ஊடகப் பெருவெளி எனும் அளவுகடந்த சுயாதீனத் தன்மையினால் ஊடகங்கள் எனும் பவுத்திரம் சற்று களங்கப்பட்டிருக்கும் கவலையை நான் அடிக்கடி துறைசார்ந்த நிபுணர்களுடன் பகிர்வதுண்டு. "தண்டெடுத்தவன் எல்லாம் சண்டியன்" என எமது கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. அதையொத்து இன்று "இணைய இணைப்பு உள்ளவன் எல் லாம் ஊடகன்" எனும் பரிதாப நிலை உலகம் முழுவதும் தோன்றியிருக்கின்றது. அதிலும் இலங்கை போன்ற கீழைத்தேச மரபு நாடுகளில் இந்த நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

இந் நிலைமை வளர்முக நாடுகளின் ஜனநாயகத் துக்கும் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கும் மிகப்பெரும் அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் அமைகின்றது. அதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து, அடிப்படை மனித உரிமைகள் கோட்பாடுகளுக்கு சவால் விடுக்கும் வகையிலும் இக்கட்டற்ற ஊடகப்பெரு வெளியின் தாக்கம் அமைந்திருக்கின்றது.

இவ்வாறான ஆரோக்கியமற்ற நிலைமைக்கு ஏது காரணம் என ஆராய்கின்றபோது தொழில்வாண்மைத்துவமும் புலமைத்துவமும் அற்ற ஊடகப் பிரவேசங்களும் நகர்வுகளுமே என்பதனைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இத்தகைய நிலைமைகளைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கான தொழில் வாண்மைத்துவம் மிக்க ஊடகவியலாளர்களை உருவாக்க வேண்டிய தார்மீகக் கடமை குறித்த நாடுகளைச் சேர்ந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கு உண்டு.

அந்த அடிப்படையில் எமது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நீண்ட காலமாகவே ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகத் தனது அறிவார்ந்த பங்களிப்பை வழங்கி வருகின்றது.

குறிப்பாக, எமது பல்கலைக்கழகத்தின் முதலாவது வளாகத் தலைவர் பேராசிரியர் க.கைலாசபதி அவர்கள் தேசிய ஊடகமொன்றின் பிரதம ஆசிரியராகவிருந்தவர். இந்தத் தொடர்ச்சியின் வழி எமது பல்கலைக்கழகத்தின் பல விரிவுரை யாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்கள் இன்றும் பகுதி நேர தேர்ந்த ஊடகவியலாளர்களாகவுள்ளமை கவனிப்புக்குரிய விடயமாகும்.

அத்துடன், ஊடகத்துறை சார்ந்த கற்கைகளை எமது பல்கலைக்கழகம் நீண்ட காலமாக வழங்கிவருகின்றது. முன் னர் டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் ஊடக டிப்ளோமா கற்கையொன்றை வழங்கி வந்த எமது பல்கலைக்கழகம், பின்னர் ஊடகக்கற்கைகள் அலகை உருவாக்கி மாணவர்களை உள்ளீர்த்துக் கொண்டதுடன், அண்மையில் ஊடகக் கற்கைகள் அலகு ஒரு தனித்த துறையாக முன்னேற்றம் கண்டுள்ளது.

எமது ஊடகக் கற்கைகள் துறை பிரசவித்திருக்கும் மாணவர்களில் பலரும் இன்று தேர்ந்த ஊடகர்களாகத் தம்மைப் பல தளங்களிலும் நிலைநிறுத்தியுள்ளார்கள். இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமூகப்பொறுப்புணர்வு மிக்க அறிவுச் சமூக உற்பத்தியின் கடமைப்பாட்டை மெய்ப்பிக்கும் சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எமது ஊடகத்துறை மிகச் சிறப்பாக முன்னோக்கிப் பயணித்துவரும் நிலையில், மாணவர்களின் ஆளுமை விருத்திக்காகப் பல பயன்மிக்க செயற்றிட்டங்களை ஆற்றி வருகின்றது. குறிப்பாக, பல்கலைக்கழகங்களின் பிரதான சமூகக்கடமைகளில் ஒன்றாகக் கருதப்படும் அறிவுப் பரவலாக்கம் எனும் விடயத்தில் அதிகம் பங்களிப்புச் செய்ய வேண்டிய மாணவர் சந்ததியினர் ஊடகத்துறை சார்ந்தவர்கள். இதனை ஊடகத்துறை மாணவர்கள் இயன்றவரையில் ஆற்றுகின்றார்கள் எனும் அவதானத்திருப்தி எனக்குண்டு.

மேற்குறிப்பிட்ட அறிவுப் பரவலாக்கப் பணியின் ஒரு அம்சமாகவே ஊடகக் கற்கைகள் பயிலும் இரண்டாம் வருட மாணவர்களின் பயிற்சி இதழான 'கனலி' சஞ்சிகை அமைந்திருக்கக் காண்கின்றேன். துறைசார்ந்து தமது தொழில்வாண்மையை நிரூபிக்கவேண்டிய கடப்பாட்டினைக் கொண்டுள்ள மாணவர்கள், இப்பெருந்தொற்றுக் காலத்திலும் தமது படைப்பாக்க முயற்சிகளில் காட்டியிருக்கும் ஆர்வமும் விடாமுயற்சியும் பாராட்டத்தகுந்தவையே.

எதிர்காலத்திலும் எமது ஊடகத்துறை மாணவர்கள் ஊடக உலகுக்குப் பயன்மிக்கவர்களாக பல்வேறு வழிகளிலும் தம்மைத் தக்கவைத்துக்கொள்ளவேண்டும். கோட்பாட்டு ரீதியாகத் தாம் பெற்ற கல்வியைச் செயற்பாட்டு ரீதியாக மாற்றும்போதே ஒரு பட்டத்தைப் பெற்றதன் வெற்றியை அனுபவிக்க முடியும். இதனை எமது மாணவர்கள் நன்கு உணர்வார்கள் எனும் நம்பிக்கை எனக்குண்டு.

இன்று 'கனலி' சஞ்சிகை வெளியீடு வழியே காலத்தடைகளைக் கடந்து கண்டிருக்கும் வெற்றிபோல, தமது ஊடகப் பயணத்திலும் சிறப்பான இலக்குகளை எட்ட ஒவ்வொரு மாணவரையும் உளம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

அவர்களை இத்தடங்களில் வழிப்படுத்தும் துறைத் தலைவர் கலாநிதி. சி. ரகுராம் உள்ளிட்ட விரிவுரையாளர் குழாத்தினரை யும் நன்றியுணர்வுடன் பாராட்டுகின்றேன்.

இறை ஆசி இன்றுபோல் என்றும் உங்களுக்குக் கிட்டட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாநிதி. க. சுதாகர்**
கலைப்பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச் செய்தி

## தனித்துவமான படைப்பாக்கம்..!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் 'கனலி 2020' சஞ்சிகை வெளிக்கொண்டு வரப்படுவதையிட்டு நான் மிக மகிழ்ச்சியடைகின்றேன். இந்த சஞ்சிகையானது பல்வேறு விடயப்பரப்புகளில் தனித்துவமான தகவல்களைத் தாங்கி வருவதுடன், மாணவர்களின் ஆக்கத்திறன் கொண்ட எழுத்துருவாக்கங்களுக்கான ஒரு களமாக அமைந்து வருவது படைப்பாக்கம் சார்ந்து பாராட்டப்பட வேண்டியதாகும்.

'கனலி - 2020' ஆனது நாற்பது ஆக்கங்களை உள்ளடக்கியிருப்பதை மாணவர்களின் முயற்சியினதும், வழிநடத்தலினதும் உச்சமாகக் கருதுகின்றேன். இவ்விதழில் எவ்வித மேற்படிதலும் இல்லாமல் முற்றிலும் வேறுபட்ட பரப்புகளில் ஆக்கங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இயற்கை மருத்துவம், விவசாய வாழ்வு, கிராமிய விளையாட்டுக்கள், கலையும் வரலாறும், பண்பாடும் பாரம்பரியமும், ஆளுமைகள், சாதனைகள், அடையாளங்கள் மற்றும் விழிப்புணர்வு ஆகிய விடயப் பரப்புகளின் ஊடாக மாணவர்கள் தத்தமக்குரிய பாணிகளில் தங்கள் எழுத்துத் திறன்களை எடுத்துக்காட்டியுள்ளனர்.

ஊடகக் கற்கைகள் துறையினால் வெளியிடப்படும் மூன்றாவது மாணவர் சஞ்சிகையான 'கனலி - 2020' ஓர் தரமான, எல்லோராலும் சிநேகபூர்வமாக வாசிக்கப்படக் கூடிய வகையில் வெளிவருவதையிட்டு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், 'கனலி' சஞ்சிகையின் ஆசிரியர் பீடம், ஆக்கங்கள் எழுதிய மாணவர்கள், வழிகாட்டிய விரிவுரையாளர்கள், ஆலோசனை வழங்கிய துறைத் தலைவர் ஆகியோருக்கு வாழ்த்துக் கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கலாநிதி சி. ரகுராம்**
துறைத் தலைவர்,
ஊடகக் கற்கைகள் துறை,
கலைப் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வாழ்த்துச் செய்தி

## தரம்மிக்க வித்துக்கள் விளையும் நிலம் 'கனலி'...!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் அச்சு ஊடக ஆற்றலை வெளிக்கொண்டுவரும் மாணவர் சஞ்சிகை 'கனலி', 2020ஆம் ஆண்டிற்கான தனது பதிப்பைப் பிரசவித்துள்ள மகிழ்ச்சிகர மான தருணம் இது.

வெகுசன ஊடகத்துறை இலத்திரனியல் ஊடகங்களின் பால் அதிக கவன ஈர்ப்பைத் தக்கவைத்திருப்பதாலும், புயலென எழுந்துள்ள புதிய ஊடகங்களின் பிரவேசத்தாலும் அச்சு ஊடகங்கள் செல்வாக்கு இழந்துவிட்டனவோ என்ற ஆதங்கம் ஊடகத்துறையை ஆக்கிரமித்துள்ள இக்காலப் பகுதியில், அந்தக் கவலை வேண்டாம் என்ற உறுதியைத் தமது தரமிக்க படைப்பாக்கங்கள் மூலம் ஊடகக் கற்கைகள் மாணவர்கள் தந்திருக்கின்றனர்.

ஊடகக் கற்கைகளைக் கற்கும் மாணவர்கள் தொழில் சார் வாண்மையை ஈட்டிக்கொள்ளவேண்டும் என்பதில் எப்போதுமே சமரசத்திற்கு இடமில்லாத செயற்பாடுகளை முன்வைக்கும் ஊடகக் கற்கைகள் துறை, பெருந்தொற்றுக் காலத்திலும் சோடைபோகாது தமது பல்துறைசார்ந்த படைப் பாக்கங்களைப் படைத்திட்ட மாணவர்களின் திறனையும், அர்ப்பணிப்பையும், அவர்தம்மை வழிநடாத்திய பொறுப்பு விரிவுரையாளரதும் துணைநின்ற விரிவுரையாளர்களதும் நேர்த்திமிகு பணிப்பொறுப்பினையும் உளமாறப் போற்றுகின்றது.

இப்பெரும் முயற்சியுடன் ஓய்ந்துவிடாது, ஊடகத் துறையின் தாய்நிலமாம் அச்சு ஊடகத்துறைக்கு இம்மாண வர்கள் தொடர்ந்தும் பங்களிப்புச் செய்து, தொழில்சார் ஊடகவியலாளர்களாகப் பார்போற்றும் பணிகள் செய்திட துறைத் தலைவராய் எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**திருமதி பூங்குழலி சிறீசங்கீர்த்தனன்**
விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## 'கனலி': சமூகத்தின் பேசு பொருளாகட்டும்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடக் கற்கைகள் துறையின் இரண்டாம் வருட மாணவர்களின் படைப்பாக்க வரிசையில் 'கனலி' மீண்டும் அதே மிடுக்குடன் 2020 ஆம் ஆண்டின் பதிப்பாக அனைவரதும் கைகளில் தவழ்கின்றது. இளம் ஊடகப் படைப்பாளிகளாக விளங்கும் இந்த மாணவர்களின் இப் படைப்பானது சமூகத்தின் பலதரப்பட்ட விடயங்களை நேர்த்தியோடு பேசி நிற்கின்றது.

'கனலி'யின் மூன்றாவது இதழாக, நாட்டின் அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும் கம்பீரத்துடன் வெளிவருகின்ற இப்படைப்புக்கும், படைப்புக்குக் காரணகர்த்தாவாக விளங்கும் படைப்பாளிகள் மற்றும் வழிகாட்டிகள் அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

இதே போன்று, இனிவரும் காலங்களிலும் சமூகத்தின் அனைத்து விடயங்களும் பொதுவெளியில் 'கனலி' வழி பேசப்படுவதுடன், இவ் இளம் படைப்பாளிகள் ஊடகப் பரப்பில் தமக்கான தனித்துவம் பெற்று முன்னோக்கி நகர என் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**திரு. யூட் டினேஸ் கொடுதோர்**
விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பயணங்கள் தொடரட்டும், மாற்றங்கள் பிறக்கட்டும்...!

இரண்டாம் வருட ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் உழைப்பினால் முகிழ்த்தெழும் 'கனலி' சஞ்சிகைகயைப் பார்க்கையில் உள்ளம் பெருமை கொள்கின்றது. கற்கைச் செயற்பாட்டின் ஒரு பகுதியான சஞ்சிகை உருவாக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து, புதுமையான விடயதானங்களை ஆய்ந்தறிந்து, அவற்றினைப் பன்முகப்பார்வையில் நோக்கி வாசகர்களுக்குப் புரியும் வகையில் வகை செய்து அதனைச் சஞ்சிகையாக அமைத்துள்ளனர் எமது மாணவர்கள்.

'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதற்கிணங்க ஒவ்வொரு விடயமாக கண்நோக்கி, அதனைத் தக்க வகையில் கட்டமைத்துச் சமூகத்திற்கு நன்மை சேர்க்கும் வகையிலும், தாம் பெற்ற அறிவினை பாரில் உள்ளவர்களுக்குப் பயன்பெறும் வகையில் 'கனலி' சஞ்சிகையினைக் கட்டமைத்துள்ளனர் மாணவர்கள். கொரோனாவினால் உலகமே உறங்கிப்போக, தம் தூக்கத்தினைத் துறந்து இக்கட்டான நேரத்திலும் தமது பணியினை ஆற்ற வேண்டும் என்றுணர்ந்து அதனைச் செவ்வனவே மேற்கொண்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். மாணவர் முயற்சிகண்டு பெருமை கொள்வதோடு மேலும் இதுபோல் பல படைப்புக்களையும் அவர்கள் உருவாக்கிட வாழ்த்தி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**திருமதி. அனுதர்ஷி கபிலன்**
விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## தவிர்க்க முடியாத படைப்பாகக் கனலி சமூகத்தில் தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும்..!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் வருடாந்த சஞ்சிகையான 'கனலி' காத்திரமான உள்ளடக்கங்களுடன் வெளிவருகிறது. ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் ஊடகத்துறைப் பயணத்தின் ஆரம்பப் படிக்கட்டுக்களாக 'கனலி' திகழ்கிறது. தனியே ஏட்டுக்கல்வியுடன் நின்றுவிடாது செயன்முறைக் கல்வியையும் பயிலும் எமது மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கும் சஞ்சிகையின் படைப்பாக்கம் தொடர்பான அனுபவக் கல்விக்கும் 'கனலி' வித்திட்டிருக்கிறது. சமுதாயத்திற்காக உழைப்பவர்கள் ஊடகவியலாளர்கள். அதேபோல, ஊடகத் துறை மாணவர்களின் படைப்புக்கள் சமூகத்தின் மீதான அவர்களது அக்கறையையும் எம் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கடத்தவேண்டும் என்ற விருப்பையும் வெளிப்படுத்துகின்றன.

எமது மாணவர்கள் எதிர்காலத்தில் தம்மை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டு, நடுநிலை தவறாத ஊடகவியலாளர்களாக ஊடக தர்மத்தை நாட்டில் நிலைநிறுத்த உழைப்பார்கள் என்பது என் நம்பிக்கை. எதிர்காலத்திலும் புதுப்புது மெருகுடன் ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் தனித்துவமான படைப்பாக 'கனலி' மிளிருவதுடன் தவிர்க்க முடியாத படைப்பாகத் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. 'கனலி'யின் உருவாக்கத்திற்கு உழைத்த அனைவருக்கும் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வாழ்த்துச் செய்தி

**மு.துலாபரணி**
உதவி விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ப.சிவதர்சினி**
உதவி விரிவுரையாளர்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

### திறமைகளை வெளிக்கொணர்வதற்கான தளம்!

ஊடகக் கற்கைகள் துறையில் பயிலும் மாணவர்கள் ஒவ்வொருவரும், தங்களது கற்கைகள் சார்ந்த படைப்புக்களை ஒவ்வொரு வருடமும் வெளிக் கொணர்கிறார்கள். அவ்வாறான படைப்புக்களில் ஒரு முயற்சியே 'கனலி' எனும் பெயருடன் இரண்டாம் வருட மாணவர்களால் படைக்கப்படும் இச்சஞ்சிகையாகும்.

ஒவ்வொரு மாணவராலும் வெவ்வேறு பார்வையில் படைக்கப்படும் ஆக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இச் சஞ்சிகை இரண்டாம் வருட மாணவர்களின் அடையாளம் எனக் கூறினால் அது மிகையில்லை. அதுமட்டுமல்லாது, அம் மாணவர்கள் தங்களது எழுத்துத் திறமையினை வளர்ப்பதற்குரிய சிறந்த தளமாகவும் 'கனலி' அமைகின்றது.

இச் சஞ்சிகையினை ஒவ்வொரு வருடமும் வெளிக் கொணர முயற்சிக்கும் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர், விரிவுரையாளர்கள் மற்றும் இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரையும் வாழ்த்துவதுடன் தொடர்ந்தும் இச் சஞ்சிகைப் பயணம் சிறப்புடன் அமைய எம் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019, 2020களில் ஊடகக் கற்கைகள் துறையின் பதிவுகள் சில...



Sharing Session by 'Al Jazeera' Former Correspondent Gabrielle Menezes



International Media Support (IMS) visited Media Studies to Explore Future Collaborations



Class Exhibition on 'Theories and Models of Communication'




Ms. Luxshana Paheerathan, Media Studies Student Won the 'Best Photography' Award

The Release of 'Kanali 2019' Students' Magazine




Annual Get together of Media Studies Alumni





Media Studies Students Selected for 'Media Corps Fellowship'




Media Studies Conducted Workshop for the Faculty of Management Studies and Commerce, UoJ on 'Recording using Smart Phones'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019, 2020களில் ஊடகக் கற்கைகள் துறையின் பதிவுகள் சில...



Alumni Facilitated the Photo Journalism Practical Sessions in Students' Own Districts during the Pandemic Period




Ms. P. Sriviththiya, Second Year Student Won Second Place in Island Wide Photo Competition




Field Exposure on 'Using Drone' for Photography and Videography



Media Outlet Visit to Gather the Knowledge in Printing Techniques





Media Studies Academics took part in Workshop for School Students



'Media Complex' Proposal Submitted to Hon. Keheliya Rambukwella, Minister of Mass Media



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகக் கற்கைகள் துறை

## Department of Media Studies

### Modest Beginning of the Journey

Media Studies has a very modest beginning and notable history in the University of Jaffna. At the very early stage, it was introduced at the Faculty of Arts, as a part of literature studies, to promote the creative writing of the students. However, it is noteworthy that the then leading figures in the University and some well-wishers from the society especially from the media field determined to introduce media education from a critical sociological perspective. As a result, the University organized a society for film appreciation, by getting support from the interested parties to promote evaluation of the visual media.

### Certificate Programme – A Pioneer Course

The Extra Mural Studies Unit of the University conducted a Certificate Course in Journalism, which was one of the pioneering courses for media education in the Northern Province. The Certificate Course in Journalism, when it was introduced, did not purely depend on the University teachers, further acquired help from local journalists who were either professionals or working journalists. All those connected to Journalism - chief editors, news editors, reporters, photo journalists, printers, and distributors - were invited to give input and share their experiences as guest lecturer, which paved the way for the acceptance and utilization by academics, the resources of the local professional media.

### Training Journalists and Establishment of a Resource Centre

In early 2000s, University of Jaffna established a Media Resources and Training Centre (MRTC), a project supported by UNESCO, with the aim of providing professional media practice in Tamil media landscape.

At the Completion of foreign funding, MRTC winded up its activities in 31st of December 2016 and it has been transformed in the name of 'Media Lab' under the Media Studies, Faculty of Arts.

### Commencement of Bachelors Degree in Media Studies

In 2007, at the Faculty of Arts, the Media Studies curriculum was drafted with an emphasis on practical skills as well as the theories of communication, with the collaboration of the University of Linnaeus, Sweden. This was recommended as a subject of an Arts Degree, by the Faculty Board and by the Senate and eventually approved by the Council of University of Jaffna. Later, on 10th October 2013, the University Grants Commission approved this Bachelor of Arts in Media Studies Programme which was the first, and to date, the only degree programme in Media Studies in Tamil medium offered in Sri Lanka and attracts students from various regions.

In 2016, the curriculum of Media Studies was revisited in order to maintain the aspects of Sri Lanka Quality Framework and modified as per the Outcome Based Education (OBE) and Students Centered Learning (SCL).


### Establishment of Department of Media Studies

The University Grants Commission at its 997th meeting held on 18th October 2018 having considered the recommendations of the Management and Standing Committee of the Humanities and Social Sciences of the UGC and granted approval for the establishment of Department of Media Studies at Faculty of Arts, University of Jaffna.

The Honourable Minister of Higher Education declared the establishment of Department of Media Studies as 18th Department under the Faculty of Arts, University of Jaffna by his extra ordinary gazette notification number 2116/43 and dated on 27th of March 2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை மீண்டெழுமா வன்னியின் அடையாளம்?

இயற்கைச் செழிப்பும் வனப்பும் மிக்க வன்னியின் கடல்வளம் நிறைந்த முல்லை மண்ணில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கூழாமுறிப்புக் கிராமத்தில் அமைந்துள்ளது ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை.

1964ஆம் ஆண்டு ஆரம்பப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு, 1968 ஆனி 31 ஆம் திகதி 'பண்டாரவன்னியன்' ஓட்டுத்தொழிற்சாலை என்ற பெயருடன் தோற்றம் பெற்று மிகப்பிரபல்யம்பெற்ற கைத்தொழிற்சாலையாக அது இயங்கி வந்தது.

ஒட்டுசுட்டானை அண்டிய ஆறு கிராம மக்களின் வாழ் வாதாரம் மற்றும் பொருளாதாரம் பெருமளவிற்கு இத் தொழிற்சாலையிலேயே தங்கியிருந்தது. பின்னர், போர் நிலவிய காலத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் தின் கீழ் வடமாகாணத்தில் சகல மாவட்டங்களுக்கும் ஓடு, செங்கல் ஆகியன குறைவான விலைக்குத் தரமான உற்பத்தியாக மேற்கொள்ளப்பட்டு, விநியோகச் செயற்பாடு சீர்மையுடன் மேற்கொள்ளப்பட்டது.

> 'முல்லை மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீண்டுவரும் பிரதேசமாகையால் பல தொழில்சார் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்கின்றனர். இத்தருணத்தில் மூடப்பட்டுக்கிடக்கும் இத்தொழிற்சாலையை மீளத்திறப்பதன் மூலம் நூற்றுக்கணக்கானவர் களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அத்தோடு, பிரதேசமும் அபிவிருத்தி அடையும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை இலங்கையின் பாரம்பரியம் மிக்க கைத் தொழிற்சாலைகளுள் ஒன்று. இலங்கையில் பிராந்திய ரீதியான சுதேச உற்பத்தியை முன் னெடுத்த கால கட்டத்தில், அவ்வவ் ஊர்களின் வளங்களைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட தொழிற்சாலைகளின் வரிசையில் காங்கேசன் துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை என்ற வகையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையும் இப்பிர தேசத்தில் தரமான களிமண் கிடைப்பதைப் பொறுத்து அமைக்கப்பட்டது.

ஆனாலும், பல்வேறு காரணங்களாலும் நாட்டுச் சூழ்நிலையாலும் அத்தொழிற் சாலைகள் தொடர்ந்து இயங்காமல் போய்விட் டன. இதற்கு ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற் சாலையும் விதிவிலக்காகி விடவில்லை. 1980களில் உள்நாட்டுப் போர் பரவலாக இடம் பெற்றவேளை இங்கிருந்த இயந்திர சாதனங் களைப் பாதுகாப்பதில் மட்பாண்டக் கூட்டுத் தாபனம் பெரும் நெருக்கடியை எதிர்கொண் டது. அப்போதிருந்த நிர்வாகத்தினருக்கு ஓட்டுத்தொழிற்சாலையை மூடவேண்டிய தேவையும் ஏற்பட்டது. இதுவே, ஓட்டுத்தொழிற் சாலைக்கு ஏற்பட்ட முதலாவது விழுக்காடு ஆகும்.

இத்தொழிற்சாலை இயங்கியபோது, தேவையான மூலப்பொருட்களான களிமண், நீர் என்பன அருகிலிருந்த கூழாமுறிப்புக் குளத்திலிருந்து பெறப்பட்டன. 2009இற்கு முன் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்த களிமண் தரத்தினை விட உயர்ந்த தரத்திலேயே பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலைக்கான களிமண் பெற்றுக் கொள்ளப்பட்டது.

தொழிற்சாலை இயங்கிவந்த காலத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 150இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இங்கு பணிபுரிந்து வந்ததாகக் கூறப்படுகிறது. கூழா முறிப்புக் குளத்திலிருந்து பெறப்பட்ட களிமண்ணைத் தொழிலாளர்கள் வெட்டி அகலமான பட்டிகளிலிட, அவை உரிய இடத்திற்குக்கொண்டு செல்லப்பட்டு, அரைக்கும் இயந்திரத்தில் இட்டு அரைக்கப்பட்ட பின் மணல் மண் சேர்த்துக் குழைக்கப்பட்டு, இயந்திரத்தின் மூலம் அச்சுக்களுக்குள் செலுத்தப்பட, வேகமாக மேலும் கீழும் அசையும் அச்சுக்கள் களியினை அழுத்தி ஓடு உற்பத்தி இடம்பெற்றது. ஒட்டுசுட்டான் ஓடுகளுக்கும் செங்கற்களுக்கும் மிகப் பெரும் கேள்வி இருந்த காலம் அது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வன்னியையே ஓடுகளாலும் செங்கற்களாலும் அலங்கரித்து அழகு பார்த்த ஓட்டுத் தொழிற்சாலை யுத்தம் நிறைவுபெற்று, மீள்குடியேற்றத்தின் பின் மௌனமாகக் கிடந்த போது, 2010ஆம் ஆண்டு முல்லை மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் துறைசார் அமைச்சர்களுடன் இணைந்து அரசசார்பற்ற நிறுவனங்களின் துணையுடன் தொழிற்சாலை மீள இயங்குவதற்கான முயற்சிகளை எடுத்தது. அவ்வகையில், சிறுகல் உற்பத்தி செய்யப்பட்டு ஓரிரு ஆண்டுகள் விற்பனை செய்த போதும், அத்திட்டம் வெற்றியளிக்காது தயாரிப்பாளர்களும் வெளியேற, மீண்டும் இடிபாடுகளுடன் தொழிற்சாலை களையிழந்து போனது.

இத்தகைய காலகட்டத்தில், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயக்குவது சம்பந்தமாகப் பல கேள்விகளும் சிக்கற்பாடுகளும் நிலவி வருவதோடு, இத்தொழிற்சாலையில் உருவாக்கப்படும் ஓடுகள் நாட்டின் ஏனைய தொழிற்சாலைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் மற்றும் இறக்குமதி செய்யப்படும் ஓடுகளுக்குச் சமனான தரத்துடன் காணப்படுமா என்ற கேள்வியும் பலர் மத்தியில் காணப்பட்டது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நிர்வாகிகளிடம் வினவியபோது,

"ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் உருவாக்கப்படும் ஓடுகள் பாரம் கூடியவை. இப்பாரம் கூடிய ஓடுகளைக் கூரையின் மீது ஏற்றுவதற்கு அதிகளவு தடிகள் தேவை. கூரைக்கு அதிக தடிகள் ஏற்றுவது எனில், கட்டடம் வலுமிக்கதாக அமைய வேண்டும். அவ்வாறு கட்டுமானம் செய்வதில் அதிக செலவீனத்தால் பொருளாதாரச் சிக்கல் காணப்படுகிறது. ஆனால், நாட்டின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளிலுள்ள ஓட்டுத் தொழிற்சாலைகளின் ஓடுகள் பாரம் குறைந்தவை. ஆகையால், வடக்கிலுள்ள மக்கள் கூட அவற்றையே விரும்புகின்றனர். அதுமட்டுமன்றி, இப்போது சீற், தகரம் போன்ற மாற்றுப்பொருட்களையும் பயன்படுத்தும் வசதிகள் காணப்படுகின்றன. இதன் காரணத்தால் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை உற்பத்தி செய்யக்கூடிய ஓடுகள் முன்பிருந்த வரவேற்பைப் பெறுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. அதுவே, இத்தொழிற்சாலை மீள இயங்கத் தடையாகவுள்ள முக்கிய காரணம்" எனவும் தெரிவித்தனர்.

ஆனாலும், இப்படிக் கூறினாலும் கூட, பழமையையும், தரத்தினையும் நாடும் மக்களும் இருக்கவே செய்வர் என்ற உண்மையையும் நாம் உதாசீனம் செய்துவிட முடியாது. எவ்வாறிருந்தாலும்,இன்றைய காலகட்டத்தில் மூலப்பொருட்களோடு, உரிய தொழிலாளர்களும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பழுதடைந்த நிலையில் காணப்படும் இயந்திரங்கள்

தொழில் முனைவோரும் இங்கிருக்க, இப்பிரதேசத்தின் வளமான ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கும் பட்சத்தில், பல இளைஞர், யுவதிகளுக்கான வேலைத்தளமாக இத்தொழிற்சாலை அமையும் என்ற உண்மை நிலையில் தொழிற்சாலையை மீள்புனரமைப்புச் செய்வது வெறுமனே வாய்ப் பேச்சாக, கவனிப்பாரற்றுக் காணப்படுவது வேதனைமிக்க விடயமே.

இந்நிலையில், மிக அண்மைய முன்னேற்றமாக, இலங்கையின் மட்பாண்டக் கூட்டுத்தாபனம் கிராமியக் கைத்தொழில் அமைச்சு ஊடாக, அமைச்சர் விமல் வீரவன்ச வழியே அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து, கூட்டுத்தாபன நிர்வாகத்துடன் மாவட்ட ஓட்டுத் தொழிற்சாலை நிர்வாகமும் இணைந்து இத்தொழிற்சாலையை மீள் புனருத்தாரணம் செய்ய முன்வந்துள்ளதாக அறியமுடிகின்றது.

இது வரவேற்கப்படக்கூடியது ஆனாலும், இத்தொழிற்சாலையில் முக்கிய இயந்திரங்கள் பழுதடைந்தும், பல இயந்திரங்கள திருடுபோன நிலைமையிலும் உள்ளபோது, பழைய நிலைக்குத் தொழிற்சாலையைக் கொண்டு செல்ல பல மில்லியன் ரூபா நிதி செலவாகும் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது.

இத்தொழிற்சாலையின் மீள் இயங்குநிலை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள், இப்பிரதேசம் அதனால் அடையக்கூடிய ஆதாயங்கள் தொடர்பில் குறித்த பகுதி கிராமசேவகர் ஜெயசுதன் என்பவரிடம் கேட்டபோது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இத்தொழிற்சாலை மீளத்திறக்கப்படும் பட்சத்தில் நேரடித் தொழிலாளர்களாகப் பலரின் வாழ்வு சிறப்பதோடு, மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பு கிட்டும். உதாரணமாக உற்பத்திப் பொருள் விற்பனை, சந்தைப்படுத்தலுக்கான அனுசரணை, கடைகள், உணவு வகைகள் தயாரிப்பு எனப் பல்துறைசார் தொழில்வாய்ப்புக்களும் கிட்டுவதோடு கிராமமும் அபிவிருத்தியடையும்" எனக் குறிப்பிட்டார்.

தொழிற்சாலையின் தற்போதைய நிலையை நேரில் பார்வையிடச் சென்றபோது, களத்திலிருந்தும் பல விடயங்களை அறியமுடிந்தது. தற்போது மீள்திறப்பதற்கான திருத்தப்பணிகள் இடம்பெற்று வருகின்றன. குறித்த திருத்தப்பணியில் ஈடுபடும் சில நிர்வாகிகளுடன் உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது.


"முல்லை மாவட்டம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீண்டுவரும் பிரதேசமாகையால் பல தொழில்சார் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்கிறனர். இத்தருணத்தில் மூடப்பட்டுக் கிடக்கும் இத்தொழிற்சாலையை மீளத்திறப்பதன் மூலம் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அத்தோடு, பிரதேசமும் அபிவிருத்தி அடையும்" என அவர்கள் உறுதியாகக் கூறினர்.

மேலும், மீள் புனரமைப்புச் செய்யப்படும் இத்தொழிற்சாலை மீண்டும் 'பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை' என்ற பெயரிலேயே திறக்கப்படவுள்ளதாகத் திருத்தப்பணிகளுக்கு மேற்பார்வையாளராகவுள்ள மாத்தறை ஓட்டுத்தொழிற்சாலையின் முகாமையாளர் சமரசிறி நாணயக்கார தெரிவித்தார்.

இங்கு நடைபெறும் பணிகளைக் கவனிக்கும் மற்றுமொரு மேற்பார்வையாளரான, அம்பாறை ஓட்டுத்தொழிற்சாலைப் பொறுப்பதிகாரியாகவுள்ள யோகராசா கூறுகையில், முன்னாள் ஊழியர்களுக்கு இங்கு தொழிலாளர்களாகக் கடமையாற்ற முன்னுரிமை வழங்கப்படவுள்ளதோடு, அறுபது அடிப்படைத் தொழிலாளர்களுடன் முகாமையாளர், கணக்காளர், களஞ்சியக்காப்பாளர், காசாளர், மேற்பார்வையாளர், இயந்திரப் பொறுப்பாளர், மின் பகுதிப் பொறுப்பாளர் எனப் பலர் தகுதி, திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

வன்னியின் பழைமையும் பாரம்பரியமும் மிக்க சொத்தாகத் திகழும் 'பண்டார வன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை' மீளத் திறக்கப்படும் பட்சத்தில் வன்னிக்குப் பொருளாதார ரீதியில் புதிய ஒளி கிடைக்குமென்பதில் எந்த ஐயப்பாடுமில்லை என்பதே யதார்த்தமான உண்மை.


அதேவேளை, உரிய வாக்குறுதிகள் காப்பாற்றப்பட்டு, போரால் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்ட முல்லை மக்கள் இத்தொழிற்சாலைக்குப் பணியாளர்களாக முன்னுரிமையுடன், அரசியல் தலையீடுகளின்றி உள்வாங்கப்பட வேண்டுமென்பதிலும், சுற்றுப்புறச் சூழல் பேண்தகைமையுடன் மூலப் பொருட்களான களிமண் மற்றும் நீர்வளம் பயன்படுத்தப்படுவதிலும் மக்கள் கவனமாகவும் இருக்கவேண்டும். •



நா. சாருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை முறையில் விஷக்கடி வைத்தியம்

மண்டூர் வைத்தியர்
**பூ. செல்வராசாவுடன்**

## ஓர் சந்திப்பு

*மா*னிட இனம் தோன்றி இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் பல்வேறுபட்ட தொழில்நுட்பக் கண்டுபிடிப்புக்களால் சின்னம்மை தொடக்கம் கொரோனா வைரஸ் வரையான நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு அல்லது தளராத முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு மருத்துவம் செய்யப்படுகின்றது.

ஆனால், ஆரம்ப காலம் முதற்கொண்டு நம் முன்னோர் மூலிகைகளைக் கொண்டு இயற்கை முறையில் மருத்துவம் செய்து நோய்களைக் குணமாக்கி வந்துள்ளமையை உலகமே வியந்து நோக்குகின்றது.

எவ்வளவுதான் நவீனம் வளர்ச்சியடைந்தபோதும் இன்றும் இயற்கை மருத்துவம் எனும் துறை தனக்கென்றொரு தனித்துவத்தைத் தக்க வைத்துள்ளதைக் காணலாம். அந்தவகையில் பாம்புகள் தீண்டினால் அதன் விஷத்தை முறிப்பதற்குப் பல இயற்கை வைத்திய முறைகளை நம் முன்னோர்கள் செய்து வந்துள்ளனர். அம்மருத்துவ முறைகள் இன்றும் கூடப் பல இடங்களில் நிலைபெற்றுக் காணப்படுகின்றன.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூர் பிரதேசத்தில் பூ. செல்வராசா என்பவர் இயற்கை முறையிலான பாம்புக்கடி விஷமுறிப்பு வைத்தியம் செய்து பல மனித உயிர்களைக் காப்பாற்றி வருகின்றார். அவ்வாறு விஷமுறிவு வைத்தியத்தை மேற்கொண்டு மக்களுக்குப் பேருதவி புரியும் பூ. செல்வராசாவை நேரில் சந்தித்தோம்.

- **விஷக்கடி வைத்தியத்தை உங்களுக்குக் கற்றுத்தந்தவர் யார்?**

மண்டூர் முருகன் ஆலயத்தின் கணக்குப்பிள்ளை ஆறுமுகம் என்பவரிடம் பதினாறு வயதில் விஷக்கடி வைத்திய முறையைக் கற்றுக்கொண்டு எனது நாற்பத்தி இரண்டாவது வயது தொடக்கம் அதாவது, 1986ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்தியத்தை மேற்கொண்டு வருகின்றேன். 2017 முதல் சுமார் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்டோருக்கு வைத்தியம் செய்து காப்பாற்றி உள்ளேன்.

- **உங்களுடைய வாழ்வாதாரத் தொழிலே விஷக்கடி வைத்தியம் தானா?**

நான் ஆரம்ப காலங்களில் மீன் பிடித்தொழில் செய்தேன். பின்னர் இந்த வைத்தியம் செய்யத் தொடங்கியதால் மீன்பிடித் தொழிலைச் செய்வதில்லை. தற்போது எனது குடும்பச் செலவுகள் அனைத்தையும் என்னுடைய பிள்ளைகள் பார்த்து வருகின்றார்கள். வைத்தியம் செய்ய வருபவர்களிடம் இருந்து எந்தவிதமான கட்டணத்தினையும் எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் தாமாகவே விருப்பப்பட்டுத் தரஇயலுமான தொகையைத் தருவதுண்டு.

- **உங்களிடம் வைத்தியத்திற்கு வருபவர்களுக்கு எவ்வகை விஷம் தீண்டியுள்ளது என்பதனை எவ்வாறு அறிவீர்கள்?**

விஷம் தீண்டப்பட்டவருக்கு எவ்வகை விஷம் தீண்டியுள்ளது என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதன் மூலமும், மிளகும் பங்கம்பாளை வேரும் வாயில் வைத்து பார்ப்பதன் மூலமும் அறிய முடியும். புடையன் வகைப் பாம்பு கடித்திருந்தால் புளிப்புத் தன்மை தென்படும், நாக வகை தீண்டியிருப்பின் இனிப்பு தன்மையும், வளலைப் பாம்பு எனில் உறைப்புத் தன்மையும், விஷம் தீண்டாத பட்சத்தில் கசப்புத் தன்மையும் காணப்படும். அதனை வைத்து விஷ வகைகளை அறியமுடியும்.

- **விஷ முறிவுக்காகப் பயன்படுத்தும் மூலிகைகள் பற்றி அறியலாமா?**

விஷமுறிவுக்கு இருபத்தொரு வகையான மூலிகைகள் பயன்படுத்தப்படும். அவற்றில் மயிலட்டி, குருந்து, பங்கம்பாளை, பருத்தி, அவுரி, நாகபிடாரி, நஞ்சறபாண்டான், கொடியார் கூந்தல், ஆடாதோடை, முடக்கொத்தான், நெருகிலி, துளசி, கீழ்க்காய் நெல்லி, கெட்டி இலை, காஞ்சூரை வேர், பட்டை, சித்திரபாளம் உள்ளிட்ட மூலிகைகளை இடித்து முடிச்சுக் கட்டி ஒத்து அடித்தல் வேண்டும். புடையன் வகை தவிர மற்றைய அனைத்துவகை விஷத்திற்கும் ஒரே வகையான மூலிகையே பயன்படுத்தப்படும். அதன் பின்னர் அந்த விஷத்தினைக் கட்டுப்படுத்த இயற்கையான மூலிகைகள் கொண்டு மருந்து அரைத்து பூசுவதன் மூலம் விஷக்கல்லினால் அந்த விஷத்தை வெளியே எடுக்க முடியும்.

- **இந்த மூலிகைகள் இலகுவாக உங்களுக்குக் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றதா?**

ஆரம்ப காலங்களில் இலகுவாக மூலிகைகளைப் பெறமுடிந்தது. ஆனால் இன்று நகராக்கம், குடியேற்றங்களின் அதிகரிப்புப் போன்றவற்றால் காடழிப்பு இடம்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் காரணமாக மூலிகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதுடன் பல தேசங்களும் அலைந்து திரிந்து அவற்றைத் தேடவேண்டிய நிலை காணப்படுகின்றது. வேண்டிய மூலிகைகளைப் பெறுவதில் என்னுடைய மனைவியும் எனக்கு மிகுந்த ஒத்துழைப் பினைத் தருகின்றார்.

- **இன்று நவீன வைத்திய முறைகள் பல வந்தநிலையில் இயற்கை வைத்தியத் திற்கான முக்கியத்துவம் இன்றும் உள்ளதா?**

ஆங்கில மருத்துவம் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றபோதும் விஷமுறி வைத்தி யம் மேற்கொள்வதில் மக்கள் இயற்கை முறையையே அதிகம் விரும்புகின்றனர். காரணம் பக்கவிளைவுகள் மிகமிகக் குறைவு. மூலிகைகளுக்கு விஷம் இறக்கும் திறன் அதிகம். மேலும் குணமாவதற்கான காலம், செலவு மிகக் குறைவு. பாம்பு தீண்டிவிட்டது என்று தெரிந்தவுடன் வைத்தியசாலைக்குச் செல்கின்றோர் வீதத்தினை விட என்னுடைய வைத்தியத்தில் நம்பிக்கைக் கொண்டு வருபவர்கள் பலர். பாம்பு ஒருவருக்குத் தீண்டினால் அவருக்கு எந்த வகையான பாம்பு தீண்டியுள்ளது என்பது தெரிந்தால் மாத்தி ரமே வைத்தியசாலையில் வைத்தியம் பெறமுடியும். ஆனால், எனது வைத்தியத்தில் நாடி பிடித்துப் பார்ப்பதன் மூலமாக எந்தவகை பாம்பு தீண்டியுள்ளது என்பதனை அறிந்து அதற்குரிய வைத்தியத்தினை என்னால் வழங்க முடியும். இதற்காகவே பலர் என்னை நாடி வருகின்றனர்.

- **நீங்கள் இலவசமாகவே இவ்வைத்தியத்தை மேற்கொள்கின்றீர்கள். இவ்வாறு வருமானமின்றி வைத்தியம் புரிவது தங்களுக்கு இயலுமானதாக இருக் கின்றதா?**

இந்த வைத்தியத் திறன் கடவுளின் கொடை என்றே நான் நினைக்கிறேன். உயிரைக் காக்கும் இவ்வைத்தியத்தை நம்பிப் பலர் வருகின்றனர். அவர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப நான் இதனைச் செய்துவருகிறேன். நான் வருமானத்தை எதிர்பார்ப்பதில்லை. இயலு மானவர்களால் வழங்கப்படும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்வேன். எந்நேரமும் வைத்தியம் செய்து வருகின்றேன். 2019 ஆம் ஆண்டு ஆயுள்வேத வைத்திய பாதுகாப்பு சபையில் விஷக்கடி வைத்தியராகப் பதிவு செய்து கொண்டேன். எனது சேவைமூலம் எனக்கு மன நிறைவு கிடைக்கிறது.



விஷக் கல்


இவ்வாறாக எவ்வித வருமான எதிர் பார்ப்புமின்றி விஷக்கடி வைத்தியத்தை மேற்கொண்டுவரும் பூ. செல்வராசாவின் பதில்கள் அமைந்தன.

இன்றைய காலகட்டத்தில் அவரின் இயற்கை வைத்திய முறைகள் எவ்வா றான பயன்களை மக்களுக்கு அளிக் கின்றன என்பதனை அறிய செல்வரா சாவினுடைய வைத்தியத்துக்கு வருகை தந்து பயன்பெற்ற க.நவநாதன் என்பவ ரையும் சந்தித்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





- **ஆங்கில வைத்தியசாலைக்குச் செல்லாமல் இயற்கை வைத்தியம் செய்வதற்கு வருகை தந்தமைக்கான காரணம் என்ன?**

ஏதோ கடித்த உணர்வின் பின்னர் தலைச்சுற்றல், கால்விறைப்பு போன்றவற்றால் நான் பாதிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் இங்கு வந்து வைத்தியரிடம் எனக்கு உடல்நிலை சரியாக இல்லை எனக் கூறிய உடனேயே, அவர் என்னுடைய உடலிலே ஏற்பட்டிருந்த மாற்றங்களை நான் அவருக்கு எடுத்துரைக்காமலேயே கண்டு பிடித்துவிட்டார். இன்று மருத்துவம் ஆரம்பமானதற்குப் பின்னர் என்னுடைய உடல் நிலையில் நல்ல மாற்றத்தினை அவதானிக்க முடிகிறது.

ஆரம்பத்தில் என்னைப் பரிசோதிக்க ஆரம்பித்ததும், உங்களுக்குத் தலைச்சுற்றலும் கால்விறைப்பும் இருக்கின்றதா என்று என்னிடம் வினவினார். நான் ஆம் என்று பதில் கூற, உங்களுக்குப் பாம்பு தீண்டியுள்ளது எனக் கூறிவிட்டு அதற்குரிய வைத்தியத்தினை வழங்கினார். என்னுடைய காலின் பாதத்தினுடைய மேற்பகுதியில் மூலிகையினால் தயாரிக்கப்பட்ட மருந்து ஒன்றினைத் தடவி விட்டு, விஷக்கல்லினைப் பதித்தார். அதன் பின்பு, கிட்டத்தட்ட நான்கு மணித்தியாலங்கள் அந்த இடத்திலே இருந்தேன். நேரம் செல்லச் செல்ல என்னுடைய உடல் நிலையானது இயல்பான நிலைக்கு வந்ததனை என்னால் உணர முடிந்தது. நான்கு மணித்தியாலங்களுக்குப் பின்பு என்னுடைய காலின் மேல் பதிக்கப்பட்டிருந்த விஷக்கல்லானது காலினை விட்டு விழுந்தது. கல்லானது காலினை விட்டு விழுந்த சந்தர்ப்பத்தில் "உனக்கு இனி ஒன்றும் இல்லை மகன், நீ போகலாம்" என்று வைத்தியரின் குரல் கேட்டது.


இதுவே நான் ஆங்கில வைத்தியசாலைக்குச் சென்றிருப்பின் பாம்பு தீண்டியதனை அறிந்தால் மாத்திரமே வைத்தியத்தைப் பெற இயலும். ஏதும் அறியாத நிலையில் அங்கு சென்றிருந்தால் எனக்கான சிகிச்சை எவ்வளவு தூரம் சாத்தியமாகியிருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை என்றார் நவநாதன்.



பூ. ஜெயச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபூமி அரும்பொருட் காட்சியகம் யாழ்ப்பாணத்தின் பொக்கிஷம்

பழமையான வரலாற்றினை இன்றைய சமூகம் அறிந்து கொள்ளவும் நாளைய சமூகத்திடம் அதனைக் கையளிக்கவும் அதனைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானதாகும். அந்தவகையில், அருங்காட்சியகங்கள் வரலாற்றினைப் பாதுகாப்பதற்கு உதவுகின்றன.





யாழ்ப்பாணத்தின் வரலாற்றினைப் பறைசாற்றவும் யாழ்ப்பாணத்தின் பெருமைகளை வெளிக்கொணரவும் இம்மண் சார்ந்த முக்கிய மரபுரிமைப் பொருட்களைப் பாதுகாப்பதனையும் நோக்கமாகக் கொண்டு 2020 ஜனவரி மாதம் 25ஆம் திகதியன்று சிவபூமி அறக்கட்டளையினரால் யாழ்ப்பாண அருங்காட்சியகம் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாகக் காணப்படுகின்ற நாவற்குழியில் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி அரும்பொருட்காட்சியகம்



இவ் அருங்காட்சியகமானது பன்னிரெண்டு பரப்பு விஸ்தீரணத்தில், மூன்றடுக்கு மாடிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. நுழைவாயிலின் இரு புறமும் யாழ்ப்பாணத்தின் கம்பீரத்தினை எடுத்துச் சொல்லக்கூடிய சங்கிலிய மன்னனினது சிலையுடன் எல்லாள மன்னனினது சிலையும் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, காட்சியகத்தின் உட்பகுதியில் யாழ்ப்பாணப் பேரரசினை ஆட்சிசெய்த இருபத்தியொரு மன்னர்களின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அவர்களின் பெயர்கள், ஆட்சிக்காலங்கள் போன்ற விபரங்களும் அங்கு பொறிக்கப்பட்டுள்ளன.

மூன்றடுக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்ற காட்சியகத்தின் முதலாவது அடுக்கில் யாழ்ப்பாண வரலாற்றோடு தொடர்புடைய பல பண்பாட்டு அரும்பொருட்கள், ஒளிப்படங்கள் போன்றனவும், இரண்டாம் அடுக்கில் வரலாற்றோடு ஒன்றிக் காணப்படுகின்ற சமயம், இலக்கியம், கல்வி ஆகிய துறைகள் சார்ந்த அம்சங்களும், யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகளின் முதற் பிரதிகளும் காணப்படுகின்றன.

மூன்றாவது அடுக்கில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் வரையப்பட்ட ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அருங்காட்சியகத்தின் இரு பக்கங்களிலும் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் கார்கள், மாட்டு வண்டிகள், தட்டிவான் போன்றனவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



இதுவரை காலமும் இல்லாதவகையில் யாழ்ப்பாணத்தின் பெருமைகளைக் காட்சி வழி எடுத்துக்கூறக் கூடியதும், யாழ்ப்பாணத்திற்கு வருபவர்கள் யாழ்ப்பாணத்தின் வரலாற்றினையும் அதன் பெருமைகளையும் அறிந்து கொள்வதற்குப் பெரும் வரப்பிரசாதமாகவும் இந்த அருங்காட்சியகம் அமைந்துள்ளதென்றால் அது மிகையில்லையே.


•



பி. ஸ்ரீவித்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கில் அதிகரித்துவரும்

# சிறுவர் குற்றச்செயல்கள்

## தகுந்த நடவடிக்கைகள் உடன் தேவை!

"இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்" என்ற பொன்மொழிக்கு ஏற்ற வகையில் நமது நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமையவும் சிறப்பான சூழ்நிலை உருவாகவும் வேண்டுமானால் சிறுவர்களைச் சரியான தடத்தில் வழி நடத்தப்பட வேண்டியது அவசியமாகும்.


சந்தர்ப்ப சூழ்நிலையால் சிறுபராயத்தினர் குற்றவாளிகளாக மாறிவிடக்கூடாது. வளரும் பிள்ளைகளின் நலனைக் கருத்தில்கொள்ளும் பெற்றோர், அவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை விழிப்புடன் கண்காணிக்க வேண்டும். அதைக் கருத்திற்கொண்டே சிறுவர் நலன் தொடர்பான சட்ட விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவை மூலமே சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் நலன் ஆகியன நடைமுறைக்கு வந்தன. சிறுவயதில் குற்றம் புரிந்தோரைச் சாதாரண நீதிமன்றத்தில் நிறுத்தாமல் அவர்கள் மீதான புகாரை அல்லது விசாரணைகளை நடத்துவதற்காக 'சிறுவர் நீதிமன்றங்கள்' அமைக்கப்பட்டுள்ளன. இவை சிறுவர்களைத் தண்டிப்பதற்காக அல்ல, அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்தும் முகமாகவே அமைக்கப்பட்டுள்ளன.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் குற்றம் எனப்படுவது யாது? 18 வயதிற்குட்பட்ட சிறுவர் அல்லது சிறுமி சமூகத்தால் கட்டமைக்கப்பட்ட விதிமுறைகள் மற்றும் நெறிமுறைகளை மீறிச் செயற்படுவதாகும். யார் குற்றவாளிகள்? பிறக்கும் பொழுதே மரபணு, உளவியல் காரணிகளால் தூண்டப்படுகிறார்களா? அல்லது வாழ்ந்த சமூகச் சூழல், வளர்ந்த குடும்பச் சூழல் போன்ற பல்வேறு காரணிகளால் தூண்டப்படுகிறார்களா? என்பவை சிந்தனையைத் தூண்டும் கேள்விகளாகும். போரிற்குப் பிந்திய வடமாகாணத்தில் சிறுவர் குற்றச்செயல்கள் அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படுகின்றது. குறிப்பாகக் குடும்ப வறுமை, பிளவுபட்ட குடும்பங்கள், மது, போதைப்பழக்கம், எளிதில் ஆபாசப் படங்கள் கிடைப்பது, சகநண்பர்களின் தூண்டுதல், ஊடகங்கள் போன்றவையும் இளஞ்சிறார்களைத் தவறான பாதையில் கொண்டு செல்வதற்குக் காரணமாகின்றன.




போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடும்ப வறுமை காரணமாகத் தந்தையுடன் இணைந்து சட்டரீதியற்ற மதுபான விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் திருட்டில் ஈடுபட்டமை போன்ற பல குற்றச்செயல்களில் ஈடுபட்ட சிறுவர்கள் தற்பொழுது சீர்திருத்தப் பள்ளியில் புனர்வாழ்வு பெற்றுவருகின்றனர்.

குற்றச்செயல்களில் ஈடுபட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வினை அளிக்கும் வகையில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் புனர்வாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வீடுகளில் ஒரு நிறைவான சூழலை வளர்த்தெடுக்க முடியாத பெற்றோரிடம் இருந்து போதிய கவனம் கிடைக்காமையினால் குற்றச்செயல்கள் ஆரம்பம் கொள்வதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர். அதாவது, உணர்வு ரீதியிலான வெற்றிடம் ஒன்று உருவாகும்போது அதை சிறுவர்கள் விரும்பத்தகாத செயலில் ஈடுபட்டு நிரப்புகின்றனர் என்கின்றனர் அவர்கள்.

பிளவுபட்ட குடும்பச் சூழலில் வாழும் சிறுமிகள் பெற்றோரிடமிருந்து அன்பும் ஆதரவும் கிடைக்கப்பெறாத சூழலில் வெளிநபர் ஒருவரிடமிருந்து காதல் எனும் பெயரில் கிடைக்கும் போலியான அன்பை நம்பி ஏற்று, சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படாத சிறுவர் திருமணம் அல்லது உடன்போக்குத் திருமணத்தில் இணைகின்றனர். போலியான நபர்களால் ஏமாற்றப்பட்ட பின்னர் சிறுமியர்கள் சிறுவயதிலேயே கர்ப்பவதியாகி நம்பிக்கையில்லம் (Safe house) போன்ற நிலையங்களிற்கு அனுப்பப்பட்டு சீர்திருத்தம் செய்யப்படுகின்றனர்.

"ஒருவன் தான் சார்ந்த சமூகத்தில் பல தரப்பட்ட குழுவினருடன் பழகும்போது குற்றச் செயல்களை அவர்களிடமிருந்து கற்றுக் கொள்கின்றான்" என உளவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்வின் சதர்லாண்ட் கூறியுள்ளார். சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எதனைப் பார்க்கின்றார்களோ அதனைப் போன்றே செயற்படும் ஆற்றலை உடையவர்கள்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் மீண்டும் போராட்டம், தமிழர் உரிமை எனும் எண்ணப் பாங்குகள் சிறுவர்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே எழக் கூடாது என்பதனை நோக்காகக் கொண்டு சிலரால் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன எனச் சமூக ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதன்படி, இன்று முக்கியமாகத் திகழ்வது போதைப் பொருட்கள் பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து விநியோகிக்கப்படுவதாகும். இதன் விளைவாகவே, பாடசாலை மாணவர்கள் சிலர் கொவிட்-19 காலத்தில் போதைப் பொருள் கிடைக்கப் பெறாமையால் தற்கொலை முயற்சிகள் போன்ற தவறான செயல்களில் ஈடுபட்டுள்ளமையையும் அறிந்திருக்கின்றோம்.

பாடசாலை மாணவர்களைப் பிரதானமாக இலக்குவைத்தே போதைப் பொருட்கள் வடக்கில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன என்பதைக் காவல் துறையினரும் ஏற்றுக்கொள்கின்றனர். இதற்காகக் குறிப்பிட்ட போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கையாளும் வழிமுறைகளில் ஒன்று, முதலில் குறித்த சிறுவனைப் போதைப்பொருள் நுகர்வில் ஈடுபடச்செய்வது. அதன் விளைவால் குறித்த சிறுவன் போதைப்பொருளிற்கு அடிமையானதும், அவனைக் கொண்டு போதைப்பொருள் விற்பனையை மேற்கொண்டுவருவதாகும். இவ்வாறு போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட பல சிறுவர்கள் இன்று சீர்திருத்தப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இளம் பிஞ்சுகளின் மனதில் குற்றச் செயல் அல்லது வன்முறை எனும் நஞ்சு பாயாமல் இருக்கவேண்டுமாயின், பெற்றோர் குழந்தைகளிடம் அன்புடன்




கூடிய கண்டிப்பும் காட்டி அரவணைக்க வேண்டும். அத்துடன் சமூக நிறுவனங்களும் நல்லொழுக்கங்களைப் போதிப்பது மட்டுமல்லாமல் பிரச்சினைகளை அறிந்து உளநல ஆலோசகர்களாகவும் விளங்க வேண்டும். ஊடகங்களும் குற்றச்செயல்கள், வன்முறைகள், ஆபாசங்களை நீக்கி சிறுவர்களின் மனதில் நல்லெண்ணங்களை ஏற்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகளைக் காட்சிப்படுத்துவது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"1939ஆம் ஆண்டு 48ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம்பராயத்தவர் கட்டளைச் சட்டத்தின் 51ஆவது பிரிவிற்கு அமைவாகக் குற்றச் செயலில் ஈடுபட்ட 12 - 16 வயதிற்குட்பட்டவர்களைச் சீர்திருத்தும் நடவடிக்கையாக நற்சான்றுப் பாடசாலைகள் அமைக்கப்பட்டு சீர்திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குற்றச் செயலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் சிறுவனை அல்லது சிறுமியைக் குற்றம் நிரூபிக்கப்படும் வரை நீதிமன்றங்களுக்கு இருபத்தொரு நாட்களுக்கு ஒரு தடவை அழைத்துச் சென்று தடுத்து வைப்பதற்கான தடுப்புக்காவல் இல்லமாகவும் சீர்திருத்தப்பள்ளி காணப்படுகிறது" என நன்னடத்தை அதிகாரியான வ.விக்னராஜ் குறிப்பிடுகிறார்.

குற்றம் நிரூபிக்கப்பட்ட நபர்கள் சீர்திருத்தத்திற்குரிய ஆகக்கூடிய காலமாக மூன்று வருடங்கள் தடுத்து வைக்கப்படுவார்கள். மாறாக, சிலருக்குக் காலம் குறிப்பிடப்படுவதில்லை. இதற்குக் காரணம் சீர்திருத்தத்திற்குத் தேவையான காலத்தைச் சீர்திருத்தப்பள்ளி அதிபரே தீர்மானிக்க இடம் வழங்குவதாகும். அதாவது, குறித்த சிறுவனின் நடத்தையில் குறித்த பிரதேசத்திற்குரிய நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் அதிபர் திருப்தியடைவார்கள் எனில், குறித்த சிறுவர்களை அவர்கள் விடுவிக்கலாம்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் சிறுவர்கள் சம்பந்தப்படும் சிறியளவிலான களவுகள் அதிகமாக இடம்பெறுவதும் காவல்துறையினரால் அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடும் பெரும்பாலான சிறுவர்கள் வீடுகளில் போதிய கவனிப்பின்மை மற்றும் வறுமையால் இவற்றில் இணைந்து கொள்வதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அதேவேளை, போதைப்பொருள் பயன்பாட்டிற்கு அடிமையான சிறுபராயத்தினர் சிலரும் வடபகுதியில் தீவிரமான குற்றச் செயலில் ஈடுபட்டிருந்தமை அண்மைக் காலங்களில் அதிகம் அவதானிக்கப்பட்டுள்ளது. பாரிய களவுகள் மற்றும் பாலியல் குற்றங்கள் ஆகிய பல குற்றச்செயல்களிலும் இவர்களின் ஈடுபாடு காணப்படுகின்றது. இத்தகைய சிறுவர்களின் குற்றச் செயல்கள் தவிர்க்கப்படுவதற்குக் குடும்பக் கட்டமைப்பு என்பது சிதையாது பேணப்படவேண்டும் எனவும் நன்னடத்தை அதிகாரி வ.விக்னராஜ் குறிப்பிட்டார்.

குடும்பத்தவர்களால் பிள்ளைகளுக்குப் போதியளவிலான பராமரிப்பு வழங்கப்பட வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுடன் அதிக நேரத்தைச் செலவளித்து, பிள்ளைகளின் தேவையை அறிந்து நிறைவேற்றுதல் வேண்டும். குடும்பத்தினர் பிள்ளைகளுக்குரிய பாடசாலைக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் வேண்டும். சமூக நிறுவனங்கள் தமது பொறுப்பை உணர வேண்டும் என்கிறார் அவர்.

இந்த விடயத்தில் ஊர்கூடித் தேரிழுப்பதாக சமூகத்தில் அக்கறையுள்ள அனைவரும் இணையவேண்டும். கண்முன்னே எமது இளைய சமுதாயம் தடம்மாறிச் செல்வதை நாம் அனுமதிக்கத்தான் போகின்றோமா?

•



சு. கிசோபனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வட்டுவாகல்

## கிராமியப் பாரம்பரியத்தின் விளைநிலம்..!

### கரகமும் கும்மியும் ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்படும் விந்தை

இலங்கைத் திருநாட்டின் வடமாகாணத்தில் வற்றாத வளம் கொழிக்கும் வன்னி மாநகரிலே தமிழ் வீரத்துடன் தமிழ்வாசம் வீசும் முல்லைத் தீவிலே வளத்துக்கு இலக்கணமாக நந்திக்கடலின் முத்தாக விளங்கும் ஆன்றோரையும் சான்றோரையும் இவ் ஞாலத்திற்கு உவந்தளிக்கும் இடங்களில் ஒன்று வட்டுவாகல்.

இவ் ஊர் தற்போது வட்டுவாகல் என அழைக்கப்பட்டாலும் இதன் பழைமையான பெயர் வெட்டுவாய்க்கால் என்பதாகும். ஊரின் முன்னே இருமருங்கிலும் நீர் தேங்கி ஆறாக ஓடுகின்றது. இவ் ஆற்றினைக் கடலுடன் கலக்க வெட்டி விடப்பட்டு கடலில் உள்ள உப்புநீர் ஆற்றினுள் பிரவேசித்து, அவ் ஆற்றில் உள்ள கடல்வாழ் உயிரினங்கள் பல்கிப் பெருகி, இவ் ஊர் மக்களின் வாழ்வாதாரத்திற்குப் பயன்படுகின்றன. இச் செயற்பாடு ஒருபுறம் இருக்க இவ் ஆற்றினை, வாய்க்கால் அமைத்து கடலுடன் வெட்டி விடப் படுவதால் இவ் ஊர் வெட்டுவாய்க்கால் எனச் சிறப்பாக அழைக்கப் படுகிறது.

> “கடந்த காலங்களில் போரின் கொடுமையைச் சந்தித்த இந்த மண் பாரம்பரியக் கலைவடிவங்களுக்குப் பேர்போனதென்பதும் கலைஞர்கள் பலரும் இம்மண்ணில் அன்றுதொட்டு புகழோச்சி வருவதும் பலரும் அறியாத விடயமாகும்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.சூசைமுத்து

கடந்த காலங்களில் போரின் கொடுமையைச் சந்தித்த இந்த மண் பாரம்பரியக் கலைவடிவங்களுக்கும் பேர்போனதென்பதும் கலைஞர்கள் பலரும் இம்மண்ணில் அன்றுதொட்டு புகழோச்சி வருவதும் பலரும் அறியாத விடயமாகும்.

வட்டுவாகலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இரத்தினகோபால் அண்ணாவியார் கரகாட்டம், கும்மியாட்டம் அத்துடன் சிந்துநடைக்கூத்து போன்றவற்றை நெறியாள்கை செய்து வருகிறார். மேலும் இ.நாகலிங்கம் அண்ணாவியாரின் நெறியாள்கையில் கண்ணண் நாட்டுக் கூத்தில் மோகவஞ்சியாகவும், 1970களில் எஸ். ஆறுமுகம் அண்ணாவியாரின் நெறியாள்கையில் கோவலன் கண்ணகி நாட்டுக் கூத்தில் கண்ணகியாகவும் நடித்துள்ளார். இக்கலைகளை இன்றும் வட்டுவாகல் மண்ணில் வளர்த்துவருகின்ற பெருமை கணபதிப்பிள்ளை இரத்தினகோபாலைச் சாரும்.

2009 ஆம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தில் தனது இரு கால்களையும் இழந்த வட்டுவாகல் தந்த முத்தான சி.சூசைமுத்து என்பவர் 1999களில் கலை நிகழ்ச்சிகள் நாடகங்கள், வில்லிசை, கூத்து முதலானவற்றில் ஈடுபட்டு வந்ததுடன் கலைத்துறைக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். யுத்தத்தின் பின் இவர் கலை நிகழ்வுகளில் பங்குபற்ற முடியாது என்ற ஏக்கத்தோடு இருந்தவேளை, இவருடைய அண்ணாவியாரின் ஊக்கத்தினாலும் அவர் கொடுத்த அறிவுரையினாலும் பொய்க் கால்களை அணிந்து மீண்டும் நடிப்புலகில் கால்பதித்தார். இதன் பின் ஐந்து மேடைகளில் பொய்க்காலுடன் அரசனாக நடித்தார். அதுமட்டுமின்றி பொய்க்காலிரண்டும் இல்லாமலும் இந்திய சினிமாப் பாடல்களுக்கு நடனமாடி பாராட்டும் பெற்றார். 2015ஆம் ஆண்டு 'முனை' எனும் ஆவணப்படம் இவரைப் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊடகக்கற்கைகள் மாணவரான திவாகரால் உருவாக்கப்பட்டது. அதே வேளை, எல்லை, மற்றும் கணவன் இல்லாத மனைவி ஆகிய படங்களிலும் சூசைமுத்து நடித்துள்ளார்.

போர்வடுக்கள் மத்தியிலும் பல கலைஞர்களைக் கொண்டு விளங்குகின்ற வட்டுவாகலில், மக்களைக் காத்து வருகின்ற சப்த கன்னித் தாய்மார் ஆலயத்தில் வருடா



சப்த கன்னித் தாய்மார் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் தைப்பொங்கலை அடுத்துவரும் நாளான பட்டிப்பொங்கலை அவ்வூர் மக்கள் வெகுவிமர்சையாகக் கொண்டாடுவதுடன் அத்தினத்தில் கும்மியாட்டத்தினையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடிவருகின்றனர். இக் கும்மியாட்டத்திற்கென வட்டுவாகல் பிரதேசத்தில் ஒரு சடங்கே காணப்படுகின்றது. இச் சடங்கானது காலம் காலமாக அழியாது நடைமுறையில் இருப்பதென்பது ஒரு சிறப்பம்சமே.

தமிழரின் பஞ்சாங்கக் காலக்கணிப்பில் ஒரு வருடத்தில் உள்ள மாதங்களைத் தமிழ் மாதங்கள், ஆங்கில மாதங்கள் என இரண்டாக வகைபிரித்துப் பார்க்கிறார்கள். அதில் தமிழ் மாதமான மார்கழி மாதம் முதலாம் நாளிலி ருந்து தைப்பொங்கல் மறுநாள் வரை வட்டுவாகல் பிரதேசத்திலுள்ள அனைத்து சைவசமயத்தினைப் பின்பற்றும் மக்களின் வீடுகளில் கன்னிப்பெண்கள் தமது வீட்டி னைச் சுத்தம் செய்து அதிகாலையில் எழுந்து குளித்து தூய்மையான ஆடை அணிந்து சப்தகன்னிமாரை நினைத்து வீட்டு முற்றத்தில் பசுவின் சாணம் கொண்டு ஒரு வட்டவடிவில் மொழுகி அதன் மேல் சாணத்தினால் சிறு பிள்ளையார் பிடித்து வைத்து, பூ வைத்து வணங்குவார்கள். இவ் வழக்கம் பொங்கலின் மறுநாள் வரை இடம்பெறும். ஒவ்வொரு நாளும் பனையோலை கொண்டு சிறிது சிறிதாகப் பின்னி இறுதி நாள் அதனைச் சிறிய ஓலைப்பெட்டியாக வடிவமைத்துக் கொள்வார்கள். முப்பது நாட்களும் சைவ உணவையே உண்பார்கள். முப்பதாவது நாள் பொங்கல் பொங்கி அப்பிள்ளையாருக்குப் படைத்து வணங்குவார்கள்.


ஓலைப்பெட்டி

இறுதிநாள் சடங்காக வட்டுவாகல் பிரதேசத்தில் சப்தகன்னிமார் ஆலயத்திற்கு அருகில் காணப்படும் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூஜையானது இடம்பெறும். பூஜை முடிந்தவுடன் ஆண்கள் கரகம் கட்டியும் பெண்கள் கும்மியடித்தும் சடங்கினை ஆரம்பிப்பார்கள். இக் கரகாட்டம், கும்மியடித்தல் ஆகியன முக்கியமான கொண்டாட்டமாகவே காணப்படுகின்றன.

கும்மி என்பது தமிழ்க் கடவுளர்களை எண்ணி கிராமப்புறங்களில் பயபக்தியுடன் ஆடப்படும் ஒரு பாரம்பரியக் கலையாகக் காணப்படுகின்றது. பலர் கூடி ஆடும் ஒருவகை நடனம் என்றே கும்மியைக் கூற முடியும். இது காலம் காலமாக ஆடப்பட்டு வரும் பாரம்பரியக் கலையாகும். பலர் வட்டமாக ஆடிக் கொண்டோ அல்லது இரு புறமாக சரிசமமாக நின்று ஆடிக்கொண்டே வரும்போது இசைக்குத் தக்கவாறு தம் கைகளைத் தட்டி கால்களையும் இடுப்பையும் தலையையும் அழகுற அசைத்துக் குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டாக ஆடுவதைப் பார்க்கக் கண்கோடி வேண்டும்.

ஆண்களின் கரகாட்டத்தினை விட பெண்களின் கும்மியடித்தலைப் பார்வையிடக் கூடும் கூட்டம் அதிகம். இதனால் ஆண்கள் தமது கரகாட்டத்தின் பக்கம் அதிக பார்வையாளரைக் கவரும் வகையில் உத்திகளைக் கையாண்டு புதிய நுணுக்கமான ஆடல்களை ஆடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கும்மி நடனம்

பின்பு ஆண்களும் பெண்களும் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று விநாய கரை வழிபடவென மெழுகி இருக்கும் இடத்தினைச்சுற்றி வட்ட வடிவத்தில் நின்று கும்மி அடித்தலையும் கரகாட்டத்தினையும் ஆடுவார்கள்.


கும்மியடிக்கும் போது பெண்கள் வயது வேறுபாடின்றி அனைவரும் இணைந்து ஆடுவார்கள். கும்மியாட்டம் நிறைவ டைந்த பிற்பாடு வீட்டில் உள்ளவர்களினால் சிறியதொகைப்பணம், உணவுகள் மற்றும் குளிர்பானங்கள் என்பன வழங்கப்படும். இதன் பின்னர் வீட்டிலிருக்கும் கன்னிப் பெண் தங்களால் ஆக்கப்பட்ட ஓலைப் பெட்டியினுள் படைக்கப்பட்ட பொங்கலை யும் பிள்ளையாரையும் வைத்து குறித்த கும்மிப் பெண்களுடன் செல்வார். இவ்வாறு ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று ஆடிய பின் இறுதியில் அனைத்து வீடுகளிலும் உள்ள கன்னிப்பெண்கள் கும்மியாட்டக் குழுவுடன் இணைந்து கோவிலிற்குச் சென்று அங்கு இடம்பெறும் விசேட பூஜைகள் மற்றும் கிரியைகளில் பங்குபற்றி, ஆலய முன்றலில் இறுதியாக இடம்பெறும் கும்மியாட்டத்தினையும் கரகாட்டத்தினையும் பார்த்து இரசிப்பார்கள்.

இதனைத் தொடர்ந்து கன்னிப்பெண் கள் பெட்டிகளுள் வைத்து கொண்டு சென்ற பிள்ளையாரினை, அந்தணர்கள் நந்திக் கடலில் கரைப்பதற்காக எடுத்துச் செல்வர். அவ்வேளையில், அப்பெண்களின் திருமண முறையிலுள்ள ஆண்கள் (மாமன், மச்சான்) கன்னிப் பெண்கள் ஓலைப் பெட்டியிலுள் வைத்திருக்கும் பொங்கலைப் பறித்துச் சென்று உண்டு மகிழ்வார்கள். இவ்வாறாக வட்டுவாகலின் கும்மியுடனான சடங்கு காணப்படுகிறது.

இதில் சிறப்புவாய்ந்த விடயம் யாதெ னில், இன்றும் குறித்த ஆலயத்தினுள் தமிழ ரின் பாரம்பரியமாக விளங்கும் இந்த கும்மி மற்றும் கரகாட்ட நடனமானது இன்றும் இடம்பெறுவதைக் காணமுடிவதாகும்.

இன்றும் தமிழரின் மரபை அடையாளப் படுத்தும் கலைகளில் ஒன்றான கும்மியும் ஏனைய கலை வளங்களும் வட்டுவாகலில் பேணப்பட்டு வருகின்றமை சிறப்பிற்குரி யதாகும். இக் கலைகளை எதிர்கால சந்ததி யினரும் பாதுகாத்து அடுத்த தலைமுறைக ளுக்குக் கொண்டுசெல்வார்கள் என்பதே அனைவரதும் நம்பிக்கையாகும்.


•



இ. தனுஷியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மலையகத்தில்

# ஓர் ஆணழகன்

மாதவன் ராஜகுமாரன்

நேர்காணல்


உலகளாவிய ரீதியில் தம் திறமைகளை வெளிக்காட்டி பல ரசிகர்களைத் தன்பால் ஈர்த்து வைத்திருக்கும் பல இலட்சக்கணக்கான சாதனையாளர்களை நாம் பார்த்திருப்போம். அவர்கள் தங்களுடைய இலக்கை அடைய மேற்கொண்ட முயற்சிகள், எதிர்நோக்கிய இன்னல்கள், அதற்கான எதிர்நீச்சல்கள் பற்பல. இவ்வாறே பல துன்பங்களைச் சந்தித்திருந்தாலும் தமிழர்களின் திறமைகளை உலகறியச் செய்த தமிழ்ச் சாதனையாளர்கள் சிலரையாவது நாம் அறிந்திருக்கவேண்டும். இலங்கையில் தமிழர்களின் திறமைகள் வெளிக்கொண்டு வரப்படுவது மிகக் குறைவாயினும் சிலர் தமது விடா முயற்சியால் வெற்றிவாகை சூடியுள்ள பல சந்தர்ப்பங்கள் உண்டு என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் பசுமைத்தேசமான மலையகத்தில் நுவரெலியா மாவட்டத்தில் லபுக்கலை, கொண்டக்கலை எனும் பொருளாதார ரீதியில் பின் தங்கிய ஒரு சிறிய கிராமத்தில் மாதவன் மற்றும் பரமேஸ்வரி என்ற ஏழைத் தோட்டத்தொழிலாளர்களுக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் மாதவன் ராஜகுமாரன்.

மாதவன் ராஜகுமாரன் எம் தாய் நாட்டையும், தமிழர்களையும் மற்றும் மலையக மண்ணையும் பெருமைப்படுத்தும் பல சாதனைகளை உடற்கட்டமைப்புத் துறையில் புரிந்துள்ளார். அவருடனான நேர்காணல் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உங்கள் பாடசாலைப் பருவம் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

எல்லோரின் வாழ்க்கைப் பயணத்தி லும் பாடசாலைப்பருவம் என்பது என்றுமே மறக்கமுடியாத நினைவுகளை எமக்கு விட்டுச்செல்லும் ஓர் அழகிய வசந்த கால மாகும். நான் எனது ஆரம்பக் கல்வியைக் கலைவாணி தமிழ் மகாவித்தியாலயத்தில் ஆரம்பித்து தரம் எட்டு வரை அங்கு கல்வி பயின்றேன். அதன் பிறகு நுவரெலியா பரிசுத்த திருத்துவக் கல்லூரியில் கல்விப் பொதுத்தராதரச் சாதாரண தரம் வரை படித்தேன். எனது உயர்தரக் கல்வியைப் புஸ்ஸல்லாவ மத்திய கல்லூரியில் தொடர்ந் தேன். பாடசாலைப் பருவத்திலேயே எனக்கு உடற்கட்டமைப்புத் துறையின் மீது ஏற்பட்ட அதீத ஆர்வத்தினால் உயர் கல்வியைத் தொடராது உடற்கட்டமைப்பு முயற்சிகளில் இறங்கினேன்.

**ஆணழகன் போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும், உடலைக் கட்டமைக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?**

சிறுவயதில் நான் அதிகமான திரைப்படங்கள் மற்றும் மல்யுத்த விளையாட்டுக்களைப் பார்ப்பேன். அதிலுள்ள நாயகர்களின் உடற்கட்டமைப்பைப் பார்த்து இரசித்திருக்கிறேன். அவர்களது உடற்கட்டமைப்பிற்காக அவர்களுக்கு இரசிகர்களாகிய பலரை நான் கண்டிருக் கிறேன். அதுவே எனது உடலைக் கட்டமைக்க வேண்டுமென ஓர் ஆசையை என் மனதில் தோற்றுவித்தது. இவ் ஆசையே என்னை ஓர் ஆண் அழகனாக இன்று உங்கள் முன் நிறுத்தியிருக்கிறது.

இங்கு பணபலத்தின் மூலம் வெற்றியைத் தன்வசப்படுத்திக்கொள்ள முடியாது. முழு முயற்சியின் மூலம் மட்டுமே வெற்றியைத் தனதாக்கிக் கொள்ளக் கூடிய ஒரே துறையாக உடற்கட்டமைப்புப் போட்டிகள் அமையப் பெறுகின்றன. அதனை அறிந்த பின்னரே நான் என் உடலைக் கட்டமைக்க ஆரம்பித்தேன். பல இரசிகர்களைப் பெற்றுக்கொள்வதோடு பார்வையாளர்கள் மத்தியில் நானும் ஓர் நட்சத்திரமாக வேண்டும் என்ற எண்ணம் தோன் றியது. அதன் பின்பே நான் இத்துறையைத் தெரிவு செய்து என் திறமைகளை வளர்த்துக்கொண்டேன்.

**உங்களது இந்த வெற்றிப்பயணத்தில் நீங்கள் பல சவால்களைச் சந்தித்தி ருப்பீர்கள். அது பற்றிக் கூறமுடியுமா?**

நிச்சயமாக, எமது நாட்டைப் பொறுத்தவரையில் நாம் சிறுபான்மையினர் என்பதால் எந்தத் துறையாயினும் போராடாமல் எம்மால் நிலைத்திருக்க முடியாது. பல புறந்தள்ளல்களையும், பக்கச்சார்பான ஓரங்கட்டுதல்களையும் கடந்து நாம் எம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைநிறுத்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளே இங்கு அதிகம். இதில் நான் மட்டும் விதிவிலக்கல்ல.

எனது ஆரம்பகாலப் போட்டிகளில் பல பக்கச்சார்பான செயற்பாடுகளை நேரடியாகக் கண்டேன். தமிழன் என்ற காரணத்தால் அநேக மேடைகளில் ஓரங்கட்டப்பட்டேன். பலரின் சுயநலத்தால் வெற்றிகள் எனக்கு எட்டாக்கனியாகவே இருந்தன.

ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் கலந்து கொண்டு தாய்நாட்டுக்காகத் தங்கப்பதக்கம் வென்றெடுத்து நாடு திரும்பியபோதும் கூட ஓரங்கட்டுதலிற்கு முகங்கொடுக்க நேர்ந்தது. நாட்டிற்காக தங்கம் வென்று வந்த என்னை அக்கால அரசாங்கம் ஓர் தேநீர்க் கோப்பையைப் பரிசளித்து நாட்டிற்கு வரவேற்றது என் பதை என் வாழ்வில் நான் எந்நிலையை அடைந்தாலும் மறக்கமாட்டேன்.

அத்துடன், நுவரெலியா மாவட்டத்தில் உடற்கட்டுமானப் பயிற்சிகளில் ஈடுபடுபவர் களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந் தது. இதனால் என் பிரதேசத்தில் உடற்கட்ட மைப்புப் பயிற்சிகளிலும், உடற்பயிற்சிகளிலும் ஈடுபடுவதற்கு எனக்கு ஒழுங்கான ஒரு பயிற்சி நிலையம் இருந்ததில்லை. தரமான பயிற்று நர்கள் இருக்கவில்லை. எனது ஆரம்பகால பயிற்சிகளின் போது எனக்கென ஒரு சிறந்த பயிற்றுநர் இல்லாமல் நானேதான் பயிற்சி செய்து பல போட்டிகளில் பங்குபெற வேண்டி யிருந்தது.

அத்தோடு, மலையகத்தில் இருக்கும் முக்கியமான பிரச்சினை என்னவென்பது எம் அனைவருக்கும் தெரியும். தோட்டத் தொழிலா ளர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் இன்று வரை கிடைக்கவில்லை. எனது தாய், தந்தை இருவருமே தோட்டத்தொழிலாளர்கள். இத னால் மலையகத் திறமைசாலிகள் பலர் எதிர் நோக்கும் மிகப்பெரிய பொருளாதாரச் சிக்க லுக்கு நானும் முகங்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலை எனக்கிருந்தது.

உடற்கட்டுமானத்திற்குத் தேவையான சத்துணவுப்பொருட்கள், உடற்பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும்



தமிழர்களின் திறமை வெளிக்கொணரப்படுவதில் இருக்கும் பல பிரச்சினைகளை அனுபவத்தின் அடிப்படையில் பலமுறை நான் கண்டிருக்கிறேன். மலையக இளைஞர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுவதில் எதிர்நோக்க வேண்டிய தடைகள் பல. எம்மிடமுள்ள தாழ்வு மனப்பான்மையை நாம் இல்லாதொழிக்க வேண்டும். எம்மால் முயற்சி செய்தால் முடியும் என்பதை முதலில் நாம் உணர வேண்டும். இப்போது பலர் என்னைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். முயற்சியென்ற ஒன்று இருந்தால் போதும் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்துகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத வறுமை நிலையைக் கடந்தே நான் முன்னேறி வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

**இவ்வாறான சூழ்நிலையில் எவ்வாறு உங்களால் இந்த சவால்களில் இருந்து மீண்டுவர முடிந்தது?**

வறுமைக் கோட்டிற்கு உட்பட்டு வாழ்ந்து வந்த காலத்திலும் என் பெற்றோர் என் முயற்சிகளில் முழு ஒத்துழைப்பையும் வழங்கினார்கள். பொருளாதார ரீதியிலும் சரி உடல், உள ரீதியிலும் சரி எனது வெற்றிப்படிகளை நோக்கிய பயணத்தில் என்னுடன் அவர்கள் கைகோர்த்து நடந்தார்கள். அத்துடன், எனது பாடசாலையான புஸ்ஸல்லாவ மத்திய கல்லூரி அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பொருளாதார ரீதியில் பல உதவிகளைச் செய்தார்கள். மேலும் பத்மா எனும் சகோதரர் என்னை ஒரு சிறந்த பயிற்சி நிலையத்தில் சேர்த்துவிட்டு அதற்கான பணத்தேவையினையும் அவரே பூர்த்தி செய்து வைத்தார்.

அதுமட்டுமன்றி, என் பிரதேசத்தில் இயங்கி வந்த மலையகக் குருவி எனும் ஓர் அமைப்பு உதவிக்கரம் நீட்டியதோடு, வெளிநாடுகளில் உள்ள பலரும் பல வேளைகளில் எனக்கு உறுதுணையாக இருந்தனர். தற்போதைய இளம் பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் சர்வதேச ரீதியிலான போட்டிகளில் பங்குபெறுவதற்கான மிகப்பெரிய உதவித்தொகையினை வழங்கி சர்வதேசத்திற்கு என்னை அறிமுகப்படுத்த ஓர் உந்து சக்தியாக இருந்தார். இவ்வாறானவர்களின் உதவியை நான் என்றுமே மறக்கமாட்டேன்.

**உடற்கட்டுமானத் துறையில் நீங்கள் பல சாதனைகள் புரிந்துள்ளீர்கள். அவற்றை எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

உடற்கட்டுமானப் போட்டிகள் பலவற்றில் நான் பங்குபற்றி பல தோல்விகளைச் சந்தித்திருக்கிறேன். இருப்பினும் மனம் தளராது சோர்வடையாது முழுமூச்சாய் பல பயிற்சிகளில் முழுநேரமும் என் கவனத்தைச் செலுத்திப் படிப்படியாக வெற்றிகளைப் பெற்றேன்.

தேசிய ரீதியில் இரண்டு தடவைகள் நான் மிஸ்டர் ஸ்கூல் போய் (Mr. School Boy) என்ற பட்டத்தினைப் பெற்றிருக்கிறேன். அத்துடன் இரு தடவைகள் ஜூனியர் மிஸ்டர் ஸ்ரீலங்கா (Junior Mr. Sri Lanka) வாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், நான்கு தடவைகள் தேசிய ரீதியில் தங்கப்பதக்கம் பெற்றேன். மேலும், விளையாட்டு நிகழ்ச்சிகளில் தங்கப்பதக்கம், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வெண்கலப்பதக்கம் மற்றும் உலகளாவிய ரீதியிலான உடற்கட்டுமான போட்டியில் வெள்ளிப்பதக்கம் எனப் பல பதக்கங்களை ஆணழகன் போட்டிகளில் வென்றெடுத்துள்ளேன் என்பதை இவ்விடத்தில் பதிவு செய்து கொள்வதில் பெருமையடைகின்றேன்.

**நீங்கள் இன்று ஆணழகனாக எம் மத்தியில் ஓர் நட்சத்திரமாக மிளிர்கிறீர்கள். பல எதிர்காலத் திட்டங்களைத் திட்டமிட்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். அதைப்பற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

தமிழர்களின் திறமை வெளிக்கொணரப்படுவதில் இருக்கும் பல பிரச்சினைகளை அனுபவத்தினடிப்படையில் பலமுறை நான் கண்டிருக்கிறேன். மலையக இளைஞர்களின் திறமைகள் வெளிக்கொணரப்படுவதில் எதிர்நோக்க வேண்டிய தடைகள் பல. அத்துடன் மலையக இளைஞர்களில் பலருக்கு இப்போது ஆணழகன் போட்டிகளில் பங்கு பெற வேண்டுமென்ற விருப்பம் இருப்பதை நான் அறிந்திருக்கிறேன். எனவே, மலையகத்தின் இயலுமான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எல்லா ஊர்களிலும் ஒவ்வொரு உடற்கட்டுமானப் பயிற்சி நிலையத்தைத் தொடங்க வேண்டுமென்பது எனது முதல் ஆசை.

அத்துடன், வருடாவருடம் ஒவ்வொரு மிஸ்டர் ஸ்ரீலங்கா (Mr. Sri Lanka) வை நாம் உருவாக்க வேண்டும். இம் முதல் முயற்சியில் நான் வெற்றி கண்டுள்ளேன். மலையகத் தமிழ் இளைஞர்கள் மூவரை நான் பயிற்றுவித்து மூன்று பதக்கங்களை வென்றெடுக்கச் செய்துள்ளேன். என் எதிர்காலக் கனவுகளுக்குக் கிடைத்த முதல் வெற்றியாக இதைக் கருதுகிறேன்.

**உங்களது வெற்றிகளை நீங்கள் யாருக்குச் சமர்ப்பிக்க விரும்புகிறீர்கள்?**


எனது அத்தனை வெற்றிகளையும் நான் எனது பெற்றோருக்கும் என் மனைவிக்கும், மற்றும் என் செல்ல மகளுக்கும் சகோதரர்களுக்கும் சமர்ப்பிக்க விரும்புகிறேன். எனது இவ்வெற்றிகளுக்கான அவர்களது தியாகம் அளப்பெரியது.

**உங்களைப் போலவே மலையகத்தில் சாதிக்கக் காத்திருக்கும் இளைஞர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?**

மலையக இளைஞர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கரப்பந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் ஆகிய இரு விளையாட்டுக்களிற்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை ஏனைய விளையாட்டுகளுக்குக் கொடுப்பதில்லை. இம் மனநிலையை இவர்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். நமக்குப் பிடித்த துறையினை நாம் தெரிவு செய்து, நமக்கான பாதையில் நாம் பயணிக்க வேண்டும். எல்லா விளையாட்டுக்களிலும் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

நான் என் வாழ்வின் ஆரம்பத்தில் அதிக அவமானங்களையும் தோல்விகளையுமே சந்தித்தேன். ஒரு குழந்தை எழுந்து நடக்க ஆரம்பிக்கும்போது விழுந்து, விழுந்து தான் எழுந்து நடக்க முடியுமேயொழிய ஒரே தடவையில் எழுந்து நடக்க முடியாது. அதேபோலதான் ஒரு விளையாட்டில் முதற்தடவை தோற்றுவிட்டோம் என்பதற்காக அவ்விளையாட்டை வெறுக்கக் கூடாது, தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும்.

எம்மிடமுள்ள தாழ்வு மனப்பான்மையை நாம் இல்லாதொழிக்க வேண்டும். எம்மால் முயற்சி செய்தால் முடியும் என்பதை முதலில் நாம் உணர வேண்டும். இப்போது பலர் என்னைப் பின்பற்ற ஆரம்பித்துள்ளனர். முயற்சியென்ற ஒன்று இருந்தால் போதும் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும். •



மை. டிலான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் வென்ற ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையில் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்கு ஊடகவியலாளர் அமரர் சகாதேவன் நிலக்சன் அவர்களின் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலா நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளும் இப்பதக்கத்தை வென்ற மாணவர்களின் விபரம் பின்வருமாறு.



**தினேஷ் விஜயதர்சினி**
**2018**



**அனட்கேசிகா லோறன்ஸ்**
**2019**



**முனியப்பன் துலாபரணி**
**2020**





# கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.





**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல் அழுத்தங்களாலும்
நாகரீக வளர்ச்சியின்
அபரிமிதமான மாற்றங்களாலும்
தமிழர் கலை, பண்பாடு இன்று
கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது.
இது யாருடைய தவறு

?

# காலத்தால் மறக்கப்பட்டுவரும்

# மந்திரி மனை

**பா**ரம்பரிய வரலாறு என்பது பண்டைய காலந்தொட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வந்தாலும் வரலாற்றில் அதன் பெருமை தமிழரசர்களின் காலத்தோடு சிறப்படைவதைக் காணலாம். 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் அந்நியராட்சி முழுமையாகக் கால்பதிக்கும் வரையில் யாழ்ப்பாணத்தின் முக்கிய நகராக நல்லூரே விளங்கியதெனலாம். வரலாற்றுப் பெருமை வாய்ந்த, காலத்தால் போற்றப்பட்ட வரலாற்றுச் சின்னங்களையும் தமிழர் பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு இந்நகரம் விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அரசியல் அழுத்தங்களாலும் நாகரீக வளர்ச்சியின் அபரிமிதமான மாற்றங்களாலும் தமிழர் கலை, பண்பாடு இன்று கேள்விக்குறியாக்கப்பட்டுவிட்டது. இது யாருடைய தவறு, யார் இதற்குப் பொறுப்பு என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, நாம் அது பற்றிய உணர்வோடு இருக்கி றோமா என்றால் நம்மில் பலருக்கு அது இல்லை என்பதே உரக்கச்சொல்ல வேண்டிய உண்மையாகிறது.

அவ்வாறே, இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன் கைவிடப்பட்ட நல்லூர் இராசதானி யின் தடங்கள் பலவும் இன்றும் முழுமையாகப் பாதுகாக்கப்படவில்லை என்பது கவலைக்குரியது.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் மேற்குப் புறத்தில் சட்டநாதர் கோயில் பகுதியில் கம்பீரமான முகப்புத் தோற்றத்தையும் வேலைப்பாடுகளையும் கொண்டு விளங்கு கின்ற சங்கிலியன் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, யமுனா ஏரி ஆகியவை அமைந் துள்ளன. இதில், சங்கிலியனுடைய மந்திரிமனை எனக் கருதப்படுகின்ற கட்டடத்தொகுதி இன்று கவனிப்பாரற்று, பாழடைந்து, இடிந்தநிலையில் வெறும் கட்டட எச்சமாகக் காணப் படுகிறது.


இதன் கட்டட அமைப்பும் சிற்ப வேலைப்பாடுகளும் நூதனமான கலை மரபைப் சுட்டிக்காட்டுவதுடன், அதில் சுதேச கலைமரபுகள் நிறைந்துள்ளதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. தற்போது கட்டடத்தொகுதிகள் இடிந்த நிலையிலும், சில பகுதிகள் ஒல்லாந்தர் காலத்தில் மாற்றியமைக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன.
இங்கிருக்கும் பழைமையான கிணற்றிற்கும் யாழ்ப்பாண மன்னர்கால யமுனா ஏரிக்கும் இடையே சுரங்கப்பாதை இருந்ததாகவும் சில காலங்களில் அதன் காரணமாக இக்கிணற்றில் அசாதாரண நீர்பெருக்கு ஏற்பட்டதாகவும் கூறப்படு கிறது. தற்போது இச்சுரங்கப்பாதை அடைக்கப்பட்டுள்ளது.

இம்மனையின் பின்புறத்தில் நிலவறையொன்றும் அதன்மேல் மூடுசாந்தினால் அமைக்கப்பட்ட மண்டபமும் இருந்ததாகத் தெரிகின்றது. தற்போது இவை இடிந்த நிலையில் மூடுண்டு காணப்படுகின்றன.


சுரங்க வாசல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மந்திரிமனையின் உள்ளமைவு

இவ்விடத்திலிருந்து வீட்டுக்குச் செல்லும் சுரங்க வாசல் ஒன்று பிற்காலத்தில் அடைக்கப்பட்ட தற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. இதேபோல், வீட்டுக்குள் இருந்த நிலவறையும் அதற்குள் இறங்கிச் செல்ல இருந்த படிக்கட்டுக் களும் கூட பிற்காலத்தில் அடைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இந்தக் கட்டடத் தொகுதிகள் யாழ்ப் பாண மன்னர் காலத்தில் கட்டப்பட்டவை என்பது தொல்லியலாளர்கள் பலரின் உறுதியான கருத்தாகும்.


"வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த சங்கிலியனுடைய மந்திரிமனையானது இன்று கவனிப்பாரின்றி நிர்க்கதியாக விடப்பட்டுள்ளது."


இத்தகைய வரலாற்றுச் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த சங்கிலியனுடைய மந்திரி மனையானது இன்று கவனிப்பாரின்றி நிர்க்கதியாக விடப்பட்டுள்ளது. நம் பாரம்பரியத்தை யும் வரலாற்றையும் பாதுகாக்க வேண்டிய இளைய சமுதாயமே, மது அருந்திக் குதூகலிக்கும் இடமாகவும், சட்டத்திற்குப் புறம்பானதும் பண்பாட்டுக்கு ஒவ்வாத செயல்களை மேற்கொள்ளும் இடமாகவும் இக்கட்டடத்தைச் சிலர் மாற்றியுள்ளனர். சமீப காலமாக இக்கட்டடத்தின் மீது உரிமைகோரி வழக்குகள் சில தொடரப்பட்டுள்ளதாக அதன் அருகே வசிக்கும் பலர் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் பலருக்கும், ஏன் மந்திரிமனையை அண்டிய பகுதியில் வசிக்கும் மக்களுக்குக்கூட அதன் வரலாறு பற்றித் தெரியாமலிருப்பது வருந்தத்தக்கதாகும்.



ம. லர்ஷிக்கா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணத்தில் இஞ்சி உற்பத்தி

## ● நம்பிக்கை தருகிறார் இணுவில் குலசிங்கம்

**நாம்** வாழும் உலகில் மனிதன் முயற்சியினால் மட்டுமே உயர்கின்றான் என்பது நிதர்சனமே. மானுட உயிர்களை மட்டுமல்ல, தன்னை நம்பி வாழும் பல உயிர்களையும் வாழவைக்கும் கடவுளாக விவசாயி விளங்குகின்றான். விவசாயி உணவை மட்டுமல்ல, உணவை மருந்தாகவே உருவாக்குகின் றான். பணப்பயிர்களுக்கு மத்தியில், அத்தியாவசியம் கருதி பல உபஉணவுப் பயிர்களையும் பயிரிடுகின்றான். இப்பயிர்களில் ஒன்றுதான் இஞ்சி.

வரலாற்றில் 11ஆம் நூற்றாண்டில் இஞ்சி வர்த்தகத்தில் முதலிடம் வகித்த அரேபியர்கள் வர்த்தகப் பரிமாற்றத்தில் இஞ்சியைப் பயன்படுத்தினார்கள். பழங்காலத்தில் உலகளவில் பழக்கத்தில் இருந்த பாரம்பரிய மருத்துவ முறையில் 50 சதவீதமான மருந்துகள் இஞ்சியையே மூலப்பொருளாகக் கொண்டிருந்ததாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தளவில் ஏற்றுமதிப் பயிராகவும் சந்தையில் உயரிய பெறுமதி மிக்க பயிராகவும் இஞ்சி காணப்படுகின்றது.

இலங்கையின் வடபுலத்திலே யாழ்ப்பாணம் விவசாயத்திற்குப் பெயர் போன தனித்துவமான பிரதேசமாகும். வெங்காயம், புகையிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்பவற்றுடன் தற்போது இஞ்சி உற்பத்தியிலும் யாழ்ப்பாணம் தனக்கென ஒரு இடத்தினைத் தக்கவைக்க ஆரம்பித்துள்ளது.

இஞ்சிப் பயிர்ச்செய்கையினை அதிகமானோர் முயற்சி செய்தாலும் ஒரு சிலரே இதில் வெற்றி அடைந்துள்ளனர். மற்றைய பயிர்களைப் போல இந்தப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆனால் அதையும் கடந்து, எத்தனையோ சவால்களுடன் இணுவிலைச் சேர்ந்த விவசாயி ஒருவர் இஞ்சிப் பயிர்ச்செய்கையில் வெற்றிகண்டுள்ளதுடன் விடாமுயற்சியுடன் தொடர்ந்தும் இஞ்சிப் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தும் முயற்சியில் அவர் ஈடுபட்டும் வருகின்றார்.

விவசாய ஊரான இணுவில் பிரதேசத்தில் வசித்து வருபவர்தான் ஆறுமுகம் குலசிங்கம். இவர் விவசாயத்துறையில் மிகுந்த ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் சிறு வயதில் இருந்தே ஈடுபட ஆரம்பித்துள்ளார். தனது தந்தை விவசாயம் செய்யும் போதே அவருடன் சென்று அவர் மேற்கொள்ளும் செயன்முறைகளைப் பார்த்துத் தானும் அவருடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்ததாக அவர் கூறுகிறார்.

இருப்பினும் தனது பிரதான பணியாகத் தொழில்நுட்ப உத்தியோகத்தராக வேலை செய்தமையினால் அவரால் விவசாயத்தில் முழுக்கவனம் செலுத்த முடியவில்லை. ஆனாலும், ஓய்வு பெற்றதும் விவசாயத்தினையே முழுமூச்சாகக் மேற்கொண்டு கமத்தொழில் செய்ய ஆரம்பித்தார்.

இவர் முதலில் எல்லாப் பயிர்களையும் பயிரிடுவதில் நாட்டங்கொண்டு அதில் வெற்றியும் கண்டார். இம்மண்ணில் இதெல்லாம் சாத்தியமா என வேறெவரும் பயிரிடத் தயங்கிய பயிர்களைக் கூட ஆறுமுகம் குலசிங்கம் பல்வேறு சவால்களை எதிர்நோக்கிப் பயிரிட்டுச் சாதித்துக் காட்டியுள்ளார் என்பதே உண்மை.



> வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்தவனே வெற்றியாளன் என்பதைப் போல இஞ்சிப் பயிரிச்செய்கையில் சில பின்னடைவுகளை அடைந்தாலும் நட்டங்கள் ஏற்பட்டாலும் துவண்டுவிடாது தொடர்ந்து முயற்சியை மேற்கொண்டமையே வெற்றிக்குக் காரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த ஆர்வமும் முயற்சியுமே இவரை இஞ்சியையும் யாழ். மண்ணில் பயிரிடத் தூண்டியது எனலாம். இஞ்சிப் பயிர்செய்கையினை யாழ்ப்பாணத்தில் கடந்த மூன்று வருடங்களாக குலசிங்கம் வெற்றிகரமாகப் பயிரிட்டு வந்துள்ளார். இதற்காக அவர் பல்வேறு சவால்களை எதிர்நோக்கினாலும், வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்தவனே வெற்றியாளன் என்பதைப் போல இஞ்சிப் பயிரிச்செய்கையில் சில பின்னடைவுகளை அடைந்தாலும் நட்டங்கள் ஏற்பட்டாலும் துவண்டுவிடாது தொடர்ந்து முயற்சியை மேற்கொண்டமையே வெற்றிக்குக் காரணம் என்று அவர் கூறுகிறார்.

அரசாங்கம் வழங்கிய இஞ்சி விதைக்கிழங்குகளின் மூலமே இப்பயிர்ச்செய்கையினைச் செய்யத் தொடங்கிய குலசிங்கம் "ஒரு தடவை 500 கிலோவிலிருந்து 650 கிலோ வரை விளைச்சலை எதிர்பார்க்கலாம்" எனக் குறிப்பிடுகின்றார்.

இஞ்சிப் பயிர்செய்கைக்கான நுட்பங்களைப் பட்டியலிடும் அவர் பின்வருமாறு தனது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்.

இஞ்சி பயிரிடுவதற்கு முதலில் நிலத்தின் வளம் பேணுதல் அதாவது நிலத்தினைப் பண்படுத்துதல் மிகவும் முக்கியமான ஒன்றாகும். கால்நடைக் கழிவுகளை நிலத்தைக் கடைசித் தடவை உழுத பின்னர் இட வேண்டும். அதுமட்டுமல்லாது, இஞ்சி பயிரிடத் தொடங்குவதற்கு 60 முதல் 70 நாட்களுக்கு முன்னர் பாத்திகள் அமைத்து அவற்றுக்குத் தொழு உரம் இட்டு, மணல் பரவி, 3 அங்குலம் அளவில் இஞ்சிக் கிழங்குகளைத் துண்டு துண்டுகளாக வெட்டி, அவற்றினை குறிப்பிட்ட ஆழத்தில் நட்டு, மண்ணால் மூடி தண்ணீர் ஊற்றிப் பராமரித்துக் கொள்ளவேண்டும்.

இஞ்சி நாற்றினை இவ்வாறு வளர்த்த பின்னர், ஒவ்வொன்றும் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒன்று என்ற அடிப்படையில் நடவுசெய்ய வேண்டும். இஞ்சியானது அதிகபட்சமாக 2 முதல் 3 அடி வரை வளரும் ஓர் பயிராகும். இச்செடியினை அதிகம் சூரியஒளி படாத இடமாகவும் அதிக காற்று அடிக்காத இடமாகவும் பயிரிடல் வேண்டும். கடும் காற்றில் இருந்து பாதுகாப்பதுடன், இவற்றுக்கு ஏற்ற வெப்பநிலை 25 செல்சியஸ் தொடக்கம் 30 செல்சியஸ் வரை இருக்க வேண்டும்.

இவ்வாறு நடப்பட்ட பயிர் வளர்ந்து வரும்போது அதிகமான நீர் தேவைப்படும். இப்பயிருக்கு தூவல் நீர்ப்பாசன முறைப்படி தண்ணீர் பாய்ச்சுதல் நீர்முகாமைத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இஞ்சிச் செடி

அடிப்படையிலும் மிகப் பொருத்த மானதாகும். ஒருவேளை காற்றின் மூலமாகவோ அதிக வெப்பம் மூலமாகவோ நிலம் காய்ந்திருந் தால் பயிர்கள் பழுதாகிவிடும். ஆகையால், ஈரப்பதமான சூழல் ஒன்று மிகவும் முக்கியமானதாகும். இப்பயிர்களை அதிக வெப்பத்தில் இருந்து பாதுகாப்பதற்கும் வெப்ப வீச்சினைக் கட்டுப்படுத்துவதற்கும் நான்கு பக்கமும் தடிகளை நட்டு, மேற்பக்கமாக வலை ஒன்றினை கட்டும் பந்தல் முறை இலகுவான தாகும்.

இஞ்சியினை வளமான நிலத்தில், நல்ல முறையில் பாதுகாத்து வைத்திருந்தால் அதற்குக் கூடுதலான எந்த ஊட்டச்சத்தும் தேவையில்லை. இருப்பினும், ஊட்டச்சத்து குறைவான மண் ணாகின் பசளை இடுதல் அவசியமாகும். ஆறு மாத காலத்திற்குப் பிறகு கலவை உரமும் இடவேண்டும்.

களை பிடுங்குதல் இஞ்சிப் பயிர்ச்செய்கையில் அவசியமாகும். களை அதிகமாக வளர்ந்தால் இஞ்சி விளைச்சல் பாதிப்படையும். ஆகவே, களை களைதல் முக்கிய செயற் பாடாகும்.

இப்பயிரானது எட்டு தொடக்கம் ஒன்பது மாதங்கள் முடிவடையும்போது அறுவடைக்குத் தயாராகிவிடும். ஏழாம், எட்டாம் மாதங்கள் வரும்போது மேலே போடப்பட்ட வலையைக் கழற்றி விடவேண்டும். பின்னர், தண்ணீர் பாய்ச்சும் அளவினையும் சிறிது சிறிதாகக் குறைக்க வேண்டும். இஞ்சிச் செடியின் இலைகள் ஓர் பழுத்த மஞ்சள் நிறத்திற்கு வந்ததும் இப் பயிரானது அறுவடைக்கு தயாராகிவிட்டது என்று அர்த்தமாகும். இவ்வாறு இலைகள் அனைத்தும் பழுத்து விழத் தொடங்கியதும் பக்குவமாக மண்ணை அகழ்ந்து இஞ்சிக் கிழங் குகள் பழுதடையாத வண்ணம் அவற்றினை எடுத்துக்கொள்ளலாம் என்கிறார் குலசிங்கம்.

இஞ்சிப் பயிர்ச்செய்கை யாழ்ப்பாணத்திலும் சாத்தியம் என்பதற்கு குலசிங்கத்தினது முயற்சி ஒரு உதாரணமாகும்.

கொரோனா காலப்பகுதியில் இஞ்சிக்கான கேள்வி நாட்டில் அதிகரித்தமை அனைவரும் அறிந்ததே. இஞ்சி இறக்குமதி குறைந்த இந்தக் காலப்பகுதியில் உள்ளூர் உற்பத்தியின் தேவையும் உணரப்பட்டிருக்கிறது.

இவ்வாறான சூழலில் குலசிங்கம் போன்றோரின் முயற்சிகளை யாழ்ப்பாணத்தின் ஏனைய விவசாயி களும் ஏன் பின்பற்ற முடியாது?

•



ந. ரிலக்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெல்லைச் சேமிக்கும் "குதிர்" அல்லது "கொம்பறை"...! அருகிப்போன வன்னியின் வளம்..!



இன்றைய நிலையில் அரசு அதிகளவில் தானியக் கிடங்குகளை அமைத்துள்ளது. ஆனால் தானியங்கள் அவற்றில் சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குறிதான். இன்றைய தானியக் கிடங்குகளின் முன்னோடியே அக்காலக் கொம்பறைகள்தான்.

சமூக ஆர்வலரான
**ஆறுமுகம் முருகுப்பிள்ளை**

**"வன்னி நாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்றும் விளைவுள்ள நாடு"**

எனும் நாட்டார் பாடல் வன்னியின் வளத்தினை எடுத்துக்காட்டி நிற்கின்றது. வன்னிக் கிராம மக்கள் காடு, வயல், குளம், என இயற்கையோடு இணைவான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

வேளாண்மையை மேற்கொள்ளுதல் மற்றும் கால்நடைகளை வளர்த்தல் மூலம் ஈட்டும் வருமானத்திலேயே உணவுத் தேவையையும் பூர்த்தி செய்து அவற்றில் எஞ்சியவற்றினை விற்பனை செய்து சேமிப்பாக்கி வாழும் வாழ்க்கை முறையினை இன்றும் வன்னி மண்ணில் காணலாம்.

வன்னி வாழ்க்கைமுறை அடையாளங்களில் ஒன்று தான் 'குதிர்'. நெல்லை சேமிக்கப் பண்டைய மக்கள் கண்டறிந்த அற்புதக் களஞ்சிய அறையே குதிர் ஆகும். உலகெங்கிலும் உள்ள பல்வேறுபட்ட இன மக்கள் விதவிதமான குதிரைப் பயன்படுத்தியுள்ளனர். தமிழர்களின் வாழ்வியல் மாற்றமடைந்ததினால் மற்றைய இடங்களில் இதனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டபோதும் நெல் உற்பத்தி அதிகமுள்ள வன்னியில் வாழ்வியல் அகலாத கிராமங்களில் ஆங்காங்கு குதிர்கள் இன்றும் பாவனையில் உள்ளது.

வன்னியில் குதிர் உள்ள முக்கிய இடங்களாகக் குமுழமுனை, முள்ளியவளை ஆகிய கிராமங்கள் காணப்படுகின்றன. வன்னி மண்ணில் குதிர் என்ற பதத்தை வேறு விதமாகவும் அழைப்பார், வழக்கத்தில் "கொம்பறை" என்ற சொற்கொண்டும் அது அழைக்கப்படுகின்றது.

### கொம்பறையின் தோற்றம்

ஆதிகாலம் தொடக்கம் இன்றுவரை நாட்டின் முதுகெலும்பாக விவசாயமே திகழ்கின்றது. அதிலும், நெற்பயிர்ச் செய்கை என்பது இன்றியமையாத ஒன்றாகவே காணப்பட்டது. இப்பயிர்ச்செய்கை பண்டைய காலத்திலிருந்து பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆரம்ப காலத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டே மக்கள் மன்னனுக்குச் செலுத்த வேண்டிய வரியை நெல்லாகச் செலுத்தினார்கள். அவ்வாறு மக்களால் வழங்கப்பட்ட நெல்லினைப் பாதுகாப்பாக வைப்பதற்காக உருவாக்கப்பட்டதே கொம்பறையாகும். முன்னைய காலங்களில் அறுவடைக்குச் சென்றால் நெல் தானியங்களை மட்டுமே கூலியாகப் பெறுவது வழக்கம். இவ்வாறு கூலியாகப் பெற்று வந்த நெல்லையும் வீட்டில் உள்ள குதிர்களில் சேமித்து வைப்பது வழக்கம். அவ்வப்போது குடும்பத் தேவைகளுக்கும் அவசரத்தேவைகளின் போதும் மற்றும் பஞ்சம் ஏற்படும் காலங்களிலும் நெல்லை விற்றுப் பணமாகப் பயன்படுத்தி வந்தனர்.


கொம்பறை கட்டுதல்

### கொம்பறையின் அமைப்பு முறை

குதிர் அல்லது கொம்பறையானது வட்ட வடிவமாக அகன்ற உருளை வடிவில் காணப்படும். உயரமான கப்புகள் நடப்பட்டு (முதிரை மரம்) ஒரு அடி அல்லது வசதிக்கேற்ற உயரத்தில் தட்டு அமைத்து (முதிரைப் பலகை) வட்ட வடிவ சுவர் அமைக்கின்றனர். இதனை அமைப்பதற்குக் களிமண் மற்றும் காட்டுத் தடிகளே பயன்படுத்தப்படுகின்றன.

> முப்பது வருடத்திற்கு முந்திய காலத்தில் கொம்பறையில்லாத வீட்டை வன்னியில் பார்க்க முடியாது. இப்போது எல்லோருடைய வாழ்க்கையும் மாறிவிட்டது. வீட்டுக்கு வீடு சேமித்தது போய் அரசாங்கத்திற்கு மொத்தமாக விற்பனை செய்ய நெல்லை நெற்களஞ்சியசாலையில் மக்கள் சேமிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் தடிகளைக் குறுக்காக அடுக்கி தட்டினை அமைப்பார்கள். அதன் பக்கவாட்டில் உருளை வடிவச் சுவர் அமைக்கப்பட்டு அப்படியே காட்டுத் தடிகளை வளைத்து (கறனை, காயாம் தடிகள்) ஒரு வகைக் கொடியான வெப்பிள் கொடியினால் நெருக்கமாக வரிவார்கள்.

பின்னர் குளம், புற்று போன்ற இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட செங்களி மண்ணால் பூசி, மண் சுவர் போன்று அமைப்பாக்குவார்கள். இந்தக் களிமண்ணைக் குழைத்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் ஊறவிட்டு அதன் பின்பே பயன்படுத்துவார்கள். மண் மீது சாணம் கொண்டு அழுத்தமாக மெழுகுவார்கள். இதன் கீழ்ப்பகுதியை, அக்காலத்தில் பெண்கள் தமது விசேட தினங்களில் உணவு சமைப்பதற்காகவும், தேங்காய்களைச் சேமிப்பதற்காகவும் பயன்படுத்தினார்கள்.


கூரை அமைப்பு

வீடு மெழுகும் நாட்களில் கொம்பறையையும் மாட்டுச் சாணத்தால் மெழுகும் வழக்கம் காணப்பட்டது. இதன் மேற்பகுதி ஓலையால் வேயப்பட்டிருக்கும். சுவரில் முக்கோண வடிவில் சிறிய பாதை வைப்பார்கள். உள்ளே இருக்கும் நெல்லினை எடுப்பதற்கு அல்லது உள்ளே நெல்லினை இடுவதற்கு இதனைப் பயன்படுத்துவார்கள்.

சில கொம்பறைகளில் கூரையை அப்பால் தூக்கி வைத்து விட்டு நெல்லினை எடுப்பதோ அல்லது அதற்குள் இடுவதாகவோ வசதி அமைந்திருக்கும். அக்காலத்தில் கொம்பறையை வைத்திருப்பவர்கள் வசதிபடைத்தவர்களாகக் கருதப்படுவர். இதனை அமைக்க முடியாதவர்கள் **"பட்டடை"** என்ற பாதுகாப்பு முறையினை வீட்டிற்குள் அமைப்பார்கள். ஆனால், இதற்குள் சேமிக்கப்படும் நெல் நீண்ட காலம் பாதுகாக்க முடியாமல் போய் விடும்.

குதிரில் அல்லது கொம்பறையில் நெல்லினைச் சேமிப்பதற்கான காரணம், ஆரம்ப காலங்களில் கொம்பறையில் நெல்லினைச் சேமிக்கும்போது நெல்லானது பூச்சிகளினால் ஏற்படுத்தப்படும் சேதங்களிலிருந்தும், மழையால் ஈரப்பதமாகுதல், பூஞ்சணம் பிடித்தல் போன்ற பாதிப்புக்குள்ளாகும் தன்மையிலிருந்தும் பாதுகாக்கப்படுவதாக அமைந்திருந்தது.


இங்கு இயற்கை முறையில் நெல்லினைச் சேமிப்பதனால் உண்ணும் மக்களுக்கு அவற்றால் கேடு விளைவதில்லை. பூச்சிகள் தாக்காமல் இருக்க இயற்கை மூலிகைகள் குறிப்பாகப் பூச்சிவிரட்டி மூலிகைகளைப் பயன்படுத்துவது வழக்கமாகும். குதிரில் வைக்கப்படும் நெல் இரண்டு ஆண்டுகள் வரை பழுதடையாது இருக்கும்.

குதிரில் இடப்படும் நெல்லினை வளர்பிறை தினத்தில் பிள்ளைகளின் கையால் குதிரில் நெல்லை இட்டால் நெல்வளம் எப்போதும் குறையாது என்பது கிராமமக்களின் நம்பிக்கை. குதிரில் இருந்து நெல்லை எடுக்கும் போது நல்ல நாள் பார்த்துத்தான் எடுப்பார்கள். தைப்பொங்கல், சித்திரைத் திருநாள் போன்ற விசேட நாட்களிலெல்லாம் குதிருக்கு மஞ்சள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசி, பொட்டு வைத்து வழிபடும் வழக்கம் எமது மக்களிடம் காணப்பட்டது.

இது குறித்து முள்ளியவளையிலுள்ள சமூக ஆர்வலரான ஆறுமுகம் முருகுப்பிள்ளை, **“இன்றைய நிலையில் அரசு அதிகளவில் தானியக் கிடங்குகளை அமைத்துள்ளது. ஆனால் தானியங்கள் அவற்றில் சரியான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பது கேள்விக்குறிதான். இன்றைய தானியக் கிடங்குகளின் முன்னோடியே அக்காலக் கொம்பறைகள்தான்”** என்றார்.



சமூக ஆர்வலர் ஆறுமுகம் முருகுப்பிள்ளை

கூடிவாழ்ந்து, கூடிப்பயிர் செய்து, கூடியுண்டு வாழும் கூட்டு வாழ்க்கை நமது பண்டைய வாழ்க்கை முறை. தற்காலத்தைப்போல் அல்லாது அக்காலமானது மிகவும் விஸ்தீரணமானது. ஒவ்வொரு கிராம இராச்சியமும் பேரண்டந்தான். தேவைகளை எப்படிக் கையாள்வதென்ற அனுபவத்தில்தான் குதிரை அல்லது கொம்பறையை மக்கள் கண்டறிந்தனர். ஆரம்ப காலத்தில் கிராமமே ஒன்று சேர்ந்து சில பகுதிகளில் குதிர் அல்லது கொம்பறையில் நெல்லினைச் சேமித்து தேவைக்கேற்பப் பகிர்ந்து எடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், அப்படிச் சேமிக்கப்பட்ட பெரிய குதிர்களின் எச்சங்கள் இன்னமும் கண்டறியப்படவில்லை.

எமது கள ஆய்விற்காகச் சென்றபோது சந்தித்த ஊர்வாசிகள், **“முப்பது வருடத்திற்கு முந்திய காலத்தில் கொம்பறையில்லாத வீட்டை வன்னியில் பார்க்க முடியாது. இப்போது எல்லோருடைய வாழ்க்கையும் மாறிவிட்டது. வீட்டுக்கு வீடு சேமித்தது போய் அரசாங்கத்திற்கு மொத்தமாக விற்பனை செய்ய நெல்லை நெற்களஞ்சியசாலையில் மக்கள் சேமிக்கிறார்கள்”** எனக் கூறுகிறார்கள்.

முன்னரைப் போல பெருமெடுப்பில் வேளாண்மை செய்பவர்கள் தற்போது இல்லாமை, நவீன களஞ்சிய வசதிகள் உள்ளமை, போக்குவரத்து வசதிகள் அதிகரித்தமை போன்றன கொம்பறைகள் இன்றைய சூழ்நிலையில் அருகியதற்குக் காரணங்களாகும். இன்றைய தலைமுறையில் பெரும்பாலானவர்களுக்குக் கொம்பறையைப் பற்றித் தெரியாதிருப்பதை கள ஆய்வில் அறியமுடிந்தது. இதற்குக் காரணம், வன்னியில் ஏற்பட்ட யுத்தத்தின் போது படையினரால் இருந்த சில கொம்பறைகளும் அழிக்கப்பட்டுவிட்டதாகும்.

மீள் குடியேற்றத்திற்குப் பின் குமுழமுனையில் மாத்திரம் கொம்பறைகள் சில அமைக்கப்பட்டாலும், முறையான கொம்பறைகளாக அவை காணப்படாமையால் விரைவாகவே அவையும் அழிவடையும் நிலையில் உள்ளன.



ஜெ.கல்கி

இன்றைய சமுதாயம் நவநாகரீக வளர்ச்சியினால் இவ்வாறான விடயங்களைத் தமது வீட்டில் வைத்திருப்பது அநாகரீகமாகக் கருதுகின்றனர். கொம்பறை வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டுமெனக் கூறுவதெல்லாம் அதீதமான கருத்தாக இருந்தாலும், தமிழர்களின் பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் நோக்கிலாவது கொம்பறைகள் பேணப்பட வேண்டும். நமது பாரம்பரிய வழித்தடத்தை நாளைய தலைமுறை அறிய அது வழி செய்யும். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளைய சமூகம்

# 'சே' மீது கொண்டிருக்கும் புரிதல்..!



வல்லரசு நாடான அமெரிக்காவைக் கண்டு உலக நாடுகள் அஞ்சிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு தனிநபரைக் கண்டு அந்த அமெரிக்காவே அஞ்சிய வரலாற்றின் பக்கங்களைப் படித்ததுண்டா? அந்த வரலாற்றுப் பக்கங்களுக்குச் சொந்தக்காரர் வேறு யாருமல்ல. அவர்தான், கியூபாவின் தன்னிகரற்ற தலைவன் "சே" என அழைக்கப்படும் சேகுவேரா..!


'இலட்சக்கணக்கான பக்கங்களில் ஆயிரம் வருடங்கள் வேண்டுமானாலும் சேகுவேராவைப் பற்றி எழுதிக்கொண்டிக்கலாம்' என்கிறார் எழுத்தாளர்-கெப்ரியல் கார்சீயஸ் மார்கோஸ்.

உலக அரசியலாக இருக்கட்டும், மார்க்சியம் என்ற எண்ணக்கருவாக இருக்கட்டும் "சே"வின் பாதச்சுவடுகளை எளிதில் தவிர்த்துக் கடப்பதென்பது இலகுவான ஒரு காரியமன்று. இருப்பினும் நடைமுறைக் கால கட்டத்தில் "சே"வின் தனித்துவம் சற்றே தேய்வடைந்ததாய் உணரப்படுகின்றது.

"சே"என்றதும் ஆழ்மனதிடம் தோன்றுவது என்ன? இந்த ஒற்றைக் கேள்வி போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"சே" தொடர்பான புரிதலைத் தெளிவுபடுத்தும். இன்றைய இளைய சமூகம் பெயரளவில் "சே"வை ஒரு புரட்சியாளன் என்ற கோணத்தில் பார்க்கும் விதம் சற்று வேடிக்கையானது. "சே"வை புரட்சியாளன் என மட்டுப்படுத்த விளைவீர்கள் என்றால் "சே"வின் வரலாற்றுப் பின்னணி சுருங்கிவிடும்.

நவீன இளைய சமூகம் "சே"யைக் காட்சிப் பொருளாகக் கையாண்டு வருகின்றது. குறிப் பாக, இளைஞர் மத்தியில் இருக்கக்கூடிய "சே"வின் ஆதிக்கம் என்பது அவரது நீண்ட சிகையையும், தாடியையும், ஒற்றைக் கையில் சிகரெட்டைத் தாங்கிப் பிடித்திருப்பதாகவே கடத் தப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

குறிப்பாக, ஆண்களின் ஆடைகள், வாக னங்களில் ஸ்ரிக்கர், கணினி, திறன்பேசித் திரைகள், சமூக ஊடகச் செயலிகளின் அட்டைப் படங்கள் என்பவற்றுக்கு மாத்திரம் பயன்படுத்தி வரக்கூடிய குறியீடாகக் கையாளுவதை நவீன சமூகங்களிடையே காணமுடிகிறது. அப்படிப் பயன்படுத்தும் சாமான்யராக நீங்களும் இருக்க லாம்.

ஒருநாள், ஆடை விற்பனை நிலையமொன் றில் நின்றிருந்த வேளை, இளைஞன் ஒருவர் ரீ-சேட் ஒன்றை வாங்க வந்திருந்தார். அந்த இளைஞன் தேர்வு செய்த ரீ-சேட் இன் நிறம் சிவப்பு . அநேகமாகச் சிவப்பு நிறம் மீது நாட்டம் கொண்டவராக இருக்கக்கூடும். அங்ஙனம், அவர் தேர்வு செய்திருந்த ரீ-சேட் இல் "சே"வின் உருவ முத்திரை பொறிக்கப்பட்டிருந்தது.

சிறிது நேரம் கழித்து அவரோடு பேசக்கூடிய வாய்ப்புக்கிடைத்தது. அவ்வாறு பேசும் சந்தர்ப் பத்தில் அவரிடம் கேட்ட முதற் கேள்வி, "நீங்கள் தேர்வு செய்த ரீ-சேட் இல் பொறிக்கப்பட்டி ருந்த உருவ முத்திரையில் இருப்பவர் யார் தெரியுமா?" என்பதே.

பதிலைத் தேடி எழுப்பிய வினாவுக்கான பதில் வர, விநாடி முள் தன் ஒற்றைச் சுழற்சியை முடித்திருக்கக்கூடும். ஆனால், பகடி கலந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புன்னகையுடன் தெரியாது எனப் பதிலளித்தார் அந்த இளைஞன். அந்தப் பதில் என்னைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியது.

உண்மையிலேயே, பூகோளமயமாக்கல், தொழிநுட்பப் புரட்சி, நவீனத்துவம் என்பன காரணமாக மேற்குலகின் கைப்பாவைகளாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கையாளப்படுகின்றன. இதன் விளைவாக வளர்ந்துவிட்ட மேற்கு உலகின் மகுடவாசகம் "முதலாளித்துவம்" என்றானது.

வளர்ந்துவிட்ட மேற்குல நாடுகளுக்கு மார்க்சியம் நடைமுறை சார் எண்ணக்கருவாகப் போய்விடக்கூடாது என்பதில் கருத்தாயிருந்தன. அச்சிந்தனையின் வெளிப்பாடாகவே "சே"யின் உருவங்கள், புகைப்படங்கள் என்பன கையாளப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இன்றைய இளைய சமூகங்களிடையே பலரின் மத்தியில் "சே" தொடர்பான புரிதல் என்பது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இளையவர்களில் ஆண்கள் மத்தியில் இருக்கும் புரிதலின் வெளிக்காட்டல்கள் கூட பெண்கள் மத்தியில் இல்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

இளைஞர்கள் மத்தியில், மக்களை மகிழ்விக்கும் விளையாட்டு, சினிமா நட்சத்திரங்களுக்குக் கிடைக்கக் கூடிய ஆதரவு கூட, மக்களது உரிமைக்காகவும், அவர்தம் நலனுக்காகவும் முன்னின்று செயற்பட்ட ஒரு மாவீரனுக்குச் சிறிதும் கிடைக்கின்றதா என்கின்ற கேள்விகள் இன்றும் எழத்தான் செய்கின்றன.

தவறுகள் எங்கெல்லாம் தலை தூக்குகின்றனவோ அங்கெல்லாம் "சே" தொடர்பான புரிதலும், தெளிவும் உண்டாவதில் சந்தேகங்கள் கிடையாது. மொத்தத்தில் "சே" என்பதைத் தனியொரு சொல்லாக மட்டுமே அவதானித்துக் கடப்பதைக் காட்டிலும் "சே" உணர்ச்சியின் வெளிப்பாடாகவும் அநீதிக்கெதிரான வலுவான ஒற்றைக் குரல் என்பதையும் உணரத்தலைப்படுவோம்.


•




க. அரவிந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணத்தில்

# பாய் பின்னலின் மீளெழுகை!

## ஓர்மத்திற்கு 'றொபின்சன்' ஓர் முன்னுதாரணம்!

**"நான்** நீளம் கூடிய பாய்களைச் செய்து காட்டுகிறேன்" என இன்று சவால்விடும் றொபின்சனின் முயற்சிக்கு அன்றைய ஒரு நாள்தான் காரணமாக இருந்திருக்கிறது.

"ஒரு நாள் பாய் வாங்க கடைக்குச் சென்றேன். கடைக்காரர் காட்டிய பாய் 4 அடிதான் இருந்தது. அது எனது உயரத்திலும் பார்க்கக் குறைவாக இருந்தது. கடைக்காரருடன் வாய்த்தர்க்கம் புரிந்து முரண்பட்டு சவால் விட்டதுடன் மட்டுமல்லாது எங்களுக்கானதை ஏன் நாங்களே செய்யக்கூடாது என்ற தற்துணிவு எண்ணத்துடன் வீடு வந்து சேர்ந்தேன்" என்கிறார் றொபின்சன்.

இன்றைய நவீன உலகில் இயந்திர வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் நாம், எமது பாரம்பரியக் கைத்தொழில்கள் மறந்தும், மறைந்தும் போக, எமது நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றோம்.


கைத்தொழில் முயற்சிகளை மேற்கொள்பவர்களுக்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் கௌரவப்படுத்தல்கள் சாத்தியப்படுகிறதா என்பது சந்தேகமானாலும், எமது மண்ணில் பல இடங்களிலும் பல விதமான சிறு கைத்தொழில் முயற்சிகள் மற்றும் கிராமியத் தொழில்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

> "இத் தொழில் எனது பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதாலும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதாலும் அதிக ஆர்வம் கொண்டு இத்தொழிலில் சிறியளவிலாயினும் ஈடுபட்டு வருகின்றேன்"

சிறு கைத்தொழில்களின் வரிசையில் பாரம்பரியத் தொழில் முயற்சியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பின்னப்பட்ட பாய்கள்


தறிமூலம் பாய்களை நெசவு செய்தலைப் பார்க்கலாம். பன்புல் தொழில், பாய் முடைதல், பாய் பின்னுதல், பாய் நெய்தல் எனப் பல பெயர்களில் அழைக்கப்படும் இத்தொழிலானது பனை ஓலை, ஈச்சம் ஓலை, மூங்கில், நாணல் போன்ற பல்வேறு வகையான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது.

இது மரபார்ந்த கைத்தொழிலாக நெடுங்காலமாக நடைபெற்று வந்தாலும், இந்த அரிய கலை அண்மைக் காலங்களில் மெதுவாக மறையத் தொடங்கி உள்ளது. ஆனாலும், பன்புல் மூலம் பாய் தயாரிக்கும் தொழிலின் மீளெழுகை யாழ்.மண் ணில், மணியந்தோட்டத்தில் வசிக்கும் ஜோன்சிங்கராயர் றொபின்சன் போன்றவர்களால் சிறிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்கையில் ஏதோவொரு நம்பிக்கை மனதில் எழவே செய்கிறது.

அவரது தாய் மற்றும் மனைவியின் உதவியுடன், மூன்று பெண் தொழிலாளர்களை உள்ளடக்கியதாக றொபின்சனின் கைத் தொழில் பட்டறை எங்களை வரவேற்றது. றொபின்சனின் இந்த ஆர்வத்திற்கு ஓர் பின்னணிக் கதையும் உண்டு.


1983ஆம் காலப்பகுதியில் றொபின்சனின் தாயார் இராஜேஸ்வரி தறி கொண்டு பாய்த் தொழிலைச் செய்து வந்தார். அந்தக் காலகட்டத்தில் சிறுவனாக இருந்த றொபின்சன் ஆர்வத்தோடு அதனைப் பார்த்து, அவரோடு இணைந்து சிறு சிறு உதவிகள் செய்து வந்துள்ளார். அப்போது தான் பாய் பின்னும் தொழிலைத் தானும் சுயமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்ததாக றொபின்சன் குறிப்பிடுகிறார்.

கடந்த காலத்தில் போர் கொதிநிலைக்கு வந்து இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்ற போதும்கூட, வன்னியில் இத்தொழிலைச் சிறிய அளவில் றொபின்சன் செய்து வந்துள்ளார். 2010ஆம் ஆண்டு மீண்டும் யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிய இவர், தனது கிராமத்தில் வாகனம் திருத்தும் தொழிலைப் பிரதான தொழிலாகச் செய்ய ஆரம்பித்திருக்கிறார். அக்காலப்பகுதியில்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில்


பாய்த்தறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாய் பின்னப்படுதல்

கூறியபடி, பாய்க்கடைக்காரருடன் தர்க்கம் புரியவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு றொபின்சன் மீண்டும் தனது பாரம்பரியக் கைத்தொழிலைக் கையில் எடுத்து இருக்கிறார்.

"பாய்த்தறியை நான் செய்வதற்குப் பல நாட்கள் அலைந்து திரிந்தேன். இதற்கான மரம், தடிகளைப் பெற நீண்ட பயணம் மேற்கொண்டேன். ஆரம்பத்தில் இத் தொழிலை முறையாகச் செய்தவர்களின் அனுபவத்தையும் ஆலோசனைகளையும் மட்டுமல்லாது சில பொருட்களையும் பெற்று, அவற்றைக் கொண்டு பாய்த் தறியை உருவாக்கினேன்" என்கிறார் றொபின்சன்.

பாய்த்தறிக்கான மூலப்பொருட்கள் வன்னி மாவட்டத்திலிருந்தும், தென்மராட்சிப் பகுதியிலிருந்தும் பெறப்படுவதுடன், பாய்க்கான பன்புல் பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. நெற்செய்கை போன்றே பன்புல் பயிரிடப்படுகிறது.

பன்புல் கிழங்கில் இருந்து வளரும் தன்மையுடையது. கிழங்கில் இருந்து முதலில் வளரும்போது ஆறு மாதமளவில் வெட்டப்படக்கூடிய பருவத்திற்கு வந்து விடும். வெட்டியபின் மீண்டும் வளர்ந்து விடும். பன்புல் ஆறு அடி வரை வளரக் கூடியது. வெட்டப்பட்ட பின்பு 3 - 4 நாட்கள் வெய்யிலில் காயவிடப்பட்டு கட்டுக்களாகக் கட்டப்படுகின்றது. பன்புல்லில் அகலம், நீளம், நிறம் கொண்டு தரம் பிரிக்கப படுகிறது. பன்புல்லில் நிறம் குன்றியவை வேறு நிறத்துக்குச் சாயம் போடத் தெரிவு செய்யப்படுகின்றன. அண்மைக் காலங்களில் பச்சை, ஊதா, மஞ்சள் போன்ற நிறங்களில் சாயம் இட்டு, ஒரு நாள் வெய்யிலில் காய விடப்படும் போக்கு பன்புல் பதப்படுத்தலில் பின்பற்றப்படுகின்றது. பின்னர், தறியைப் பயன்படுத்தி நெய்தல் முறையில் இழைக்கப்பட்டு, நான்கு பக்கங்களும் சமமாகப் பாய்கள் வெட்டப் பட்டு நிறத் துணியினால் ஒரு அங்குலம் அளவில் சுற்றிவரத் தைக்கப்பட்டு பாய்கள் முழு உருவம் பெறுகின்றன.

யாழ் நகரப் பகுதியிலுள்ள ஒரு சில கடைகளுக்கு உற்பத்தி செய்த பாய்களைத் தொடர்ச்சியாக வழங்கி வருவதாக றொபின்சன் குறிப்பிட்டார். சிலர் வீட்டில் வந்தும் பாய்களை வாங்கிச் செல்கின்றனர் என்கின்றார் அவர்.

"இத் தொழில் எனது பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதாலும் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதாலும் அதிக ஆர்வம் கொண்டு இத்தொழிலில் சிறியளவிலாயினும் ஈடுபட்டு வருகின்றேன்" என மனநிறைவுடன் றொபின்சன் குறிப் பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்க்கான புல்வகையினைப் பெற்றுக் கொள்வது இத்தொழிலின் பாரிய பிரச்சினையாக அவருக்குக் காணப்படுகிறது. இவ்வகைப் புற்கள், மண் மற்றும் மணல் தரைகளில்தான் அதிகமாக வளரும். மணல் அகழ்பவர்களால் இப்புற்கள் அழிக்கப்படுகின்றன. புற்களைப் பாதுகாத்து, இவ்வாறான கிராமிய மற்றும் எமது பாரம்பரியக் கைத்தொழில் உற்பத்திகளை ஊக்கப்படுத்துவதனூடாக பல இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பினைப் பெறுவதோடு, கிராமங்கள் முன்னேறி கிராமியப் புரட்சி ஏற்பட வழிவகுக்கும் என்பது றொபின்சனின் நம்பிக்கை.

றொபின்சனின் நம்பிக்கைதான் நமக்கும் இன்று வேண்டும். இவ்வாறான பாரம்பரியத் தொழில் மீது ஆர்வமுடையவர்களை மேலும் மேலும் நாம் ஊக்குவிக்க வேண்டும். இன்று பிளாஸ்ரிக்கின் பிடியில் சிக்கிக் கொண்டிருக்கும் பிரபஞ்சம் பாய்களைக் கூட விட்டு வைக்கவில்லை. இத்தகைய இயற்கையான, ஆரோக்கியமான பாய்கள் எமது சமூகத்திற்குத் தேவையானவை. எத்தனை பேர் இத்தகைய பாய்களைப் பயன்படுத்துகிறார்கள் என்பது கேள்விக்குறியேயானாலும், யாழில் பாரம்பரியமாகப் பாய்முடைதல் போன்ற உற்பத்திகள் றொபின்சன் போன்றவர்களின் ஓர்மத்தினால்தான் மீள் எழுச்சி பெறுகின்றன என்பது மட்டும் உண்மை.

•



நி. கஜேந்தினி



அ. சங்கீர்த்தனா

## காசேதான் கடவுளடா....!

உறவையும் ஊழல் செய்ய வைக்கும்
முறை தெரிந்த பணமே
தலைமுறை காத்தேனும்
பலமுறை தவறைச் செய்தேனும்
கறை படிந்த முறை ஓதும்
மானுடர் கூட்டத்திலே
பசி மறந்து பாடுபட்டு
பறவை போலப் பறந்து
கறந்த பாலிலேனும் சாயம் கலந்து
மலர்ந்த பூக்கள் மணம் மறந்து
படர்ந்த கொடியாய் பற்றி வளர்ந்து
உலர்ந்த வாயாய்க் கிடந்த
பாதை மாற
பணம் காண
ஒரு முறை வான் பறந்து
உறவைப் பிரிந்து
கலங்கா மனம் கொண்டு
கல்லெறிந்த வில்லர் போல
சொல்லால் நெஞ்சைப் பிளந்த
ஒருவேளை சோறு போடா சொந்தம்
வாய் அடைக்க வெளிநாடு சென்று
கூடப் பிறந்த உறவு
காலால் மிதித்த
காட்சி என்னை உறுத்த
வெறுத்தவர் நம்மை
பொறுத்துப் பார்க்க
பொல்லாதவர் நம்மை
குறைத்துப் பார்க்க
கழித்தவரும் கடமைக்கு வளர்த்தவரும்
கண் கொண்டு பார்க்க
காசால் நீ உயர்ந்து காட்டு..!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கழுதைகளுக்கான சிகிச்சை இல்லம் மன்னாரில் உருவாகும் மனிதநேயம்


-வடக்கின் **'கழுதை நகரம்'** பற்றிய ஒரு 'ரவுண்ட் அப்'-

அழகான மனதைக் கவரும் காட்சிகளும், இயற்கை வளங்களும், இன்னும் உலகப் பிரசித்தி பெற்ற முத்து விளைகின்ற கடல் வளமும், பல்வேறு நாடுகளிலுள்ள பறவைகளை கவர்ந்திழுக்கும் இதமான காலநிலையும், கற்பகதருவான பனைவளமும் கொண்டு முருகைக் கற்பாறைகளால் சூழப்பட்ட ஒரு பிரதேசமே மன்னாராகும்.

மன்னார் சுற்றுலாத்துறையின் ஓர் சுவாரசியமிக்க அடையாளமாக அங்கு எங்கனும் திரியக்கூடிய கழுதைகள் காணப்படுகின்றன. மன்னாரினுள் நுழையும்போது ஆங்காங்கே கட்டாக்காலிகளாக சுற்றித்திரிந்த இக்கழுதைகள் தற்போது தனிப்பட்ட நிறுவனம் ஒன்றினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பராமரிக்கப்படுவது வியப்பிற்குரிய ஒரு விடயமாகும்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட Donkey Assisted Therapy Center என்ற கழுதைகளைப் பராமரிக்கும் சர்வதேச தன்னார்வ அமைப்பு ஆசிய நாடுகளில் முதன்முதலாக இப்பராமரிப்பு இல்லத்தை மன்னாரில் ஆரம்பித்துள்ளது. இது ஒரு சாதாரண விடயமல்ல. பல சவால்களையும் கடந்தே இந்த இல்லம் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றது. சாதனைகள் பல தடைகளைக் கடந்தே சாதிக்கப்படுகின்றன என்பதற்கு இதுவும் ஓர் உதாரணமாகும்.

ஈகியூஸ் அசினஸ் (Equus Asinus) எனும் அறிவியல் பெயர் கொண்டு அழைக்கப்படும் காட்டுக்கழுதை இனமானது குதிரை மற்றும் வரிக்குதிரை குடும்பத்தைச் சார்ந்த தாவர உண்ணியாகும். இந்த இனத்தைச் சேர்ந்தவை தமக்குள் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள மிகையொலியைப் பயன்படுத்துகின்றன. இவை மிகையொலியை எழுப்புவதன் மூலம் 12 கிலோமீற்றர்களுக்கும் அப்பால் உள்ள தனது இனத்தைத் தொடர்பு கொள்ளக்கூடியன. அதற்கு இக்கழுதைகளின் நீண்ட காதுகளும் பலமான தொண்டையமைப்பும் சக்திமிக்க நுரையீரலும் பெரிதும் உதவுகின்றன என்கின்றனர் விலங்கியல் ஆர்வலர்கள்.

கழுதைகளின் பாலில் புரோட்டீன் மற்றும் கொழுப்புச்சத்துக் குறைவாகவும் லக்டோஸ் செறிவுள்ளதாகவும் காணப்படுவதால் அது தாய்ப்பாலை ஒத்த தன்மையைக் கொண்டதாக அறிவியல் ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை தாய்ப்பாலுக்கு இணையாகக் கழுதைப்பால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமையையும் வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது.


மருத்துவத்தின் தந்தை என அழைக்கப்படும் ஹிப்போகிரட்டிஸ் (Hippocrates 460-370 BC) கல்லீரல் பிரச்சினை, தொற்று நோய்ப் பாதிப்புக்கள், நீர்க்கோவை, மூக்கால் இரத்தம் வடிதல், விஷ முறிவு, காய்ச்சல், ஒவ்வாமை, கண் நோய், பல் ஈறுகளில் ஏற்படும் புண், வயிற்றுப் புண், ஆஸ்மா மற்றும் நீண்டநாள் காயங்கள் எனப் பல் வேறு நோய்களுக்கும் கழுதைப் பாலை மருந்தாகப் பரிந்துரைத் துள்ளார்.


கழுதை சிசிச்சை நிலையம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வரலாற்றில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சோமாலியாவிலிருந்து இலங் கைக்கு வருகை தந்த இஸ்லாமிய வணிகர்களே கழுதைகளைத் தங்களது தேவைக் காகவும், வியாபார நோக்கத்திற்காகவும் இங்கு கொண்டுவந்தார்களென வரலாறு கூறுகின்றது.

மன்னார் பிரதேசத்தில் உள்ள கழுதைகள் இங்குள்ள வளைகுடாக் கடற்பகுதியில் பாண் டிய மன்னர்களின் காலத்தில் முத்துக்களை மூட்டைகளாகக் கட்டி பொதிசுமக்கப் பயன் படுத்தப்பட்டதாகவும், ஐரோப்பியரின் ஆட்சிக்காலத்தில் மன்னார் கோட்டையினைக் கட்டுவ தற்கு திருக்கேதீஸ்வரத்திலிருந்து கற்களைச் சுமந்து வருவதற்கும் இவை பயன்படுத்தபட்ட தாகவும் வரலாறு கூறுகின்றது. மேலும், இந்தியாவின் தனுஷ்கோடியிலிருந்து தலை மன்னாருக்குக் கப்பல் போக்குவரத்து இருந்த காலத்திலும் பயணிகளின் பொதிகளைச் சுமப்பதற்கும் அதிகளவில் கழுதைகளே பயன்பட்டதாகவும் தெரியவருகின்றது.



சுற்றுலாப் பயணிகளுடன் சாகுல் ஹமீது

ஆரம்பத்தில் இலங்கையின் வட மேற்குக் கடற்கரைப்பகுதி யில் மக்களுடன் கழுதைகள் பல் வேறு பிரதேசங்களிலும் நெருக்க மாக வாழ்ந்து வந்ததாகவும் கூறப்படுகிறது. ஆனால், தற் போது மன்னாரிலும், புத்தளத் திலுமே கழுதைகள் காணப்படு கின்றன.

உள்நாட்டு யுத்தத்தின்போது இப்பகுதி மக்கள் அதிகளவில் இடப்பெயர்ந்தமையால் மக்களுக் கும், கழுதைகளுக்குமிடையி லான நெருக்கமான பிணைப்பு துண்டிக்கப்பட்டதோடு, தற்போது இப்பிரதேசத்தில் கழுதைகள் அதிகளவில் காணப்படுவதாலும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு இடையூறாக அவை இருப்பதாலும் ஒருகாலத்தில் மக்கள் வாழ்வில் ஓரங்கமாக இருந்த இவ்விலங்கினம் இன்று மக்கள் மத்தியில் பெறுமதியற்ற, வெறுக்கத்தக்க ஓர் விலங்கினமாகவே பார்க்கப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் மீண்டும் மக்கள் தமது பகுதிகளில் மீளக்குடியேறியபோதும் எண்ணிக்கையில் பெருகிப்போன கழுதைகளால் பல்வேறு சிரமத்திற்குள்ளாகினர். இதனால் மக்களின் வெறுப்பிற்குள்ளாகியதுடன் பல தடவைகளில் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு பராமரிப்பின்றி இப்பிரதேசம் முழுவதும் கழுதைகள் கட்டாக்காலிகளாகச் சுற்றித் திரியத் தொடங்கின. வீதிகளில் அவை தாமும் விபத்துக்குள்ளாகி மக்களுக்கும் விபத்துக்களை ஏற்படுத்துவது பிரச்சினையாகவே மாறிவருகிறது.

மன்னார் நகர்ப்பகுதியில் அதிகளவான குப்பை கூழங்கள் சேர்வதனால் அவற்றில் காணப்படும் பொலித்தீன்களைக் கழுதைகள் உண்பதால் அவற்றின் ஆயுட்காலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவடைந்து செல்வது மட்டுமல்லாது, அதன் இயற்கைத் தோற்றம் சிறியதாகவும், அருவருப்பான உடலமைப்பையும் பெற்று மாற்றமடைந்து வருவதையும் விலங்கியல் ஆர்வலர்கள் கவலையுடன் சுட்டிக்காட்டுகின்றனர்.

மன்னார் பிரதேசம் முழுவதும் தற்போது ஆயிரத்திற்கும் அதிகமான கழுதைகள் நடமாடு வதுடன், மன்னார் நகரசபைக்குட்பட்ட பகுதியில் சுமார் 400க்கும் அதிகமான கழுதைகள் சுற்றித்திரிவதனால் மன்னார் நகரானது "கழுதை நகரம்" எனச் செல்லமாக அழைக்கப்படுவது ஒரு தனிக்கதை.

மக்களது பராமரிப்புக் குறைந்ததால் காயங்களுடனும், நோய்வாய்ப்பட்ட நிலையிலும் காணப்பட்ட கழுதைகளை இப்பிரதேசத்திற்கு வருகைதந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிக ளும், இயற்கை நலன் விரும்பிகளும் பார்த்து அனுதாபம் கொண்டதன் விளைவாகவும், பிரிட்ஜிங் லங்கா (Bridging Lanka) நிறுவனத்தின் எண்ணக்கருவினாலும் மன்னார் ஓலைத்தொடுவாயில் Donkey Clinic and Education Center என்ற கழுதைகள் பராமரிப்பு இல்லம் 2017 இல் உருவானது. அதன் தொடராக முருங்கனிலும் Donkey Assisted Therapy Center என்ற பெயரிலும் கழுதைகள் பராமரிப்பு இல்லமொன்று இயங்கி வருகின்றது.

ஓலைத்தொடுவாய் தாய்லான்குடியிருப்பில் காணப்படும் Donkey Clinic and Education Center இன் சிறப்பம்சமாக வெள்ளைக் கழுதை ஒன்று வளர்க்கப்படுவதோடு, இலங்கையில் காணப்படும் ஒரேயொரு வெள்ளைக் கழுதை இதுவாகும் எனவும் கூறப்படுகிறது. நோயுற்ற கழுதைகளுக்குச் சிகிச்சையளித்தல், காயப்பட்ட கழுதைகளுக்கு மருந்து கட்டுதல், எலும் புகளை ஒட்டச்செய்தல் மற்றும் பராமரிப்புக்களுக்கு இந்நிலையம் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு வளர்க்கப்படும் கழுதைகளுக்கு உணவாகப் புற்கள், தவிடு, சோளம், கோதுமை மற்றும் மரக்கறிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான கரிசனைமிக்க செயற்பாடுகளின் விளைவாக, அண்மைக் காலங்களில் மன்னாரிலுள்ள ஒரு சில குடும்பங்கள் கழுதைகளை வளர்க்க ஆரம்பித்துள்ளதோடு, வளர்க்கப்படும் கழுதைகளை இப்பிரதேசத்திலுள்ள மாற்றாற்றல் நிறுவனத்திலுள்ள (Mannar Association for Rehabilitation of Differently Abled People - MARDAP) விசேட தேவைகளுள்ள பிள்ளைகளின் உடல், உள, நல்வாழ்வை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் போக்கும் காணப்படுகின்றது. இதை அவர்கள் சமூக சேவையாகச் செய்துவருகின்றனர்.

கழுதைகளோடு நேரம் செலவழிப்பதானது விசேட தேவையுடைய குழந்தைகளின் உடல், உள, மற்றும் உணர்ச்சி நல்வாழ்வை மேம்படுத்தவும், கழுதைகளில் சவாரி செய்வது இக் குழந்தைகளுக்குச் சிகிச்சையாகவும், அவர்களின் வலிமை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதோடு, நம்பிக்கையையும் சுயமரியாதையையும் அதிகரிப்பதற்கானதொரு வாய்ப்பையும் வழங்குகின்றது எனப் பணியாற்றுவோர் கூறுகின்றனர். கழுதைகள் இயற்கையாகவே அமைதியான விலங்குகள். அவற்றின் மெதுவான நிலையான இருப்பு விசேட தேவையுடைய குழந்தைகளுக்குப் பாதுகாப்பு உணர்வையும் ஆறுதலையும் வழங்குகிறது.

அதைவிட மற்றுமொரு வியக்கத்தக்க விடயமும் உண்டு. கழுதைகள் எழுப்பும் ஒலியானது தென்னந்தோப்புகளிலுள்ள வண்டுகளைத் துரத்துவதாகக் கருதப்படுவதால்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் இக்கழுதைகளை தமது தோட்டங்களுக்குக் கொண்டும் செல்கின்றனர்.

மேலும், மிருக வைத்தியத் துறையைக் கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் கழுதைகள் தொடர்பாகக் கற்பதற்கான ஆர்வத்துடன் Donkey Clinic and Education Center இற்கு வருகை தந்து கழுதைகள் வாழ்வியல் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து, அவை சம்பந்தமான அறிவைப்பெற்றுச் செல்கின்றமையையும் அவதானிக்க முடிகின்றது.

கழுதைகள் பராமரிப்பை மேற்கொண்டுவரும் பிரிட்ஜிங் லங்கா நிறுவனமானது பல சவால்களை ஆரம்பகாலப்பகுதியில் எதிர்கொண்டது. மன்னார் பிரதேச மக்கள் வரலாற்றுப் பெறுமதிமிக்க இந்த விலங்கினங்களைத் தமது பகுதியில் பராமரிப்பதற்கும் வளர்ப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்ததனால் இதற்கான காணியை வழங்குவதும் நகரசபை மற்றும் பிரதேச சபைகளுக்குப் பெரும் சவாலாகவும் இருந்தது.

இதன்பின்னர், இந்நிறுவனத்திற்கு அல்ஹதீர் சாகுல் ஹமீது (Alhathir Shahul Hameethu) என்பவர் தனது சொந்தக் காணியை வழங்கி, இந்த சிகிச்சை நிலையம் தொடர்ந்து செயற்பட அதற்கு அவரே பணிப்பாளராகவும் பொறுப்புடன் பணியாற்றியும் வருகின்றார். இந்நிறுவனத்தைச் சிறப்பாகக் கொண்டுநடத்துவதற்குக் கழுதைகள் வளர்ப்புத் தொடர்பான பயிற்சி பெற்ற பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதோடு, கழுதைகள் சிகிச்சை நிலையத்தில் இணைந்து சேவையாற்ற யாரும் பெரிதாக முன்வராத நிலைமையும் காணப்படுவதாகக் கவலை தெரிவிக்கிறார் அவர்.

பராமரிக்கப்படும் கழுதைகளுக்கான உணவைப் பெற்றுக்கொள்வது, போதியளவான பணியாளர்களைப் பணியில் ஈடுபடுத்துவது, கழுதைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை வழங்குவது, பிரதேசமெங்கும் சுற்றித்திரியும் கழுதைகளை ஒன்றுசேர்த்துப் பராமரிப்பது, அதற்கான போதிய இடவசதியின்மை என்பன இவ்வாறு நல்லுள்ளம் படைத்தவர்களுக்கும் மிகப்பெரிய சவால்களேயாகும்.

எவ்வாறாயினும், இங்குள்ள சில பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வுப் பட்டறைகள் மூலம் பல மாணவர்கள் கழுதைகளைப் பராமரித்துப் பேணவேண்டியதன் அவசியம் தொடர்பில் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக்கொண்டனர் மற்றும் பொது இடங்களில் மாதர் சங்கங்களினால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன எனக் கிடைக்கும் செய்திகள் குறைந்தபட்ச நம்பிக்கையைத் தருகின்றன.

அத்துடன், 'மன்னாரின் மறுமலர்ச்சி 2022' திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து மன்னாருக்கு வருகைதந்த மிருக வைத்திய நிபுணர்கள் குழுவானது மன்னாரிலுள்ள கழுதைகளுக்கான மருத்துவச் சிகிச்சையை முகாமையும், விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் மன்னார் நகரசபை மற்றும் பிரதேச மிருக வைத்திய அதிகாரியுடன் இணைந்து நடாத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அழிந்துவரும் இனமான கழுதைகளைப் பாதுகாப்பது மிக அவசியமானது என்ற நேர்மறை எண்ணம் மக்கள் மத்தியில் உருவாவதே, இதற்கு நிரந்தரத் தீர்வாக அமைய முடியும். •



செ.மேரி ரெபேக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்ப் பெண்களின் காதுகளை அலங்கரித்த பாம்படம்..!

## தமிழர் பாரம்பரியத்தின் மற்றுமொரு அடையாளம்..!!

"காற்றுக்கும் கனக்காமல்
நகர்விற்கு அசைந்தாடி
காதோடு காதாய்
இரகசியக் கதை பேசினாய்"

ஒரு மரத்திற்கு அழகு தருவது அம்மரத்தில் காய்த்துக் குலுங்கும் கனிகள். அதே போல், நம் மூதாட்டிமாரின் காதுகளுக்கு அழகு சேர்த்தது பாம்படம். நம் மூதாட்டிமாரின் உடல் அசைவிற் கேற்ப இசைந்து, சிறு அழகைக் கூட தனியழகாகக் காட்டிய ஆபரணந்தான் இந்தப் பாம்படம்.

காதுகளை அலங்கரித்தது பாம்படமா? ஆம்! இன்றைய தலைமுறையினருக்குப் பாம்படம் என்ற பெயரே புதிதாகவும் அறிந்திராத ஒன்றாகவும்தான் இருக்கிறது. இன்றைய தலைமுறையினரிடம் காதுகளுக்கு பொருத்தமான ஆபரணம் எது எனக் கேட்டால், அதற்கான பதிலாக தோடு அல்லது ஜிமிக்கி என்பதே கிடைக்கும். ஏனெனில், பாம்படம் என்ற சொல்லை எம் அன்றாட வாழ்வியலில் நாம் அறிந்திருக்கவில்லை.

பாம்படம் அல்லது தண்டட்டி என்பது பெண்கள் காதுகளில் அணியக்கூடிய காதணி வகைகளுள் ஒன்றாகும். இது பண்டைய காலப் பெண்களின் காதுகளை அலங்கரித்த ஆபரணமாகக் காணப்படுகிறது. பாம்படமானது தங்கம் அல்லது வெண்கலத்தினால் செய்யப்படும் ஒரு கனமான ஆபரணமாகும். உண்மையில் பாம்படம் என்பது தமிழர்களுடைய பண்டைய பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இதனடிப்படையில் பாம்படத்தினுடைய வரலாறானது சங்ககாலத்திலிருந்தே தொடர்கிறது. சங்ககாலத்தில் திணைகளை மேய வரும் பறவைகளை விரட்டுவதற்காகப் பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது காதணிகளைக் கழற்றி எறிந்து பறவைகள் திணைகளை மேயாத வண்ணம் பார்த்துக்கொள்வார்களாம் என சங்ககாலப் பாடல்கள் கூறுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாகப் பண்டைய காலச் சிற்பங்களில் உள்ள பெண்களின் காதுகளில் இப்பாம்படங்கள் இருப்பதைக் காணமுடியும்.

சங்க காலத்தைத் தொடந்து தமிழ் கூறும் நல்லுலகில் வாழ்ந்த பெண்கள் பலர் இவ் ஆபரணத்தை அதிகமாகப் பயன்படுத்தியுள்ளனர். அந்தவகையில் இக்காதணியைப் பெண்கள் அணியவேண்டுமாயின் அதற்கு ஏற்றவகையில் பிரத்தியேகமாகத் தமது காதுகளைத் தயார் செய்ய வேண்டும். அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த இப் பாம்படத்தை அணிவதில் விருப்பம் கொண்டிருந்த பெண்கள் காது குத்தும் ஆசாரிமாரைத் தமது வீடுகளுக்கு வரவழைத்து காதுகளைக் கீறி. அதனுள் மரத்துண்டு அல்லது ஈயக்குண்டு குச்சம்காளியை மாட்டிவிடுவார்கள். இதனால் ஏற்படும் காயம் ஆறுவதற்குக் கிட்டத்தட்ட நாற்பது நாட்களாகும். அதுவரை ஆசாரிமார் அப்பெண்களுடைய வீட்டிலிருந்தே அவர்களுக்குப் பிரத்தியேகக் கவனிப்பை வழங்குவார்களாம்.

அவ்வாறு செய்வதன் மூலமே பாம்படத்தின் கனத்தைத் தாங்குவதற்குரிய வகையில் காதுகள் நீளமாகும். அதன் பின்னரே பாம்படம் அல்லது தண்டட்டியை அணிந்து பெண்கள் தமது காதுகளை அலங்கரிப்பார்களாம். எமது மூதாட்டிமார் வலிகளைத் தாங்கி அணியும் இவ் ஆபரணத்தை ஒருமுறை அணிந்துவிட்டால் பெரும்பாலும் கழற்றுவதில்லை என்றும் கூறப்படுகின்றது.



இக்காதணியின் உட்புறம் மெழுகினாலும் வெளிப்புறம் தங்கத்தினாலும் செய்யப்படுகிறது. பாம்படம் என்பது பந்து, கனசதுரம், வட்டம், எதிர் எதிர் பக்கங்களும், கோணங்களும் ஒன்றாக இருக்கும் ஒரு இணைவக வடிவமைப்பைப் பெற்று பாம்பு அல்லது பறவை போல காட்சியளிக்கும்.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் இலங்கையிலும் பாம்படத்தின் செல்வாக்கு இருந்திருப்பதை அறியமுடிகின்றது. எனினும், இது தமிழர்களுக்கே உரித்தான தனித்துவமான சிறப்பை எடுத்துக் காட்டுவதாகக் காணப்படுகிறது. ஆனால், இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியானது தமிழர்களுடைய பண்பாட்டிலும் வாழ்வியலிலும் பிரமிக்கத்தக்க மாற்றங்களை புகுத்திவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இத்தகைய வேகமான வளர்ச்சியானது தமிழர்களுடைய பல பண்பாடுசார் பொருட்களைக் கூட இல்லாமல் அழித்தொழித்த வரலாறுகளும் உண்டு. ஆதிகாலம் தொட்டு இன்றுவரை நகைகளை ஆக்குவதும், அணிவதும் தமிழர் பண்பாட்டிலுள்ள மாற்றமுடியாத ஒரு பண்பாகும். அந்த வகையில் பொன், நவமணிகளாலான ஆபரணங்களே தமிழருடைய அணிகலன்களில் மிகவும் மதிப்புப் பெற்றவை. பொருளாதார ரீதியான தமது சேமிப்பைப் பொன் நகைகளாக மாற்றி வைத்திருந்த பெருமையும் தமிழர்களைச் சாரும்.

தமிழ்ப் பெண்கள் தம்மை அழகு செய்து சிங்காரித்துக் கொள்வதில் அதீத விருப்பம் கொண்டவர்கள் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அந்தவகையில், தமிழர் அழகியலில் அணிகலன்களுக்கு எப்போதுமே முக்கிய இடமுண்டு. ஆபரணங்களால் தம்மை அலங்கரித்துக் கொள்பவர்களில் பெண்களை வெற்றி கொள்ள யாருமில்லை. பெண்கள் ஒட்டியாணம் அணிவது அவர்களுடைய குறுகலான மெல்லிடையைக் காட்டுவதற்காக என்றும், சங்கிலி அணிவது கழுத்தழகைக் காட்ட என்றும், கம்மல் அணிவது தமது கவர்ச்சிகரமான காதமைப்பைக் காட்டத்தான் என்றும் கூறப்பட்டது. இவ்வாறு பல விமர்சனங்கள் கூறப்பட்டாலும் பெண்கள் அணியும் ஒவ்வொரு அணிகலன்களும் ஏதோவொரு சிறப்பை எடுத்தியம்புவதாயத்தான் இருந்து வருகிறது.

ஆனால், இன்று தமிழருடைய பாரம்பரியத்தில் ஆபரணங்களுக்கான முக்கியத்துவம் குறைந்து செல்வதை அவதானிக்க முடிகிறது. நவீன கலாச்சாரத்தின் போர்வைக்குள் வலிந்தி முக்கப்பட்டுள்ள நாம் தமிழர் பண்பாட்டு விடயங்கள் பலவற்றை மறந்து வாழ்ந்து வருகின்றோம். இதனால் தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட ஆபரணங்களிற்கான சிறப்பு குறைந்து கொண்டே செல்கிறது. திருமணம் என்று ஒரு நிகழ்வு வரும்போது மட்டுமே தமிழர்களால் ஆபரணங்கள் தேடப்படுகின்றன.



ப. துசியந்தி

பண்டையகாலப் பாரம்பரிய நகைகளான சுடிகை, டோலக்கு, அத்திக்காய்க் கொலுசு, அரையணி மற்றும் சதங்கை ஆகியன எம்மிடமிருந்து மறைந்து போகின்றன. பாரம்பரிய நகைகள் காலத்திற்கு ஏற்றவாறு பல மாறுதல்களை ஏற்றுக்கொண்டு ஒரு நீண்ட பாதையைக் கடந்துவந்துள்ளதால், அதன் பின்னரான அடுத்தடுத்த தலைமுறைகள் பாம்படத்தை மறந்துவிட்டன. இன்றைய சிறு காதணிகள் பல பாம்படத்தின் பதிலிகளாக மாறிவிட்டன. இன்று நவீனத்திற்கு ஏற்றாற்போல் பல ஆபரணங்கள் சந்தைக்கு வந்திருந்தாலும் கூட தமிழ்ப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டிய ஒரு ஆபரணமாகப் பாம்படம் இருக்கும் என்பதில் ஒருவித ஐயமும் இல்லை. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'அர்ச்சுனன் தபசு'

## மலையகத்தின் அடையாளம்

**இ**ருநூறு வருடங்களுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு குடி பெயர்ந்த மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் தங்களது உழைப்பை மட்டும் இங்கு கொண்டுவரவில்லை. அவர்களின் உயிரோடும் இரத்தத்தோடும் கலந்த கலைகளையும் பண்பாட்டினையும் இங்கு காவிக்கொண்டே வந்தனர்.

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு அழைத்து வரப் பட்ட அம்மக்கள் காடுகளையும் மலை களையும் தங்களது உழைப்பால் விளை நிலங்களாக மாற்றியமைத்தனர். உடலை இயந்திரமாக்கி, குருதியை வியர்வை யாக்கி உழைத்த அம்மக்களின் அடிமைத் தளை வாழ்வில் சிறு மகிழ்வை ஏற்படுத் தியது அவர்களோடு கூடவே பயணித்த கலைவடிவங்களே. அவ்வாறு மலையக மக்களால் ஆடப்பட்ட பல கூத்து வடிவங் களில் ஒன்றே அர்சுனன் தபசு ஆகும்.

மலையகக் கூத்துக்கள் என்றால் பெரும்பாலானோரின் மனதில் தோன்று வது காமன்கூத்துதான். ஆனால், மலையக மக்களிடையே காணப்படும் அர்ச்சுனன் தபசு எனும் கூத்துத் தொடர்பாக அறிந்தி ருப்பவர்கள் சிலரே. அர்ச்சுனன் தபசு மலை யக தோட்டப்புறங்களில் விடிய விடிய ஆடப்படும் கூத்துக்களில் ஒன்றாக காணப் படுகின்ற இக்கூத்து இன்று அருகிவரு கின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படு கின்றது.

மகாபாரதத்தினுடைய ஒரு இணைக் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்த கூத்தானது நிகழ்த்தப்படுகின்றது. பஞ்ச பாண்டவர்கள் தங்களுடைய நாடு, நகரம், வீடு, வாசல் என்பவற்றினை வைத்துக் கௌரவர்களிடம் பகடையாடும் சந்தர்ப்பத் தில், சகுனியின் சூழ்ச்சியினால் பாண்ட வர்கள் தோல்வியுற்று கௌரவர்களிடம் அனைத்தையும் இழக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இழந்ததை மீண்டும் பெறவேண்டுமானால் பாண்டவர்களில் ஒருவர் காட்டுக்குச் சென்று கழுமரத்தில் ஏறித் தவம் செய்ய வேண்டும் என்னும் போது இதற்காக முதுகுப்பகுதியில் மச்சரேகை கொண்ட அர்ச்சுனன் தேர்ந்தெடுக்கப்படுகிறான்.

இவன் தவத்திற்குத் தகுதியானவனா எனப் பார்ப்பதற்காகச் செல்லும் வழியெல்லாம் கிருஷ்ணன் மாறுவேடங்களில் சென்று அர்ச்சுனனைச் சோதிக்க இவை அனைத்திலும் வெற்றிக்கண்டு அர்ச்சுனன், பத்ரகாளியின் உதவியுடன் கழுமரத்தில் கடுமையாகத் தவம் புரிந்து வெற்றி கண்டு, ஏழ்கன்னியை மணக்கின்றான். இக்கதையே அர்ச்சுனன் தபசுக் கூத்தாக மலையக மக்களிடையே ஆடப்படுகின்றது.

இக்கூத்தில் அர்ச்சுனன், கௌரவர்கள், கிருஷ்ணன், சகுனி, பேரண்டன், பேரண்டக் கன்னி, பத்ரகாளி, நாகக்கன்னி, மோகக்கன்னி, ஏழ்கன்னி, மாரியம்மன் போன்ற பாத்திரங்கள் பிரதானமானவையாகக் காணப்படும்.

மலையகத் தோட்டப்புறங்களில் நிகழ்த்தப்படும் இக்கூத்தினுடைய மேடை அமைப்பானது ஒரு பக்கம் திரைச்சீலையால் மறைக்கப்பட்ட மூன்று பக்கமும் பார்வையாளர்களைக் கொண்ட அரைவட்டவடிவமாகக் காணப்படும். மேலும், திரைச் சீலைக்கு முன்பு உயர்த்தி அமைக்கப்பட்ட பகுதியில் இக்கூத்தினுடைய அண்ணாவியார் (மாஸ்டர் என ஊர்மக்களால் அழைக்கப்படுபவர்), இசைக்கலைஞர்கள் மற்றும் கோரஸ் பாடுவோர் போன்றோர் அமர்ந்திருப்பர்.

திரைச்சீலைக்குப் பின்பகுதியில் கதாபாத்திரங்களுக்கான வேட உடை, ஒப்பனை போன்றன மேற்கொள்ளப்படும். இக்கூத்தில் இசைக்காக டோலக் மற்றும் ஜால்ரா பயன்படுத்தப்படுவதோடு சில கதாபாத்திரங்களின் வருகையை மெருகூட்டுவதற்காகத் தப்பும் பயன்படுத்தப்படும்.

கழுமரம் ஏறுதல்

தேரு கோப்புரவி கட்டி
ஜெய கம்ப கொடி பறக்க
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா...

தேச தேச ராஜரெல்லாம் சபையில் கூடவே
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா...
காலிலேயும் வெள்ளிமணி
கழுத்திலேயும் தங்ககார
அழகான தேரில் ஏறி அர்ச்சுனன் வாறேன்
ஹரஹரா...

ராஜனும் வாறேன் அர்சுனராஜனும் வாறேன்
ராஜனும் வாறேன் அர்சுனராஜனும் வந்தேன்
கைதனிலே கத்தி தகதகவென
கானகம் வெற்றி....
மாரியுனை நம்பி மண்ணுக்கு
நானும் வந்தேன்
காளியுன்னை நம்பி களத்துக்கு
நானும் வாறேன்...
நானும் வாறேன்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பாடல் வரிகள் மூலமாக அர்ச்சுனனாக வேடமிட்டிருப்பவர் தன்னை மேடையில் பார்வையாளர்கள் முன்னிலையில் அறிமுகப்படுத்திக்கொள்வார். இவ்வாறு ஒவ்வொரு கதாபாத்திரமும் கூத்தில் தன்னைத்தானே பாடல்கள் மூலம் அறிமுகப்படுத்திக்கொள்வர். இங்கு கதையானது பாடல்கள் ஊடாக பாத்திரங்களினாலேயே நகர்த்திச் செல்லப்படும். மேடைக்குச் சற்று அருகாமையில் அர்ச்சுனன் தவம் செய்வதற்காக 60 அடி உயரமான மரம் ஒன்று அலங்கரிக்கப்பட்டு, நாட்டப்பட்டு இருக்கும். மரத்தோடு 18 படிகள் பொருத்தப்பட்டிருக்கும். அம்மரத்தின் உச்சியில் வட்ட வடிவிலான தட்டு ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். கூத்தின் இறுதிக் கட்டத்தில் அர்ச்சுனன் வேடமிடப்பட்டிருப்பவர் ஒவ்வொரு படிகட்டுக்களில் கால்வைக்கும் போதும்,

ஒன்றாம் படிதளமாம் நம்ம
அர்ச்சுன ராஜன்
ஓலைப்பூ மண்டபமாம்




இரண்டாம் படிதளமாம் நம்ம
அர்ச்சுன ராஜன்
இரட்ணகிளி மண்டபமாம்
மூன்றாம் படிதளமாம் நம்ம
அர்ச்சுன ராஜன்
முத்தழகு மேடைகளாம்
நான்காம் படிதளமாம் நம்ம
நவரட்ண மேடைகளாம்

மேற்படி பாடல்கள் 18 படிகளில் ஏறும் வரையிலும் பாடப்படும்.

இவ்வாறு 18 படிகளிலும் ஏறிச்சென்று வேலமரத்தின் உச்சியில் பொருத்தப்பட்டிருக்கும் வட்ட வடிவிலானத் தட்டில் நின்று வேடம் தரித்தவர் தவம் புரிவார். யாதாயினும் ஒரு பட்சி வானில் பறப்பதைக் கண்டவுடன், தவத்தை நிறைவு செய்து கொண்டு அர்சுனன் வேடமிட்டவர் மரத்திலிருந்து கீழே இறங்கி கூத்தினைக் காண வந்த மக்களுக்கு ஆசி வழங்குவார். மலையக மக்களின் ஒற்றுமையை வெளிக்காட்டும் வண்ணம் அர்ச்சுனனும் ஏழ்கன்னியுமாக வேடம் தரித்தோர் வீடு வீடாக சென்று அரிசி, காசு போன்றவற்றை தானமாகப் பெற்று வந்து அன்னதானமாக வழங்குவர். அர்ச்சுனன் தபசு நாடகமா அல்லது கூத்தா என்ற விவாதமானது இன்றைய சமூகத்தினரிடையே காணப்படுகின்றது. இதனை நாடகம் என்று சொல்லுபவர்கள் இதற்கான காரணங்களாகப் பலவற்றை முன்வைக்கின்றனர். எழுத்தில் காணப்படுதல், போலச் செய்யும் பண்பு காணப்படல், வேட உடை, ஒப்பனைகள், காட்சியமைப்புக்கள், மேடையமைப்பு, இசை மற்றும் ஒளியமைப்புக்கள், மேடைப்பொருட்கள் மற்றும் நாடகத்தின் பிரதான மூலங்களான நடிகன், பார்வையாளர்கள், மேடை போன்ற நாடகப் பண்புகளைக் கொண்டு காணப்படுவதால் அர்ச்சுனன் தபசு நாடகம் ஆகும் என்பதே பலரின் கருத்தாகும். இவையே அர்ச்சுனன் தபசு நாடக வகைகளில் ஒன்றாகும் என்ற கருத்துக்கு வலுச்சேர்ப்பதாகக் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்தும் காலங்காலமாக மேற் கொள்ளப்பட்டு வருவதாலும், குழந்தை வரம் இல்லாதவர்களுக்கு குழந்தைப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையின் அடிப்ப டையில் நிகழ்த்தப்படுவதாலும் அர்ச்சுனன் தபசானது கூத்தே என்ற கருத்தும் வலுவாக முன்வைக்கப்படுகின்றது.

மலையக மக்களின் பொக்கிஷமாகத் திகழும் அர்ச்சுனன் தபசுக் கூத்தானது இன்று பல்வேறு சவால்கள் காரணமாக தோட்டப்புறங்களில் நடாத்தப்படுகின்றமை அருகிவிட்டது. குறிப்பாக, சினிமா மற்றும் சின்னத்திரை மீது மக்கள் கொண்டுள்ள நாட்டமானது இவ்வாறான கூத்துக்களில் இருந்து அவர்களைப் பிரித்து, தன்வசமாக் கிக் கொள்கின்றது. மேலும், இத்தகைய கூத்துகள் பாமர மக்களின் ஆர்வத்தினால் மாத்திரமே நடாத்தப்படுவதும் அதனுடைய வளர்ச்சிக்குத் தடையாகவே உள்ளது.

காமன் கூத்தானது 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற செம்மொழி மாநாடு, 2015ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இடம்பெற்ற மட்டக் களப்பு கூத்தியல் மாநாடு, 2018ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் இடம்பெற்ற தமிழமுதம் போன்றவற் றில் உலகத் தமிழர்கள் அனைவரும் காணும் வகையில் மக்கள் கலை பண் பாட்டு அரங்கு எனும் குழுவினரால் மேடை வடிவமாகவும், மலையகங்களில் கல்வி கற்ற சில கலைஞர்களினால் நூல் வடிவாக வும் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருகின்றது. இதேபோன்று அர்ச்சுனன் தபசுக் கூத்தும் பாமர மக்களின் கைகளில் இருந்து கலை யார்வம் கொண்ட மலையக கல்விகற்ற சமூகத்தினரிடம் வந்துசேருமாக இருந் தால் மீண்டும் இக்கலையானது புத்துயிர் பெறும் என்று ஆணித்தரமாகக் கூறலாம்.

மேலும், கூத்துக்கள் என்றாலே இன் றைய இளைஞர்கள் ஒரு தாழ்வான எண்ணப்பாட்டை தோற்றுவிக்கக் கூடியது என நினைக்கின்றனர். கூத்துக்களில் ஈடுபட்டால் தாங்கள் சமூகத்தில் கேலிக்கு இலக்கானவர்களாக மாறி விடுவோம் என்ற எண்ணப்பாடு இவ்வாறான கூத்துக் களை வளர்ப்பதற்குத் தடையாக உள்ளது. இக்கூத்தானது மூன்று மாத காலமாக பயிற்சி பெற்று பின்னர் அரங்கேற்றப்படும் ஒன்றாகும். எனவே, இதனைப் பயில்வது மற்றும் பயிற்றுவிப்பதற்கான கால எல்லை அதிகமாகக் காணப்படுவதால் கூத்தினைக் கற்றுக்கொள்ள விரும்பும் மக்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகின்றது. இங்கு ஆடப்படும் ஆட்ட முறைமை, பாடல் கள், வளங்கள் சற்றுக் கடினமானதாகக் காணப்படுவதாலும், 60 அடி மரத்தின் உச்சிக்கு ஏற வேண்டும் என்ற அச்சமும் கலைஞர்களுக்கு இக்கூத்தின் மீதான நாட்டம் இல்லாமைக்கான காரணங்க ளாகும். •



யே. பிரதீபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணத்தில் மாட்டு வண்டில் சவாரி :

# சோபை இழந்துவிடாத மரபின் தொடர்ச்சி...!

இலங்கையில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டில் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்பகாலம் தொடக்கம் தற்காலப்பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பி இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

மாட்டுவண்டில் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங்காட்டிநிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகினறது.

இது ஒரு வீரவிளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளைமாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன.

காளைமாட்டின் வால், கால்கள், கொம்பு, கண் என்பவற்றினை அவதானித்தே குறித்த காளை சவாரிக்கு ஏற்றதா எனத் தெரிவு செய்யப்படுகின்றது. சவாரி வண்டில் மாட்டிற்கு பல உபசரணைகள் செய்து பக்குவமாகக் கவனிப்பது ஊரவர்களின் வழமையாகும்.

சவாரி வண்டிலானது அதிக பாரம் இல்லாமல் இருப்பதுடன் உறுதியாகவும் பலமாகவும் இருக்க வேண்டும். இந்தவகையில், வண்டில்கள் பாலை, முதிரை போன்ற வைர மரங்களால் உருவாக்கப்படுகின்றன. வண்டில் சில்லுகளைப் பூவரசு மரத்தில் உருவாக்கி உலோக வளையம் பூட்டுவர். வண்டிலானது பொதுவாக ஏழே கால் அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் ஒன்பதரை அடி வரையான சுற்றுக்கள் கொண்டதாக அமைக்கப்படுகின்றது. ஒரு சுற்று என்பது வண்டில் சில்லின் சுற்றளவினைக் குறிக்கின்றது.

சவாரி நடைபெறும் இடமானது சவாரித்திடல் எனும் பெயரினைக் கொண்டு அழைக்கப்படுகின்றது. சவாரி வண்டில்கள் ஓடக்கூடிய வெளியையும் அதற்கேற்ற நில அமைப்பையும் கொண்டுள்ள பகுதிகளே சவாரித்திடல்களாக அங்கீகரிக்கப்படுகின்றன.

பொதுவாக மாட்டுவண்டிச் சவாரியானது நான்கு பிரிவுகளாக நடைபெறும். இதிலே முதற் பிரிவில் நல்ல தரமான காளைகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இவ்வாறே அடுத்தடுத்த பிரிவுகளிலும் காளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இறுதியான பிரிவில் இளம் கன்றுகள் பெரும்பாலும் தெரிவுசெய்யப்படுகின்றன. இவை பொதுவாக 3, 4 வருடக் கன்றுகளாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

சவாரி ஓட்டமானது 400 மீற்றர் முதல் 500 மீற்றர் அளவில் நடைபெறுகின்றது. பெரும்பாலும் சவாரிக்கான மாடுகள் சவாரி நடைபெறும் தினத்திற்கு முன்னைய நாளன்று குறித்த சவாரித் திடலிலே ஓட விடப்பட்டு, அத்தரைக்குப் பழக்கப்படுத்தப்படுகின்றன.

மாட்டுவண்டில் சவாரியைப் பொழுதுபோக்காக மாத்திரமன்றித் தொழிலாகவும் செய்தவர்கள் பலருளர். அவ்வாறு மாட்டுவண்டில் சவாரித்தொழிலில் ஈடுபடுவோரை 'சவாரி' என்றே அடைமொழி வைத்து அழைப்பதும் பழக்கத்தில் இருந்துள்ளது. சவாரி வண்டிலில் ஆசனப்பலகையில் இருந்து மாடுகளை சுறுசுறுப்பாக அவர் வழிநடாத்திச் செல்லுவார்.

முன்னைய காலப்பகுதிகளில் யாழ்ப்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்காரச் சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர்.

சிறுவயதிலிருந்தே சவாரிக்குப் பழக்கும் கன்றினை உடன்பிறப்பாகவும், உறவாகவும் எண்ணி வளர்ப்பது சவாரி விடுவோரின் உயரிய குணமாகும். சவாரி விடுவோரிடம் கேட்டால் சவாரிக்கன்றினை வளர்ப்பது ஒரு குழந்தையை வளர்த்தெடுப்பது போலவாகும் என்பார்கள்.

சவாரி வண்டில்கள் வைத்திருப்போர் மாடுகளிடம் மிகுந்த பாசம் வைத்திருப்பது அவர்களின் ஒவ்வோர் செயல்களிலும் எதிரொலிக்கும். மாடுகளை 'வாடா', 'திருப்படா' என்று செல்லமாக அதட்டுவார்கள்; 'இஞ்சாய்' என்றே விளிப்பார்கள்.

மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப்போகின்றது என்றால், அது அனைவருக்கும் பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் இந்தப் போட்டியானது நீர்வேலி சவாரித்திடல்,



மாட்டுவண்டில் சவாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

சவாரிக்கென்று சங்கம் அமைக்கப் பெற்றும் காணப்படுகின்றமை இன்னுமொரு சுவாரசியமான விடயமாகும். இந்தச் சங்கத்தில் ஒவ்வொரு சோடிக் காளைக்கும் சவாரி விடுபவர் ரூபா ஆயிரம் பணத்தினைச் செலுத்தி உறுப்பினராதல் வேண்டும். அந்தச் சங்கத்தின் மூலமாக, போட்டி நடைபெறும் சமயங்களில் மக்களின் பாதுகாப்பு கருதி சவாரி ஓடும் இரு புறங்களிலும் கட்டைகள், கயிறுகள் போன்றவற்றினை நட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

பொதுவாகப் போட்டியின்போது முதலாவதாக வரும் காளைமாடுகளுக்குத் தங்கப்பதக்கம் வழங்குவது வழமையாக இருந்தது. இவை மட்டுமன்றி, அந்த காளைக்கான மரியாதையும் வெகுவாகக் காணப்படும். மேலும், ஆறுதல் பரிசுகளாகக் குத்துவிளக்கு, மணிக்கூடு போன்றனவும் வழங்கப்படுகின்றன.

தினகரன் பத்திரிகை நிறுவனமானது போருக்கு முன்னைய காலப்பகுதியில் வருடாவருடம் யாழ்ப்பாணம் முற்றவெளிப்பகுதியில் சவாரிப்போட்டி நடாத்துவதை வழக்கமாக கொண்டிருந்தது. இந்தப் போட்டியின்போது பங்குபற்றும் அனைவரையும் ஊக்குவிக்கும் நோக்கில் தினகரன் பத்திரிகை நிறுவனமானது பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பது வழமையாகும்.

மாட்டு வண்டில் சவாரியானது எந்தளவிற்கு வேடிக்கையும் சுவாரசியமாகவும் உள்ளதோ அதே போல விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. பெருமளவில் மக்களின் அவதானம் இன்மையால் இத்தகைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் காளைகள் நேராக ஓடாமல் குறுக்காகக் கயிறுகளுடன் மோதும் சந்தர்ப்பங்களும் உண்டு. வண்டில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டு சில்லுகள் உடைவதன் மூலமாகவும் விபத்துக்கள் நடைபெறும். சிலவேளைகளில் போட்டியில் ஈடுபடுபவர்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் வரும்போதும் விபத்துகள் ஏற்படும் அல்லது வேண்டுமென்றே ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பங்களும் உண்டு.



சவாரிப்போட்டியின் போது மாடுகள் வேகமாக ஓட வேண்டும் என்ற நோக்கில் அவற்றைத் துன்புறுத்துவதும் இச்சவாரிப் போட்டிகளின் மறுபக்கங்களில் ஒன்றாகும். துவரந்தடியில் ஆணியினை ஏற்றி அதன் மூலமாக குத்தும்போது மாடுகள் அந்த வேதனையில் வேகமாக ஓட வைக்கப்படுவதை சிலர் வழக்கமாகக் கொண்டுள்ளமை எவ்வகையிலும் ஏற்கப்படாத ஒன்றேயாகும்.

எவ்வாறிருந்தாலும், ஒட்டுமொத்த நோக்கில் மாட்டுவண்டில் சவாரி இன்றளவும் தன் பிரபல்யத்தை இழந்துவிடவில்லை என்பது கண்கூடு. இந்த சவாரியானது முன்னைய காலப்பகுதியோடு ஒப்பிடும்போது தற்காலப்பகுதியில் குறைவான அளவிலே நடைபெற்று வந்தாலும், தமிழர் மரபுரிமைகள் பேணப்படும் விடயத்தில் அதன் சிறப்புரிமை இன்னும் மங்கிவிடவில்லை என்றே கூறலாம்.

•



பி. துலக்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்...!

சமூகச் செயற்பாட்டாளரும்
Jaffna Transgender Network இன் நிறுவனருமான

## ஏஞ்சல் குயின்ரஸ்

உடனான நேர்காணல்

"மங்கையானவள் திருநங்கையானவள்
நிழலின் இருளில் சிரிப்பவள்
அன்பின் ஊற்றாய்ப் பிறந்தவள்.
வலியின் வலியயைத் தாங்கியவள்
திறமைகளை தீர்க்கமாய் பெற்றவள்
ஆணாகி பெண்ணாகி யாதுமானவள்"

**- ஆயிஷா பாருக்**

ஏஞ்சல் குயின்ரஸ் *Jaffna Transgender Network* இன் நிறுவுநர் ஆக இருக்கிறார். இவர் LGBTIQ சமூகத்தின் செயற்பாட்டாளராக இலங்கையின் வடபகுதியில் வாழும் *Transgender* நபர்களின் சமத்துவத்திற்காகவும் அவர்களுக்குச் சுயவேலை வாய்ப்புக்களை அமைத்துக் கொடுப்பதற்காகவும் ஆர்வமுடன் செயற்படுபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **ஓர் திருநங்கையாக எப்போது நீங்கள் உங்களளவில் மாற்றங்களை உணர்ந்தீர்கள்?**

எனது 8ஆவது வயதில் நான் முதன் முதலில் என்னுள் ஏற்பட்ட மாற்றம் குறித்து உணர்ந்தேன். பெண்களுக்குரிய உணர்வுகளை நான் கொண்டிருந்த போதிலும் பெண்களுக்குரிய இயல்பைக் கொண்டவளாக நான் மாற்றமடைகிறேன் என்ற சரியான புரிதல் எனக்கு அப்போது ஏற்படவில்லை. இருப்பினும், பெண்களைப் போல பேசுவது, நடப்பது பெண்களைப் போல செயல்கள் புரிவது போன்ற உணர்வுகள் மனதளவில் துளிர்விட ஆரம்பித்தன. ஆணாகப் பிறந்திருந்தாலும், எட்டு வயதில் இருந்தே நான் என்னை ஒரு பெண்ணாக உணர்ந்தேன். அந்தத் தருணம் வாழ்வில் மறக்க முடியாத ஒரு தருணமாக இருந்தது. நான் மிகவும் மகிழ்ச்சியடைந்த தருணம் அது. சாதாரணப் பெண்களைப் போன்றே நான் என்னை உணர்ந்தேன்.

- **உங்களில் உணர்ந்த மாற்றத்தை யாரிடமாவது வெளிப்படுத்தினீர்களா?**

ஆரம்பத்தில் இவ்வுணர்வு குறித்து நான் வெளிப்படையாகப் பேசத் தயங்கினேன். 8 வயதென்பது ஒரு சிறிய வயதாக இருந்ததால் என்னைப் பற்றிய உணர்வுகளை நான் பிறரிடம் வெளிப்படுத்தினால் அவர்களால் நான் ஒதுக்கப்பட்டு விடுவேனோ என்ற பயம் எனக்குள் இருந்தது. எனவே, என்னுடைய உணர்வுகளை நான் கட்டுப்படுத்தி வைத்திருந்தேன். ஒரு கட்டத்தில் என்னுடைய உணர்வுகளை யாரிடமாவது வெளிப்படுத்த வேண்டுமென தோன்றியது. எனவே, என்னைப் போன்ற உணர்வைக் கொண்டவர்களை நான் எனது சமூகத்திலேயே அடையாளம் கண்டேன். அவர்களிடம் தான் நான் என்னுள் உணர்ந்த மாற்றங்கள் குறித்து வெளிப்படுத்தினேன். எனது தனிப்பட்ட விடயங்கள் குறித்து நான் எனது நண்பர்களிடம் தான் அதிகமாகப் பகிர்ந்து கொள்வேன். அவர்களும் தம்மைக் குறித்து என்னோடு கலந்துரையாடுவார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமானது ஆண், பெண் என்ற இருமைக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கப் பழகியதால் தான் எம்மைத் தம்மிலிருந்து வேறுபடுத்தி மூன்றாம் பாலினம் என குறிப்பிடுகின்றனர். எனவே, பாலினவர்க்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவதில் நான் உடன்பாடு கொள்ளவில்லை.



- **நீங்கள் ஒரு திருநங்கை என்பதை அறிந்த பின் உங்களுக்கு நெருக்கமானவர்களின் புரிதல் எவ்வாறு அமைந்தது?**

நான் திருநங்கைக்குரிய இயல்பைக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்த என்னுடைய பெற்றோரால் அதை ஏற்க முடியவில்லை. அதற்காக நான் அவர்களைக் குற்றம் கூறவில்லை. ஆனால், குறிப்பிட்ட வயது வரை குழந்தைகளை அரவணைக்க வேண்டியது பெற்றோரது கடமை. ஆயினும், அந்த அரவணைப்பு ஆரம்பத்தில் எனது குடும்பத்திலிருந்து எனக்குக் கிடைக்கவில்லை. நீ ஏன் பெண்களைப் போல நடக்கின்றாய்? என என் தாய் என்னிடம் பல முறை கேட்டிருக்கிறார். அது மட்டுமல்லாமல் நான் பெண்ணுக்குரிய இயல்பைக் கொண்டிருப்பதை என் தந்தையிடம் கூட வெளிப்படுத்தாமல் மறைத்திருக்கின்றேன். ஏனென்றால், எமது குடும்பம் ஒரு பாரம்பரிய குடும்பமாகக் காணப்பட்டதோடு அவர்கள் சமூகக்கட்டுப்பாட்டுக்குப் பயந்தவர்களாகவும் காணப்பட்டனர். நான் திருநங்கைக்குரிய இயல்பைக் கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்தால் சமூகத்தவர்களால், அயலவர்களால் ஒதுக்கப்பட்டுவிடுவோம் என அவர்கள் அச்சம் கொண்டனர். சமூகக் கட்டுப்பாட்டுக்குப் பயந்து நான் குடும்பத்தவர்களால் தனிமைப்படுத்தப்பட்டேன். இருப்பினும் எனது அக்கா, பாட்டி மற்றும் நண்பர்கள் எனக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

- **மூன்றாம் பாலினத்தவர் என்று திருநர்களைக் குறிப்பிடுவதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள். உங்களால் அப்பதத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதா?**

ஆண் பெண் என்ற பாலினத்தை உருவாக்கிய மனிதர்கள், ஏன் ஆண்களை முதலாம் பாலினம் என்றோ பெண்களை இரண்டாம் பாலினம் என்றோ குறிப்பிடாமல் எம்மை மட்டும் மூன்றாம் பாலினம் எனக் கூறுகிறார்கள்? பாலினத்தில் முதலாம் பாலினம், இரண்டாம் பாலினம் என்று இல்லாத போது நாங்கள் ஏன் மூன்றாம் பாலினம் என சித்திரிக்கப்பட வேண்டும்? எனவே மூன்றாம் பாலினம் என குறிப்பிடப்படுவதை நான் விரும்புவதில்லை. சமூகமானது ஆண், பெண் என்ற இருமைக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்க்கப் பழகியதால் தான் எம்மைத் தம்மிலிருந்து வேறுபடுத்தி மூன்றாம் பாலினம் என குறிப்பிடுகின்றனர். எனவே, பாலினவர்க்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்துவதில் நான் உடன்பாடு கொள்ளவில்லை.

- **திருநங்கையாக சமூகம் எவ்வாறான கண்ணோட்டத்தில் உங்களை நோக்குகிறது?**

பலவிதமான குணாதிசயங்களைக் கொண்ட மனிதர்களை உள்ளடக்கிய கட்டமைப்புத்தான் சமூகம். அவ்வாறான சமூகத்தில் உள்ளவர்களுடன் எவ்வித தொடர்புமில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லாமல் எம்மால் வாழ முடியாது. இதனடிப்படையில் நான் ஒரு திருநங்கையாக இருப்பதை சமூகத்தில் ஒரு சிலரால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ள போதிலும் பலரால் ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. ஏனெனில், சமூகத்தில் திருநர்கள் குறித்த சரியான புரிதல் இருக்கவில்லை என்றே கூற வேண்டும். அத்தோடு நான் வாழ்ந்த சமூகம் நெருக்கமான சமுதாயமாகவும் காணப்பட்டது. இதனால் நான் பால்நிலை ரீதியிலான கேலி கிண்டலுக்கும் உட்படுத்தப்பட்டேன்.

- **தற்கால சமூகத்தில் நீங்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கிறீர்கள்?**

தற்காலத்தில் என்பதை விட ஆரம்பத்திலிருந்தே திருநங்கைகள் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். வார்த்தைப் பிரயோகங்கள் ஊடாகக் கேலியாக அழைக்கப்படுவது, சமூகத்தில் தமது அடையாளத்தை ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ வெளிப்படுத்த முடியாமலும் சுயமாக வாழ முடியாமல் மன உளைச்சலுடன் சமூக மதிப்பு எதுவுமில்லாமல் தனிப்பட்ட சமுதாயமாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டமை, வீட்டு வன்முறை, பாலியல் ரீதியிலான சுரண்டல்கள், கல்வி, வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போதல், திறமைகள் இருந்தாலும் அதை வெளிப்படுத்துவதற்கான சரியான களம் கிடைக்காமை போன்ற பல்வேறுபட்ட சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது. மேலும் சமூகத்தவர்கள் மத்தியில் திருநர்கள் குறித்த சரியான புரிதல் இல்லாமையாலும் சமூகப்பிரச்சினைகளாலும் தங்களை வெளிப்படுத்த முடியாமல் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் மட்டுமே வாழப் பழகுகின்றமையும் திருநர்களுக்குப் பாரிய சவாலாகும்.

- **நீங்கள் எப்போதாவது தனிமையை உணர்ந்திருக்கிறீர்களா?**

ஆம், உணர்ந்திருக்கிறேன்.

எனது குடும்பத்தில் உணர்ந்திருக்கிறேன். அதைவிட அதிகமாக எனது பாடசாலையில் கற்கும் காலத்தில் நண்பர்களால் ஒதுக்கப்பட்டபோது தனிமையை உணர்ந்திருக்கிறேன். இவ்வாறு தனிமைப்படுத்தப்படும்போது அதுவாகவே பழக்கப்பட்டு தனிமையை இனிமையாக உணரத் தொடங்கினேன். சொல்லப் போனால் தனிமை எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **திருநங்கைகள் தமது பிரச்சினைகள் தேவைகள் குறித்துப் பேச அமைப்புக்கள் ஏதேனும் உள்ளதா?**

ஆம் இருக்கிறது.

Jaffna Transgender Network, யாழ்ப்பாணச் சங்கம், பெண்கள் அமைப்புக்கள் போன்ற பல அமைப்புக்கள் உள்ளன. மாதாந்தம் இங்கு கூட்டங்கள் இடம்பெறும். கிட்டத் தட்ட 30 உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வர். இங்கு திருநர்கள் மட்டுமல் லாமல் LGBT சமூகத்தைச் சார்ந்தோரும் கலந்து கொள்வர். இதனூடாக, எமக்கான உதவிகள், சுய தொழில் வேலைவாய்ப்புக்கள், உள ரீதியிலான ஆற்றுப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் எம்மில் பலர் வெவ்வேறு அமைப்புக்களின் ஊடாகத் தலைமைத்துவப் பயிற்சிக்காகவும் அனுப்பப்படுகிறார்கள்.

- **இவ்வாறான அமைப்புக்கள் இயங்குவதையும் திருநர்கள் தொடர்பான பிரச்சினையையும் நீங்கள் ஊடகங்களில் எவ்வாறு வெளிக்கொணர்ந்து வருகிறீர்கள்?**

ஊடகங்களில் எமது பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்து வருகிறோம். ஆனால், சில ஊடகங்கள் எம்மை சித்திரித்த விதம் மோசமானதாக இருந்ததால் ஊடகங்கள் மீது நம்பிக்கை போய்விட்டது. ஊடகங்களைப் பொறுத்தவரையில் திருநர்கள் என்பது ஒரு செய்தி மட்டும் தானே. பெரும்பாலான ஊடகங்களில் எமக்கான தளமோ அங்கீகாரமோ வழங்கப்படுதில்லை. என்னைப் பொறுத்தவரையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் திருநர்கள் பற்றிய புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தவில்லையென்றே கூற வேண்டும்.


- **நீங்கள் அவ்வாறு குறிப்பிடுவதற்கான காரணம்? ஏனென்றால் இன்றைய சூழலில் சில ஊடகங்களால் மக்கள் மத்தியில் திருநர்கள் குறித்த சரியான புரிதல் ஏற்படுத்தப்பட்டு வருகிறதே?**

ஆம்...! நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும், அனைத்து ஊடகங்களும் ஒரே மாதிரி இருப்பதில்லையே. ஏன் சாதாரண மனிதர்களாகிய நமக்கே ஐந்து விரல்க ளும் ஒரே மாதிரி இருப்பதில்லை. அதுபோல் தான் ஊடகங்களும். ஓர் ஊடகம் திருநர் கள் குறித்த நேர் எண்ணங்களை ஏற்படுத்தினால் மற்றோர் ஊடகம் எதிர்மறையான எண்ணங்களையே தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது.

இந்த யுகத்தில் வாழும் மக்களால் அதிகம் விரும்பப்படும் ஒரு ஊடகமாக முகநூல் காணப்படுகிறது. முகநூலில் என்னால் பதிவேற்றம் செய்யப்படும் தகவல்கள் அதிகமான நண்பர்களால் பகிரப்படுகிறது. அதற்கான பின்னூட்டங்களும் கிடைக்கின்றன.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடும்போது இலங்கையை பொறுத்தவரையில் திருநர்கள் குறித்து அவ்வளவாகப் பேசப்படுவதில்லை என்றே கூற வேண்டும். சமூக ஊடகங்கள் வாயிலாகவும் சில ஆவணப்படங்கள் ஊடாகவும் திருநர்கள் குறித்த புரிதல்கள் ஏற்படுத் தப்பட்டு வந்திருக்கின்றன. மற்றபடி, வானொலிகளில் எல்லாம் எம்மைக் குறித்துப் பேசுவ தென்பது குறைவு. அவர்களுக்கு நாம் ஒரு செய்தி மட்டும்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பருத்தி வீரன், ஐ, சில்லுன்னு ஒரு காதல் போன்ற திரைப்படங்களைப் பார்த்திருந்தால் அங்கு திருநர்கள் என்போரை உணர்வுகளற்ற ஒரு பொருளாகவும், பாலியல் இச்சைகள் கொண்டவர்களாகவுமே காண்பித்திருந்தனர். ஆனால் இன்று சில இயக்குநர்கள் அந்த வெளியிலிருந்து விலகி ஒரு புதிய கோணத்தில் மாற்றுக்கருத்துக்களுடன் சரியான ஒரு பார்வையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்றனர்.

- **திரைப்படங்களில் திருநர்கள் எவ்வாறு சித்தரிக்கப்படுவதாக நீங்கள் கருதுகிறீர்கள்?**

எங்களுடைய நாட்டைப் பொறுத்தவரையில் திரைப்படங்களினூடாக திருநர்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது என்பது மிகக் குறைவு. இந்தியத் திரைப்படங்களினூடாகவே மக்கள் அதிகமாகக் கவரப்படுகின்றனர். இந்தியத் திரைப்படங்கள் ஏற்படுத்திய விம்பத்தின் அடிப்படையில் திருநர்களுக்கான அங்கீகாரம் வேறாகவும் அவர்கள் பார்க்கப்படும் கண்ணோட்டம் வேறாகவும் உள்ளது. எனவே, இந்தியத் திரைப்படங்கள் மூலம் கவரப்பட்ட எம் நாட்டவர்களும் இந்திய சமூகத்தின் பார்வையின் அடிப்படையிலேயே எம் நாட்டிலுள்ள திருநர்களையும் பார்க்கிறார்கள். ஆனால், எமக்கும் அவர்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. அந்தவகையில் இந்தியாவில் உள்ளதுபோல பரவலாக திருநர்கள் இலங்கையில் இல்லை. ஆனால், ஆரம்பத்திலிருந்து இன்றுவரை திரைப்படங்களினூடாக ஏற்படுத்தப்பட்ட கருத்தியலின் அடிப்படையில் திருநர்கள் இழிவாகத்தான் காண்பிக்கப்படுகிறார்கள். குறிப்பாக பருத்தி வீரன், ஐ, சில்லுன்னு ஒரு காதல் போன்ற திரைப்படங்களைப் பார்த்திருந்தால் அங்கு திருநர்கள் என்போரை உணர்வுகள் அற்ற ஒரு பொருளாகவும், பாலியல் இச்சைகள் கொண்டவர்களாகவுமே காண்பித்திருந்தனர். ஆனால், இன்று சில இயக்குநர்கள் அந்த வெளியிலிருந்து விலகி ஒரு புதிய கோணத்தில் மாற்றுக்கருத்துக்களுடன் சரியான ஒரு பார்வையை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவருகின்றனர். இம் முயற்சியானது வரவேற்கத்தக்க ஒன்றாக காணப்படுகிறது. அந்தவகையில்,அருவி,காஞ்சனா,தர்மதுரை போன்ற திரைப்படங்கள் திருநர்கள் குறித்த மாற்றுப்பார்வையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

- **ஊடகங்களில் உங்களுக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகிறதா?**

ஆம் வழங்கப்படுகிறது. எனினும், ஆண் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படுவது போல் இல்லை.

- **ஊடகங்களில் திருநர்கள் எவ்வாறு வெளிபடுத்தப்பட வேண்டுமென விரும்புகிறீர்கள்?**

ஊடகங்களில் திருநர்கள் குறித்து வெளிபடுத்தும்போது இன்னொரு பிரதிநிதி ஊடாக அப்பாத்திரத்தை வெளிபடுத்தாமல் திருநர்களுக்கே அந்த வாய்ப்பு வழங்கப்படும் போது தான் உணர்வு ரீதியான புரிதல் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படும். அவ்வாறு இல்லாமல் மாற்று பிரதிநிதி ஒருவர் திருநர்கள் ஒடுக்கப்படுகிறார்கள். இழிவளவாக்கப்படுகிறார்கள் என்று என்ன தான் கூறினாலும் அது முழுமை பெறாத ஒன்றாக காணப்படுவதோடு உண்மைதன்மையற்றதாகவும் காணப்படும். எடுத்துக்காட்டாக, அண்மையில் விஜய் சேதுபதி நடித்த சுப்பர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியூலக்ஸ் திரைப்படத்தில் அவர் ஒரு திருநங்கையாக நடித்திருந்தார். அங்கு அவர் நடிப்புத் திறனை வெளிப்படுத்துவதற்காக திருநர் குறித்து ஆராய்ந்து அவருடைய நடிப்புத் திறனை வெளிப்படுத்தியிருந்தார். எனினும், திருநர்கள் குறித்து வெவ்வேறான உணர்வுரீதியிலான இயல்பையும் பிரச்சினையையும் அவரால் வெளிப்படுத்தியிருக்க முடியாது என்பதே உண்மை.

ஊடகங்களுக்கு நான் கூற விரும்புவது என்னவென்றால், ஊடகங்கள் தான் மக்கள் மத்தியில் இன்றளவில் அதிகமாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஏனென்றால், ஒரு விடயம் தொடர்பாக நல்லெண்ணங்களையும், தீயஎண்ணங்களையும் ஏற்படுத்த ஊடகங்களால்தான் முடியும். ஒரு விடயம் தொடர்பான புரிதலை மக்கள் மத்தியில் விரைவாக எடுத்துச் செல்லக் கூடிய ஒரு வழியாக ஊடகம் காணப்படுகிறது. எனவே, ஊடகங்கள் திருநர்கள் குறித்த நேர் எண்ணங்களை ஏற்படுத்தினால் அது மக்கள் மத்தியில் வெகுவாக எடுத்துச் செல்லப்படும்.

ஆரம்பத்தில் திருநர்கள் குறித்து ஒரு இழிவான பார்வைதான் ஏற்படுத்தப்பட்டது. அதனை மாற்றுவதென்பது அவ்வளவு சுலபமானதல்ல. ஏனென்றால் வளர்ப்புப் பெற்றோரிடம் வளரும் குழந்தையிடம் திடீரென ஒரு நாள் வந்து இவர்கள்தான் உன்னுடைய உண்மையான பெற்றோர்கள் என காண்பித்தால் அக் குழந்தையால் அவர்களை உடனடியாக ஏற்க முடியாது. அவர்களுக்கு அதைப் புரிந்து கொள்ள சில காலம் தேவைப்படும். அது போல தான் ஊடகங்களும் இவ்வளவு காலமும் திருநர்கள் என்றாலே ஒதுக்கப்பட்டவர்கள், இழிவானவர்கள் என்ற பார்வையை, பிம்பத்தை ஏற்படுத்திவிட்டன. அதனை அழிப்பதென்பது அவ்வளவு எளிதானதல்ல. என்றாலும் சமீபகாலமாக ஊடகங்களால் திருநர்கள் குறித்த நல்லெண்ணங்கள் விதைக்கப்பட்டு வருகின்றன. இம்முயற்சியானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அது திருநர்களும் சாதாரணமான மனிதர்கள்தான் என்ற ஒரு மனநிலையை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும். பொய்யான செய்திகளை ஊடகங்கள் வெளிப்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். அண்மையில் கூட ஊடகங்களால் திருநர்கள் ஆட்சேர்ப்புச் செய்கிறார்கள் என்ற ஒரு செய்தி வெளிப்படுத்தப்பட்டது. அதில் எவ்விதமான உண்மைத் தன்மையும் இல்லை.

நான் ஊடகங்களிடம் கேட்பதும் அதைத்தான். ஊடகங்களில் திருநர்கள் குறித்து வெளிப்படுத்தும்போது எப்போதும் உண்மைத்தன்மை வாய்ந்த செய்திகளை வெளிப்படுத்துங்கள். யாரைப் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தப்படுத்த விரும்புகிறீர்களோ அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே அவர்களைக் குறித்து வெளிப்படுத்துங்கள். உங்களுடைய மனதில் தோன்றுவதை அவர்கள் பார்வையாக ஒரு போதும் வெளிப்படுத்தாதீர்கள். திருநர்கள் மூலமாக சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய செய்திகளைத் துல்லியமாக எடுத்துக் கூறுங்கள். எம்மை வெறும் செய்திப்பொருளாக மட்டும் பார்த்து இழிவுபடுத்தாதீர்கள். இதுவரையில் ஊடகங்களால் திருநர்கள் குறித்து ஏற்படுத்தப்பட்ட தவறான பிம்பத்தை நீங்களும் தொடராமல் மனித சமுதாயத்தில் திருநர்களுக்கான புதிய அத்தியாயத்தை உருவாக்க முயற்சி செய்யுங்கள். எமது உணர்விற்கும் மதிப்பளியுங்கள். உங்களுக்கான பாதையை நீங்கள் தெரிவு செய்வது போல எமக்கான பாதையையும் உருவாக்கித் தாருங்கள். எமது பாதையில் தடைகளை ஏற்படுத்தாதீர்கள். •



ப. துசியந்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன தவம் செய்தனை?

# புறந்தள்ளப்படும்

## யாழ். கிராமியப் பாடசாலைகள்



“யாழ்ப்பாணத்தின் கிராமியப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்துவருவது முக்கிய பிரச்சினையாக உள்ளது. இந்தப் பாடசாலை கூட இங்குள்ள மக்களாலேயே ஆராதிக்கப்படாத சூழ்நிலையே காணப்படுகின்றது” என்கின்றார் குப்பிளானைச் சேர்ந்த பாடசாலையொன்றின் அதிபர்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “நானும் இப்பாடசாலையிலேதான் கல்வி கற்றேன். நான் கல்வி கற்ற போது இங்கு 800 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயின்றனர். எனினும் தற்போது அது இரட்டை எண்ணிக்கைக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது” என்கிறார்.

கல்வி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் அடிப்படையில், இலங்கையில் மொத்தமாக 10,194 அரச பாடசாலைகள் இயங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அரச பாடசாலைகளில் 4,165,964 மாணவர்கள் கல்வி கற்பதாக அத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் கவனத்திற்குரிய விடயமாகக் காணப்படுவது 7,851 பாடசாலைகளில் 500 இற்கும் குறைவான மாணவர்களும் 46 பாடசாலைகளில் 4000 ற்கும் அதிகமான மாணவர்களும் கல்வி பயில்கின்றனர் என்பதாகும்.


இத்தரவின்படி, சில பாடசாலைகளில் மிக அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் அதேவேளை, சில பாடசாலைகளில் மிகக்குறைந்தளவான மாணவர்களே கல்வி பயில்கின்ற சூழ்நிலை காணப்படுகின்றது. இவற்றில் குறைந்தளவான மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் எவை என்று நோக்குமிடத்து அவை பெரும்பாலும் கிராமியப் பாடசாலைகளாகவே காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணமும் இதற்கு விதிவிலக்கல்ல. இது தொடர்பில் நகர்ப்புற பாடசாலையில் தனது பிள்ளைகளைச் சேர்த்துள்ள பெற்றோர் ஒருவர் குறிப்பிடுகையில் "நான் என்ர பிள்ளைகளைக் கொண்டு போய் நகரப் பாடசாலையில் சேர்த்ததன் நோக்கம் இங்க இருக்கிற பள்ளிக்கூடத்தில் எங்கட ஆக்கள் அதிகம் படிக்கிறேல. அத்தோட இங்க படிப்பு சரியில்லை. பெரிய பள்ளிக்கூடத்தில் படிச்சால்தான் போட்டியாய்ப் படிப்பினம். அதாலதான் அங்க சேர்த்தனாங்கள்" என்கிறார்.

அதேவேளை, கிராமியப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடத்தில் அவர்களின் பாடசாலையில் காணப்படும் வளங்கள் தொடர்பிலும் கல்வி நடவடிக்கைகள் தொடர்பிலும் வினாவியவிடத்து, அவர்களில் பலர் ஒருமித்த கருத்தைத் தெரிவித்திருந்தனர். அவர்களில் பரணிதா என்ற மாணவி, தமது தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக் கூடிய பௌதீக வளங்கள் காணப்படுவதுடன் ஆசிரியர்களும் சிறந்த முறையில் கற்பித்தற் செயற்பாடுகளை முன்னெடுப்பதாகக் குறிப்பிட்டார். தமது பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான மாணவர்கள் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்பதே நற்பேறினை உருவாக்கும் என்ற பிம்பம் காரணமாக நகர்ப்புறப் பாடசாலையை அதிகம் நாடிச் செல்வதாக அவர் தெரிவித்திருந்தார்.





இதேபோன்று யாழ்ப்பாணத்திலுள்ள வேறு சில கிராமியப் பாடசாலைகளை ஆராய்ந்த போது, அப்பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் வேறு சில காரணங்களையும் முன்வைத்தனர்.

சுன்னாகத்தில் காணப்படும் பாடசாலையொன்றின் அதிபரிடத்தில் மாணவர்களின் எண்ணிக்கைக் குறைவு தொடர்பாகக் கேட்டபோது அவர் தனது கருத்தில் முக்கியமாகக் குறிப்பிட்ட விடயமானது "மாணவர்களின் பெற்றோர்கள் தமது கௌரவம், அந்தஸ்து போன்றவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து நகர்ப்புறப் பாடசாலைகளில் தமது பிள்ளைகள் படிப்பதனையே விரும்புகிறார்கள். நகர்ப்புறப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு அவற்றில் படித்து வெளியேறி நல்ல நிலைமைகளில் இருக்கும் பழைய மாணவர்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பது மற்றுமொரு பலம்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நான் என்ர பிள்ளைகளைக் கொண்டுபோய் நகரப் பாடசாலையில் சேர்த்ததன் நோக்கம் இங்க இருக்கிற பள்ளிக்கூடத்தில் எங்கட ஆக்கள் அதிகம் படிக்கிறேல. அத்தோட இங்க படிப்பு சரியில்லை. பெரிய பள்ளிக்கூடத்தில் படிச்சால் போட்டியாய்ப் படிப்பினம். அதாலதான் அங்க சேர்த்தனாங்கள்.




நகர்ப்புறப் பாடசாலைகளின் மீதான மாணவர்களின் கவர்ச்சி, பலதரப்பட்ட மாணவர்களுடன் இணைந்து கல்வி கற்கும் சூழல், கிராமியப் பாடசாலை மீதான நல்ல அபிப்பிராயம் இன்மை, போட்டித் தன்மை கிராமிய பாடசாலைகளை விடவும் நகர்ப்புற பாடசாலை களில் அதிகமாகக் காணப்படுகின்றமை, நகர்ப்புறப் பாடசாலையின் கட்டுப்பாடுகள் மற்றும் நிர்வாக அமைப்பு போன்ற பல காரணங்க ளினால் மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளினை நோக்கி செல்வதாகவும், அங்கே காணப்படும் வளங்களினைக் கருதும்போது ஒப்பீட்டளவில் வளங்கள் காணப்படுகின்ற போதும் தமது பாடசாலையில் மிகக்குறைவான எண்ணிக் கையான மாணவர்களே கல்வி கற்பதாகவும் வலிகாமம் பகுதியிலுள்ள கிராமியப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர் திருமதி வசந்தகௌரி கூறினார்.

நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்விச் செயற்பாட்டினைத் தவிர இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் அதிகம் காணப் டுகின்றமை நகர்ப்புற பாடசாலைகளை நோக்கித் தம் பிள்ளைகளை நகர்த்தும் பெற்றோர்கள் சிலர் குறிப்பிட்டுச் சொல்லும் இன்னுமொரு காரணமாகும்.

ஏழாலைப் பிரதேசத்தில் அன்றைய நாட்களில் மிகவும் பிரபல்யமாகவிருந்த கிராமியப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை இந்த வருடம் 172 ஆகக் காணப்படுகின்றது. அப் பாடசாலையானது தரம் 06 முதல் உயர்தரம் வரை வகுப்புக்களைக் கொண்டமைந்த பாடசாலையாகவும் 30 ஆசிரியர்களைக் கொண்டமைந்த பாடசாலையாகவும் காணப்படுவதுடன், அப்பாடசாலையில் மாணவர்கள் செழுமையாகக் கல்வி கற்பதற்குரிய அனைத்து வளங்களும் காணப்படுகின்றன.

இவ்வகையில் பல கிராமிய பாடசாலைகளில் மாண வர்களின் திறமைகளை வளர்ப்பதற்கான அனைத்து அம்சங்களும் அதற்கான முயற்சிகளும் காணப்படுகின்ற போதும், பெரும்பாலானோர் கிராமியப் பாடசாலைகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிலும் நகரப்புற பாடசாலைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது தமது கடமைகளில் சோர்வையும் ஆர்வமின்மையையும் தருவதாகத் தன்னை இனங்காட்ட விரும்பாத கிராமியப் பாடசாலை அதிபர் ஒருவர் கவலையுடன் குறிப்பிட்டார்.

பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் கருத்துப்படி கிராமியப் பாடசாலைகளின் வளர்ச்சி தொடர்பிலும் அவை தக்கவைக்கப்படுவதன் அவசியம் தொடர்பிலும் ஆழமான கவனம் செலுத்தப் படவேண்டும். இது தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன் கிராமிய பாடசாலைகளில் ஒரு சில மாற்றங்களைச் செய்வதன் மூலமும் சமூகத்தின் மத்தியில் பாடசாலை தொடர்பான நல்ல அபிப்பிராயத்தினை உருவாக்குவதன் மூலமும் கிராமிய பாடசாலைகளையும் சிறந்த பாடசாலைகளாக மாற்றி அமைக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

எங்களை வளர்த்த தாயைக் கடந்து, அவளை உதாசீனப்படுத்தி, நகரத்திலிருக்கும் பாடசாலைக்குப் பிள்ளைகளைக் காலையில் அழைத்துச் செல்லும் பெற்றோருக்கு ஏற்படவல்ல குற்றவுணர்வே இதற்குத் தீர்வையும் தரும். ●



பி.ஸ்ரீவித்தியா




தே. கவினயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புளியடி புளியடி ..! இவடம் எவடம்..?



# மீளவும் கிடைக்குமா சிறார்களுக்குச் சுதந்திரம்?

“புளியடி புளியடி
இவடம் எவடம்
புளியடி புளியடி
இவடம் எவடம்
எங்கயெடி போறாய்?”

என்று பாடியபடி ஒரு சிறுவன் அல்லது சிறுமி கையில் மண்ணை எடுத்து, அதன் மேல் அடையாளம் கண்டு பிடிக்கக் கூடிய ஏதேனும் ஒன்றை அதன் மேல் வைத்து, மற்றைய சிறுவன் அல்லது சிறுமி அவரின் கண்ணை கையால் பொத்தியபடி சுற்றிச் சுற்றித் திரியும்போது ஏதேனும் ஒரு இடத்தில் மண்ணை வைப்பர். பின்பு ஆரம்ப இடத்திற்கு அவரின் கண்ணைப் பொத்தியபடி சென்று விடுவார். பின்னர், குறித்த சிறுவன் அல்லது சிறுமி அந்த மண் இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

இந்த விளையாட்டின் மகிழ்ச்சியால் எழும் சத்தம் தற்போது எந்த ஊரிலாவது கேட்கிறதா? இந்த விளையாட்டுக்களை இன்றைய சிறுவர்களுக்கு எவ்வாறு கொண்டு செல்வது?

இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டானது பலகாலம் சிறுவர்களால் விளையாடப்பட்டு வந்துள்ளது. இதில் இரண்டு வகையான விளையாட்டுக்கள் உள்ளன. மற்றையது ஒருவர் கண்ணைப் பொத்த வேண்டும் மற்றையவர்கள் ஒளிந்து கொள்ள வேண்டும் ஒளிந்தவர்களைக் கண்ணைப் பொத்தியவர் கண்டு பிடிக்க வேண்டும். இவ்வாறு மாறி மாறி விளையாடுவார்கள்.

இந்த விளையாட்டின் மகிழ்ச்சியால் எழும் சத்தம் தற்போது எந்த ஊரிலாவது கேட்கிறதா? இந்த விளையாட்டுக்களை இன்றைய சிறுவர்களுக்கு எவ்வாறு கொண்டு செல்வது?

நாம் எவற்றையெல்லாம் இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பல்லாங்குழி



அந்தக் காலகட்டத்தை மறக்க முடியுமா? இப்படியெல்லாம் எமது சிறார்கள் வாழ்ந்துள்ளனர் என்று சொல்லுமளவிற்கு அக்கால ஞாபகங்கள் ஏராளம் உண்டு. அதையெல்லாம் தற்கால சமுதாயமும் அனுபவிக்க வேண்டும் என யாராவது சிந்தித்து இருக்கிறீர்களா? காலையில் எழுந்தவுடன் ரியூசன். பிறகு, பாடசாலை. அதற்குப் பிறகும் ரியூசன் என்று நம் பிள்ளைகளை ஒரு கூண்டுக்குள்ளேயே அடைத்துவைத்திருக்கிறோம்.

வடபகுதிப் பிரதேசமானது தமிழர்களின் கலை, பண்பாடு, பாரம்பரியங்கள் தழுவிய பூமியாகும். ஆண்டுகள் செல்லச்செல்ல பல்வேறு தொழிநுட்ப வளர்ச்சியால் எம்முடைய பாரம்பரியங்கள் மறந்தும், மறைந்தும் போகின்ற போக்குக் காணப்படுகின்றது. அதில் முக்கியமானதொன்றாகக் காணப்படுவது பாரம்பரிய விளையாட்டுக்களாகும்.

தற்போது தொலைபேசி மற்றும் கணினிகளில் இயந்திரமயமான, செயற்கை விளையாட்டுச் சூழலுக்குள் மூழ்கிப் போயுள்ள இன்றைய தலைமுறைக்கு, எமது பிரதேசங்களில் ஆரம்ப காலங்களில் சிறுவர்கள், இளைஞர்கள், வளர்ந்தவர்கள், பெண்கள் எனப் பலரும் விளையாடி மகிழ்ந்த பாரம்பரிய விளையாட்டுக்களின் அருமை தெரியாமலே போகின்றது.

உடலுறுதிக்கும், அறிவுத்திறனுக்கும், மகிழ்வுக்குமாகப் பயின்று வந்த பாரம்பரிய விளையாட்டுக்களை இன்றைய தலைமுறையினர் அறிந்திருக்க மாட்டார்கள். அந்தக் காலங்களில் இந்த விளையாட்டுக்கள் தொடர்பான கிராமியப் பாடல்கள், குழுவுக்குறிகள், பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகிய விடயங்களும் மக்களுடன் இணைந்திருந்தன.

இந்த விளையாட்டுக்கள் ஒவ்வொரு வயது மட்டத்திற்குமெனச் சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள், இளைஞர்களுக்கான விளையாட்டுக்கள், வளர்ந்தவர்களுக்கான விளையாட்டுக்கள், பெண் பிள்ளைகளுக்கான விளையாட்டுக்கள் என பல்வேறு பிரிவுகளாக விளையாடப்பட்டு வந்திருக்கின்றன. சில விளையாட்டுக்கள் எல்லா மட்டத்தினரும் விளையாடுவதோடு ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டும் காணப்படுகின்றன.

ஆரம்ப காலத்தில் கிராமங்களில் வாழும் சிறுவர்கள் தற்போதைய சிறுவர்களைப் போல பாடசாலையால் வந்தவுடன் ரியூசனுக்குச் செல்வதில்லை. அவர்கள் சிறு சிறு குழுக்களாகத் தொலைபேசி இல்லாமலேயே குறித்த நேரத்தில் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக விளையாடுவார்கள். கீச்சு மாச்சுத் தாம்பலம் கீயாமாயா தாம்பலம், கண்ணாமூச்சி, நுள்ளுப்பிராண்டி கிள்ளுப் பிராண்டி, வளையம் உருட்டுதல், கொழுத்தாடு பிடித்தல், மண்சோறு கறி காய்ச்சுதல், திருவிழா நடாத்துதல், இராசா மந்திரி, கெந்தியடித்தல், மாபிள் அடித்தல், சிரட்டைப் பந்து, ஆடுபுலி ஆட்டம், பச்சைக் குதிரை தாண்டுதல் ஆகிய விளையாட்டுக்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை.

இளைஞர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மாலைவேளைகளில் விளையாடுவதற்கான நேரங்களை ஒதுக்கி குழுக்களாகச் சேர்ந்து விளையாடுவார்கள். கிளித்தட்டு மறித்தல், கிட்டியடித்தல், அம்பெறிதல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தேங்காய் அடித்தல், வண்டிச்சவாரி, கோழிச்சண்டை, பட்டம் ஏற்றுதல் போன்ற வற்றை விளையாடுவார்கள்.

வயது வந்தவர்கள் தாயம், கடதாசி விளையாட்டு, பல்லாங்குழி, நாயும் புலியும் ஆகியவற்றை விளையாடுவார்கள். பொது வாக அக்காலத்தில் பெண் பிள்ளைகள் கெந்தி விளையாட்டு, கயிறடித்தல், கொக் கான் வெட்டுதல், பல்லாங்குழி, குலை எடுத் தல், ஊஞ்சலாடுதல், கும்மியடி, கோலம் போடுதல் ஆகிய விளையாட்டுக்களை விளையாடினார்கள்.

பல்லாங்குழி விளையாட்டில் இருவர் பங்குபற்றுவர். இரு பக்கங்களுக்கும் எதிரெ திரே 12 குழிகளும், புளியங்கொட்டைக ளைப் பயன்படுத்தியும் விளையாடுவார் கள். இரண்டு எதிரெதிர்க் குழிகளில் புளி யங்கொட்டைகளைப் போடுவார்கள். அக் குழியிலிருந்து இருவரும் மாறி மாறி ஏனைய ஒவ்வொரு குழிகளுக்குள்ளும் ஒவ்வொரு புளியங்கொட்டையாக ஒரு ஒழுங்கு வரிசையில் போடப்படும். இறுதியா கப் போடும் குழியில் ஆறு புளியங்கொட்டை கள் இருந்தால் அவை அவருக்குரியது. இவ்வாறு மிகவும் சுவாரஸ்யமாக விளை யாடுவார்கள். இறுதியில் யாரிடம் அதிக புளியங்கொட்டைகள் உள்ளதோ அவரே வெற்றிபெற்றவராகக் கருதப்படுவார். இப் போது சின்னஞ் சிறுசுகள் போனில் பல் லாங்குழி விளையாடுகினமாம். நேரிலே எதிரெதிரே விளையாடும் சுவாரஸ்யம் போனில் நிச்சயம் கிடைக்காது என்பது அவர்களிற்குத் தெரிவதில்லை.

இளைஞர்கள் அதிகம் விளையாடும் விளையாட்டுக்களிலொன்று கிட்டிய டித்தல். இந்த விளையாட்டைச் சிறுவர்களும் விளையாடுவார்கள். இதற்குக் கிட்டி மற்றும் புள் பயன் படுத்தப்படுகின்றன. இரு குழுக்க ளாகப் பிரிந்து ஒரு குழு "அடிக்கிற குழு" என் றும் மற்றையது "அலையிற குழு" என்றும் சொல்லுவார்கள். இதில் "மறுத்தான் அடித் தல்" முக்கியமானதொன்றாகும். இது சிறு குழியின் மேல் புள்ளை வைத்து கிட்டியால் எறிய வேண்டும் அதனைப் பிடிப்பதற்காக எல்லோரும் ஓடுவார்கள். பிடித்தால், அவர் விளையாட்டிலிருந்து நீக்கப்படுவார். இல்லா விட்டால் குறிக்கப்பட்ட கோட்டைத் தாண்டி யார் அதிக தூரம் புள்ளை அடிக்கின்றார் களோ அவர்களே அப்போட்டியின் வெற்றி யாளர்கள். இவ் விளையாட்டின் மூலம் வாய்ப்பாடு பழக்கப்படுதல் வாய்ப்பதோடு, உடற் சுறுசுறுப்பும் ஏற்படுகின்றது.

இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், இந்த விளையாட்டில் ஈடுபடும் பலரும் புள் ளால் தாக்குண்டு மூக்கு, பல் உடைபட்டு வீட்டுக்குப் போவார்கள். ஆனால், எவ்வ ளவு சேதாரம் ஏற்பட்டாலும் அடுத்த நாளே அதே விளையாட்டை விளையாட முதல்





கிட்டிப்புள்

கண்கட்டி

சில்லுவண்டி

கெந்தல் கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளாக வந்து நிற்பார்கள். இப்படி விளையாடிய காலம் திரும்பி வருமா? என்பது கேள்விக்குறிதான்.

பல்லாங்குழி மூலம் இருக்கும் இடத்தில் எடுத்து இல்லாத இடத்தில் கொடுக்கும் குணமும், தாயம் மூலம் தோற்றாலும் முயன்று மீண்டும் முன்னேறுவது மற்றும் குடும்பத்துடன் சேர்ந்து பகிர்ந்து விளையாடுவது ஆகிய நற்பண்புகள் வளர்க்கப்பட்டன.


தலைமுறை மாறிச்செல்ல இவ்விளையாட்டுக்கள் மருவி வரத்தொடங்கி விட்டன. பல விளையாட்டுக்கள் காணாமலே போய் விட்டன. சினிமா, தொலைக்காட்சி, கையடக்கத் தொலைபேசி, இணையம் போன்ற வெகுஜன மற்றும் புதிய ஊடகங்களின் வருகையினால் தற்காலச் சமூகம் அவற்றிற்கு அடிமையாகிவிட்டது. அத்துடன் பாரம்பரிய விளையாட்டுக்கள் விளையாடப்படும் வீதம் மிகக் குறைவடைந்து வருகின்றது. தற்போது சிறுவர் மற்றும் இளையோர்கள் கையடக்கத் தொலைபேசிகளில் இணையவழி விளையாட்டுக்களையே அதிகம் விரும்பி விளையாடி வருகின்றனர். அதிலும் பாரம்பரிய விளையாட்டுக்களில் சில இணையவழி ஊடகம் மூலம் பரிணாமம் அடைந்து தற்கால சிறுவர் மற்றும் இளையோர்கள் மத்தியில் பெரிதும் விளையாடப்பட்டு வருகின்றன.

தாயம்- லூடோ என்ற பெயரிலும், கண்ணாமூச்சியை ஒத்ததாக -ரோலிங் கக்கர்ஸ் மற்றும் பப்ஜியும் காணப்படுகின்றன. கரம் விளையாட்டும் தற்போது இணைய வழியில் அதிகமானோரால் விளையாடப்படுகின்றது. இவ்வாறு இணையம் மூலம் விளையாடுவது நேரடியாக எல்லோரும் குடும்பத்துடன் ஒன்று கூடி விளையாடும் உணர்வை நிச்சயம் தரமுடியாது. இணையவழி மூலம் யாரோ முகம் தெரியாத நபருடன் இலத்திரனியல் சாதனத்தின் வழியாக விளையாடப்படுகின்ற தலை முறையாக தற்போதைய சமூகம் காணப்படுகின்றது. இதை அவர்கள் பெரிய வரமாகவும் பார்க்கின்றனர். ஆனால், உண்மையான சந்தோஷமும், புத்துணர்ச்சியும் பாரம்பரிய நேரடி விளையாட்டுக்கள் மூலமே கிடைக்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இணையவழி விளையாட்டினால் வெளியில் உள்ள சமூகத்துடன் தொடர்புகளைப் பேணுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடைவதுடன், குடும்ப உறவுகளுடன் செலவிடும் நேரமும் குறைவடைகிறது. அத்துடன் வெளிக்களச் செயற்பாடுகளில் ஆர்வம்குறைதல், உடற்சோர்வு, உண்மை வாழ்வியலை உணர்ந்து கொள்ள முடியாத நிலை ஏற்படல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதை அவதானிக்கலாம்.

எம்மால் மறந்துபோன பாரம்பரிய விளையாட்டுக்கள் ஏராளமுள்ளன. இதைத் தற்போதைய தலைமுறைக்கு எடுத்துச் சொல்ல வேண்டியதும் பழைய கால ஞாபகார்த்தத்தை மீட்டெடுப்பதென்பதும் காலத்தின் தேவைப்பாடாகக் காணப்படுகிறது. எவ்வளவுதான் இணையவழி விளையாட்டுக்கள் வந்தாலும் பாரம்பரிய விளையாட்டுக்கள் மூலம் கிடைத்த மெய்மை வாழ்க்கை அனுபவங்கள் இவற்றில் கிடைக்காது என்பதைச் சமூகத்திற்கு உணர்த்துவதும் அவர்களைப் பாரம்பரிய விளையாட்டை விளையாடத் தூண்டவும் துணை செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

•



த. றெஜினா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மண்ணில் இயற்கை விவசாயம்

# நம்பிக்கை தரும் முயற்சிகள் ஆரம்பம்..!




நமது ஆரோக்கியமான வாழ்க்கைக்கு இயற்கை விவசாயம் அத்தியாவசிய மான ஒன்றாக இன்று இனங் காணப்படுகிறது. இயற்கை விவசாயம் என்பது விவசாயச் சூழலை உயிருள்ள ஒர் தொகுதியாகக் கருதி, சூழலு டன் இசைவான முறையில் இயற்கைச் சாகுபடி முறை களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப் படும் விவசாய முறை ஆகும்.

பண்ணையில் ஆரோக்கியமானதும் உயிர்வாழ்கின்றதுமான வளம்மிக்க மண்ணை உருவாக்குவதன் மூலம் ஆரோக்கியமான பயிர்களை உற்பத்தி செய்வது இவ் விவசாயத்தின் அடிப்படைத் தத்துவமாக உள்ளது.

இயற்கை விவசாயத்தினை மேற் கொள்வதன் மூலம் நோய் நொடிகளற்ற வாழ்வைக் கட்டியெழுப்ப முடியும். சேதன விவசாயம் என அழைக்கப்படும் இயற்கை விவசாயத்தில் பயிர் அறுவடைக்கு முன்போ, பின்போ எந்தவொரு இரசாயன மும் பயன்படுத்தப்படுவதில்லை என்பதால், அவ்வாறான விவசாயம் மூலம் உருவா கும் விளைபொருட்களை நுகர்வதால் மானுட வாழ்கைக்குத் அவை தீங்கு பயப்பதில்லை என்பது முக்கியமானது.

ஆனால், இரசாயன விவசாயத்தில் இரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகள், வளர்ச்சி ஊக்கிகள் போன்றவற்றைக் கட்டுப்பாடற்ற அளவில் பாவித்தல் மற்றும் தடை செய்யப்பட்ட இரசாயனங்களைப் பாவிப்பதனால் புற்றுநோய், நரம்பியல் சம்பந்தமான நோய்கள், உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவடைதல் ஆகியன ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இயற்கை விவசாயம் மண்ணின் வளத் தைப் பேணி, சூழல் மாசடைவதைத் தடுக் கின்றது. இரசாயன விவசாயத்தில்

**“விவசாயம் என்பது மனித உயிர்களோடு சம்பந்தப்பட்டது வணிகத்திற்காக விவசாயக் கோட்பாடுகளைக் கைவிடுவது தவறு.”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"எமது நோக்கம் காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு, நஞ்சற்ற உணவு உற்பத்திகளைச் சமூகத்திற்கு வழங்குவதாகும். இதனால் நமக்கு அதிகளவில் இலாபம் கிடைக்காவிட்டாலும் தன்னிறைவும், மகிழ்ச்சியும் கிடைக்கின்றது"**



இரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தும்போது மண்ணில் உள்ள பயன்தரும் நுண்ணுயிர்கள் அழிவடைவதுடன், மண்ணில் இரசாயன உப்புக்கள் சேர்வதனால் மண்ணின் வளமானது குன்றிப் போகின்றது. அத்துடன் நிலத்தடி நீரும், அச்சூழலில் வாழும் நீர் வாழ் உயிரினங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் என்பனவும் பாதிப்படைகின்றன.

மாறாக,இயற்கை விவசாயத்தை எடுத்துக் கொண்டோமானால், இவ்விவசாயத்தில் இயற்கை இடுபொருட்களைப் பயன்படுத்துவதனால் மேம்பட்ட மண்ணின் அமைப்பு, பயன் தரும் நுண்ணுயிர்களின் பெருக்கம், மண்புழுக்களின் எண்ணிக்கைப் பெருக்கம் ஆகியவற்றால் மண்ணானது செழிப்பு நிலையை அடைகின்றது.

இவ் விவசாயம் பாரம்பரிய விதைகளின் பாவனையை ஊக்குவிப்பது மற்றுமொரு பயன்தரும் முயற்சியாகும். எமது பாரம்பரிய விதையினங்கள் இயற்கையாகவே நோய்த் தாக்கத்தினை எதிர்க்கும் தன்மை கொண்டவை, சுவை மிகுந்தவை, சத்துக்கள் நிறைந்தவை, எமது பிரதேச கால நிலைக்குப் பொருத்தமனவை.

மாறாக, இரசாயன விவசாயம் கலப்பின விதையினங்களின் பிரயோகத்தினை ஊக்கப்படுத்துகின்றது. இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்கள், மரக்கறிகள் என்பவற்றோடு ஒப்பிடுகையில் அவற்றின் தோற்றம், சுவை ஆகியவை மிக்க வேறுபாடானவையாகும்.

இத்தகைய நேர்த்தன்மைகள் வாய்க்கப் பெற்ற இயற்கை விவசாயத்தின்பால் யாழ்ப்பாணத்திலும் தற்போது அதீத கரிசனையும் ஆர்வமும் எழுந்துள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அ.கமலேஸ்வரன் இயற்கை விவசாயம் மற்றும் இயற்கை விவசாயப் பண்ணை பற்றிக் குறிப்பிடுகையில்,

"நான் போர்க்கால கட்டங்களில் இந்தியாவில் வசித்து வந்தேன். அவ்வேளை தமிழகத்தில் இயற்கை விவசாய ஆய்வாளரும் இயற்கை விவசாயச் செயற்பாட்டாளருமான கோ. நம்மாழ்வாரின் கருத்துக்கள் இயற்கை விவசாயத்தில் பெரிதும் மாற்றத்தை எற்படுத்தியது. அவர் கூறிய "இந்தத் தலைமுறைதான் அடுத்த தலைமுறையின் மரணத்தை அருகில் இருந்து பார்க்கப் போகின்றது" என்ற கூற்று என்னை அதிகம் பாதித்தது. இதன் பின்னரான காலகட்டங்களில் எனக்குச் சேதன விவசாயம் பற்றிய ஆர்வம் அதிகரித்தது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்ற வாசகத்திற்கிணங்க யாழ். மாவட்ட சேதன விவசாயச் சங்கத்தை 2018ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25இற்கும் குறைவான அங்கத்தவர்களைக் கொண்டு ஆரம்பித்தோம். ஆரம்பத்தில் இது சுயாதீனமாக, ஆர்வம் கொண்ட இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டது. சுயாதீனமாகச் செயற்பட்டவர்களை ஒன்றுசேர்த்து ஓர் சங்கமாக உருவாக்கக் காரணம், ஒரு பதிவின் கீழ் சங்கமாக இயங்கும்போது மக்கள் மத்தியில் அதுசார்ந்த நம்பகத்தன்மை கட்டியெழுப்பப்படும் என்பதாகும். தற்சமயம் 60இற்கும் அதிகமானோர் இச்சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்"

"எமது நோக்கம் காலநிலை மாற்றத்தைக் கருத்திற்கொண்டு, நஞ்சற்ற உணவு உற்பத்திகளைச் சமூகத்திற்கு வழங்குவதாகும். இதனால் நமக்கு அதிகளவில் இலாபம் கிடைக்காவிட்டாலும் தன்னிறைவும், மகிழ்ச்சியும் கிடைக்கின்றது"

"சமூகத்தில் சிலர் தாம் மேற்கொள்ளும் செயற்கை விவசாயத்திற்கு இயற்கை விவசாயம் என்ற முகத்தைச் சூட்டிக் கொண்டுள்ளமை எமது நோக்கங்களையும் நாம் கொண்டுள்ள நம்பகத்தன்மையையும் பாதிப்பதாக அமைகிறது" எனவும் தெரிவித்தார் யாழ். மாவட்ட சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அ. கமலேஸ்வரன்.

"விவசாயம் என்பது மனித உயிர்களோடு சம்பந்தப்பட்டது. வணிகத்திற்காக விவசாயக் கோட்பாடுகளைக் கைவிடுவது தவறு. எவரிற்கும் இரசாயன உரங்களைப் பயன்படுத்தி விவசாயம் செய்ய வேண்டும் என்பது விருப்பமாக அமையாவிட்டாலும், அவர்கள் தங்களது பொருளாதார ரீதியான நெருக்கடியும் மூலதனத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்பதனாலும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்"

"இயற்கை விவசாயத்தில் நாம் பாரம்பரிய விதைகளை உபயோகிக்கின்றோம். இங்கு பாரம்பரிய விதைகள் எனக் குறிப்பிடுவது, நாம் செய்யும் விவசாயத்தில் இருந்து பெறும் விதைகளை மறுபடியும் பயன்படுத்தி விவசாயச் செய்கைகளை மேற்கொள்வதாகும். இவ்வாறான பாரம்பரிய விதைகளில் இரசாயன மருந்துகளைப் பயன்படுத்தும்போதும் அவற்றின் மரபணு மாற்றப்படும். இதனை மரபணு மாற்றப்பட்ட விதைகள், மேம்படுத்தப்பட்ட விதைகள் என்கின்றோம். இன்று செயற்கை விவசாயம் செய்யப்பட்டு வருகின்ற நிலங்களில் இயற்கை விவசாயத்தைச் செய்ய முடிவதில்லை. காரணம் செயற்கை விவசாயத்திற்கேற்ப மண் பதப்படுத்தப்பட்டு விட்டது" எனக் கவலையுடன் கூறினார் அ. கமலேஸ்வரன்.

"விவசாயத்தால் ஏற்படும் தொற்றா நோய்களில் இருந்து பாதுகாப்புப் பெற எமக்கே விழிப்புணர்வு வேண்டும். இதற்கு முதற்கட்டப் பணியாக ஒவ்வொருவரும் இயற்கை முறையில் அமைந்த வீட்டுத் தோட்டத்தை அமைப்பது சிறந்தது. இதன் மூலம் வீட்டுக்குத் தேவையான உணவுகளைப் பெற்றுக்கொள்வதோடு மேலதிக உற்பத்திகளையும் பெற்றுக்கொள்ளலாம்" என்பது அவர் முன்வைக்கும் முக்கிய ஆலோசனையாகும்.


அ. கமலேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் போர்க்கால கட்டங்களில் இந்தியாவில் வசித்து வந்தேன். அவ்வேளை தமிழகத்தில் இயற்கை விவசாய ஆய்வாளரும் இயற்கை விவசாயச் செயற்பாட்டாளருமான கோ. நம்மாழ்வாரின் கருத்துக்கள் இயற்கை விவசாயத்தில் பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்தியது. அவர் கூறிய "இந்தத் தலைமுறைதான் அடுத்த தலைமுறையின் மரணத்தை அருகில் இருந்து பார்க்கப் போகின்றது" என்ற கூற்று என்னை அதிகம் பாதித்தது. இதன் பின்னரான காலகட்டங்களில் எனக்குச் சேதன விவசாயம் பற்றிய ஆர்வம் அதிகரித்தது"

யாழ். மாவட்ட சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது உற்பத்திகளை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் திருநெல்வேலி அரசாங்க விவ சாயப் பண்ணையிலுள்ள பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட சந்தைப்பகுதிக்குக் கொண்டு வந்து சந்தைப்படுத்துவார்கள்.


இச்சந்தைப்படுத்தலானது காலை ஒன்பது மணியிலிருந்து காலை பதினொரு மணிவரை நடைபெறும். குடாநாட்டின் பல இடங்களில் இருந்தும் வந்து தமது உற்பத்திகளைச் சேதன விவசாய உற்பத்தி யாளர்கள் சந்தைப்படுத்துகின்றனர். பிரதா னமாக, உள்ளூர்த் தேவைகளைக் கருத் திற்கொண்டே உற்பத்திகள் சந்தைப் படுத்தப்படுகின்றன.

"அநேகமான மக்கள் இவ் உற்பத்தி களை விரும்பிக் கொள்வனவு செய்கின்ற னர். இதனால் உற்பத்திகளை அதிக விலைக்கும் விற்பனை செய்வதில்லை. உற்பத்தியாளர்களுக்கு மூன்றிலொரு பங்கு இலாபம்தான் கிடைக்கும். எனினும், உற் பத்தியாளர்கள் சமூகத்திற்கு நஞ்சற்ற உணவை கொடுத்த மனநிறைவு கிடைக் கிறது" என்று கூறுகிறார் இச்சங்கத்தின் பொருளாளர் எஸ். ரஞ்சித்குமார்.

யாழ். மாவட்ட சேதன விவசாய உற்பத் தியாளர் சங்கத்தின் அங்கத்தவர் களில் அநேகமானவர்கள் வேறுவேறு துறைகளில் பணிபுரிபவர்கள் ஆவர். இவர்கள் பகுதி நேர அளவில் இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு வருகின் றனர். பகுதி நேரத் தொழிலாக அமைவத னால் உற்பத்தியாளர்கள் வெறுமனே வியாபார நோக்கத்திற்காக இயற்கை விவ சாயத்தை மேற்கொள்வதில்லை இச்சங் கத்தின் அங்கத்தவர்கள் சிலர் விவ சாயத்தை தனி நிலப்பிரதேசங்களிலும் இன்னும் சிலர் வீடுகளில் வீட்டுத்தோட்ட அளவிலும் மேற்கொள்கின்றனர்.

கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பதை ஒத்து, அளவிற் குறைந்த எண் ணிக்கையான செயற்பாட்டாளர்களைக் கொண்டிருந்தாலும், யாழ். மாவட்ட சேதன விவசாய உற்பத்தியாளர் சங்கத்தின் பணிகள் யாழ். மண்ணில் இயற்கை விவ சாயத்தை எதிர்காலத்தில் இன்னமும் வலுப் படுத்தும் என நிச்சயம் நம்பலாம்.


•



தே.கவினயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கையின் பொக்கிஷமான
# கண்டல் தாவரங்கள்..!

**மிருசுவில் கண்டல் காடு நோக்கி ஒரு பயணம்..!!**

இயற்கை அழகு ஒன்றாகச் சங்கமித்து இருக்கக்கூடிய கண்டற் சூழற்தொகுதிகள் இன்று பொருளாதார நடவடிக்கைகளால் அதிகம் அழிக்கப்பட்டு வருகின்றன. உவர்நீருடன் சேறு கலந்த அமிலத் தன்மையுடனான சதுப்பு நிலப்பிரதேசங்களில் வேறு எந்தத் தாவர இனங்களும் வளரமுடியாத சூழலில், சூழற் காரணிகளின் தாக்கங்களை எதிர்கொள்ளக் கூடியவாறான தனித்துவமான விசேட இசைவாக்கங்களைப் பெற்று அடர்ந்து பசுமையாக செழித்து வளர்ந்து காணப்படும் அதிசயத் தாவர இனங்களே இக்கண்டல் தாவரங்கள் ஆகும்.

இவை மரங்களாகவும், செடிகளாகவும் மற்றும் ஒரு வித்திலைத் தாவரங்களாகவும் இனத்திற்கு இனம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள் உவர்நீர்ச் சூழலில் வளர்வனவாக இருந்தாலும் கழிமுகங்களிலும், கடனீரேரிகளில் கடல்நீர் உவர்ப்பை விடக் குறைந்த அளவிலான உவர்த்தன்மை கொண்ட நீர்ச்சூழலிலும் செழித்து வளர்கின்றன.

இக்கண்டல் காடுகள் நுண்ணங்கிகள் முதல் முலையூட்டிகள் வரையிலான பலவகை உயிரினங்களின் வாழ்விடமாகவும் உள்ளன. விசேடமாக ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் பிறநாடுகளிலிருந்து இலங்கையை நாடிப் புலம்பெயரும் ஈரநிலப் பறவைகளின் சரணாலய மாகவும் இக் கண்டற் சூழற்தொகுதிகள் திகழ்கின்றன.

கண்டல் காடுகளில் காணப்படுகின்ற தாவரங்கள், விலங்குகள், நுண்ணங்கிகள் போன்ற உயிர்ச்சூழல் காரணிகளுடன் இணைந்துள்ள உயிரற்ற சூழற்காரணிகள் அனைத்தும் ஒன்றாக "கண்டற் சூழற்தொகுதி" என அழைக்கப்படுகின்றது. இக் கண்டற் சூழற்தொகுதி மனிதர்களின் பொருளாதாரத்திற்கும் அதிகளவில் பங்காற்றி வருகின்றன.

உலகில் ஏறத்தாழ 112 நாடுகளில் கண்டல் காடுகள் காணப்படுவதாக அறிக்கைகள் கூறுகின்றன. இக்கண்டற் காடுகள் உலகின் மொத்த நிலப்பரப்பில் 18 மில்லியன் ஹெக்டே யர்களாகவும் கணக்கிடப்பட்டுள்ளன. உலகில் காணப்படும் மொத்த கண்டற் பரப்பின் 0.1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான கண்டல் காடுகள் மாத்திரமே இலங்கையில் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், மன்னார் ஆகிய 14 கரையோர மாவட்டங்களிலே இக்கண்டல் காடுகள் வியாபித் துள்ளன. இலங்கையில் ஏறத்தாழ 6000 ஹெக்டேயர் மட்டுமே கண்டல் காடுகள் உள்ளன எனக் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறிக்கை கூறுகின்றது. இலங்கையில் கண்டல் காடுகள் அதிகம் உள்ள மாவட்டமாக புத்தளம் காணப்படுகின்றது. அதற்கு அடுத்ததாக யாழ்ப்பாணம் காணப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுகண்டல், பெருங்கண்டல் என்ற இரு வகையான கண்டல் காடுகள் நிறைந்த அழகானதொரு பிரதேசமே தென்மராட்சிப் பகுதியின் மிருசுவில் என்ற இடமாகும். இங்கு சிறுகண்டல் காட்டுப்பகுதியில் கண்ணா (வெண்கண்டல்), சிறுகண்டல் (நரிக்கீரி), தில்லை மற்றும் தாழை போன்ற நான்கு வகையான கண்டல் தாவர இனங்களை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.


கண்ணாவை (வெண்கண்டல்) அவதானிக்கும்போது இத்தாவரமானது தோல் போன்ற சுற்றுக்கணியத்தால் மூடப்பட்டுள் ளது. இதன் முதிர்ந்த காய்கள் தாய்மரத்தில் இருந்தவாறு ஓரளவு மட்டும் முளைகொண்டு நீர்ச்சூழலில் விழுந்து, பின்னர் மிதந்துச் செல்லும்போது நீரை உறிஞ்சிப் பொருமுவதன் காரணமாக சுற்றுக்கனியத்தில் பிளவுகள் ஏற்பட்டு, ஆதாரத்தை அடைந்ததும் வேரூன்றி வளர்கின்றன.

அதேபோன்று, சிறுகண்டல் (நரிக்கீரி) தாவரத்தின் வித்துக்கள் தாய்மரத்தில் இருந்தவாறே முளைத்து, வித்திலைக் கீழ்த்தண்டு கூராக நீண்டு வளர்ந்து தொங்கும். பருவமடைந்ததும் தாய் மரத்தை விட்டு இவ்வித்திலைக் கீழ்த்தண்டுகள் நிலைக்குத்தாக நீர்ச்சூழலில் விழுந்துக் கிடையாக மிதக்கும். இதன்போது நீர் உறிஞ்சப்பட்டு இதன் அடிப்பகுதி கனதியடைவதால் நிலைக்குத்தாக மாறி மிதக்கும். இதன்போது தகுந்த ஆதாரத்தை அடைந்ததும் வேரூன்றி வளர ஆரம்பிக்கும்.

தில்லைக் கண்டல் தாவரத்தின் காய்கள் முதிர்ந்ததும் இதன் சுற்றுக்கனியப் பிரிசுவர்கள் மூன்று பாகங்களாகப் பிளவுபட்டு வித் துக்கள் வெளியேற்றப்படும். இத்தில்லையின் வித்துக்கள் கருமை நிறமுடையதாக அல்லது கடும் கபில நிறமுடையதாகக் காணப் படும். இவ்வித்துக்கள் அளவில் சிறியதாகவும் பாரம் குறைந்தும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணப்படுவதால்,
இலகுவாக நீரால் காவிச் செல்லப்
பட்டுத் தகுந்த ஆதாரத்தை அடைந்ததும்
முளைத்து வருகின்றன.

இக்கண்டல் தாவரங்கள் நிலத்தில் சாதகமான சூழ் நிலைகள் முளைத்தலுக்கு இல்லாத காரணத்தால் தாய்த் தாவர மானது அப்பழங்கள் மரத்தில் இருக்கும்போதே முளைக்கச் செய்து, பின் னர் அவற்றை கீழே விழச் செய்கின்றன. இவ் விசேட முளைத்தல் முறை "சீவக வித்து முளைத்தல் முறை" என அழைக்கப்படுகின்றது. இவற்றைக் கண்டல் தாவரங்களில் அவதானிக்க முடிகின்றது.

மிருசுவில் சிறுகண்டல் காட்டுப்பகுதியில் உள்நாட்டு பறவையினங்கள் மட்டுமின்றி வெளிநாட்டுப் பறவை இனங்களையும் அவதானிக்க முடிகின்றது. வெளிநாட்டுப் பறவைகள் பெரும்பாலும் இந்தியாவின் சில பகுதிகளில் இருந்தும் ஐரோப்பா போன்ற கண்டங்களில் இருந்தும் வந்து செல்வதாக அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர். இப் பறவையினங்கள் தமது சொந்தநாட்டில் சாதகமான காலநிலை மாற்றமடையும்போது, அக்கால நிலையிலிருந்து விலகி, இங்கு உணவைத் தேடி வருகின்றன.

"இந்த வலசைப் பறவையினங்கள் சிறுகண்டல் காட்டுப்பகுதியில் கூடுகட்டி முட்டை யிட்டுக் குஞ்சுப் பொரிப்பதாகவும், அவற்றைச் சிலர் அழித்து உண்பதால் அவை கலைந்து போகின்றன. அவ்வாறு அப்பறவைகள் கலைந்துச் செல்வதனால் அவற்றின் முட்டைகளைக் காகம் போன்ற பறவைகள் சேதப்படுத்தி விடுகின்றன" என அப்பிரதேச மக்கள் கவலையோடு குறிப்பிடுகின்றனர். உணவுத் தேடி தற்காலிகமாக பறவைகள் வந்து மீண்டும் தமது சொந்த நாட்டிற்குச் செல்லுதல் "வலசைப் போதல்" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

இச்சிறு கண்டல் காட்டுப்பகுதியில் காணப்படும் உயிரினங்களாகப் பல்வேறு மீனி னங்கள் மற்றும் நண்டினங்களும் காணப்படுகின்றன. அண்மைக்காலத்தில் வந்து சேர்ந்த மீனினமாக "திலாப்பியா" காணப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு உயிர்ப்பல்வகைமை கொண்ட இக்கண்டல் தாவரப் பகுதியானது அப்பகுதியின் உயர்காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. இச்செயற்பாட்டின் காரணமாக கண்டல் தாவரப்பகுதிகள் "அலையாத்திக் காடுகள்" என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படுகின்றன.

இக்கண்டல் தாவரங்கள் மக்களின் பொருளாதாரத்திலும் பாரிய பங்களிப்பினைச் செய்கின்றன. இங்கு நன்னீர் மீன்பிடியில் மக்கள் அதிகம் ஈடுபடுவதால், அதன் மூலமாக நாளாந்த வாழ்க்கையைக் கொண்டுசெல்லும் வருமானத்தை அம்மக்கள் பெற்றுக் கொள் கின்றனர். இவற்றை தமது நாளாந்த உணவுத் தேவைக்காகவும் அவற்றை அம்மக்கள் பயன்படுத்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும், இக்கண்டல் தாவரத் தடிகள் அலங்காரப் பொருட்களின் உற்பத்திக்காக வெளிநாடுகளுக்கு ஒரு கிராம் கண்டல் தடி நாற்பது ரூபாவிற்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன. கண்டல் தாவரத்தடிகள் மீன் வலைகள் மற்றும் நூல்களுக்குச் சாயம் போடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. அதன் மூலமும் மக்கள் வருமானத்தை ஈட்டிக் கொள்கின்றனர்.


*"யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுகண்டல், பெருங்கண்டல் என்ற இரு வகையான கண்டல் காடுகள் நிறைந்த அழகானதொரு பிரதேசமே தென்மராட்சிப் பகுதியின் மிருசுவில் என்ற இடமாகும்."*

மேலும், வெட்டப்பட்ட கண்டல் மரத்தின் பகுதிகள் நீரில் போடப்படுவதால் அப்பகுதிகள் மீன்களின் வாழ்விடமாகவும், இரைகொல்லிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொண்டு அவை இனப் பெருக்கத்தை மேற்கொள்வதற்கான சிறந்த இடமாகவும் திகழ்கின்றன. இப்பகுதிகளில் சில வாரங்களுக்குப் பின்னர் வலைகள் போடப்பட்டு மீன்களும் பிடிக்கப்படுகின்றன. மேலும், கண்டல் காடுகள் உள்நாட்டுப் பறவைகள், வெளிநாட்டுப் பறவைகள் மற்றும் விலங்குகளின் வாழ்விடமாகக் காணப்படுவதால், ஊரவர்களுடன் வேறு பிரதேசங்களில் இருந்து வருகைத் தரக்கூடிய இளைஞர்கள் எனப் பலரும் மீன்களைப் பிடித்தல், படகுகளின் மூலம் கண்டல் உட்பகுதிக்குள் சென்று பறவைகளை இரசித்தல் மற்றும் இயற்கையை இரசித்துப் பொழுதுபோக்குதல் என இப்பிரதேசமே ஒரு சிறிய சுற்றுலாத்தலமாக மாறியிருக்கிறது.

இங்குள்ள கண்டல் தாவரங்கள் பெரும்பாலும் இப்பகுதி மக்களின் விறகுத் தேவைக்காகவும் பயன்படுத்தப்படுவதால், கண்டல் காடுகள் பெருமளவிலான பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக விறகுத் தேவைக்காக இக்கண்டல் வளங்கள் அதிகம் பயன்படுத்தப்படுவதனால் அக்காடுகள் அழிவடைந்து வருவதோடு சட்டத்திற்குப் புறம்பான தங்கூசி மீன்பிடி முறையினால் மீனினங்களும் அழிவடைந்து வருவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன்காரணமாக அப்பகுதியை நம்பி தொழில் புரிகின்ற மக்களினது வாழ்க்கை பாதிப்படைவதுடன் இயற்கையை அழகுபடுத்துகின்ற பறவை இனங்களும் அழிவடைந்து வருவதை அப்பகுதியில் அவதானிக்க முடிகின்றது.


நாட்டிற்கும் சமூகத்திற்கும் மிகப் பெரிய பொக்கிஷமாகத் திகழும் கண்டல் காடுகளைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமை ஆகும். இது பற்றிய தெளிவு மக்கள் மத்தியில் காணப்படும் பட்சத்தில் இயற்கை வளங்களை அழிவடையாது பாதுகாத்துக் கொள்ள முடியும்.





பா. நிர்மலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணத்தில்

# அதிகரித்துவரும் விவாகரத்துக்கள்..!

## எங்கே செல்கின்றோம் நாம்.....?


"கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்", "ஆயிரம் பொய் சொல்லி யாவது கல்யாணம் செய்", "திருமணம் என்பது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்டது" இவையெல்லாம் திருமணம் பற்றி நம் மவர்களிடையே உலாவிவரும் பழ மொழிகளாகும். இவ்வாறான சிறப்புக் கள் திருமணத்திற்கு இருந்தாலும் தற் போதைய காலகட்டத்தில் இலங்கையில் மட்டுமல்லாது உலகளாவிய ரீதியிலும் விவாகரத்துக்கள் அதிகரித்துச் செல்வ தாக ஆய்வுகள் கூறுகின்றன.

இலங்கையில் தமிழர்கள் அதிகம் செறிந்து வாழுகின்ற வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் தமிழர்களுக்கு என்று பாரம்பரிய, பண்பாட்டு விடயங்கள் பெரி தும் கடைப்பிடிக்கப்படுகின்றன. அந்த வகையில் திருமணங்களுக்கு என்றும் ஒரு முக்கிய இடம் வழங்கப்படுகின்றது. ஆனாலும், அத்தகைய பாரம்பரிய விட யங்களுக்கு மதிப்பளிக்காமல் சிறுசிறு விடயங்களுக்குக்கூட விவாகரத்துக் கோரி நீதிமன்றங்களை நாடும் தன்மை அதிகரித்துக் காணப்படுகிறது.

இலங்கையில் திருமணங்களைச் சட்டரீதியாகப் பதிவுசெய்ய திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டம் காணப்படு கின்றது. அந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவுத் திருமணம் செய்தால் அதே

> "கணவன் மனைவிக்கு இடையில் சமூக ஊடகங்களின் செல்வாக் கால் ஏற்படும் குடும்பப் பிணக்குகள் என்பனவே அதிகரித்துவரும் விவாகரத்துக்கான காரணம்."

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் உளவியற் துறைத் தலைவரும் உளவியலாளருமான
**அபிராமி ராஜ்குமார்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியதிச் சட்டத்தின் கீழ் விவாகரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு என்னென்ன காரணங்கள் இருக்கின்றதோ அக்காரணங்களின் அடிப்படையில் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்து, நீதிமன்றத்தின் ஊடாக விவாகரத்தை பெறமுடியும்.

உரிய வயது வந்த (வயது 18) ஒரு பெண்ணும் ஆணும் தாம் விரும்பியவாறு திருமணத்தில் இணையலாம். அதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லை. ஆனால், பதிவு செய்த திருமணத்தைக் முடிவுக்குக் கொண்டுவருவதாக இருந்தால் கணவன், மனைவி இருவரும் தமக்குள் எந்த உடன்படிக்கை மூலமும் பிரிந்து செல்ல முடியாது. அதற்கு அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றத்திலேயே விவாகரத்துக் கோர முடியும்.

தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் விவாகரத்துக்கள் அதிகரித்துச் செல்வதனை அறிய முடிகின்றது. இங்கு "யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான விவாகரத்துக்கள் யாழ்ப்பாணத்திலுள்ள மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்படுகின்றன எனவும் கடந்த இரு வருடங்களில் (2018,2019) பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பெருமளவு விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன" எனவும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணி றெஜினோல்ட் றோய் டிலக்சன் தெரிவித்தார்.

இலங்கைத் திருமணப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு விவாகரத்தைக் பெற்றுக் கொள்வதற்கு முக்கிய மூன்று காரணங்கள் காணப்படுகின்றன. "வன்ம உறவறுப்பு" அதாவது கணவனும் மனைவியும் திருமணப் பதிவு செய்த பின், யாராவது ஒருவர் அத்திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எண்ணத்துடன் செயற்பட்டால் மற்றவருக்கு இச்



செயற்பாட்டைச் செய்பவர் தன்னை வன்மமாக உறவறுக்கிறார் என்ற காரணம் எழும். அதன் நிமித்தம் விவாகரத்துப் பெற்றுக்கொள்ள முடியும். 2018ஆம் ஆண்டு வன்ம உறவறுப்பு வழக்கின் கீழ் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் 179 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதே போல், 2019ஆம் ஆண்டு 160 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

வன்ம உறவறுப்பிற்குப் பல காரணங்கள் உண்டு. கணவரிற்கு மனைவியைப் பிடிக்கவில்லை என்றால் அவரை விவாகரத்துச் செய்வதற்காக ஒரு போலிக் குற்றச்சாட்டை முன்வைப்பதன் மூலம் அல்லது "விலகிப் போனால் போதும்" என்ற நிலைமைக்கு ஆளாக்குவதற்காக கொடுமைகளைச் செய்தல் என்பன வன்ம உறவறுப்பின் கீழ் அடங்கும். மேலும், தாம்பத்திய உறவை கணவன், மனைவி எவரேனும் நியாயமில்லாமல் மறுக்கும்போது அதுவும் வன்ம உறவறுப்பாகக் கருதப்படும். இவ்வாறான செயற்பாடுகளை யார் செய்கிறாரோ அவரிடமிருந்து குற்றமற்ற தரப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வன்ம உறவறுப்பு செய்தார் என வழக்கைத் தாக்கல் செய்தால் நீதிமன்றம் குற்றமற்றவருக்கு விவாகரத்தைக் கொடுக்கும்.

அடுத்ததாக "சோரவாழ்க்கை" என்பதன் ஊடாகவும் விவாகரத்தைப் பெற அதிகம் முயற்சிக்கப்படுகின்றது. ஒரு திருமணம் நிகழ்ந்த பின் கணவனோ மனைவியோ திருமணத்திற்கு அப்பால் வேறு யாருடனும் உடலுறவு வைத்துக் கொள்ளுதல் சோரவாழ்க்கை ஆகும். யார் சோரத்தில் ஈடுபட்டாரோ அவர் மீது சோரமில்லாத குற்றமற்றவர் விவாகரத்தைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவராகிறார். 2018ஆம் ஆண்டில் 11 சோர வாழ்க்கை வகையின் கீழ் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல், 2019ஆம் ஆண்டில் 08 வழக்குகள் இவ் வகையின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.



"இயலாமை" என்ற வகைக்குள்ளும் விவாகரத்தைப் பெற சட்டத்தில் வழியுண்டாகின்றது. இதனுள் ஆண்மைக் குறைபாடு, தாய்மையடைய முடியாத நிலை என்பன உள்ளடங்கும். திருமணத்தில் உடலுறவு கொள்ள முடியாத நிலை கணவன், மனைவி இருவரில் ஒருவருக்கேனும் இருந்தால் அது இயலாமையாகக் கருதப்படும். 2018, 2019ஆம் ஆண்டுகளில் இவ் வகையின் கீழ் இரண்டு வழக்குகள் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.

இப்பிரதான மூன்று வகைக் காரணங்களைத் தவிர "குடியியல் நடைமுறைச் சட்டக்கோவை 608(2) (டி)" என்ற



வகையின் கீழும் விவாகரத்து வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றது. அதாவது 07 வருடங்களுக்குக் குறையாமல் கணவனும் மனைவியும் உணவு, உறக்கம் எதுவும் இல்லாமல் பிரிந்து இருந்தால் வழக்குத் தாக்கல் செய்து விவாகரத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். 2018ஆம் ஆண்டில் இவ்வகையின் கீழ் ஆறு வழக்குகளும், 2019ஆம் ஆண்டில் இரண்டு வழக்குகளும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக 2018ஆம் ஆண்டில் 198 விவாகரத்து வழக்குகளும், 2019ஆம் ஆண்டில் 172 விவாகரத்து வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கணவன் மனைவிக்கு இடையே சரியான புரிந்துணர்வு இன்மை, கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வ தால் இருவரும் ஒன்றாகச் செலவிடும் நேரம் குறைதல், போதிய தொடர்பாடல் இன்மை மற்றும் கணவன் மனைவிக்கு இடையில் சமூக ஊடகங்களின் செல்வாக் கால் ஏற்படும் குடும்பப் பிணக்குகள் என்ப னவே அதிகரித்துவரும் விவாகரத்துக்கான காரணம்" என்கிறார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உளவியற் துறைத் தலைவரும் உளவியலாளருமான அபிராமி ராஜ்குமார். "30 தொடக்கம் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களே அதிகமாக விவாக ரத்தை கோருகின்றனர்" எனவும் அவர் தெரிவித்தார்.


முன்பு மக்கள் சமூகத்தோடு ஒன்றித்து இருந்தனர். ஆகவே, கணவன் மனைவிக் கி டையே புரிந்துணர்வு காணப்பட்டது. அவ் வாறான நிலைமை இன்றில்லாமை யாலும் விவாகரத்துக்கள் அதிகரித்துள்ளன எனலாம். அது மட்டுமல்லாமல், விருப்பத் திற்கு மாறான கட்டாயத் திருமணங்களும் ஒரு காரணம் எனலாம். மேலும், தற்காலத் தில் சமூக ஊடகங்களின் தாக்கமும், மேலைத்தேயக் கலாசாரத்தின் தாக்கமும் அதிகரித்து வரும் விவாகரத்திற்கான ஒரு காரணமாக நோக்கப்படுகின்றது.

"குடும்ப வாழ்க்கையில் முன்பு எவ்வ ளவு தான் ஒற்றுமையாக இருந்தாலும் விவாகரத்துப் பெற்ற பின்னர் கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் எதிரிகளாகவே பார்க்கப்படுகின்றனர் இதன் மூலம் தங்களுடைய பிள்ளைகளின் எதிர் காலம் பற்றி அவர்கள் பெரிதும் சிந்திப் பதில்லை என்றே கூறலாம். விவாகரத்தா கும்போது பதினெட்டு வயதிற்குக் கீழ்ப் பட்ட பிள்ளைகள் இருக்கும்போது அப் பிள்ளைகள் யாரிடம் வளரவேண்டும் என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்கும். பொதுவில் பெண் பிள்ளைகளுக்குப் பதினெட்டு வயதைக் கடந்த பின்னர் அது பிள்ளையினுடைய விருப்பமாகக் காணப் படும். பிள்ளை யாருடன் வாழ விரும்பு கிறதோ அவர்களுடன் செல்வதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்குகிறது. மேலும்,பிள்ளைகளுக்குப் பதினெட்டு வயது வரும்வரை கணவரால் பராமரிப்புச் செலவு என ஒரு தொகைப் பணம் மாதந்தோறும் மனைவிக்கு வழங்கப்பட வேண்டும் என்பது நீதி மன்றத்தின் உத்தரவு ஆகும். மேலும் விவாகரத்துப் பெற்றவர்களின் பிள்ளைகள் சமூகத்தால் கேலி கிண்டல் செய்யப்படும் தன்மையும், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத தன்மையும் காணப் படுகின்றன". எனவும் மல்லாகம் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணி றெஜினோல்ட் றோய் டிலக்சன் தெரிவித்தார்.

ஆனால், மேலைத்தேய நாடுகளில் விவாகரத்திற்குப் பின்னரும் தங்களுடைய பிள்ளைகளின் நலன்களிலும் அவர்களின் விடயங்கள் தொடர்பிலும் பெற்றோர் கலந் தாலோசிக்கின்றமையை அவதானிக் கலாம்.

எது எவ்வாறிருந்தாலும், தமிழ்ப் பண் பாட்டின விளைநிலம் எனப் போற்றப்படும் மண்ணில் விவாகரத்து அதிகரிப்பது ஆரோக்கியமானதா? என்ற கேள்வி பல மாகவே எழுகின்றது.

•



அ.ரோகினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பளபள கத்தரிக்காயும் சூத்தைக் கத்தரிக்காயும்..!

-ஓர் மார்க்கெட் சந்திப்பு -

*சில வருடங்களுக்கு முன்னர் :*

ஒரு மரக்கறிக் கடையில் கத்தரிக்காய்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அங்கு நல்ல கத்தரிக்காய்கள் ஒரு பக்கமும், பூச்சி குத்திய கத்தரிக்காய்கள் ஒரு பக்கமும் வைக்கப்பட்டிருந்தன. சந்தைக்கு வந்தவர்கள் அனைவரும் பூச்சியில்லாத நல்ல கத்தரிக்காய் போடுங்கள் எனக் கேட்டு வாங்கிச் சென்றனர். இதைப் பார்த்த கத்தரிக்காய்கள் பேசிக்கொண்டன.

நல்ல கத்தரிக்காய் : "ஏய் சூத்தக் கத்தரிக்காய் என்னையும் என்னோட மவுசையும் பாத்தியோ, என்னை இன்னும் கொஞ்ச நேரத்தில வித்து முடிச்சிடுவினம், உன்ர பிழைப்பு நாறப்போகுது"

(சூத்தைக் கத்தரிக்காய் முகம்வாடியது.)

நல்ல கத்தரிக்காய் : "ஏய் இப்பவே நீ வாடினா எப்படி? இனி வாறவங்களும் உன்னைத் தள்ளி விட்டிடுவினம், கொஞ்சம் சிரி"

சூத்தைக் கத்தரிக்காய் : "ஏய் நல்ல கத்தரிக்காய், நான் இயற்கையில் உருவானவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னோட பூச்சி புழு இருக்கு. நான் உன்னை மாதிரி செயற்கை இல்ல. என்னால நீண்ட நாள் வாழமுடியும். உன் னால வாழ முடியுமா? செயற்கை உள்ளீடுகளை நிறுத்தினால் உன்பாடு அதேகதிதான்"

நல்ல கத்தரிக்காய் : "நீ பயப்படாத. நான் கட்டாயம் கன நாள் வாழுவன். எதிர்கால சந்ததி பற்றியோ செயற்கை உள்ளீடுகளால வாற பாதிப்பைப் பற்றியோ கவலைப்படாமல் என்னை உற்பத்தி செய்யிறவனும் என்னைக் கேட்டு கேட்டு வாங்கிறவனும் இருக்கும் மட்டும் நான் இருப்பேன்"

சூத்தைக் கத்தரிக்காய் : "அப்படியா. என்னைத் தேடி தேடி வாங்கிற காலம் வெகு சீக்கிரம் வரும். அப்ப உன்னைக் கவனிக்கிறன்"

நல்ல கத்தரிக்காய் : "அப்ப கவனிக்கிறது இருக்கட்டும் இப்ப உன்னை யாராச்சும் கவனிக்கிறாங்களோ எண்டு பார். ஒருத்தனும் உன்ன வாங்க மாட்டான். என்னத்தான் எல்லாரும் வாங்கு வாங்கெண்டு வாங்குவினம். அங்க பார் ஒரு பெரியவர் வாறார். எப்படி அவரும் என்னத்தான் பாக்குறார்"

சூத்தைக் கத்தரிக்காய் : "ஐயோ! இதுகள வாங்காதீங்கோ. இவையெல்லாம் செயற்கை இரசாயனத்தில உற்பத்தியானவை. இவங்கள வாங்கிச் சாப் பிட்டா வருத்தந்தான் வரும். அழகென்றாலே எப்பவும் ஆபத்து தான். ஐயா பெரியவரே ! கொஞ்சம் கேளுங்கோ. அறிவுரை கூறவேண்டிய நீங்களே அறிவில்லாம வாங்கிட்டு போறீங் களே. பெரியவரே நீங்கமட்டும் நீண்டகாலம் வாழ்ந்தால் போதாது. உங்கட சந்ததியும் வாழ வேணும். கொஞ்சம் கேளுங்கோ. நான் ஆரோக்கியமான இயற்கை முறையில் விளைஞ்சவள். என்னைச் சாப்பிட்டால் நோய்கள் வராது"

பெரியவர் : "சூத்த இல்லாம பாத்து நல்லதா போடப்பா"

நல்ல கத்தரிக்காய் : "ஆ...ஆ..... ஏய் சூத்தைக் கத்தரிக்காய் பாத்தியா! பாத்தியா! நான் சொன்னன்தானே. அவங்கள் என்னைத்தான் வாங்கு வாங்கள் எண்டு. அவங்கள் என்ர அழகில மயங்கிட்டாங்கள்"

சூத்தைக் கத்தரிக்காய் : "ஓமோம். இவங்கள் இன்னும் கொஞ்ச நாளில நோயாளி ஆகிடுவாங்கள். என்ர அருமை தெரிஞ்சு இவங்கள் என்னைத் தேடி அலையிற காலம் வெகு கெதியா வரும். அப்ப நான் இவங்களுக்கு அருமருந்தாத் தெரிவன்"

சில வருடங்களுக்குப் பின்னர்:
அதே மரக்கறிக்கடையில்..

பெரியவர் : "தம்பி. மருந்து அடிக்காத கத்தரிக்காய் குடப்பா. என்னப்பா கத்தரிக்காய் பளபளப்பா இருக்கு இது மருந்து அடிக்காததோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வியாபாரி | : | "ஓம் ஐயா! இது நல்ல மரக்கறிதான். போடவா?" |
| பெரியவர் | : | "இது நல்ல காய்கறி இல்ல. நல்ல காய்கறி எண்டால் பூச்சி புழு இருக்கும். அத எங்கயப்பா வாங்கலாம்?" |
| வியாபாரி | : | "இதுவும் நல்ல காய்கறிதான். ஐயா வாங்குங்களேன்" |
| பெரியவர் | : | "ஐயோ தம்பி நான் கனக்க நாளா இந்த காய்கறியத்தான் வாங்கிச் சாப்பிட்டன். நேற்று என்ர பேரன் இந்தக் காய்கறி அவிச்ச தண்ணிய காகத்திற்கு வைச்சிருக்கான். அதக் குடிச்சிட்டு காகம் செத்துப் போய்ச்சப்பா. அந்த மரக்கறி அவிச்ச தண்ணியிலயே இந்தளவு விஷம் எண்டால், அந்த மரக்கறியச் சாப்பிட்டால் மனுசனின்ட மென்மையான வயிறு என்ன பாடுபடும்? என்னென்ன நோய்கள் வரும்? என்னை விட்டிடப்பா. எங்க அலைஞ்சாவது சூத்த குத்தின இயற்கை முறையில விளைஞ்ச கத்தரிக்காய்தான் பாத்து நான் வாங்குவேன்" |
| வியாபாரி | : | "என்னை மன்னிச்சிடுங்கோ ஐயா. நாங்க என்ன செய்யிறது? இப்பிடிக் காய்கறி தான் இப்ப வருது. நாங்க பிழைப்புக்காக விக்கிறம்" |
| பெரியவர் | : | "பிழைப்புக்கா? இந்தப் பிழைப்ப பாத்தியெண்டால் உன்ர பிழைப்பு இல்லாம போயிடும். இத வாங்கிக் கொஞ்ச நாளில வாங்கிறதுக்கும் ஆளிருக்காது. விக்கிறதுக்கும் ஆளிருக்காது. எதிர்காலத்தில நோய் நிறைஞ்ச சமூகத்தைத்தான் நாங்கள் பாக்கவேணும்" |

நடையைக் கட்டுகிறார் பெரியவர். கும்பலாக குவிக்கப்பட்டிருந்த பளபள கத்தரிக்காய்களைப் பார்த்துக் கண்சிமிட்டிச் சிரித்தது ஓர் ஓரமாய்த் தள்ளப்பட்டிருந்த சூத்தைக் கத்தரிக்காய் ஒன்று.

•





இ.அனுஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கொலைகள் தீர்வல்ல..!

## தவறான முடிவுக்குப் போவதும் தவறே..!

தற்காலத்தில் இலங்கை முழுவதும் வியாபித்துள்ள கொடிய நோயாக தற்கொலை காணப்படுகின்றது. உலகிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தற்கொலை தீர்வாகுமா? தீர்க்க முடியாத பிரச்சினைகள் ஏதும் உண்டா? மன அழுத்தமே ஒருவரது உள்ளத்தில் ஆழப்பதிந்து தற்கொலை எண்ணத்தை உருவாக்குகின்றது. மன அழுத்தமானது வயது வேறுபாடின்றி எந்தவொரு தரப்பிலும் தாக்கம் செலுத்துகின்றது.

"தற்கொலை என்பது இயலாமையின் வெளிப்பாடு" என்கின்றார்கள் உளவியலாளர்கள். இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் ஒவ்வொருவரும் தங்களின் சந்தோஷத்தையும், துக்கத்தையும் தங்களின் சமூக வலைத்தளங்களிலேயே அதிகமாகப் பகிர்ந்து கொள்கின்றனர். காரணம் இன்று பலரின் உற்ற நண்பன் அலைபேசி மாத்திரமே. மனதில் உள்ள சுக துக்கங்களைப் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு இன்று பலருக்கு உற்ற உறவுகள் இருப்பது குறைவு. தங்களின் கவலைகளையும் வேதனைகளையும் மனதிற்குள்ளேயே மறைத்து வைத்து, உள்ளுக்குள்ளேயே புழுங்குவதால் இலகுவில் ஒரு வெறுமை உணரப்பட்டு இறுதியாக தற்கொலை எண்ணத்துக்குள் தள்ளப்படுகின்றனர்.

இதற்கான காரணம் என்ன?, ஏன்? இவ்வாறான நிலை தோன்றுகின்றது, இதை எவ்வாறு தடுக்கலாம் என பல கேள்விகள் எம்மிடையே உள்ளன. இன்றைய நாட்களில் ஒருவரைத் தற்கொலை எண்ணத்துக்குத் தூண்டுவதாக இரண்டு முக்கிய காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று மன அழுத்தம் மற்றையது போதைப் பொருள் பாவனை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில தவறுகளுக்குச் சமூகத்தின் மீதுள்ள பயம், காதல் தோல்வி, வேலையின்மை, வறுமை, நுண்கடன் பிரச்சினை, சமூகத்தின் மீதுள்ள வெறுப்பு போன்றனவும் தற்காலத்தில் பலர் தற்கொலை செய்து கொள்ளக் காரணங்களாகத் திகழ்கின்றன.

பாடசாலை மாணவர்கள் அதிகளவில் கல்விச் செயற்பாடுகள், வருடாந்தப் பரீட்சைகள் போன்றவற்றால் மன ரீதியாக அழுத்தத்துக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். பரீட்சைப் பெறுபேறுகளை மட்டுமே இலக்காகக் கொண்டு கல்வியை மட்டுமே அதிகமாக உட்புகுத்துவதனால் அவர்கள் இந்நிலைக்கு ஆளாகின்றனர்.


அண்மைக் காலத்தில் நுண்நிதிக் கடன் தொல்லை என்பது எம் சமூகத்தினர் பலரையும் பாதிக்கும் காரணியாகிவிட்டது. பெற்ற கடனைக் குறித்த காலப்பகுதிக்குள் செலுத்த முடியாமலும், கடனை வழங்கிய தனியார் நிதிநிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் நெருக்குதல்களுக்கு ஆளாகியும் சிலர் தவறான முடிவுக்குச் செல்லத் துணிகின்றார்கள். அவ்வாறெனில், ஏன் இக்கடனைப் பெற்றுக்கொள்ள வேண்டும்? நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்த குடும்பங்கள் தங்களின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதற்காவே பெரும்பாலும் இக்கடனை நாடுகின்றனர்.

பொதுவாக அரச வங்கிகளில் கடன்களைப் பெறவேண்டுமாயின், அதிக ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அரச வங்கிகளில் கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாமலும், கடனைப் பெற்றுக் கொள்வதில் கால தாமதங்கள் ஏற்படுவதாலும் பலர் இலகுவாகவும், உடனடியாகவும் பணத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நுண்நிதிக் கடன்களை நாடுகின்றனர். இக்கடன் திட்டத்தைப் பெற்றுக் கொள்வதில் பெண்கள் அதிகமாக ஆர்வம் காட்டியும் வருகின்றனர்.

நாளுக்கு நாள் ஏதாவது ஒரு காரணத்திற்காகத் தற்கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. சிறந்த வழிகாட்டுதல்கள் மூலமே தற்கொலைகள் நிகழாமல் தவிர்க்கலாம். ஒருவரிடம் தற்கொலை எண்ணங்கள் மேலோங்கி இருப்பதை அறிய வேண்டுமெனில், அவரிடம் வெளிப்படையாகப் பேச வேண்டும். மனச்சோர்வுடன் தற்கொலை எண்ணம் கொண்டிருப்பவரிடம் அவரின் உணர்வுகளைப் பகிர்ந்து, விழிப்புணர்வை ஏற்படுத்தும்போது தற்கொலை




**“ஒரு நபர் தற்கொலை செய்துகொண்டால் அது யாருக்கு இழப்பு? நிச்சயமாக அது நம்மை சார்ந்து இருப்பவர்களையே சாரும். மாற்றமடைந்து வரும் உலகினில் மாறாதது என்று எதுவுமே இருப்பதில்லை.”**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்கொலை உணர்வு ஏற்பட முக்கியமாகத் தீர்க்கப்படாத மனக்குறைகளும் மனச்சோர்வுகளுமே காரணங்களாகும். இதை ஆரம்ப கட்டங்களிலேயே கண்டறிந்து அதற்கேற்ற வழி காட்டுதல்களை மேற்கொண்டு அவர்களுடைய மனக்குறைகளைக் கூறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.



எண்ணத்தைக் கொண்டிருப்பவர்களுக்கு நம்பிக்கை பிறக்கும். முறையான வழிகாட்டுதல்களை மேற்கொள்ளும் போது தற்கொலை எண்ணங்களை மாற்றியமைக்கலாம்.

உளவியலாளரான டாக்டர்.லுக்மனால் ஹக்கீம், "உளவியல் காரணிகளின் அடிப்படையில் தற்கொலை உணர்வு ஏற்பட முக்கியமாகத் தீர்க்கப்படாத மனக்குறைகளும் மனச்சோர்வுகளுமே காரணங்களாகும். இதை ஆரம்ப கட்டங்களிலேயே கண்டறிந்து அதற்கேற்ற வழி காட்டுதல்களை மேற்கொண்டு அவர்களுடைய மனக்குறைகளைக் கூறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குறித்த நபர் தனிமையில் இருந்தால் அச்சூழலை மாற்றியமைத்து, உளவளத்துணைச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதனூடாக தற்கொலை உணர்வுகளில் இருந்து ஒருவரை பாதுகாக்க இயலும்" எனக் கூறுகின்றார்.

மனித வாழ்க்கையில் பிரச்சினைகள் என்பவை சங்கிலித் தொடராக நீண்டு செல்பவை. மனிதனுக்குப் பிரச்சினைகள் அவரவர் இயல்புகளுக்கேற்ப காணப்படும். அதேபோலவே, பிரச்சினைகளும் எல்லா மனித வர்க்கத்திற்கும் உண்டான பொதுவான விடயமாகும்.

ஒரு நபர் தற்கொலை செய்துகொண்டால் அது யாருக்கு இழப்பு? நிச்சயமாக அது நம்மை சார்ந்து இருப்பவர்களையே சாரும். மாற்றமடைந்து வரும் உலகினில் மாறாதது என்று எதுவுமே இருப்பதில்லை. ஆகவே, இக்கட்டான சூழல் எதுவாக இருப்பினும் அதற்கு ஆயிரம் வழிகள் இருக்கும் என்பதை மனதின் முன்னிறுத்தி நம் வாழ்க்கைப் பாதையை அழகாக்குவோம்.

•



அ.றுக்சி விநோதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்களுக்குப் பாதுகாப்பு உள்ளதா?

'எங்களுக்கு நடப்பதை வெளியில் தைரியமாகச் சொல்லவும் முடியாது. மீறிச் சொல்வதும் அவமானமாகத் தோன்றுகிறது. இவ்வாறு செய்பவர்களிடமிருந்து சற்று நகர்ந்து நிற்பதை விட அந்நேரத்தில் மாற்று வழிகள் எதுவும் எங்களுக்குத் தோன்றுவதே இல்லை" என்ற சக மாணவியின் கருத்து என்னை ஸ்தம்பிக்கச் செய்தது.

இலங்கையின் சகல பகுதிகளிலிருந்தும் தமிழ்மொழி பேசும் மாணவர்களும் சிங்களமொழி பேசும் மாணவர்களும் பல நூறு கிலோமீற்றர்கள் கடந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வந்து தங்களின் கல்விப்பயணத்தைத் தொடர்கிறார்கள். இப் பயணத்தில் பொருளாதாரம், இருப்பிடம், நேரம் மற்றும் மொழி எனப் பல பிரச்சினைகள் காணப்பட்டபோதும் இவற்றைப் பொருட்படுத்தாமல் தமது இலக்கினை அடையப் போராடுகின்றனர். இருந்தும் இவர்களின் போக்குவரத்தும் சவால் நிறைந்ததாகவே இருக்கிறது. பல்கலைக் கழகத்திற்கு வருகைதரும் மாணவர்கள் பெரும்பாலும் பொதுப் போக்குவரத்துக்களான பேருந்து, தொடரூந்து போன்றவற்றையே பயன்படுத்துகின்றனர். இதன் போது இவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. இதில் மாணவிகளே பெண்கள் என்ற ரீதியில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

"எனது ஊரிலிருந்து நான் இரவுப் பேருந்திற்குச் செல்ல ஒரு போருக்குச் செல்வது போலவே தயாராகுவேன்" என்கிறார் இரத்தினபுரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரவில் பயணிக்கும் கலைப்பீட இரண்டாம் வருட மாணவியொருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி இந்த இரவு நேரப் பேருந்துகள் ஏன் சவால் நிறைந்தவை? "இரவு எட்டு மணிக்கு எங்களின் பேருந்து இரத்தின புரியிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படத் தயாராகும். பேருந்திற்குள் எல்லா மின் குமிழ்களும் ஒளிர்வது பகல் போலக் காட்சியளிக்கும் இரவு 11 மணிக்கு பயணிகளின் நித்திரைக்காக மின்குமிழ்கள் மூடப்படும்போது தான் சில சேட்டைக்காரர்கள் தங்களின் சேட்டைகளை ஆரம்பிப்பார்கள். எமக்குப் பின் இருக்கையிலிருந்து கைகளைத் தட்டுவது, காலால் எமது கால்களை மிதிப்பது அல்லது எமது அருகில் அமர்ந்து நித்திரை செய்வதுபோல எம்மீது சாய்வது போன்ற தொல்லைகளைச் செய்வார்கள். இதை யாரிடமும் சொல்லவும் முடியாது. என்ன தான் பட்டதாரியாக இருந்தாலும் கூட இது போன்ற விடயங்களை வெளியில் சொல்ல மனம் வருவதும் இல்லை. இது போன்ற நேரங்களில் எங்களின் கையிலிருக்கும் பைகளை வைத்து அணைகட்டியோ அல்லது அவர்களிடமிருந்து சற்று நகர்ந்து நின்றோதான் எங்களை நாங்கள் காத்துக் கொள்வோம்" என்கிறார்.

மேலும், இரவு நேரப் பயணங்கள் குறித்து மூன்றாம் வருட விஞ்ஞானப் பீட மாணவி ஒருவரிடம் வினவியபோது, "நேரம், காலநிலையைக் கருத்திற் கொண்டு இரவுப் பயணத்தினை மேற்கொள்வதுதான் என் வழக்கம். சவால் என்று எதுவும் எனக்கு இருந்தது இல்லை. தற்காலத்தில் இரவுப் பயணங்கள் என்பது சாதாரண ஒரு விடயம்" எனப் பதிலளித்தார். அவரின் பதில் சற்று வித்தியாசமாக இருந்தது. அதே கேள்வியினை இறக்குவாணையிலிருந்து பயணிக்கும் கலைப்பீட மாணவி ஒருவரிவிடம் கேட்டபோது, "பாலியல் தொல்லைகள் தூரப் பயணங்களின் போது மட்டும்தான் நடக்கின்றன என்று இல்லை. அருகில் எங்காவது பயணிக்கும்



> எங்களுக்கு நடப்பதை வெளியில் தைரியமாகச் சொல்லவும் முடியாது, மீறிச் சொல்வதும் அவமானமாகத் தோன்றுகிறது, இவ்வாறு செய்பவர்களிடமிருந்து சற்று நகர்ந்து நிற்பதை விட அந்நேரத்தில் மாற்று வழிகள் எதுவும் எங்களுக்குத் தோன்றுவதே இல்லை

போதும் கூட பார்வையாலும் சொற்களாலும் கூடப் பாலியல் தொந்தரவுகளுக்கு உட்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம். பேருந்தில் அதிகமான சன நெரிசல் இருக்கும் போது சில ஆண்கள் வேண்டுமென்றே எங்களின் மீது சாய்வார்கள். நாம் அமைதியாகச் செல்லும்போது இது நீடிக்கும். உடனடியாக நான் பேருந்து நடத்துநரிடம் இது தொடர்பில் முறையிட்ட போது, அவர் குறிப்பிட்ட நபரை எச்சரிக்கை செய்து சென்றார். இவ்வாறு எமது ஊரிற்கு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் செல்லும்போதும் இது போன்ற பிரச்சினைகளுக்கு தினம் தினம் ஆளாகிக் கொண்டுதான் இருக்கின்றோம்" எனக் குறிப்பிட்டார்.

பேருந்தில் பயணிக்கும் பயணிகள் எப்பொழுதாவது பாலியல் ரீதியான அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளார்களா?, இது தொடர்பில் உங்களிடம் முறையிட்டால் நீங்கள் என்ன நடவடிக்கையினை மேற்கொள்வீர்கள்? என எம்பிலிப்பிட்டியவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்து நடத்துனர் தமித்திடம் கேட்டபோது, "இதுவரை எமது பேருந்தில் இப்படியான பிரச்சினை எதுவும் நடைபெற்றதில்லை. இது தொடர்பில் யாராவது முறைப்பாடு செய்வார்களானால் பாதிப்பிற்குள்ளாக்கியவர் தொடர்பில் தகுந்த நவடிக்கையை எடுப்போம்" என்றார்.

இதே வினாவை பதுளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பேருந்து நடத்துனரிடமும் சாரதியிடமும் கேட்டபோது, "பாலியல் ரீதியான தொல்லைகள் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத் தான் சேர்ந்து வருபவர்களைத் தவிர்த்து தனியே வரும் பெண்களை, பெண்களுக்காக மட்டும் ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் அமர விடுவோம். இவற்றையும் மீறி தகாத செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களை இடையில் இறக்கி விட்டுவிடுவோம். ஆனால், இதுவரை எங்கள் பேருந்தில் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்பட்டது இல்லை" எனக் கூறினார். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிப்பிற்குள்ளானவர்கள் அதுதொடர்பில் வெளியில் சொல்வதில்லை என்பதைத் தான் இந்தக் கருத்துக்கள் வெளிப்படுத்துகின்றன.

மாணவர்கள் தைரியமாகப் பயணித்தாலும் அவர்களின் பெற்றோர்களின் மனநிலை வேறுபட்டதாகவே காணப்படுகிறது. கலைப்பீட இரண்டாம் வருட மாணவி ஒருவரின் தந்தை ஒருவரிடம், உங்கள் மகள் இரவுப் பேருந்தில் பயணிப்பது தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் எனக் கேட்டதற்கு, "என் மகன் பயணிக்கும்போது இருக்கும் அதே நம்பிக்கை என் மகள் பயணிக்கும்போதும் எனக்கு இருக்கிறது. இருள், தனிமை என்பவற்றுக்கு அவள் பழக்கப்படவும் வேண்டும்" என்றார்.

இன்னொரு மாணவியின் தாயிடம் கேட்டபோது, "அவ அங்க போயிட்டு சேரும் வரைக்கும் எனக்கு உசுரே இருக்காது" என்றார். பொதுப்போக்குவரத்தில் பயணிப்பது தொடர்பில் ஒவ்வொரு நபர்களும் ஒவ்வொருவிதமான கருத்தை கொண்டவர்களாவர். இவ்வாறான பாலியல் ரீதியான தொல்லைகள் பேருந்துகளில் மட்டுமல்ல கோயில்களிலும், பாடசாலைகளிலும், சாலைகளிலும், கடைகளிலும் மற்றும் குடும்பங்களிலும் கூட நிகழத்தான் செய்கின்றன. இதுபோன்ற பிரச்சினைகளை மறைப்பதனால் இவை மேலும் அதிகரிக்கத்தான் நாம் வழி ஏற்படுத்துகின்றோம். இவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுவதனால் மட்டுமே இவற்றை எமது சமூகத்திலிருந்து ஒழிக்கமுடியும். பெண்களை இவ்வாறான அசௌகரியங்களுக்கு உட்படுத்தும் நபர்களை இச் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்ட நாம் நமது வாயை திறக்காதவரை இவ் இரவுப் போர்கள் ஓயப் போவது இல்லை.

•



கி. செல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிரேஷ்ட ஊடகவியலாளர்

# எஸ்.ராதேயன் அவர்களின்

### ஊடகத்துறைசார் அனுபவப் பகிர்வு

*சிறுவயதில் எழுத்துத்துறையில் கால்பதித்து இன்றுவரை ஊடகத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர்களில் எஸ். ராதேயன் அவர்களுக்குத் தனிச் சிறப்பிடம் உண்டு. ஊடகத்துறை மீதுள்ள விருப்பம், ஆர்வம் என்பவற்றுடன் சமூகத்தின் மீது அவருக்கு இருந்த அக்கறையே இன்று சிரேஷ்ட ஊடகவியலாளராக அவரை அடையாளம் காட்டியிருக்கிறது.*


யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், பல பத்திரிகைகளில் பிரதம ஆசிரியராகப் பணிபுரிந்ததுடன் கவிதை, புனைகதை, இலக்கியம், கையெழுத்துப் பிரதிகள் எனப் பல்துறை ஆளுமைப் பண்புகளைக் கொண்ட ஒரு சிறந்த படைப்பாளியாகத் திகழ்கின்றார்.

ராதேயன் தனது 14 ஆவது வயதில் ஈழநாடு பத்திரிகைக்குச் சிறுவர் பகுதியில் ஒரு சிறுகதை எழுதியதன் மூலம் முதன்முதலில் எழுத்துத்துறையில் கால் பதித்தார். அத்துடன் மாணவன், மதி, சுதந்திரன், மாஞ்சோலை, இராகவன் ஆகிய கையெழுத்துப் பிரதிகளையும் உருவாக்கினார்.

எழுத்தாளர் டானியல் அன்ரனி, கவிஞர் புதுவை இரத்தினதுரை போன்ற பலருடன் ஒன்று சேர்ந்து சினிமா, இலக்கியம், அரசியல் சார்ந்த விடயங்களை விவாதித்து வந்திருக்கின்றார். அவை ஆரோக்கியமான கருத்தாடல்களாக அமைந்தன. பின் நாட்களில் இவர்கள் அனைவருமே தத்தமது துறைகளில் விற்பன்னர்களாக விளங்கியதையும் அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியில் நமது ஈழநாடு பத்திரிகையில் பல புதிய விடயங்களை உள்ளடக்கியும், நமது ஈழநாடு பத்திரிகையை வாரமலராக வெளியிட வேண்டுமெனவும் உழைத்து வெற்றியும் கண்டார்.

முடிகின்றது. தனது சிறுவயதில் கலை, இலக்கிய சஞ்சிகையொன்றை நண்பர்களுடன் இணைந்து வெளியிட்டதாகவும் அது இரண்டு இதழுடன் நின்றுவிட்டதாகவும், பின்னர் சிரித்திரனுடன் தன் இதழியல் பணிகள் ஆரம்பமானதாகவும் ராதேயன் குறிப்பிடுகிறார்.

ஈழமுரசு வாரமலர், ஈழநாதம் - வெள்ளிநாதம், நமது ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் சிரேஷ்ட ஆசிரியராகவும், பிரதம ஆசிரியராகவும் ராதேயன் பணியாற்றியிருந்தார். சிரித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் சுமார் 15 வருடங்கள் வரை பணியாற்றியதைத் தனது வாழ்நாளின் முக்கிய கட்டமாகக் கூறுகிறார் ராதேயன். ஈழநாதம் தினசரியின் வார வெளியீடான வெள்ளிநாதத்தில் பிறமுக அறிமுகம், நறுக்கென ஆகிய இரு தொடர்களையும் வாராவாரம் எழுதி வந்தார். இவர் புனைபெயர்களில் பல அரசியல் கட்டுரைகளையும் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1990 களில் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக இந்தியா சென்ற எஸ். ராதேயன் இந்தியச் சிறைச்சாலையில் ஐந்து வருடங்கள் அரசியல் கைதியாகச் சிறைவாசம் அனுபவித்தக் காலத்தில் விடுதலைப் போராட்ட வரலாற்று நாவலையும், "என்னைச் சுற்றும் உலகம்" என்ற கவிதைத் தொகுப்பையும் எழுதினார்.

நமது ஈழநாடு பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியில் நமது ஈழநாடு பத்திரிகையில் பல புதிய விடயங்களை உள்ளடக்கியும், நமது ஈழநாடு பத்திரிகையை வாரமலராக வெளியிட வேண்டுமெனவும் உழைத்து வெற்றியும் கண்டார்.

எழுத்தாளர்களின் படைப்புக்களின் உருவாக்கத்திற்கு உடனிருந்து, உற்சாகமூட்டி அவர்களின் வளர்ச்சி கண்டு மகிழும் பண்பு கொண்ட சிறந்த ஒரு மனிதரே எஸ். ராதேயன் என்பது அவரது நண்பர்களது புகழுரையாகும்.

"தமிழ் ஊடக அறிவியற் கல்லூரி" எனும் ஊடகக் கற்பித்தல் நிறுவனத்தின் அதிபராகவும் விரிவுரையாளராகவும் பணிபுரியாற்றிய இவர், பத்திரிகையாளர், பத்திரிகைத்துறை விரிவுரையாளர், கவிஞர், எழுத்தாளர் எனப் பல்துறை ஆற்றல் கொண்ட ஆளுமையாக இன்றும் ராதேயன் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.



செ. நிரஞ்சனா



பா. நிர்மலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டுக்கரைக்குளம்

## தொன்மைக்கு ஒரு சான்று

வட இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மிகப் பெரிய தொன்மைக் குடியிருப்பு மையங்களில் ஒன்றாகக் கட்டுக்கரைத் தொல்லியல் மையம் காணப்படுகின்றது. இவ்விடம் இலங்கையின் வரலாற்றுப் பழமை வாய்ந்த மன்னார் மாவட்டத்தில், அதன் வடகிழக்கே வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள் ளது. இன்று, குளத்தை மையப்படுத்தித் தோன்றிய இக்கிராமத்தின் பெயர் தமிழில் கட்டுக்கரைக் குளம் எனவும், சிங்களத்தில் யோதவெவ எனவும் அழைக்கப்படு கின்றது. அத்துடன் இக்குளத்தையும், அதனைச் சுற்றியமைந்த சில கிராமங்க ளையும் பாரம்பரியமாகப் பாலப்பெருமாள் கட்டு என்றும் மக்கள் அழைத்து வந்துள் ளனர்.


பண்டைய காலத்தில் மாதோட்டத்தையும் அநுராதபுரத்தையும் இணைக்கும் ஆற்று வழிப்பாதையாகக் காணப்பட்ட அருவியாற்றின் இருமருங்கிலும் புராதன குடியிருப்புக்கள் இருந்ததை இவ்விடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் இனங்காட்டுகின்றன.

மேலும், தொல்லியல் மேலாய்வின் ஆதாரமிக்க குறிப்புகளில் முன்னொரு காலத்தில் செறிவான குடியிருப்புக்களைக் கொண்டிருந்த கட்டுக்கரை குளத்தின் வட எல்லை பிரதேசம் தற்காலத்தில் அடர்ந்த காடுகளாகவும் கொடிய விலங்குகள் வாழும் இடமாகவும் காணப்படுகின்றது. ஆயினும், இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்வில் ஏறத்தாழ இரண்டு கிலோ மீற்றர் வட்டத்தில் பல்வேறு காலகட்டத்திற்குரிய பல தரப்பட்ட சான்றாதாரங்களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இன்று வட இலங்கையில் உள்ள குளங்களில் ஒன்றாகக் கருதப்படும் கட்டுக்கரைக் குளத்தின் ஆரம்பத் தோற்றம் இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குடியிருப்புகளுக்குக் காரணமாக அமைகின்றது என ஆய்வாளர்கள் கூறு கின்றனர்.

தொல்லியல் ஆர்வலர் குணரட்னம், "அக்கராயனில் மேற்கொண்ட ஆய்வின் போது முத்திரை நாணயங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உதவிக்கல்விப் பணிப்பாளர்
செல்வம்

பிராமிய எழுத்தும் பொறித்த நாணயங்களும் பிற்கால சோழ, பாண்டிய நாணயங்களையும் கண்டுபிடித்ததாக வரலாறு உண்டு. அவற்றுள் பிராமி எழுத்துப் பொறித்த நாணயம் ஒன்றில் தமிழில் நாகம் என்ற பெயர் குறிப்பிடப் பட்டிருக்கும் தகவல் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. இவ்வாதாரங்கள் இந்நாணயங்கள் புழக்கத்திற்கு வந்த காலத்தில் வன்னிப் பிராந்தியம் இந்தியாவுடனும், தென்னிந்தியாவுடனும், இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடனும் வர்த்தகத் தொடர்புகளுடன் இருந்ததைக் காணமுடிகின்றது" என்கின்றார்.

"கட்டுக்கரை தொல்லியல் மேலாய்வின் மூலம் இலங்கையில் வரலாறு, கலை, பண்பாடு, பழக்கவழக்கம் போன்ற பல்வேறு சான்றாதாரங்களையும், உண்மைத் தன்மையையும் நன்கு விளங் கிக்கொள்ள முடியும்" என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தொல்லியல்துறைப் பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் உறுதியாகக் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுக்கரைகுளத்தின் சிறப்பு, முக்கியத்துவம், கட்டுக்கரை தொல்லியல் மேலாய்வு அகழ்வாராய்ச்சி பற்றி, வட்டக்கண்டல் பிரதேசவாசியும், இப்பிரதேசத்தில் ஏறத்தாழ 40 வருடங்கள் வசிக்கின்றவருமான மடுவலய உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வம், "கட்டுக்கரைக்குளமானது முன்னைய காலங்களில் அடர்ந்த காட்டுப் பகுதியாகக் காணப்பட்டது. இப்பிரதேசம் தற்காலத்தில் அதிக குடியிருப்புக்களையும், மக்களையும் கொண்டுள்ளது. கட்டுக்கரைக் குளம் ஆரம்பிக்கப்பட்டு, குளம், கால்வாய், அணைக்கட்டு என்பவற்றை அமைப்பதில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியால் தற்பொழுது விசாலமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இக்குளம் மன்னாரில் விவசாயம் மேற்கொள்ளும் மக்களின் பிரதான ஜீவனோபாய மூலங்களில் ஒன்றாக விளங்குகிறது. ஏனெனில், சிறுபோக, பெரும்போகப் பயிர்ச் செய்கைக்கு இக்குளத்திலிருந்தே நீர் கிடைக்கப் பெறுகின்றது". எனக் கூறுகின்றார்.


•



த.சஞ்சீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வீட்டின் காவலாளியோ..?

## மனப்பகிர்வு

மூன்று பிள்ளைகளை பெற்ற போதிலும் முதுகுவலிக்கு எண்ணை தேய்க்கக் கூட என்னருகில் ஒரு பிள்ளை இல்லை. எனக்கு நல்ல நாள் பெருநாளும் தனிமையிலேயே போகுது. சிரித்துப்பேசி நாட்கள் பல அல்ல காலங்கள் கழிந்ததுவோ. நல்லவேளை தொலைக்காட்சியும் தொலைபேசியும் கண்டுபிடித்தார்கள்.

கடவுளே தொலைக்காட்சி, தொலைபேசி கண்டுபிடித்தவர் நல்லா இருக்கட்டும். இவர்கள் என் வாய்ப் பேச்சுக்காரர்கள். என் இதழில் பிறக்கும் ஒவ்வொரு சிரிப்புக்கும் சொந்தக்காரர்கள் இவர்களே. காலை எழுந்தவுடன் நானும் போனைத் தட்டுகிறேன் என் மகனோ மகளோ அழைக்கிறார் என்று. அடுத்த கணமே ரிமோட்டை தேடுகின்றேன், பேச்சுத்துணைக்கு. இருவரும் என் தலையணைச் சகோதரர்கள். ஊரான் பெருமைக்கு என் வீடு வெறுமையானது. இன்று மூன்று பிள்ளைகளும் முட்டிமோதி சுற்றித்திரிந்த முற்றம் எங்கே? மறந்துவிட்டேன். மகளின் திருமணத்திற்காக மாபிள் பதித்து விட்டேன். கட்டை வேலிகள் எல்லாம் கல்வேலியானதோ?. அய்யோ என்றதும் எட்டிப் பார்க்கும் பக்கத்து வீட்டானும், இனி ஆளே முடிந்தாலும் வந்து சேர அரை நாள் ஆகும் போல.

நான் பெற்ற பிள்ளைகள் என்னைப் பிரிந்து இருக்கமாட்டார்கள் என்று அரைநொடி கூட அடுத்தவன் வீட்டில் இருந்ததில்லை. இன்று நீங்கள் அடுத்தவன் நாட்டிற்குச் சென்று காலங்கள் பல கழிந்ததுவோ. மூன்று பிள்ளைகளும் சுற்றித் திரிந்த வீடு, இன்று ஆளற்றுக் கிடக்கின்றது. என் பிள்ளைகளின் வெளிநாட்டுப் பயணத்தில் வீடு வாசல் மட்டுமில்ல என் மனமும் மாறிவிட்டது. தினமும் என் கால்கள் கோயிலைத் தேடுகின்றன. பாவம் ஐயருக்கே பழகிவிட்டது. தானாக அர்ச்சனை செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றும் மனு முன்வைக்க கோயிலில் எவருமில்லை. என்னையும் இறைவனையும் தூண்களையும் தவிர அது உண்மைதான்.

ஐயோ! இன்றும் அடுப்பில் பூனை படுத்துவிட்டது கவலை வேண்டாம் துடைத்து விடலாம். அந்தகால மண்ணடுப்பு அல்லவே. பாதி நாள் பார்சல் சோறு, மீதி நாள் பலகாரம் தேனீர், ஒரு ஆளுக்கு என்ன சமையல் இப்படி இருக்கையில் பூனை என்ன புற்றும் எழும்பக் கூடும். தினமும் தெருவோரப் பார்வை, தெரிந்தவர் போகிறார் என்று தெரிந்தவரை கண்டதும் கண் கலங்குகிறது. எனக்குக் காரணம் தெரியவில்லை, உங்களுக்குத் தெரிகிறதா? கௌரவம் என்னும் பெயரில் வீட்டை சுற்றிக் கட்டடம் கட்டி அதில் என்னை காவலாளி ஆக்கிவிட்டார்கள்.

வெளிநாட்டிலிருந்து இது கூடச் செய்ய வில்லை என்றால் என்ன? தலைவலி என அழைப்பைத் தொடர்ந்து அரை நாட்களின் பின் சொந்தக்காரன் வருகின்றான். சுகம் விசாரிக்க அல்ல சொத்து விசாரிக்க. 'அடியே பவளம் உன்ர மகன் எப்படி இருக்கிறான்? காசு அனுப்புறானே, நல்லாதான் இருக்கு வீடு'.

அன்று சமைத்து முடித்து பாடசாலை சென்ற என் பிள்ளைகளுக்காகக் காத்திருப்பேன். இன்றும் அதேபோன்று வர முடியாது என அறிந்தும், ஒரு நப்பாசையில். அன்றொரு நாள் பயங்கர சொப்பனத்தில் உன்னைக் கண்டேன். என் மனம் பதைபதைக்கத் தொடங்கியது உனக்கு அழைப்பு எடுத்தேன். பாவம் உனக்கு வேலை போல. என் கண்களே கலங்கின.

அன்று விடியற்காலை என் தூக்கம் விடியலை மறந்தது. முணுமுணுப்புடன் கூடிய அழுகை. பதற்றத்துடன் அழுகுரல் நோக்கி நகர்ந்தேன். அன்றி, 'நான் பேசிவிட்டேன் என்ற கோபத்தில் பிள்ளைகள் என்னுடன் பேசி நான்கு நாட்கள் ஆகின்றன.' கண்களில் கண்ணீர் வழிந்தது. சில நாட்கள் பழகிய எனக்கே இவ்வாறிருக்கையில், தொலைபேசிக்கு மட்டும்

மனம் இருந்திருந்தால் மறுபிறவி எடுத்து இருக்கும் போல மகனாக. அவர் உணவைவிட மருந்துகளை சரியாக எடுக்கின்றார். உங்கள் வெளிநாட்டு பயணத்திற்கு செயலாய் நின்றவர் இன்று உங்கள் செயலால் செயலற்று நிற்கிறார். நீங்கள் அவர்களைத் தூக்கி பறிக்க வேண்டியதில்லை. தினமும் ஒரு முறை தொலைபேசியில் கதைக்கலாமே. அதுதானே அவர்கள் சந்தோசம்...!

•



இ.அனுஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போதையால்
## மாறும் பாதை..!
# தடுக்கத் திருவுளம் கொள்வோம்..!

**போ**தைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் அதனுடன் தொடர்பான ஏராளமான பிரச்சினைகளுக்கு இலங்கை முகங்கொடுத்து வருகிறது. எம் மக்களின் மத்தியிலே நல்லவற்றை விடத் தீய விடயங்களால் அதிகம் ஈர்க்கப்படுகின்ற எழுதப்படாத ஒரு விதிமுறை காணப்படுகின்றது. அதாவது, நல்ல மாற்றங்களை விடவும் தீய மாற்றங்களையே மக்கள் அதிகம் விரும்புகின்றனர். இலங்கையில் முதல் முதலாகத் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாசப் பயணிகளின் வருகை போன்ற காரணிகள் நவீன போதைப்பொருட்கள் நாட்டினுள் பிரவேசிக்க வழிவகுத்தன. எம் நாட்டில் போதைப்பொருள் பாவனையாளர்கள் 1920களிலேயே முதலில் அடையாளங் காணப்பட்டிருந்ததாக அறிக்கைகள் குறிப்பிடு கின்றன. 1980களில் போதைப்பொருள் பாவனையை ஒரு வளர்ந்துவரும் பிரச்சினையாக இலங்கை அரசு முகங்கொடுக்க ஆரம்பித்தது.

> **"மது மற்றும் போதைப்பொருள் பாவனையால் மூளைக்கு உண்டாகும் தாக்கத்தினால் ஏற்படும் பிரதிபலிப்பாக, கதைக்கும்போது தடுமாற்றம் ஏற்படல், பார்வைக்கோளாறு, தவறான தீர்மானம், அதிக கோபம் போன்ற உளநலச் சிக்கல்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன."**

தற்காலத்தில் பள்ளி மாணவர்கள் முதல் இளைஞர்கள் வரை மது, புகையிலை, சிகரெட், கஞ்சா போன்றவற்றுக்கு அடிமையாகி, தமது எதிர்கால வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி வருகின்றனர். எமது நாட்டினைப் பொறுத்த வரைக்கும் குச்சொழுங்கையில் இருந்து முச்சந்தி வரை போதைப் பொருட்களுக்காகவே ஒரு பகுதியினர் கூடிக்கலைகின்றனர்.

இன்றைய சமுதாயம், எம்முடைய மூத் தோரினுடைய பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் அனைத்தையும் தொலைத்து விட்டு, எங் கிருந்தோ வருகின்ற அநாகரீகங்களைப் பின் பற்றி நாகரீக வளர்ச்சி என்ற பெயரிலே போதைப் பொருள் பாவனையினால் அவர்தம் வாழ்வை அபாயகரமாக்கிக் கொண்டு செல்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதைப்பொருட்களின் பாவனை உச்சி முதல் உள்ளங்கால் வரை உடலின் அநேக பகுதிகளைப் பாதிப்பிற்கு உள்ளாக்குகின்றது என்பதை இவர்களில் பலரும் உணர்வதில்லை. இதன் பயன்பாட்டினால் ஈரல் நிரந்தரமாகப் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், உடலின் புரதத்தொகுப்பு, நஞ்சகற்றல் தொழிற்பாடு என்பன பாதிக்கப்படுவதோடு, சிறுநீரக நோய், குடற் புண்கள், இரத்தவாந்தி, புற்றுநோய், தசையழற்சி எனப் பல கொடிய நோய்களின் தாக்கத்திற்கும் உள்ளாகும் நிலை ஏற்படுகின்றது.

மேலும், மலட்டுத்தன்மை போன்ற பாலியல் ரீதியான பிரச்சினைகளும் இதனால் உருவாகுகின்றன. இது மட்டுமன்றி உளச்சோர்வு, நித்திரையின்மை, மனவழுத்தம், குடும்ப வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், பொருளாதாரப் பின்னடைவு, வீதி விபத்துக்கள், குடும்ப உறவுகள் அநாதரவாகும் நிலை போன்றனவும் போதைப்பொருட்களின் பாவனையினால் உண்டாகும் துன்பியல்புகளாகும்.

> "ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனி நபரைத் திட்டமிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஓர் ஆயுதந்தான் போதைப் பொருள்."

ஒருவர் மதுப்பழக்கத்தைக் கொண்டிராவிட்டால் அவரை ஏளனமாகப் பார்ப்பதும், ஒதுக்குவதும் தாழ்த்திப்பேசிக் கிண்டல் செய்யும் நிலையும் அண்மைக்காலத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல், பிறந்தநாள் மற்றும் விசேட மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளிலும் மரணச்சடங்கு உள்ளிட்ட துக்கச் சம்பவங்களின்போதும் மதுவைப் பயன்படுத்துதல் ஒரு பாரம்பரியமாக மாறி வருகின்றது. இது மிகவும் வேதனைக்கு உரிய விடயமாகும்.

ஆண்களும் பெண்களும் என இரு பாலினரும் போதைப் பொருளுக்கு அடியாகி வருகின்றனர். ஓடியாடி இளமைப் பருவத்தினைக் கழிக்க வேண்டிய இன்றைய இளம் சமுதாயம் இப்போதையின் பாவனையால் மூலையில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு, இதற்கு அடிமையான சிலர் பணம் இல்லாத நிலையிலே களவு, கொலை, வழிப்பறி போன்ற செயல்களில் ஈடுபடுகின்றமையும் கவலைக்கிடமான ஒன்றாகும்.

மேலும், போதைப்பொருள் பாவனையினால் குடும்பத்தில் சண்டை மற்றும் அயலவரோடு சண்டை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றனவும் நடைபெறுகின்றன. உதாரணமாக, புங்குடுதீவு மாணவி வன்கொடுமைக்கு ஆளாகி கொலை செய்யப்பட்ட துர்ப்பாக்கியச் சம்பவத்தில் குற்றவாளிகளின் போதைப்பொருள் பாவனையும் ஒரு முக்கிய காரணமென விசாரணையில் கண்டறியப்பட்டது. மேலும், பல பெண்களும் சிறுமிகளும் இதேபோன்ற போதைவஸ்துக்கு அடிமையானவர்களால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவங்கள் நாடளாவிய ரீதியிலும் நிகழ்ந்துள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989 ஆண்டில் இருந்து ஆனி மாதம் 26 ஆம் திகதியை சர்வதேசப் போதைப்பொருள் ஒழிப்புத் தினமாக ஐ.நா பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கை அரசும் குறிப்பிட்ட வாரத்தைப் போதைப்பொருள் ஒழிப்பு வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை அரசாங்கம் இப்போதைப் பொருட்பாவனையினைக் கட்டுப்படுத்தும் முகமாகப் பல்வேறு சட்டதிட்டங்களை உருவாக்கி வருகின்ற போதிலும் அவை பெரியளவில் வெற்றியளிக்க வில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

போதைப்பொருள் பாவைனையிலே மேல் மாகாணம் முதலிடத்தில் இருந்து வருகின் றது. அண்மைக்காலங்களில் வடக்கு மாகாணத்திலும் இப்போதைப்பொருள் பாவனையா னது அதிகரித்துக் காணப்படுகின்றது எனவும், இப்பாவனையாளர்களில் 50 சதவீதமான வர்கள் திருமணமாகாத இளைஞர்கள் எனவும், அதில் 69 சதவீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் சுகாதார அமைச்சின் அண்மைய அறிக்கை கூறுகின்றது. போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான பல மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடை விலகுகிறார்கள் எனவும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

"மது மற்றும் போதைப்பொருள் பாவனையால் மூளைக்கு உண்டாகும் தாக்கத்தினால் ஏற்படும் பிரதிபலிப்பாக, கதைக்கும்போது தடுமாற்றம் ஏற்படல், பார்வைக்கோளாறு, தவறான தீர்மானம், அதிக கோபம் போன்ற உளநலச் சிக்கல்கள் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன. கர்ப்பிணிகள் மதுபானம் அருந்துவதால் பிறக்கும் குழந்தைகள் விகாரமடைந்து அங்கவீன மடையும் நிலையும் ஏற்படுகின்றது" எனப் புதுக்குடியிருப்புப் பொது வைத்தியசாலை வைத்தியரான பிரியதர்சினி சாந்தகுமார் குறிப்பிடுகிறார்.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தச் சட்டங்களைக் கடுமையாக நடைமுறைப் படுத்துவதுடன் மேலும், புதிய சட்டங்களை உருவாக்கி அவற்றினைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தல் அவசியம். தேசிய வேலைத்திட்டத்தினை உருவாக்கி கிராமந்தோறும் அதனை அமுல்படுத்த வேண்டும். இவ்வாறான செயற்திட்டங்கள் மூலமே போதைப்பொரு ளுக்கு அடிமையான எமது சமூகத்தினை அதில் இருந்து விடுவிக்க முடியும்.

1984ஆம் ஆண்டிலிருந்து தேசிய ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டுவாரியம் இலங்கையிலிருந்து போதைப்பொருள் பாவனையை ஒழிக்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. இது, போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது மாத்திரமல்லாமல் போதைப்பொருள் பாவனையில் இருந்து நபர்களை மீட்டு மறுவாழ்வளிக்கும் செயற் பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஒரு தேசத்தை அல்லது ஒரு சமுதாயத்தை அல்லது ஒரு தனி நபரைத் திட்டமிட்டு நசுக்கிவிட ஏவப்படுகின்ற ஓர் ஆயுதந்தான் போதைப் பொருள். தினமும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் நடந்துகொண்டுதான் இருக் கின்றன. வெவ்வேறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் கடத்தல்கள் நடைபெறுகின்றன.

போதைக்கு அடிமையானவர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கி, மறுவாழ்வு அளிக்கவேண்டும். போதைப் பொருள் விற்பனையைத் தடை செய்தால் மட்டுமே இவ்வாறான அடிமைத்தனங்களைத் தடுக்க முடியும். எவ்வாறாயினும், மனித மனங்களில் சீர்திருத்தங்களையும் நல்ல எண்ணங்களையும் உருவாக்குவதே இதற்கு ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாக அமையும். •



உ. நிந்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் மாறி வருகிறதா? தங்குநிலை அகலும் அதிசயம்!



மலையகம் என்றதும் வறுமையும், புழுதி படிந்த வீதிகளும், லயன் தொடர் குடியிருப்புகளும், மலைகளும் மட்டுமே என்று நினைத்து விடும் பலருக்கு மலையகத்தின் இன்றைய நிலை பற்றி எவ்வளவு தூரம் தெரியும்? பச்சைக் கம்பளம் விரித்தாடும் பசுமையைப் போலவே மக்களின் நிலையும் பல்வேறு நிலைகளில் மாற்றம் பெற்றுள்ளது.

பல்வேறுபட்ட அரசியல் ரீதியிலான நெருக்கடிக்குள் இருந்து, இன்றைய நிலையை மலையகம் எய்தப் பெற்றுள்ளது. கற்குகைகளையும், மலைகளையும் குடைந்து வடிவமைக்கப்பட்ட அழகிய பாதைகள் எல்லாம் புகைப்படங்களில் மட்டுமல்ல நேரிலும் தரமானவையாகவே உள்ளன. தற்போதைய நிலையில் பாதைகளை மக்கள் தங்களது சொந்த செலவில் வீட்டின் வாசல் வரை தமக்குத் தேவையானளவு அமைத்துக் கொள்கின்றனர்.

இது மட்டுமா? ஆரம்ப காலத்தைப் போன்று எல்லாத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு அரச பேருந்தை எதிர்பார்த்து நிற்கும் மக்கள் தற்போது பெருமளவில் இல்லை என்றே கூறலாம். ஒவ்வொருவரும் தம் தனிப்பட்ட தேவைகளுக்காகத் துவிச்சக்கரவண்டி, முச்சக்கரவண்டி போன்றவற்றைச் சொந்தமாகவே வாங்கி உபயோகப்படுத்தும் போக்கும் காணப்படுகிறது.

இன்றைய மலையகத்தை படிக்காத சமூகம் என்று கூறி விட முடியாது. கிணற்றுத் தவளைகளாய் வாழ்ந்த மலையக மக்கள் தற்போது நடைமுறையறிந்து பயணிக் கின்றனர். பெரும்பாலான மக்கள் கல்வியறிவு கொண்டவர்களாக இருக்கிறார்கள். பாலர் வகுப்புக்களும், நூலகங்களும், வாசகர்சாலைகளும் அதிகளவாகத் தோற்றம் பெற்றமை கல்வியறிவில் ஏற்பட்ட மிகப் பெரும் மாற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், அரச உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள், பொறியியலாளர்கள் எனப் பல்வேறு துறை சார்ந்து நிபுணத்துவம் பெற்றவர்களாகவும், சாதாரணதரத்தையும் உயர்தரத்தினையும் பெரும் சவால்களுக்கு மத்தியில் கடந்து ஆசிரியர் கலாசாலைகளுக்கும் பல்கலைக்கழகங்களுக்கும் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உள்வாங்கப்படுவது பலர் அறியாத விடயந்தான்.

ஆரம்பகாலத்தைப் போன்று கற்றலுக்கு வறுமையையும், பொருளாதாரத்தையும், பிரச்சினையாகக் கருதாமல் தற்காலத்தில் கல்வி கற்றுக் கொண்டே தொழில் செய்து வரும் இளைஞர்கள் பலர் இன்றும் உளர்.

பாடசாலைக் கல்விக் காலத்தில் தங்களுடைய படிப்புச் செலவுக்காகப் பெற்றோரின் உழைப்பில் வரும் பணத்திற்காகக் காத்திருப்பதைப் போல இப்போது பல்கலைக்கழத்தில் கற்கும் பெரும்பாலான மலையக மாணவர்கள் காத்திருப்பதில்லை. தாங்கள் சுயமாகவே ஒரு தொழிலுக்குச் சென்று கல்வியைக் கற்றுப் பட்டதாரிக் கனவை நிறைவு செய்து கொள்ளும் மாணவர்கள் இன்றும் இருக்கவே செய்கிறார்கள்.


ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகங்களில் உதவி விரிவுரையாளர்களாக பல மலையக மாணவர்களும் தெரிவு செய்யப்படுகின்றனர் என்பது எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?

இவ்வருடம் கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வெவ்வேறு துறைகளில் எட்டு மாணவர்கள் தங்களைக் கல்வியில் முன்நிறுத்தி, உதவி விரிவுரையாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டமையை இதற்கு ஒரு சான்றாகக் கூறலாம்.

கல்வித்துறையில் மட்டுமல்ல கல்வியைத் தொடர்ந்து பட்டப்படிப்பை நிறைவு செய்ய முடியாத மாணவர்கள் குடும்ப வறுமை, பொருளாதாரம் என்று வெளிநாடுகளுக்கோ அல்லது கொழும்பு, கம்பஹா, களுத்துறைப் போன்ற பெருநகரங்களுக்கோ வேலைக்குச் சென்று இரவு பகலாக உழைக்கும் பணத்தைச் சேகரித்து லயன் வீடுகளை மாற்றித் தனித்தனி வீடுகளில் வாழும் நிலையும் காணப்படுகிறது.

இவை மட்டுமல்ல, தொழிநுட்பம்சார் அறிவியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. தொலைபேசி, இணையம் என்பதையெல்லாம் பயன்படுத்தாத மக்கள் இன்று வெளிநாடுகளில் உள்ள பிள்ளைகளுக்கும், தம் உறவுகளுக்கும் சமூக ஊடகங்கள் ஊடாக அழைப்பை ஏற்படுத்தி முகம் பார்த்துப் பேசிக்கொள்ளும் அளவிற்கு மலையகத்தின் இன்றைய நிலை வெகுவாக மாற்றமடைந்துள்ளது.

இவை மட்டுமா? கலாசாரமும் கட்டுப்பாடுகளும் வெகுவாகக் கடைபிடிக்கப்பட்ட மலையகத்தில் பெண்களுக்கும், ஆண்களுக்கும் வெளி உலகம் என்பது தெரியாமலே இருந்தது. எப்போதேனும் வெளியில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றால் பெரிய ஆடையகங்களையும், கடைகளையும் மிக வியப்பாகப் பார்க்கும் மலையக மக்கள் இன்று இல்லை என்றே கூறலாம். காரணம், இன்று மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் மக்களின் உபயோகத்திற்கான அனைத்து வசதிகளும் காணப்படுவதும், பலருக்கு இணையத்தளங்களினூடாகப் பொருட்களைக் கொள்வனவு செய்துகொள்ளும் முறையும் தெரிந்திருக்கிறது. மலையகத்தைப் பொறுத்தவரையில் இது மிகப்பெரிய ஓர் மாற்றமாகும்.

அதற்காக, மலையக மக்கள் எல்லோரும் வசதியாக வாழ்கிறார்கள் என்று சொல்லவும் முடியாது. இன்னமும் ஆயிரம் ரூபா சம்பளத்திற்காகக் காத்திருக்கும் பெருமளவு மக்களும் இருக்கவே செய்கிறார்கள். காலங்காலமாகத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்பவர்களின் நாளொன்றிற்கான அடிப்படைச் சம்பளம் ஆயிரம் ரூபா கோரிக்கை இன்னமும் எட்டாக் கனியாகவே இருக்கிறது. எனினும், வெறுமனே தேயிலையைத் தோட்டங்களை மட்டுமே நம்பி வாழ்பவர்களை விடவும் பண்ணைத்தொழில், விவசாயம், கைத்தொழில், வாகனச்சாரதி போன்ற பல்வேறு தொழில் செய்பவர்களும் மலையகத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிய வேண்டும்.

கிடைக்கும் சம்பளத்தினைக் கொண்டு பிள்ளைகளை உயர்தரம்வரை படிக்க வைப்பதற்கு முடியாது என்று அறிந்து கொண்ட மலையகச் சமூகம் 1990களிற்கு பிறகு தேயிலைத் தோட்டங்களுக்கு வேலைக்குச் செல்வதைக்காட்டிலும் பெருநகரங்களுக்கும் கிழக்காசிய நாடுகளுக்கும் தொழிலுக்காகச் செல்கின்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடரும்போது பிற்காலத்தில் மலையகத்தின் அடையாளமாகத் தேயிலை இருக்குமா என்பதுவும் கேள்விக் குறியே! இன்னும் இருபது வருடங்களுக்குப் பிறகு மலையகம் என்றதும் மலையும் மலைச்சார்ந்த இடமும் மட்டுமே என்ற நிலை வந்தால் கூட சந்தேகமில்லை என்னுமளவிற்கு மக்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன.

மலையகத்தின் இன்றைய நிலை பற்றி கண்டி, மாவட்டத்தில் கலாபோக்க தோட்டத்தில் வசிக்கும் முன்னாள் தோட்டத் தலைவரும், தற்போதைய பன்விலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ். சிவலிங்கம், "ஆரம்பகாலத்தில் கலாபோக்க பிரதேசத்திற்கு பாதை வசதிகள் இன்றி காணப்பட்டது. ஆனால், தற்போது கலாபோக்க பிரதேசத்தில் மட்டுமல்லாது, சுற்றியுள்ள கலகிரிய, நெல்லிமலை, மேமலை, சோளாங்கந்த, நடுக்கணக்கு, ரெலுகஸ், டீமலை போன்ற பிரதேசங்களுக்கும் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளது" எனக் கூறுகிறார்.

மேலும், ஆரம்பகாலத்தை விட தற்போதைய மக்களின் வாழ்வியல் மற்றும் தனிப்பட்ட விடயங்களிலும் மாற்றங்கள் இடம்பெற்றுள்ளதுடன், தேயிலை மட்டுமே வாழ்வாதாரமாகக் கருதப்படாமல் ஆடைத் தொழில், விவசாயம், அதிகமாக கால்நடை வளர்ப்பும் இடம்பெறுகின்றன. பல இளைஞர், யுவதிகள் கிழக்காசிய நாடுகளுக்கும், பெருநகரங்களுக்கும் வேலைவாய்ப்புக்களுக்காகச் சென்று தனக்கெனத் தனித்துவமான வீடுகளையும், சொந்தமான வாகனங்களையும் கொள்வனவு செய்து கொள்கிறார்கள். ஆரம்பகாலத்தை விடவும் தற்காலத்தில் பல்வேறு நிலைகளிலும் மலையகத்தில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும்" அவர் மேலும் கூறுகிறார்.

**துணிந்து செல்பவர்களுக்கு தடைக் கற்களும் படிக் கற்களாகும்!**

•



பா.கனகேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் வாழ்வில் விருந்தோம்பல்

விருந்தோம்பல் தமிழரின் தலைசிறந்த பண்பாகும். வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று இருக்கச் செய்து, உணவளித்து அன்பு பாராட்டப் படுவது விருந்தோம்பலாகும். விருந்து என் பதற்கு பல பொருள்கள் வழங்கப்படுகின் றன. விருந்து என்பது புதுமை எனவும் மிகச் சிறந்த மிக விலையுயர்ந்த சிறப்பு எனவும் பொருள் சுட்டப்படுகின்றது.

விருந்தினர்கள் என்போர் எமக்கு மிக நெருங்கிய உறவினர்கள் அல்லது மிகவும் வேண்டிய நண்பர்கள் என்றும் வழங்குவர். "மிகவும் எளிய உணவாயினும் அன்போடு புதியவர் எவர் வரினும் அவர்களுக்கு வேண்டியன செய்து உணவிட்டுப் பேணு வதே விருந்து" எனக் கூறப்படுகின்றது. பண்டைக்கால சமுதாயப் பழக்கவழக்கங்க ளிலே விருந்தோம்பல் மிக உயர்ந்த அறமாகத் திகழ்ந்தது.

மனித வாழ்வின் மிக அத்தியாவசிய தேவைகள் உணவு, உடை, உறையுள் என்பனவாகும். இவற்றிலே உணவு முதன்மையானது. இவ்வுலகில் மிகக் கொடுமையான விடயங்களில் ஒன்றாகப் பசி காணப்படுகின்றது. அதனைக் களைவ தற்கே விருந்தோம்பல் தோற்றுவிக்கப் பட்டது. விருந்தோம்பல் என்பதற்கு இணையான ஆங்கிலச்சொல் Hospitality என்பதாகும். விருந்தோம்பல் என்பதற்குக் கழகத் தழிழகராதி 'புதிதாய் வருபவரை உண்டி முதலியவற்றால் உபசரிக்கை நடத்துவது' எனச் சுட்டுகிறது.

### இலக்கியங்களில் விருந்தோம்பல்

விருந்தோம்பல் பண்பாடானதுமனிதன் தோன்றிய நாள் முதலே ஆரம்பித்து விட்டதை நாம் அறிய முடிகின்றது. இதற்குக் காலங்காலமாக எழுந்த வரலாற்று மூல மாகிய இலக்கியங்கள் மற்றும் தொல் பொருள்கள் என்பன சான்றாகின்றன. விருந் தினரைப் பேணிக்காத்தலே விருந்தோம்பல் எனப்படும். பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கமாகும். இல்லத்தினிற்கு அன்புடைய கணவனும் மனைவியும் விருந்தோம் பலைச் செய்ய வேண்டுமாதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தாரே விருந்தோம்புவதற்குச் சிறப்புடையவர் ஆவார். இவ்வகையில் விருந்தோம்பாத வாழ்வு பயனற்ற வாழ் வாகும்.

'இந்திரர் அமிழ்தம் இயைவது ஆயி னும் தமிழர் உண்டலும் இலர்' என்பது புற நானூறு தரும் செய்தியாகும். எனவே, விருந்தினருக்கு உணவளிக்காது தான் மட் டும் உண்பது சாதலின் இன்னாதது எனப் படுகின்றது. விருந்தோம்பும் பண்பினை ஒருவன் நாள்தோறும் விரும்புவானாயின் அவன் வாழ்வு செழிக்கும். பொருள் ஊற்று நீர் போல் மென்மேலும் பெருகும். வேதம் ஓதுதல், ஓமம் வளர்த்தல், விருந்தோம்பல், தர்ப்பணம் செய்தல், பலியிடல் ஆகிய ஐந்து வேள்விகளிலும் விருந்தோம்பல் எனும் வேள்வியின் பயன் மேன்மையுடை யதாகக் காணப்படுகின்றது. விருந்தோம்பி வாழ்வானின் நிலம் வித்தின்றியும் விளை யும். விருந்தோம்புவாரது பொருள் பெருகு வதால் அவர்களது வாழ்க்கை பாழ்படுவது இல்லை என்கின்றார் வள்ளுவர். இதனை,

**'வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை**
**பருவந்து பாழ்படுதல் இன்று' எனவும்,**
**'செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு' எனவும்,**

வரும் குறட்பாக்கள் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினையும் அதன் சிறப்பி னையும் விளக்கி நிற்கின்றன. தமிழர்க ளின் தலைசிறந்த பண்பாட்டில் விருந் தோம்பலும் ஒன்றாகும். தம்மிடம் இருப்பது மிக எளிய உணவாக இருப்பினும் இன் முகத்தோடு தெரிந்தவர்களுக்கும் முன்பின் அறிந்திராத ஒருவருக்கும் பகிர்ந்துண்ணும் பண்பு இன்றும் மக்களிடையே காணப்படு கின்றது. இல்லற நிலையிலே பெண்கள் தமது இல்லத்திற்கு வருவோரை இன் முகத்துடன் வரவேற்று இனிய அமுதினைப் படைத்ததை இலக்கியம் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்வாறு சிறந்த விருந்தோம்பலைப் புரிந்த வர்களுள் காரைக்காலம்மையார், இளை யான்குடிமாற நாயனார் குறிப்பிடத்தக்கவர். இத்தகைய விருந்தோம்பல் சிந்தனை யையும் விருந்தோம்பலில் சிறந்து விளங்கி யோர் பற்றிய குறிப்புகளையும் பல இலக்கி யங்கள் மூலமாக அறிய முடிகின்றது. இவ் வகையில் இலக்கியம் மனிதனைப் பண் பாட்டின் உச்ச நிலைக்குக் கொண்டு செல் லும் சாதனமாகும். மக்களால் பின்பற்றப் படும் பழக்கவழக்கமும் நம்பிக்கையும் மாற்றியமைக்கப்பட்டாலும் அதனுள் காணப்படும் மரபுசார் பண்பாடுகள் இன்றள வும் காணப்படுகின்றன. இவ் இலக்கியங் கள் பண்பாட்டம்சத்தையும் பழக்கவழக்கங் களையும் எடுத்துரைக்கின்றன.

'விருந்தே புதுமை' என்று தொல்காப் பியர் கூறியுள்ளார். எனவே, புதியவர்களை வரவேற்று உணவிட்டு மகிழ்வதே விருந்து என கொள்ளப்பட்டமை புலனாகும். மேலும், விருந்தோம்பல் பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று என்பதை தொல் காப்பியம்,

**'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்' (தொல்3:150)**

என்ற அடிகளால் விளக்கி நிற்கின்றது. இதில் விருந்தோம்பலையும், சுற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்புதலையும் அறமாகக் கொண்டு தலைவி திகழ்ந்தாள் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழர் பண்பாட்டை கூறவந்த அறிஞர்கள் பலரும் படைப்புக்காலம் தொட்டு மேம்பட்டு வந்த விருந்தோம்பல் தமிழர்களின் தனிப்பண்பாக இருந்தமையைக் குறிப்பிடுகின்றனர்.

திருக்குறளில் திருவள்ளுவர் இல்லறவியலிலேயே விருந்தோம்பல் என்ற அதிகாரத்தை ஓர் தனி அலகாகப் படைத்துள்ளார். இல்லறம் புரிவதே விருந்தோம்பல் செய்யும் பொருட்டே ஆகும் என்றும் நாள்தோறும் விருந்து வழங்குபவன் வாழ்வில் துன்பம் வராது என்றும் அவன் இல்லத்தில் பொருள் குறைவு ஏற்படாததுடன் செல்வம் நிறையும் எனவும் கூறுகின்றார்.

விருந்தினராக வந்தவர் வெளியே சென்று இருக்க, தான் மட்டும் உண்ணுதல் சாவா மருந்தாகிய அமிழ்தமே என்றாலும் விரும்பத்தக்கது அன்று என்பதை வள்ளுவர்,

'விருந்து புறத்ததார் தான் உண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று'

என்ற குறட்பாவால் விளக்கி உள்ளார். சிலப்பதிகாரமும் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுகின்றது. இவ்வகையிலே தலைவனை பிரிந்து வாழும் குடும்பத்தலைவி விருந்துபசாரத்தை மேற்கொள்ள முடியவில்லை என்பதை,

**'அறவோர்க்களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்த்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர்க் கோடலும் இழந்த என்னை'**

**(சிலப்பதிகாரம்16:71-75)**

என்று கண்ணகி வருத்தத்துடன் கூறுவதால் அறியலாம். இங்கு தொல்லோர் சிறப்பின் என்று இளங்கோவடிகள் குறித்துள்ளதால் விருந்து பேணல் ஆனது பழந்தமிழர் மரபு எனவும் புலப்படுகின்றது.

**விருந்தோம்பலின் இன்றைய நிலை**

விருந்தோம்பல் என்பது பழந்தமிழரின் பண்பாட்டு முறை என்பதும் தொன்று தொட்டு பாதுகாக்கப்பட்டு வந்ததையும் அண்மைக்காலம் வரை கண்ணாரக் காண முடிந்தது. ஆனால், கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையிலிருந்து தனிக்குடித்தன வாழ்க்கை முறைக்கு இத்தலை முறையினர் எப்பொழுது மாறத் தொடங்கினார்களோ அன்றே விருந்தோம்பும் தமிழ்ப் பண்பும் அருகிப் போய்விட்டதனை காண முடிகின்றது.

இன்று திண்ணை வைத்து வீடு கட்டுவதும் புதியவரை ஏற்பதும் வழக்கில் இல்லை. மிக நெருங்கிய உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் மட்டுமே தற்காலத்தில் விருந்தோம்பல் என்பது செய்யப்படுகின்றன. ஆயினும், இது சற்று விரிந்து புதிதாய் அறிமுகமானவரையும் நல்ல நட்புக்கு உரியவராகத் தோன்றுவோரையும் உள்ளடக்கிக் கொள்கின்றது. கிராமப் புறத்தில் திருவிழாக் காலத்தில் ஊருக்குப் புதியவராய் தோன்றுவோரை அழைத்து அன்போடு விருந்தோம்பும் பண்பு இன்றும் நிலவுகின்றது.

அது மட்டுமல்லாது வீட்டில் இடம்பெறும் விழாக்களில் குறிப்பாக புதுமனைப்புகு விழா, திருமண விழா, பிறந்தநாள் விழா ஆகியவற்றின்போது விருந்தளிக்கும் பண்பு ஆடம்பரமாகி வருகின்றது. மேலும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழில் புரியும் நிறுவனங்களில் தமக்குள்ளேயே ஆடம்பர உணவு வகைகளை 'விருந்து' என்ற பெயரில் உண்டு மகிழ்வதும் நாளாந்த வாழ்வியலில் அதிகரித்து வருவதனைக் காணலாம்.

இன்றைய அவசர உலகில் விருந்தோம்பல் பண்பாடானது விருந்தினரை எதிர்பார்க்கும் காலம் போய், விருந்தாளிகளாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருபவர்கள் யார் வீட்டிற்குச் செல்கின் றோமோ அவர்களிடம் முன்கூட்டியே அறிவிக்கும் காலம் வந்து விட்டது. அதே போன்று, யாராவது விருந்தாளியாய் வீட்டிற்கு வந்து விடுவார்களோ என்று அச்சம் பீடித்துக் கொள்வதையும் நாம் பல இல்லங்க ளில் காண முடிகின்றது. அப்படி ஒருவர் வீட் டிற்கு வந்துவிட்டாலும் அவர்களுக்கு ஒரு தேநீர் போட்டு கொடுப்பதற்கு கூட யோசிக் கும் சிலரை பார்க்கின்றோம். வீட்டிற்கு ஒரு வர் வரும்போது நாம் அன்போடு நம்மால் இயன்றதைப் பரிமாறும்போது அதன் சந்தோஷமும் மகிழ்ச்சியும் பெரிய விருந்து பசாரங்களில் கூடக் கிடைப்பதில்லை.

பழங்காலத்தில் உணவு விடுதிகள் இல்லாத காலம் வெளியூர்க்குச் செல்வோர் பல நாட்களுக்கு வேண்டிய உணவினைக் கொண்டு செல்ல இயலாது. அரசர்கள், வணிகர்கள் போன்றோர் தன் இடம் விட்டு வேறு இடங்களுக்குச் செல்லும்போது தேர்களிலும் ஏனைய ஊர்திகளிலும் உண விற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு சென்றனர்.

தற்காலத்தில் உணவு விடுதிகள் பெருகி யுள்ளன. இலகுவாக உணவை எங்கு வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலைக் காணப்படுகின்றது. பல நாட் களுக்கு வைத்து உண்ணக்கூடிய பதப்படுத் தப்பட்ட உணவு வகைகள் கிடைக்கப் பெறு கின்றன. ஆதலால், தற்பொழுது விருந் தோம்பல் என்பது செல்வச்செழிப்பினைக் காட்டுவதற்காகவும் பயனை எதிர்பார்த்துச் செய்வதற்காகவும் மேற்கொள்ளப்படு கின்றது.

மிக உன்னதமான பண்பாட்டில் ஒன்றாக உள்ள விருந்தோம்பல் தற்கால சமூகத்தவரிடையே அருகிவரும் பண் பாடாக உள்ளது. இது, தமிழரின் வாழ்வி யலை மேம்படுத்தும் விழுமியமாகக் காணப்பட்ட போதிலும் அதன் முக்கியத் துவம் தற்கால சமூகத்தவரிடையே குறை வாகக் காணப்படுகின்றமை கவலைக் குரியதாகும்.

•



பி.துலக்ஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக வலைத்தளங்கள்
## வரமா? சாபமா?

இன்றைய உலகில் நாளுக்கு நாள் புதிய கண்டுபிடிப்புக்களும், சாதனைகளும் அரங்கேறிய வண்ணம்தான் இருக்கின்றன. அன்று நிலவைப் பார்த்து பாட்டி வடை சுடுகின்றாள் என்று கூறிய அதே மனிதன் நிலவிற்கே சென்று வரலாறு படைத்தான். இன்று பூமியை விட்டு குடிபெயர்ந்து செவ்வாயில் போய் வாழ்வதற்கான திட்டங்கள் பல நடந்தேறிய வண்ணம் உள்ளன.

மாற்றங்கள் மட்டுமே மாறாதவை; மற்றவையெல்லாம் மாறிக்கொண்டே இருப்பவை. அம்மாற்றத்தை ஓட்டத்தில் இன்றைய 21 ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்து உலகை ஆண்டு கொண்டிருப்பது "ஊடகங்கள்" என்பதே மறுக்க முடியாத உண்மை.

எழுத்தாளர், மருத்துவர் என்ற பன்முகத்தன்மைகள் கொண்டவரும் மலேசியாவின் முன்னாள் பிரதமருமான மகாதீர் முகமது குறிப்பிடுகையில், "பத்தொன்பதாம் நூற்றாண்டில் கடற்படை யார்வசம் இருந்ததோ அவர்களே உலகின் ஜாம்பாவான்களாகவும், இருபதாம் நூற்றாண்டில் விமானப்படை யார் வசம் இருந்ததோ அவர்களே உலகின் ஜாம்பாவான்களாகவும், தற்போது இருபத்தோராம் நூற்றாண்டில் ஊடகங்கள் யார் வசம் இருக்கின்றதோ அவர்களே உலகின் ஜாம்பாவான்களாகவும் திகழ்கின்றனர்" எனக் கூறுகிறார். இதிலிருந்து ஊடகங்களின் சக்தியினை அறிந்துகொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த காலங்களில் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்களிலும் சர்வதேச மட்டத்தில் நடைபெற்ற முக்கிய அரசியல் காய் நகர்த்தல்களிலும் இந்த ஊடகங்களின் வகிபங்கு என்பது அதிகமாகவே தாக்கம் செலுத்தியதை நாம் பார்க்க முடிந்தது.

ஒரு காலத்தில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலமே அதிகம் செய்திகள் பரப்பப்பட்டு மக்களுக்குச் சென்றடைந்தது. ஆனாலும், அவை சாதாரண பாமர மக்களுக்கு எட்டாக்கனியாகவே அமைந்தது. ஆனால், இன்று பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்பன ஒரு புறம் இருக்க, அவற்றை விட அசுர வேகத்தில் சமூக வலைத் தளங்கள் வளர்ச்சியடைந்து கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது.

நவீன உலகில் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாகத் திறன்பேசிகள், கணினிகள் அதிகரித்து வரும் சூழலில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது.

சமூக வலைத்தளங்கள் இன்று தற்கால மக்களின் இன்றியமையாத அங்கமாக மாறி வருகின்றன. நவீன உலகின் ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக அவை திகழ்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியினால் திறன்பேசி, கணினிகளின் பயன்பாடு அதிகரித்து வரும் சூழலில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் பெருகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

சமூக வலைத்தளங்களை நோக்கும்போது முகநூல் (Facebook), புலனம் (WhatsApp), கீச்சகம் (Twitter), வலையொலி (YouTube) போன்றன மிகவும் சமூக ஊடகங்கள் மிகவும் பிரபலமானதாக இருப்பதோடு, இன்னும் ஏராளமான செயலிகளை மக்கள் பயன்படுத்துவதைக் காண முடிகின்றது. உலகில் அதிகம் சம்பாதிக்கும் நபர்களாகவும், உலகின் முதல் 10 கோடீஸ்வரர்களில் ஐவர் இந்த சமூக வலைத்தளங்களின் நிறுவுனர்களே என்பது மிகவும் குறிப்பிட்டு கூறக்கூடிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

2020 ஜூலை மாதத்தில் கூட்சூட் (Hootsuite) எனும் இணையத்தளத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி 7.79 பில்லியன் மொத்த உலக சனத்தொகையில் 5.15 பில்லியன் மக்கள் தனிப்பட்ட தொலைபேசிப் பாவனையாளர்களாகக் காணப்படுவதாகவும் அவற்றில் 4.57 பில்லியன் மக்கள் இணைய வசதியைப் பயன்படுத்துபவர்களாகக் காணப்படும் அதேவேளையில், 3.96 பில்லியன் மக்கள் சமூக வலைத்தளப் பயனாளர்களாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சமூக வலைத்தளங்களில் உலகில் அதிகளவிலான மக்கள் பயன்படுத்துகின்ற முகநூலை (Facebook) 2.23 பில்லியன் மக்கள் பயன்படுத்துவதாகவும், இரண்டாவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலையொலியை (YouTube) 1.9 பில்லியன் மக்கள் பயன்படுத்துவதாகவும், மூன்றாவதாக 1.5 பில்லியன் மக்கள் புலனத்தையும் (WhatsApp), அடுத்ததாக மெசெஞ்சரை (Messenger) 1.3 பில்லியன் பயனாளர்கள் பயன்படுத்துவதாகவும் Buffer இணையத்தளத்தின் கருத்துக் கணிப்புக் குறிப்பிடுகின்றது.

உலகில் உள்ள சமூக வலைத்தளப் பயனாளர்களில் ஒருவர் சராசரியாக எட்டு சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவதாகவும், 97 சதவீத இளைய சமுதாயத்தினர் சமூக வலைத்தளங்களில் அதிக நேரத்தைச் செலவழிப்பதாகவும், ஒவ்வொரு பாவனையாளரும் சராசரியாக நாளொன்றுக்குத் தலா மூன்று மணித்தியாலங்கள் இந்த சமூகவலைத்தளங்களை உபயோகிப்பதாகவும் குளோபல் வெப் இன்டெக்ஸ் (Global Web Index) இணையத்தளம் குறிப்பிடுகின்றது.


எந்தவொரு அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியிலும் சாதக, பாதகத் தாக்கங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறே அறிவியல் தொழிநுட்ப வளர்ச்சியின்பேறான சமூக வலைத் தளங்களின் நன்மைகளாக, இன்று கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவும், புகைப் படங்களையும் வீடியோப் பதிவுகளைப் பகிர்ந்துகொள்ளவும், வணிக நிறுவனங்களின் விளம்பரப்படுத்தலுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், மாணவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கும், வேலைவாய்ப்புத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும், புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்ளவும், நமது சிறந்த ஆளுமையைச் சமூகத்துக்கு வெளிப்படுத்தவும் மற்றும் சிறந்த பொழுது போக்கிற்காகவும் பயன்படுத்தப்படுவதைக் கவனத்தில் கொள்ளலாம். அதேவேளையில், சமூகவலைத்தளங்களினால் பாதகமான விடயங்களும் அரங்கேறுகின்றன. இணையவழிக் குற்றங்கள் (Cyber Crimes), சட்ட விரோதப் பதிவேற்றங்கள் (போலிச் செய்திகள், ஆபாசமான புகைப்பட வீடியோப் பதிவேற்றம்), போலி கணக்குகளின் பாவனை, ஏமாற்று வேலைகள் (இணையவழிப் பணமோசடி, திருமண மோசடி), மேலும், இளம் சமுதாயத்தினரின் அதிகரித்த சமூகவலைத்தளப் பாவனையால் அதற்கு அடிமையாகும் தன்மை, கண்பார்வை ரீதியான குறைபாடுகள், முறையற்ற தொடர்புகளால் தற்கொலைகள் மற்றும் விவாகரத்துக்கள் ஆகியன இவ்வகையில் குறிப்பிடத்தகுந்தன.

சமூகவலைத்தளங்களைப் பயன்படுத்துபவர்கள் தங்களது தேவைகள் கருதி அளவோடும் பாதுகாப்போடும் அவற்றைப் பயன்படுத்தினால் பாதகமான விடயங்களைக் குறைக்க முடியும். குறிப்பாக, பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள் புத்திசாலித்தனமாகவும் சற்று விழிப்போடும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது நன்மை பயக்கும். •



எஸ்.எம். நிப்லான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிவலிங்கம் சிவகுமாரன் கடந்த பத்தொன்பது வருடங்களாக வீரகேசரி பத்திரிகையில் பத்திரிகையாளராகக் கடமையாற்றி வருகின்றார். அதனைவிட, மெட்ரோ நியூஸ் பத்திரிகையின் ஆசிரியராகவும், வீரகேசரி வாரவெளியீட்டின் பிரதி ஆசிரியராகவும் மற்றும் சூரியகாந்தி பத்திரிகையின் பொறுப்பாசிரியராகவும் செயற்பட்டு வருகின்றார். இவர் நுவரெலியா வட்டகொடை தோட்டத்தைச் சேர்ந்தவர்.

# பத்திரிகைகள் எப்போதும் நிலைத்திருக்கும் பதிவுகளைத் தருபவை

◆ **உங்களுடைய ஆரம்ப கால வாழ்க்கை பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நான் ஹட்டன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி மற்றும் கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்தேன். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இதழியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பயின்றிருக்கின்றேன். அதைவிட, நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஆலோசகராகவும், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் உறுப்பினராகவும் இருப்பதோடு, மலையக வரலாற்றை டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்திவரும் மலையகத் தமிழர் பண்பாட்டு பேரவையின் செயற்பாட்டாளராகவும், 'பெருவிரல்' என்ற இலக்கிய அமைப்பின் இணைப்பாளராகவும் விளங்குகிறேன். அத்தோடு, இலங்கை இதழியல் கல்லூரியில் வருகைதரு விரிவுரையாளராகவும், இலங்கைப் பத்திரிகைத்தாபனத்தின் தகவல் அறியும் உரிமைச்சட்ட அமைப்பின் உறுப்பினராகவும் எனது வகிபங்கு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆ **ஊடகத்துறையில் நீங்கள் பணியாற்ற விரும்பிய மைக்கான காரணங்கள் எவை? நீங்கள் விரும்பி யது போலவே உங்களுக்கு அதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றனவா?**

உயர்தரத்தில் கல்வி கற்கும்போதே பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்து விட்டேன். எமது வரலாறு பற்றிய நூல்களை படித்து வளர்ந்த எனக்கு, இச்சமூகத்துக்கு ஏதாவதொரு களத்திலிருந்து சேவையாற்ற வேண்டும் என்ற எண்ணம் உருவானது. பொருள் தேடும் தொழிலை விட, கற்றுக்கொள்ளும், ஆய்வுகள் செய்யும், விவாதிக்கும், பகிர்ந்துக் கொள்ளும் அதேவேளை எல்லோரையும் நோக்கிக் கேள்வியெழுப்பும் அதிகாரம் கொண்ட ஊடகத்துறையைத் தெரிவு செய்தேன். அதற்கான வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. இருபத்திரண்டு வயதில் பயிற்சிப் பத்திரிகையாளராக வீரகேசரி ஆசிரியப் பீடத்தில் இணைந்து கொண்ட மறு வருடமே இளைஞர்களுக்கான புதிய பத்திரிகை யொன்றை ஆரம்பிக்கும் பொறுப்பை முகாமைத்துவம் தந்தது. அதில் உருவானதே, மெட்ரோ நியூஸ். வெற்றிகரமாக அந்த பத்திரிகையைப் பல சவால்களுக்கு மத்தியில் கொண்டு நடத்தினோம்.

பின்னர், எமது சமூகத்துக்கான தேசியப் பத்திரிகை ஒன்றை உருவாக்கும் பொறுப் பையும் என்னை ஏற்கச்சொன்னார்கள். அதில் ஆரம்பிக்கப்பட்டதுதான், சூரியகாந்தி. அது, மலையகத்துக்கான தேசிய இதழாக கடந்த 12 வருடங்களாக வெளிவந்து கொண் டிருக்கின்றது. இதழியல் தொடர்பான பயிற்சிகளுக்கு நிறுவனம் என்னை வெளிநாடு களுக்கும் அனுப்பி வைத்தது. இதழியல் என்பது செய்திகள் எழுதுவது மட்டுமல்ல, அது சமூக ரீதியான பல ஆய்வுகளைச் செய்து உண்மையான வரலாற்றைப் பதிவு செய்யும் சவால்மிக்கதொரு பணி என்பது புரிந்தது. தொடர்ச்சியான தேடல், நெறிமுறைக்குட்பட்ட அறிக்கையிடல், சமூக ரீதியான சிந்தனைகள், அறிவார்ந்த கருத்துப்பரிமாறல்கள், கற்றுக் கொண்டவற்றை ஏனையோருக்குப் பகிர்தல், காலமாற்றத்துக்கேற்ப இத்துறையில் தொழில்நுட்ப விடயங்களைக் கற்றல் போன்ற காரணங்களால் கிடைத்த வாய்ப்பை தக்க வைத்துக்கொண்டிருக்கிறேன்.

◆ **பத்திரிகைகளில் செம்மையாக்கல் செயற்பாடானது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது?**

ஒரு தகவலோ அல்லது சம்பவமோ செய்தி என்ற வடிவத்தைப் பெற வேண்டுமானால் முதலில் பெறப்பட்ட தகவல்கள் செம்மைப்படுத்தப்படுதல் வேண்டும். அடிப்படையாக ஏன், எதற்கு, எப்படி, எங்கு, யார் (5W) என்ற ஐந்து விடயங்கள் அடங்காத எதையுமே செய்தியாக ஏற்றுக்கொள்ள முடியாது. சுருக்கமாகச் சொல்லப்போனால் தேவை யானவற்றை சேர்த்தல், தேவையில்லாதவற்றை நீக்குதல் என்பன செம்மையாக்கல் எனப்படுகின்றது. மொழியறிவு, வாசிப்பு, செய்திகள் பற்றிய தேடல், பொதுஅறிவு ஆகியவை செம்மையாக்குதலுக்கு மிகவும் அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **செம்மையாக்கம் செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் எதிர்நோக்குகின்ற சவால்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

சம்பவங்களே செய்திகளாகின்றன என்பதுதான் அடிப்படை. பிரதேச நிருபர்களிடமும் செய்தியாளர்களிடமும் இருந்து பெறப்படுகின்ற அறிக்கையிடல்களைச் செம்மையாக்கம் செய்யும்போது அதன் உட்கருத்து எவ்விதத்திலும் மாறக்கூடாது. அன்றாடச் சம்ப வங்களைச் செய்தியாக்கும் போது மேற்கொள்ளும் செம்மையாக்கலுக்கும் விவரணம், கட்டுரை, அரசியல் பத்தி எழுத்துக்கள் போன்றவற்றைச் செம்மையாக்குவதற்கும் வேறுபாடுகள் பல உள்ளன. பிரதேச செய்திகளை செம்மையாக்கும்போது, அச்செய்தியில் நபர்கள், நகரங்கள் மற்றும் கிராமங்களின் பெயர்களில் ஏற்படும் சந்தேகங்களை நிருபர் களிடம் கேட்டு நிவர்த்தி செய்து கொள்ளல் அவசியம். ஏனெனில், சில பிரதேசங்களின் பெயர்கள் அனைவருக்கு அறிந்திருப்பதில்லை. அதேபோன்று, நீதிமன்றச் செய்திகள், புள்ளி விபரங்கள், பெயர்கள், திகதிகள் போன்றவற்றை செம்மையாக்கம் செய்யும்போது அதிக கவனம் தேவை. தவறான வார்த்தைப் பிரயோகங்கள், பெயர் மாற்றங்கள் என்பன சட்டரீதியான சவால்களை எமக்கு ஏற்படுத்திவிடும். அது பத்திரிகையின் நம்பகத்தன்மை யையும் குறைத்துவிடும். அதேபோன்று, அறிக்கையிடலுக்கான தலைப்பு அனை வருக்கும் விளங்கக் கூடியதாகவும், மயக்கம் தராத வகையிலும் அமைதல் வேண்டும். செம்மையாக்கம் என்பது மிகவும் சவாலான விடயம். ஏனெனில், அனைத்து வகையான செய்திகள் பற்றிய பரந்த அறிவு இருக்கும் ஒருவரே செம்மையாக்குநராக இருக்க முடியும். இதன் காரணமாகவே, பூரண பயிற்சியின் பின்னரே ஒருவர் செம்மையாக்குநராக மாறுகின்றார். செய்தி பற்றிய பூரண அறிவு இல்லாதவர்கள் செம்மையாக்குநர்களாக இருக்க முடியாது.

**5) இன்றைய நவீன உலகில் அச்சு ஊடகங்களின் வகிபங்கு எவ்வாறு காணப் படுகின்றது?**

நவீன தொழில்நுட்ப ஊடக உலகிலும் அச்சு ஊடகங்கள் நிலைத்து நிற்பதற்குக் காரணமே நம்பகத்தன்மை மட்டுமே. போலிச் செய்திகள் என்ற சொற்பதம் உருவாகக் காரணமே சில சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களின் செயற்பாடுகள்தான். நவீன இலத்திரனியல் ஊடகங்களாக இன்று விளங்கும் சில செய்தி இணையங்கள், சமூக ஊடக செய்திச்சேவைகள் போன்றவை பரபரப்புக்காகவும் பெயர்களை பிரபல்யப் படுத்தவும் எந்தவித நெறிமுறைகளும் இல்லாது போலிச் செய்திகளையும், அரை குறையான செய்திகளையும் பதிவிட்டு வருகின்றன. இதனால் பல்வேறு முரண்பாடுகள்

எழுத, வாசிக்கத் தெரிந்த அனைவருமே பயன்பெறும் வகையில் பத்திரிகைகள் தமது பங்களிப்பை செய்து வருகின்றன. சுருக்கமாக கூறப்போனால், அனைத்துத் தரப்பினருக்கும் விரிவான, விசாலமான, தெளிவான, உண்மையான செய்திகளை அறிந்தும் தெரிந்தும் கொள்ள வேண்டுமானால் பத்திரிகைகளே முதல் தெரிவாக இருக்கும். அவை அழியாப் பதிவாக இருக்கின்றன. ஏனையவை சில காலங்களிலேயே மறைந்து போய் விடுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தில் உருவானதையும் நாம் இனங்காணலாம். ஆனால், அச்சு ஊடகங்கள் என்பது அவ்வாறில்லை. அவை பல வருடங்கள் பதிவாக நிலைத்து நிற்கும் என்பதால் செய்திகள் அச்சாகும் வரை செய்தியின் தெளிவு, உண்மைத்தன்மைப் பற்றி பூரணமாக ஆராயப்படும். அதற்குப் பின்னரே அச்சுப் பதிக்கப்படும். இன்றைய காலத்தில் பலரும் கணத்துக்குக் கணம் பதிவாகும் செய்திகளை இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங் களில் பெற்றுக் கொண்டாலும், அத்தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் பத்திரிகைகளையே நாடுகின்றனர்.

- **இளைஞர்களின் மத்தியில் பத்திரிகைகளின் செல்வாக்கு எவ்வாறு காணப் படுகின்றது?**

இளையோர் மத்தியில் பத்திரிகைகளின் வாசிப்பு மிகவும் குறைவாகவே காணப் படுகின்றது. இதற்கான காரணமாக நாம் இலத்திரனியல் ஊடகங்களை மட்டும் குறிப்பிட இயலாது. இளைய சமுதாயத்துக்கு வாசிப்பு பழக்கம் குறைந்தமையே உண்மையான காரணம் ஆகும்.

ஆனால், இலத்திரனியல் வடிவில் வெளிவரும் மின்னிதழ்களை இளைஞர்கள் தமது கையடக்கத்தொலைபேசி மூலம் ஆர்வமாக வாசித்து வருகின்றனர். பூகோள மயமாக்கத்தின் விளைவாக மாற்றமடைந்துள்ள தற்போதைய கல்வி முறைமை, கலாசார மாற்றங்கள் அவர்களைப் பத்திரிகைகள் வாசிப்பதிலிருந்து சற்றுத் தள்ளி வைத்துள்ளது. ஆனால், ஆரம்பப் கல்வியிலிருந்து பல்கலைக்கழகக்கல்வி வரை அவர்கள் பாடப் புத்தகங்களை மட்டுமே வாசிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

- **தற்காலத்தில் சமூகத்தில் பத்திரிகைத்துறையின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது?**

எழுத, வாசிக்கத் தெரிந்த அனைவருமே பயன்பெறும் வகையில் பத்திரிகைகள் தமது பங்களிப்பை செய்து வருகின்றன. சுருக்கமாக கூறப்போனால், அனைத்துத் தரப்பின ருக்கும் விரிவான, விசாலமான, தெளிவான, உண்மையான செய்திகளை அறிந்தும் தெரிந்தும் கொள்ள வேண்டுமானால் பத்திரிகைகளே முதல் தெரிவாக இருக்கும். அவை அழியாப் பதிவாக இருக்கின்றன. ஏனையவை சில காலங்களிலேயே மறைந்து போய் விடுகின்றன.

- **பத்திரிகைத்துறையில் பெண்களின் பங்களிப்புப் பற்றி உங்கள் கருத்து என்ன?**

பத்திரிகைத்துறையில் பெண்களின் பங்களிப்பு என்பது ஆரோக்கியமானதாக இருக்கின்றது என்று கூற முடியாது. ஊடகத்துறை என்பது சவாலான பாதை என்பது மட்டு மல்ல, அது போதிய வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலும் அல்ல. இத்துறையில் பல அர்ப்பணிப்புகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக பெண்கள் இத்துறையில் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைத்துறையில் நிலைத்து நிற்க முடியாதுள்ளது. களச் செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதற்கு இன்று பல பெண்கள் ஆர்வமாக இருப்பது பாராட்டுக்குரியது. தனிப்பட்ட காரணங்கள், குடும்பச்சூழல் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு பெண்கள் நீண்ட காலம் இத்துறையில் நிலைத்து நிற்க தயங்குகின்றனர். முக்கியமாக சில இடங்களில் பாலினப் பாகுபாடுகள் காரணமாகவும் பெண்களுக்கு ஒரு கட்டத்துக்கு மேல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❝

தற்காலம் முற்காலம் என்றில்லை. ஆரம்ப காலத்திலிருந்து தற்போதுவரை சகல தேசிய தமிழ்ப்பத்திரிகைகளும் மலையகத்துக்கென ஒரு பக்கத்தை ஒதுக்கி, மலையகச் செய்தி களைப் பிரசுரித்து வருகின்றன. எனினும், இம்மக்களின் பிரச்சினைகள் தேசிய மட்டத்தில் பேசு பொருளாகும் போது அது தொடர்பான ஆக்கங்கள், கட்டுரைகள் இன்னமும் அதிகமாக பிரசுரமாகி வருகின்றன. எனினும், மலையகச் சமூகத்துக்கென உருவாகியுள்ள சூரியகாந்தி மற்றும் உதயசூரியன் போன்ற பிராந்தியப் பத்திரிகைகளால் மலையக சமூகம் சிந்திக்கத் தொடங்கியுள்ளது.

❞



முன்நோக்கிச் செல்ல முடியாதுள்ளது. சரியான சந்தர்ப்பங்கள், வாய்ப்புகள், பயிற்சி நெறிகளை ஏற்படுத்திக் கொடுக்குமிடத்து இத்துறையில் பெண்களால் நிச்சயமாகச் சாதிக்க முடியும். சில பத்திரிகையாளர்கள் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை மட்டும் கையிலெடுத்து எழுதி வருகின்றனர். இதன்காரணமாக, அவர்கள் பெண்ணியம் பேசுபவர்கள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர். அது பொருத்தமாகாது. பெண்களின் பிரச்சினைகளை ஆண் ஊடகவியலாளர்களிடம் கலந்துபேசி அவர்களையும் எழுத வைக்க வேண்டும். இங்கு இருசாராருக்குமே பல பிரச்சினைகளும் பொதுவானவை. அவற்றை இருபாலருமே கையிலெடுக்க வேண்டும். செய்தி அறிக்கை இடலில் பாலினப் பாகுபாடு பார்க்கப்படக்கூடாது. பத்திரிகையாளர்கள் பொதுவானவர்கள். இதில் பெண் பத்திரிகை யாளர்களை வேறுபடுத்திக் கூறுவதை நான் விரும்பவில்லை.

◆ **தற்காலப் பத்திரிகைகள் மலையக மக்களின் வளர்ச்சிக்கு எவ்வாறான பங்கினை வழங்குகின்றன?**

தற்காலம் முற்காலம் என்றில்லை. ஆரம்ப காலத்திலிருந்து தற்போதுவரை சகல தேசிய தமிழ்ப்பத்திரிகைகளும் மலையகத்துக்கென ஒரு பக்கத்தை ஒதுக்கி, மலையகச் செய்தி களைப் பிரசுரித்து வருகின்றன. எனினும், இம்மக்களின் பிரச்சினைகள் தேசிய மட்டத்தில் பேசு பொருளாகும் போது அது தொடர்பான ஆக்கங்கள், கட்டுரைகள் இன்னமும் அதிகமாக பிரசுரமாகி வருகின்றன. எனினும், மலையகச் சமூகத்துக்கென உருவாகியுள்ள சூரியகாந்தி மற்றும் உதயசூரியன் போன்ற பிராந்தியப் பத்திரிகைகளால் மலையக சமூகம் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. ஏனெனில், தேசியப் பத்திரிகைகளில் வெளிவராத பல செய்திகள், தகவல்கள் இந்தப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. குறிப்பாக அரசியல், கல்வி, பொருளாதாரம் தொடர்பான பல தகவல்களை தொழிலாளர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் பாரிய பணியை இப்பத்திரிகைகள் ஆற்றிவருகின்றன. இதன்மூலமாக, மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்பட்டுள்ளது என உறுதியாகக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ **சர்வதேச ஊடகங்களின் பார்வை மலையகத்தின் பக்கம் திரும்பாமைக்கான காரணங்கள் என்ன?**


இல்லை, அவ்வாறு கூற இயலாது. தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைகளை பல சர்வதேச ஊடகங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன. இதில் சர்வதேச பத்திரிகைகளும் அடங்குகின்றன. 2018ஆம் ஆண்டு இழுபறியிலிருந்த சம்பளப் பிரச்சினைகளால் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றதை இங்கு சுட்டிக்காட்டுகிறேன். பி.பி.சி, ரொய்ட்டர் போன்ற சர்வதேச ஊடகங்கள் கூட மலையக மக்களின் சம்பளப் பிரச்சினை குறித்து செய்திகளை வெளியிட்டிருந்தன. அதேவேளை, சில சர்வதேச ஊடகங்கள் இம்மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொணர இம்மக்களின் பிரதிநிதிகளை அணுகினாலும், அவர்களே அவற்றைத் தவிர்த்து விடக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்பதும் கசப்பான உண்மையாகும்.

◆ **மலையக மக்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகள் மூலம் முழுமையாக வெளிகாட்டப்படுகின்றன என நீங்கள் நம்புகின்றீர்களா?**

நிச்சயமாக. ஆனால், சில பத்திரிகைகளே அவற்றுக்குத் தீர்வையும் தைரியமாக முன்வைக்கின்றன. அது தான் முழுமையான செய்தி அறிக்கையிடல் என்று கூறமுடியும். அவலங் களைத் தேடிச் செல்லும் ஊடகவியலாளர்கள் ஏன் தீர்வையும் தேட முடியாது? தற்போது புதிதாகக் களம் கண்டுள்ள இளம் ஊடகவியலாளர்கள் விடும் தவறுகள் இவை. அதற்குக் காரணங்கள் அவர்களுக்கு போதிய பயிற்சிகள் இன்மை, பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் அக்கறை காட்டுவதில்லை என்பதாகும். அரசியல்வாதிகளுடன் இணைந்து படம் எடுத்து முகநூலில் பதிவிடுவதற்கு அவர்களுக்கு இருக்கும் ஆர்வமானது குறித்த அரசியல்வாதிகள் தனது தொகுதிக்கு என்ன செய்தார் அல்லது ஏன் செய்யவில்லை என்று கேள்வியெழுப்ப இருப்பதில்லை. பிரச்சினை களையும் அவலங்களையும் பற்றி மட்டும் அறிக்கையிட்டுப் பயனில்லை. தேடல் மற்றும் ஆய்வுகள் மூலமாக மட்டுமே தீர்வையும் அடையாளம் கண்டு அறிக்கையிட முடியும்.

நான் குறிப்பிட்டது போன்று எல்லாப் பத்திரிகைகளும் அவ்வாறு முழுமையான பங்கினை வழங்க முடியாது. ஏனென்றால், எமது நாட்டில் மலையக மக்களுக்கு உள்ள பிரச்சினைகள் வேறு, ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகள் என்பது வேறு. அனைத்துப் பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கும் இடம் ஒதுக்க வேண்டியது பத்திரிகைகளின் கடமை ஆகும். ஆகவே, மலையகத்துக்கென வெளிவரும் பத்திரிகைகள் மட்டுமே அதிகமாக மலையக மக்கள் பற்றிப் பேசுகின்றன. தேசியப் பத்திரிகைகளில் அவ்வாறு எதிர்ப்பார்க்க இயலாது. ஏனெனில், அவற்றின் ஆசிரியர்பீடக் கொள்கைகள் வித்தியாச மானவை. அவற்றைத் தவிர்க்க முடியாது. அவை தேசியப் பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தும்.

•



**கி.தீபாணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாறா நிதர்சனம்

உணர்வில்லா உளி போல
உண்மை கடந்த வாழ்க்கை பற்றி
உரைத்தாலும் உள்ளிருந்து சில பேர்
உன்னை யார் உரைக்கச் சொன்னாரென்று
உரைத்தவனைச் சிறையில் போட்டு
ஒரு வழி பார்த்த பின்
அவன் மீண்டெழுவான்
மீண்டும் உலக நடப்புரைப்பான்
அன்று அவனை முட்டாளென்ற உலகம்
இன்று அவன் முதுகின் பின்னால் நின்று
மூச்சு விடுகிறார்கள்..!

வாக்களித்த மக்களுக்குக் கூறிய
வாக்கை மறந்து விட்டு - தம்
வாழ்க்கை வளர
வழிப் பறிக் கொள்ளையர்கள் உரைக்கிறார்கள்
இதுதான் ராஜ தந்திரமாம்.

வாங்கிய பணத்தை
வட்டியும் முதலுமாய்
அரை, ஒரு நாட்களில் அடைக்காவிடில்
அனைவரும் தெருவில் அடைக்கலம்
என்று கூறிச் செல்கிறான் ஒருவன்.
ஐயோ பாவம்
கஷ்டத்தில் கடவுளைத் தவிர
வேறு உறவில்லா அவர்கள்
கதறி அழுகின்றனர்.
விடிந்தால் கடன்காரன்
இருப்பது ஓரிரவு
எண்ணத்தில் பிள்ளைகள்
அதைத் தவிர வேறு வழியில்லை
ஓலை நெய்த குடிசை முகட்டில்
அரையான் கயிற்றில் தொங்கிக் கிடந்த
கணவனைப் பார்த்த மனைவி
கதறி அழும் முன்னமே
நெஞ்சில் கை புதைய
இருவரும் சென்றனர்
கலி விட்டு சொர்க்கம்.
அநாதையாகிய பிள்ளைகள்
ஆளுக்கொரு பக்கமாய்
திசை திக்க பசி விக்க
திண்டாடித் திரிந்தனர்.

இது ஒரு பக்கம் கிடக்க
இங்கே கவனி
ஆலமரச் சந்தியில்
ஆளுங் கட்சி ஒரு பக்கம்
எதிர்க்கட்சி ஒரு பக்கம்
பொதுக் கூட்டமாம்
போய்ப் பார்ப்பம் என்று போனால்
பொய்களை மூட்டை மூட்டையாக
கொட்டிய கட்டியக்காரன்
அரங்கை நடத்துகிறான் சிறப்பாக
கை கட்டி வாய் பொத்தி நிற்கின்றனர்
நம் சனத்தினர்...!

அ. சாய்கீர்த்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் ஒரு வரம்..!




ஒவ்வொரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளையும், மேலதிக தேவைகளையும், விருப்பு வெறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு தனக்கென்றொரு தொழிலில் ஈடுபடுதல் அவசியமாகும். எதிர்காலத்தில் நல்லதொரு தொழில் வாய்ப்பைப் பெற வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே பெற்றோர் தம் பிள்ளைகளை கல்விக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். தமது பிள்ளைகளாவது எதிர்காலத்தில் நல்லதொரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. இருப்பினும், குறிப்பிட்ட எண்ணிக்கையானோரே கல்வியில் முன்னேற்றம் பெற்று சிறந்த தொழில் வாய்ப்புக்களைப் பெறுகின்றனர். கல்வியில் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணிக்க முடியாத ஒரு சமூகம் தொழில் சந்தைக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதில் சிக்கல்களை எதிர்கொள்கிறது.

பெற்றோர் தம் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி உயர்தரம் வரை கற்பிக்கின்ற போதிலும், குறிப்பிட்டளவு தொகையினரே பல்கலைக்கழக வாயிலை நோக்கி நகர்கின்றனர். இலங்கையைப் பொறுத்த வரையில் உயர்தரம் கற்கின்ற அத்தனை மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்து விட முடியாது. அவ்வாறு பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாத மாணவர்கள், உயர்தரம் வரை படிக்கக் கூடிய வசதி இன்றி சாதாரண தரத்தோடு பாடசாலையிலிருந்து இடைவிலகும் மாணவர்கள் என அதிகமான மாணவர்கள் குறைந்தளவு சம்பளத்திற்கு வேலை வாய்ப்பை நாடிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவை எல்லாவற்றையும் விட, பல்கலைக்கழகம் சென்றால் மட்டுமே பட்டப் படிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு எண்ணம் இன்றுவரை எம் சமூகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்முறை வகுப்பு

மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது. ஆனால், உள்வாரி பட்டப்படிப்புக்கள் மட்டு மன்றி வெளிவாரியாகவும், அரச தனியார் பல்கலைக்கழகங்கள் மற்றும், திறந்த பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு வழிகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும் என்பது அவர்களுக்கு இன்னமும் தெரிந்த பாடில்லை.

அவ்வாறே, கல்விப்புலத்தில் தொடர்ந் தும் தம்மை அர்ப்பணிக்க முடியாத ஆனால் உயர்கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்க ளுக்கு ஒரு தகைமையை வழங்க உரு வாக்கப்பட்டதே தேசிய தொழில் தகைமை எனப்படும் (National Vocational Qualifications – NVQ) ஆகும்.

அதாவது, ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொழிலில் விசேடமாக திறமை பெற்றவர் என்பதை எடுத்துக் கூறுவதே NVQ சான்றிதழ் ஆகும். சாதாரணமாகத் தச்சுத் தொழிலை எடுத்துக் கொண்டால் அவர் இந்தத் தொழிலில் இவ்வளவு தூரம் திறமை யானவர் என்பதை அவர் கையில் வைத் திருக்கும் சான்றிதழ் கூறிவிடும்.

பல்கலைக்கழகங்களுக்கு உள் நுழைய முடியாத, மேலதிக கல்வியைத் தொடர வசதி இல்லாத மாணவர்கள் கொண்டிருக்கும் ஆதங்கங்களை நீக்குவ தாக இந்தத் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் அமைகிறது.

என்னால் இந்தத் தொழிலைச் செய்ய முடியும், இந்தத் தொழிலைச் செய்தால் என் னால் முன்னேற்றம் காண முடியும் என்ற ஒரு எண்ணம் ஒவ்வொருவரிடமும் காணப் படும். நான் படித்து நல்ல நிலைக்கு வரு வேன் என்பதைவிட நான் இந்தத் தொழிலைச் செய்தால் நல்ல நிலையை அடைய முடியும் என்ற நம்பிக்கை சிலரிடம் காணப்படும். அவ்வாறானவர்களின் திறமைக்கு அடையாளமாக அவர்கள் தம் திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் வழங்கப்படுகின்ற வழிமுறையாகவும் NVQ காணப்படுகின்றது.

தொழில்நுட்பக் கல்லூரிகள், தேசிய இளைஞர் சேவை மன்றம், இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில தனியார் நிறுவனங்கள் ஆகியவை தொழில் தகைமைக்கான NVQ பயிற்சி நெறிகளை வழங்குகின்றன.

இவ் விடயம் தொடர்பில், வவுனியா மாவட்ட இலங்கைத் தொழிற்பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப்புலத்தில் தொடர்ந்தும் தம்மை அர்ப்பணிக்க முடியாத ஆனால் உயர்கல்வியில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு ஒரு தகைமையை வழங்க உருவாக்கப்பட்டதே தேசிய தொழில் தகைமையாகும்.

அதிகாரசபையின் நிகழ்ச்சித்திட்ட அதிகாரி தயாளன் ரூபிகா குறிப்பிடுகையில் "வவுனியா மாவட்டத்தில் இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர், தையல், அழுகுக்கலை வல்லுநர், சிகையலங்காரம், கணினி வன்பொருள் திருத்துநர், கணினி பட வரைஞர் ஆகிய கற்கைநெறிகள் NVQ மட்டம் 4 இற்கான கற்கைநெறிகளாகவும், கட்டட நிர்மாண உதவியாளர், மர வேலைக் கைவினைஞர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், குளிரூட்டல் மற்றும் வளி சீராக்கல் தொழில் நுட்பவியலாளர், தோல் பொருள் வடிவமைப்பாளர், மின்னியலாளர், காய்ச்சி இணைப்பவர், அலுமினியம் பொருத்துநர் ஆகிய கற்கைநெறிகள் NVQ மட்டம் 3 இற்கான கற்கைநெறிகளாகவும் உள்ளன" என்கிறார்.

ரூபிகா மேலும் கூறும்போது, "இங்கு கற்கைநெறிகளைத் தொடருகின்ற பயிலுநர்களில் ஐம்பது சதவீதமானோர் உள் நாட்டிலும், பதினைந்து சதவீதமானோர் வெளிநாடுகளிலும் ஏனையோர் வெளி இடங்களில் மேலதிகக் கல்வியைத் தொடர்வதோடு, குறிப்பிட்ட ஒரு தொகையினர் சுயதொழிலிலும் ஈடுபட்டு வருகின்றனர்" எனக் குறிப்பிட்டார்.

வவுனியா மாவட்டத்தில் மட்டுமன்றி, நாடு பூராகவும் இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் ஏனைய நிறுவனங்களால் NVQ சான்றிதழ்களை வழங்கக் கூடிய கற்கைநெறிகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இன்று பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும் என்ற கனவுடன் இருக்கின்ற, ஆனால், பல்கலைக்கழகத்துக்குள் கால்பதிக்க முடியாத இளைஞர், யுவதிகள் மற்றும் பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் தங்களது உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையில், தவறான வழிகளில் செல்வதை விடுத்து, தொடர்ந்து கற்பதற்கான வழிமுறைகள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.


கல்வியைத் தொடர முடியாவிடில், ஏதாவதொரு துறையில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணித்து நல்லதொரு வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்வதற்கு மட்டுமன்றி, எதிர்கால சமூகத்தையும் கல்வி நோக்கிய பாதையில் வழிநடத்தவும் இத் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ்கள் உதவும். •



வி.டதுர்சினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்லிராணிக் கோட்டை அடர்ந்த காட்டுப்பகுதியில் மன்னார் பட்டினத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது. இங்கு இடிபாடுகளும் பெரிய திடல்களும் காணப்படுகின்றன. இப்பகுதிகள் முன்னர் பாண்டிய மன்னன் ஆட்சியின் கீழ் இருந்தன. பாண்டியன் மகள் சித்திராங்கதை, அல்லிராணி என்ற பெயருடன் ஆட்சி புரிந்த இடம் இதுவே மணலூர் - மணிபுரம் - நாகநாடு எனும் பெயர்கொண்ட இராச்சியத்தின் தலைநகராகவும் விளங்கியது.

**"தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர்வு ஆய்வும்",**
**-கதிர். தணிகாசலம்**

## சிதைவுகள் கதை சொல்லும்

# அல்லிராணிக் கோட்டை..!

அனைவராலும் புகழ் பேசப்படுகின்ற அல்லிராணிக் கோட்டை நோக்கி ஓர் அழகிய மாலைப்பொழுது எனது வீட்டிலிருந்து புறப்பட்டேன். கிட்டத்தட்ட எட்டு கிலோமீற்றர் வரை எனது பயணம் அமைந்தது.

இயற்கையின் இருப்பிடம் என்று கூறுமளவிற்கு அமைதியான கடலலைகளின் சத்தம், பரிசுத்தமான காற்று என இயற்கை எழில் நிறைந்து, அழகிய கடலோரத்தில் தனித்துக் காட்சி தருகிறது அல்லிராணிக் கோட்டை தனது சிதைவுகளுடன்.

தமிழர்களுடைய பண்பாட்டு மரபுரிமைச் சின்னங்கள் பல இன்று அழிவடைந்தும், திட்ட மிட்டு அழிக்கப்பட்டும், மாற்றப்பட்டும், மறைக்கப்பட்டும் கொண்டிருக்கின்ற இக்கால கட்டத்தில் இவ்வாறான பழமையைப் பறைசாற்றும் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நினைவே அதனைப் பார்த்ததும் என் மனதில் மேலோங்கியது.

மன்னார் நகரிற்கு தென் திசையில் முசலிப் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட முத்தரிப்புத் துறை எனும் ஊரில் அமைந்துள்ள அல்லிராணிக் கோட்டையானது, பாண்டியர் காலத்திற் குரியது என்றும், போர்த்துக்கேயர் காலத்திற்குரியது என்றும் கருத்துக்கள் நிலவுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அல்லிராணிக்கோட்டையானது தனிச்செங்கற்களால் கட்டப்பட்டிருப்பதால் இக் கோட்டை எந்தக் காலத்திற்குரியது என்பது சர்ச்சைக்குரியதாகவே இன்றும் காணப்படுகிறது. போர்த்துக்கேயர் காலத்திற்குரிய கோட்டைகள் முருகைக்கற்களாலேயே பெரும்பாலும் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

அதேவேளை, அல்லிராணிக் கோட்டையானது தமிழர்களால்தான் நிறுவப்பட்டது என்பதற்கான பல ஐதீகக்கதைகள் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அல்லிப்பூக் களின் வாசனைக்கு மத்தியில் இக் கோட்டை அமைந்திருப்பதனால் அல்லிராணிக் கோட்டை எனப் பெயர் வந்ததாகவும் ஒரு ஐதீகக்கதை கூறுகிறது.

இக்கோட்டை பற்றி இக்கிராமத்தில் வசிக்கின்ற சந்தியோகு குரூஸ் மரியதாஸ், "எமது கிராமத்தில் இக்கோட்டை இருப்பதை நினைத்துப் பெருமைப்படுகின்றேன். இது எமது வரலாற்றுச் சான்றாகும். ஆனால், தற்போது இக்கோட்டையானது பராமரிப்பின்றி அழி வடைந்து செல்வது எமக்கு வேதனையளிக்கிறது" என்கிறார்.

இந்த அல்லிராணிக் கோட்டையை ஆரம்ப காலங்களில் அல்லிராணி ஆட்சி செய்ததாக வும் அவர் தனக்குத் தாய்வீடான தமிழகத்திற்குப் பயணம் செய்வதற்காக தனது கோட்டை யிலிருந்து தலைமன்னார் செல்வதற்குப் பளிங்குப்பாறைகளால் அமைந்திருந்த பாதையைப் பயன்படுத்தியதாகவும், அங்கிருந்து மேற்கொண்டு தமிழகம் செல்வதற்கு இரு நிலப்பரப்புக் களையும் இணைக்கும் மணல்திடல்களைப் பயன்படுத்தியதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதற்குச் சான்றாகப் பவளப்பாறைகளும், திடல்களும் இன்றும் காணப்படுவதை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த அல்லிராணி கோட்டையைச் சுற்றிக் காணப்படுகின்ற கடலில் முத்துக்கள் காணப்படுவதாகவும், அங்கு காணப்பட்ட முத்துக்குளிப்பின் மூலம் கண்டெடுக் கப்பட்ட முத்துக்களாலான தாலியே அல்லிராணிக்கு அவர் திருமணத்தில் அணிவிக்கப்பட்ட தாகவும் மக்களிடையே சுவாராசியமான கதைகளும் நிலவுகின்றன.

**"தேரோடும் முத்தரிப்புத் தேசமதில்**
**தெள்ளு தமிழ் வளர்ந்ததொரு தெய்வயானை**
**போரோடும் விழி கொண்ட அல்லிராணி**
**போற்றமிகு அன்னவளின் கதை கூறு"**

என்பது இப்பகுதிகளில் ஆடப்படும் நாட்டுக்கூத்தில் ஒரு பாடலாக அமைகின்றது.



அ.ஷர்மி

அல்லிராணி, எங்களில் ஒருத்தியாக அவதரித்து இந்த மண்ணை ஆட்சிபுரிந்த அந்தத் தலைவியின் மூச்சுக்காற்று உலாவிய மண்ணில் நிற்பதே மனதிற்குப் பெருமைதருவதாக அமைந்திருந்தது.

ஆனாலும், யுத்த காலத்தில் அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், யுத்தத்தின் பின் அதிகளவானவர்களைக் கவரும் இட மாக மாறியுள்ள போதும் இக்கோட்டை போதிய பராமரிப்பு இன்றிக் காணப் படுவது வேதனையளிக்கும் விடயமாக மனதை உறுத்த வீடு திரும்பினேன். •





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்து போகும்

# தமிழர்

## வாழ்வியல் மரபுகள்

அன்றொருநாள்! சாலையோரம் நீண்டநேரம் பேருந்துக்காய்க் காத்திருந்தேன். அங்கு அமர்ந்திருந்த இரு பெரியவர்கள் தமக்குள் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். காத்திருப்பால் சலிப்படைந்த நான் ஒருமுறை அவர்களின் உரையாடலைக் கூர்ந்து செவிமடுத்தேன். அவர்கள் நடைமுறை வாழ்க்கை பற்றியே உரையாடிக் கொண்டிருந்தார்கள். அதைக் கேட்கும் போது சுவாரஸ்யமாகத்தான் இருந்தது. "நவீனம்-நாகரிகம் என்ற பெயரில் உலகமே மாறிப்போயிற்று. எங்கட வாழ்க்கைக்கும் இப்பத்தைய வாழ்க்கைக்கும் நிறையவே மாற்றம்..." என்றவாறு நீண்டு கொண்டே சென்றது அந்த உரையாடல். உண்மைதான் வாழ்வியல் மரபுகள் பல மறைந்து போய்விட்டன. இதுவும் என்னை ஒருமுறை சிந்திக்க வைத்தது.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி" என்று சொல்லுமளவிற்கு உலகம் முழுவதும் வியாபித்து வாழும் தமிழினம் வரன்முறையான வரலாற்றுச் சிறப்பினையும் தொன்மையான மரபுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளமை கண்கூடு.

உலகிலுள்ள பண்பாடுகளுள் முதன்மையானதும் முன்மாதிரியுமானதும் தமிழர் பண்பாடே ஆகும். உலகின் பல்வேறு நாடுகளில் தமிழர் வாழ்வியல் மரபுகள் வேரூன்றி உள்ளன எனலாம். பண்பாடு, மொழி, இலக்கியம், உணவு, உடை, பழக்கவழக்கம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை, சிற்பம், ஓவியம், கட்டடக்கலை, விளையாட்டு, ஊடகங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவை, கொண்டாட்டம், தத்துவம், மதங்கள், சடங்குகள் ஆகியன தமிழர் வாழ்வியலைச் சித்திரிக்கின்றன.

இத்தகைய பழந்தமிழரின் வாழ்வியல் மரபுகள் உலகத்தையே அதிசயிக்க வைக்கின்றன. மரபுகள் பண்பாட்டின் ஊடாகவே தலைமுறை தலைமுறையாக ஒவ்வொரு சந்ததியினருக்கும் கடத்தப்பட்டு கால ஓட்டத்தில் கடந்து வந்தவை எனவும் கருதலாம். மேலும், அன்றைய காலத்து மக்களின் வாழ்வியல், தமிழர் வாழ்வியல் பண்பாடும் மரபுகளும் ஒன்றித்த எளிமையான வாழ்வியல் கோலத்தின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது எனலாம்.

**அன்றைய கால வாழ்வியல் மரபுகள்**

எளிமையான குடிசையில் கூட்டுக் குடும்பமாய், கூடிக்குலாவி, மட்டற்ற மகிழ்ச்சியுடன் தென்றல் காற்றைச் சுவாசித்து, செல்வச் செழிப்புடனும் வாழ்வியல் மரபுகளுடனும் வாழ்ந்த வாழ்க்கை முறையே அன்றைய வாழ்வியல். இம்மரபுகளில் விருந்தோம்பல் எனும் அளப்பரிய பண்பு தமிழருக்குரிய தனிச் சிறப்பான மரபாகக் காணப்பட்டது.

விருந்து என்றால் புதுமை, புதியவர் எனப் பொருள் கொள்ளலாம். வீட்டிற்கு வரும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் விருந்தினர்களே என்கின்றோம். ஆயினும், ஆரம்ப காலத்தில் வீட்டிற்கு வரும் அறியாதவர்களையும் விருந்தினர்களாக ஏற்று உணவளிக்கும் சிறப்புக் காணப்பட்டமை தக்க சான்றாகும். ஒவ்வொரு தமிழ்க் குடும்பங்களிலும் விருந்தோம்பல் என்னும் பணி பற்றுடனும் பக்தியுடனும் இடம்பெற்றது எனலாம்.

கால்நடையாகவே பயணம் செய்த மனிதன் ஓர் ஊரிலிருந்து இன்னோர் ஊருக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டமையே விருந்தோம்பல் பண்பாடு ஏற்படக் காரணமாயிற்று. இதனோடு இணைந்ததாகவே வீட்டின் முன்பகுதியோடு இணைந்த திண்ணை எனும் அமைப்பும் தோன்றியது. அதுமட்டுமல்ல, கிராமங்களின் காணப்படும் சத்திரங்களும், அன்னதான மடங்களும் தமிழரின் விருந்தோம்பலைப் பறைசாற்றுகின்றன.

இன்றைய காலத்தில் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்து கொடுப்பது தான் விருந்தோம்பல் என நினைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மையில் விருந்தோம்பல் என்பது புதியவர்களுக்கு உணவு அளிப்பது. அதாவது, "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் விருந்தோம்பல்" எனப் பொருள் கொள்வதுடன், தமிழரின் தலையாய அறமாகவும் அது காணப்படுகின்றது.

தமிழர் மரபியல் வாழ்க்கைமுறையை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக வகுத்து வாழ்ந்தமை தமிழர் பண்பாட்டின் மற்றுமோர் சிறப்பாகக் காணப்படுகின்றது. அத்தோடு, எமக்கே உரித்துடையதான பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை, அரசு, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவற்றை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அகவாழ்வு என்பது ஆணும் பெண்ணும் கூடி வாழும் வாழ்வினையும், புறவாழ்வு என்பது நமது சமூகம் சார்ந்த வீரம், கொடை, கல்வி, தொழில் போன்றவற்றையும் எடுத்துக்காட்டி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, தமிழர் பண்பாட்டில் மிகச்சிறந்த ஒன்றாக மானம் காத்தல் காணப்படுகின்றது. மானம் எனப்படுவது "ஒருவன் தன் நிலையில் இருந்து தாழாது இருப்பதும், தாழ்வு வரும் போது வாழாது இருப்பதும் மானம்" எனக் கொள்ளப்பட்டது.

தமிழர் வாழ்வியல் மரபுகளில் அன்றைய காலத்தில் கொடை பெரிதும் பேசப்பட்டது. பொருள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து வாழ்வதும், இல்லாதவர்களுக்கு அள்ளிக் கொடுப்பவர்களை வள்ளல் என்று பெயர் கொடுத்தழைப்பதும் மரபாகக் காணப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய கால வாழ்வியல் முறைகள் அன்று வாழ்வியலோடு இரண்டறக் கலந்த மரபுகள், இன்று வாழ்வியலோடு பரந்த இடைவெளியைக் கொண்டுள்ளது. நாகரிகம் என்ற போர்வையாலும், புதுவாழ்வு என்ற பார்வையாலும், உலகமயமாதலின் ஒருங்கிணைப்பாலும் மரபுகள் மண்தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன. மரபுகளைத் தொலைத்தவர்களாய் நாம் மண்டியிட்டுக் கிடக்கின்றோம்.

இன்றைய காலத்தில் மனிதன் பெரிய மாடமாளிகைகளில் கருக்குடும்பமாக வாழ்கின்றான். அம்மா, அப்பா, சகோதரர்கள், உறவினர்கள் போன்றவர்களை தமிழில் அழைக்கவும், அவர்களுக்கு வணக்கம் சொல்லவும் தயங்கி வெட்கப்படுகின்றோம். உணர்வுகளை இழந்து வேற்றுமொழிகளிலே உரையாடுகின்றோம். இது தான் இன்றைய வாழ்வியல்.

அதுமட்டுமன்றி, அன்றைய கால வாழ்வியலில் தமிழ்ச் சொற்களை உட்பொருளோடு பயன்படுத்தும் மரபு காணப்பட்டது. அவை தமிழின் தொன்மையையும், மரபையும் பேணும் வல்லமை உடையனவாகக் காணப்பட்டன. வாழ்வியலில் பயன்படும் எத்தனையோ சொற்கள் கலப்பின்றிக் காணப்பட்டமை, நம் வாழ்வியல் மரபின் தனிப்பெரும் அடையாளமாகக் காணப்படுகின்றது.

தமிழர் மரபியலில் இயற்கை வழிபாடும் செழிப்புற்றுக் காணப்பட்டது. அதாவது, ஐம்பூதங்களை வழிபட்ட மரபுகள் வாழ்வியலோடு இழையோடிக் காணப்பட்டன. அத்தோடு, தெய்வ நம்பிக்கையும், வீரமும், கலைகளும், தன்னம்பிக்கையும் எம்மோடு கூடவே இருந்துள்ளமை கண்கூடு. இவ்வாறே தமிழர் மரபியலானது ஒவ்வொரு அம்சங்களையும் தம்மிடத்தே கொண்டுள்ளமையை இலக்கியங்களின் ஊடாகவும், வாழ்வியல் மரபுகள் மூலமாகவும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

மேலும், தெய்வ நம்பிக்கை, வழிபாட்டு முறைகள் போன்றவற்றில் விருப்பம் கொண்டவர்களாய் நாட்டமின்றி இருக்கின்றோம். மரியாதை, அடக்கம், நற்பழக்க வழக்கங்களை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்தத் தயங்குகின்றோம். அத்தோடு, வார்த்தைகளால் உணர்வுகளுடன் வாழ்த்துக்களைத் தெரிவிக்காமல், சமூக ஊடகங்களிலும், குறுஞ்செய்திகளிலும் வாழ்த்துக்களைப் பகிரங்கமாக்கத் தெரிவிக்கவே எத்தனிக்கின்றோம். பிறந்தநாளில் பிள்ளைகள் பெற்றோர்களிடம் ஆசீர்வாதம் வாங்க வெட்கப்படுகின்றனர். முகநூலிலே பெற்றோரின் புகைப்படத்தோடு அன்னையர் தினம், தந்தையர் தினம் கொண்டாடும் புதுப் பழக்கம் புகுந்துவிட்டது.

அத்தோடு, விருந்தோம்பல் எனும் ஆதித்தமிழனின் நற்செயல் மறைந்து வருகின்றது. இன்று விழாக்களின்போது எமக்கான உணவை நாங்களே எடுத்து உண்ணுகின்ற பழக்கமே நடைமுறையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


லுள்ளது. மேலைத்தேய உணவுகளின் ஆக்கிரமிப்பால் பாரம்பரிய உணவும், விருந்தோம்பல் பண்பும் மாய்ந்து போயுள் ளது. இது இன்றைய கிராமங்களின் மண் வாசனையையும் அகற்றிவிட ஆதிக்கம் கொள்கின்றது. பாரம்பரிய உணவுகளை உண்ண மனிதன் அங்கலாய்க்கின்றான் என்பதை எடுத்துக்காட்டுவதாகவே வட மாகாணத்தில் அம்மாச்சி உணவகத்தின் தோற்றம் அமைகின்றது.

தமிழர் பாரம்பரியத்தை நவநாகரிக ஆடைகள் எங்கோ உதறித் தள்ளிவிட்டன. நாகரிகமான உடை அணிந்தால் அது சிறப்பு, வனப்பு எனவும், பாரம்பரிய உடை அணிந்தால் வெட்கம், அவமானம் என வும், கால ஓட்டம் மாறி விட்டது. தமிழர் மரபில் கட்டும் வேட்டி போய், ஒட்டும் வேட்டி கள் உருவாகியுள்ளன.

மூத்தோர்கள் மரபுகளைப் பேணிப்பாது காத்துக் கட்டிக்காத்து வந்தார்கள். ஆனால், இன்று நாம் அதனைக் கட்டவிழ்த்து விட்டி ருக்கின்றோம். நிலை மாறலாம் தடம் மாறலாம் எம் மரபுகள் என்றும் நிலையா னது. இன்றைய வாழ்வில் மறைந்து போகும் மரபுகளைத் தேடிப் பார்க்கவும், அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவை யும் எமக்கு உள்ளது. இது காலத்தின் கட்டாயம் என்போம். மறைந்துப் போகும் மரபுகளைக் கட்டிக்காக்க ஒன்றாய் அணி திரள்வோம். நன்றாய்ப் பணி செய்வோம்.



ச.சதங்கனி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தலின் கனவுக் கைபேசி



தவறாக எண்ண வேண்டாம்
தலைவிதியைச் சொல்லப் போறன்
தவித்து நிக்கும் தலைமுறையைச் சொல்லப் போறன்
சலிப்பு வந்தா சத்தியமா கேக்காத
கல்வி என்டு பேசயில
கருமம் கல்லு உடைப்பவனுக்கு எதுக்குடா அது
ஒரு குரல் கேக்குது உரல் உலக்கை உடன்தான் சேருமாம்.

ஒரு நாள் கள்ளத்தனமா கறுப்பன்ட வீட்ட எட்டிப் பாத்தன்
கால் பங்கு கஞ்சி இல்லாத வாய் தானாப் பொழந்திச்சி
கதைய என்ன என்டு கேளு
கடைசி பிள்ள முதற் கொண்டு கண்ணு முழிச்சி படிக்குது
எதில படிக்குது
கையில பெரிய பெட்டி போல
கைப் பேசிக்குள்ள கல்வி எண்டு படிக்குது
கண்ண கசக்கிக் கொண்டு கந்தல இழுத்துப் பிடிச்சிக் கொண்டு
கல்லும் முள்ளும் குத்த வெறும் காலில சுடு வீதியில
நடந்து வந்த வேகத்துடன் ஐயனப் பாத்துக் கேட்டன்
ஐயனே நானும் படிக்கிறன் எண்டு
அங்க இருந்து அறுந்த செருப்புதான் பதிலா வந்திச்சி.

காசு இருக்குறவன் படிக்கிறான்
கந்தலக் கழுவி உடுத்துபவன் படிக்கலாமோ?
பச்சைப் பிள்ளை பாவமது
ஏழை என் வீட்டில் கூழும் குழைஞ்ச சோறும்
இப்படி இருக்கையில மழைக்கு ஒதுங்குற இடம்தான் பள்ளியா?
இலவசக் கல்வி இனாமா கிடைக்கையில பாழாப்போன கொரோனா வந்து
கொட்டடிச் சேனையில கல்லு ஒடைக்க வச்சிரிச்சி
ஒரு மாசம் ரெண்டு மாசம் மூணு மாசம்.
கொரோனா குறையல்ல
கடைசியில கைபேசிக்குள்ள கல்வி
கலி காலம் முத்திரிச்சி
என்ன எண்டு கேட்டா
வகுப்புக்குள்ள வாறவன் கைப்பேசி இல்லாம வா
இப்ப கைப்பேசிக்குள்ள வகுப்பாம்.
கறுப்புக் களி திங்கிற எனக்கு கைபேசி ஏதுடா?
ஒன்லைன்ல ஓவர் நைற்றில இருந்து
படிக்கிறன் என்ட பேரில காதல ஓட்டுறவன் கையில கைபேசி
ஆனா கஞ்சி குடிச்சாலும் கடைசி வர படிக்கோணும் என்டு நினைக்கிற
ஏழை கையில
ஏதுடா கைப்பேசி
எட்டாத கனிக்குக் கொட்டாவி விடுற
சனம் தானே நாங்க..!



அ. சங்கீர்த்தனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உச்சமாகும் மணல் அகழ்வு !

மண் மீட்பிற்காகப் போராடிய காலம் போய் தற்பொழுது மணல் மீட்பிற்காகச் சட்டவிரோதக் குழுக்களிடமிருந்து கிளிநொச்சியில் மக்கள் வீதியில் போராடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கையிலிருந்து மனித குலம் விலகிச் செல்லச் செல்ல, மனிதகுலத்திற்கு எதிரான சூழல் உருவாகிக் கொண்டே செல்கின்றது. உலகில் வாழ்கின்ற உயிரினங்களில் மனிதகுலம் மாத்திரமே தனக்கு எதிரான நடவடிக்கைக ளைத் தானே முன்னின்று செய்கின்ற இனமாகக் காணப்படுகின்றது. பாதகமான விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிந்தும் குறுகிய சுயலாபத் தேவைகளுக் காக மனிதர்கள் இயற்கையை அழித்து வருகின்றார்கள்.

உலகில் காணப்படுகின்ற கடல் வாழ் உயிரினங்கள் என்றாலும் சரி, நிலத்தில் வாழ் கின்ற உயிரினங்கள் என்றாலும் சரி தாம் வாழ்கின்ற சூழலைத் தமக்கேற்ற முறையில் தமக்குப் பாதுகாப்பாக இருக்கின்றதா என்பதை அறிந்தே வாழ்ந்து வருகின்றன. தாம் வாழும் சூழல் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதில் அவை அக்கறையாக உள்ளன. தாம் வாழும் சூழலில் பாதிப்பு ஏற்படுகின்றது என்று கருதும் உயிரினம் அந்தச் சூழ லிருந்து இடம் பெயர்ந்து வேறிடம் சென்று விடுகின்றது.

இந்த நூற்றாண்டில் உலகம் நவீன தொழில்நுட்பங்களுடன் வேகமாக முன்னேறிச் செல்கின்ற அதேவேளை, இயற்கைச் சூழலிலிருந்தும் விடுபட்டுச் செல்கின்றது. இந்த இடைவெளி அதிகரித்துச் செல்லச் செல்ல மனிதன் வாழும் சூழலில் இருந்து வாழ்வதற்கு எதிரான நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றான். நிலம், நீர், வளி என்பன மனித நடவடிக்கைகளால் பெரிதும் பாதிப்படைந்து செல்கின்றன. இந்தப் பாதிப்புக்கள் நாடுகள் வேறுபாடின்றி பூவுலகின் சகல இடங்களிலும் நடைபெறுகின்றன. என்னதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சட்டங்கள் இருந்தாலும் சட்ட விரோதச் செயற்பாடுகள் உலகளாவிய ரீதியில் இடம் பெற்றுக் கொண்டேயிருக்கின்றன.

அந்தவகையில், கிளிநொச்சி மாவட்டத் தில் இடம்பெறுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வும் அதன் பாதிப்புக்கள் பற்றியும் கவனத்தில் எடுக்கவேண்டியது அவசியம் ஆகும். "2009 ஆம் ஆண்டுக்கு முன் இந்த இடத்தில் நின்று பார்த்தால் கடற்பரப்பைக் கீழ்நோக்கித்தான் பார்க்க வேண்டும். ஆனால், தற்போது பாருங்கள் எப்படி இருக் கின்றது என்று? நாங்கள் பள்ளத்தில் இருக் கின்றோம். கடல் மட்டம் எங்களை விட உயர்வாக இருக்கின்றது" என்கிறார் கிளிநொச்சியின் கிளாலிக் கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர். அவர் சுட்டிக் காட்டிய இடம் 2009 ஆம் ஆண்டுக்கு முன் சுமார் பத்து அடி உயரமான மணல் மேடாக இருந்துள்ளது. ஆனால், அதே இடம் இன்று ஐந்து அடி வரை ஆழமான பள்ளத்தாக்குப் போன்று காணப்படுகின்றது. அந்தளவிற்கு அந்தப் பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்றுள்ளது, தற்போதும் இடம்பெற்று வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாறு பல இடங்களில் சட்டவிரோதமாக மணல் கட்டுப்பாடின்றி அகழப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கிளிநொச்சி மாவட்டத்தில் பச் சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட இடங்களான கிளாலி, அல்லிப்பளை, தர்மக் கேணி, மாசார், சோரன்பற்று, புலோப் பளை, இயக்கச்சி போன்ற பிரதேசங்களி லும், பூநகரியில் கௌதாரிமுனையிலும், கரைச்சியில் அக்கராயன்குளம், மருதநகர், வட்டக்கச்சி, பன்னாங்கண்டி போன்ற இடங் களிலும் கண்டாவளையில் கல்மடு போன்ற இடங்களிலும் சட்டவிரோத மணல் அகழ்வு கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றுள், பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட இடங்களிலும் கௌதாரிமுனை மற்றும் அக்கராயன் ஆகிய பிரதேசங்களிலும் அதி களவில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடு கின்றவர்கள் இரவு, பகல் என்றில்லாது மணல் அகழ்வில் ஈடுபடுவதனால் அந்தப் பிரதேசங்கள் மிக மோசமான சூழல் பாதிப் புக்களை எதிர்கொண்டுள்ளன. குறித்த பிரதேசங்களில் காணப்படுகின்ற மரங்கள், செடிகள் என்பன அழிவடைவதோடு, கடற் கரைப் பிரதேசங்களில் கடல் மட்டத்தை விட ஆழமாக மணல் அகழப்படுவதால் கடல் நீர் உட்புகுந்து நீர் உவராகும் அபாயம் ஏற்பட் டுள்ளது. விவசாயம், குடிநீர் என அனைத்தி லும் தாக்கத்தை ஏற்படுத்தி மக்கள் வாழ முடியாத ஒரு சூழலுக்குள் அந்தப் பிரதேசங் களைக் கொண்டு சென்றுவிடும் நிலைமை கள் உருவாகி வருகின்றன.

இந்தப் பிரதேசங்களில் மணல் வியா பாரிகள் உள்ளூர் நபர்களைப் பயன்படுத் திப் பாரியளவில் மணல் அகழ்வில் ஈடுபடு கின்றார்கள். குறிப்பாக, சில மணல் வியா பாரிகளுக்கு அரசியல் செல்வாக்கு இருப்பத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாலும் வேறு சிலருக்குப் பாதுகாப்புத் தரப்பினரின் செல்வாக்கு இருப்பதனாலும் அவர்கள் துணிந்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர் எனப் பிரதேசமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். அத்தோடு, சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றவர்களை, அவர்கள் அச்சுறுத் துகின்றனர் எனவும், இதனால் பலரும் குறித்த விடயம் தொடர்பில் பேச அஞ்சுகின் றனர் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக் கின்றனர்.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடு கின்ற சந்தர்ப்பங்களில் பிரதேச மக்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியும், பெரும்பாலும் மணல் அகழ்வில் ஈடுபடு கின்றவர்கள் கைது செய்யப்படுவதில்லை என்றும், மாறாக தற்போது பொதுமக்களால் விசேட அதிரடிப்படையினருக்குத் தகவல் வழங்கினால் அவர்கள் திடீரெனப் பிரதேசத் திற்குள் சென்று சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து வருகின்றனர் என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர். இது ஓரளவு ஆறுதல் தருகின்ற விடயமாக இருப்பினும், கனிய வளத் திணைக்களத்தின் முறையான கண் காணிப்பு இல்லாமையும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்வதற்கு வழிவகுக் கின்றது என மக்கள் குறிப்படுகின்றனர்.

சில பிரதேசங்களில் கனியவளத் திணைக்களத்தால் மணல் அகழ்வுக்கான அனுமதி பெற்ற ஒருவருக்குக் குறித்த பிரதே சத்தில் இருந்து குறித்த அளவு மணலை மாத்திரந்தான் அகழ வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அப்பிரதேசங்களில் அனுமதி வழங்கப்பட்ட அளவைவிட அதிகளவான அளவு மணல் அகழப்படுகின்றது. இதற்கு முறையான கண்காணிப்பு நடவடிக்கை இன்மையே காரணம். இவ்வாறான செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

குறுகிய காலத்திற்குள் அதிகளவு இலா பத்தை உழைக்கும் நோக்குடன் எவ்வித சமூக அக்கறையும் இன்றிச் சுற்றுச்சூழல் நலன்களையும் கருத்தில் எடுக்காது சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெறுகின் றது. இச் செயற்பாடுகளிற்கு தங்களது தலை யில் தாங்களே மண் அள்ளிப்போடுவது போன்று கிராமவாசிகள் சிலர் பயன்படுத்தப் பட்டு வருகின்றனர். வேலையின்மை, அத னால் ஏற்பட்ட வறுமை, குறுகிய காலத்திற் குள் அதிக வருமானத்தை உழைத்தல் போன்ற பல காரணங்களுக்காக கிராம வாசிகளில் சிலர் இச்செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

வடக்கில் தற்போது அதிகளவில் அபி விருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின் றன. குறிப்பாக, அதிகளவு கட்டுமானப்பணி கள் இடம்பெறுகின்றன. இதற்கு அதிகள வான மணல் தேவைப்படுகின்றது. எனவே, இந்தத் தேவைப்பாடுகளில் பெரும் பகுதி சட்டவிரோதமாகப் பூர்த்தி செய்யப்படு கின்றது. இவ்வாறு பெறும் அபிவிருத்தி யைக் கொண்டு நாம் நிலையாக வாழவும் இயலாது.

கிளிநொச்சியைப் பொறுத்தவரை மணல் அகழ்வு இடம்பெறும் பிரதேசங் களில் நிலமும் நீரும் வேகமாக உவராகி வருகின்றன. இந்த நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வு, சட்டவிரோதக் காடழிப்பு, கிரவல் அகழ்வு என்பன இச்செயற்பாட் டினை மேலும் துரிதப்படுத்துகின்றன. இன்னும் சில வருடங்களில் இந்தப் பிர தேசங்கள் மக்கள் வாழ முடியாத பிரதேசங் களாக மாற்றமடையக் கூடிய சாத்தியப்பாடு கள் உள்ளன. அடுத்த தலைமுறையினருக் காக சொத்துக்கள் சேர்க்க முற்பட்டு சட்ட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரோத மணல் அகழ்வில் ஈடுபடுவர்கள், எம் சந்ததியினர் நிம்மதியாக வாழ வேண்டும் என்றால் நல்ல இயற்கை சூழல் இருக்கவேண்டும் என்பதை மறந்து விடுகின்றோம்.




அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்

"கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளைத் தடுப்பதற்குப் போதிய அளவு பொலிஸ் அதிகாரிகள் இல்லை" என கிளிநொச்சி மாவட்ட பொலீஸ் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். அதனால், கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பதற்குப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் உதவிகளைக் கோர உள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், "கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் மண் அகழ்வுகள் சூட்சுமமாக இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களில் இவ்வகையான, சூட்சுமமான சட்டவிரோத மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வகையான சட்டவிரோத மண் அகழ்வுகளையும் இயற்கை வளங்களையும் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இருப்பினும், அவ்வகையான நடவடிக்கைகள் தோல்வியில் முடிகின்றன. காரணம், ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் உள்ள கிராமவாசிகளில் சிலர் இவ்வகையான சட்டவிரோத மண் அகழ்வுக்கு உடந்தையாக இருப்பதே சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுகின்றவர்கள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. அவர்கள் இனங்காணப்பட வேண்டும். அத்தோடு, சமூக மட்ட அமைப்புகள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை செலுத்த வேண்டும்" எனவும் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சட்ட விரோத மணல் அகழ்வினைத் தடுத்து நிறுத்த பொலிஸ் திணைக்களம், கனியவளத் திணைக்களம், மாவட்டச் செயலகம், உள்ளூராட்சி மன்றங்கள், மக்கள் அமைப்புகள் என்பன பொருத்தமான ஒரு பொறிமுறையை உருவாக்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதனையே மக்களும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.



ப.சுஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முப்பது நாட்களில் ஒரு நாளா?

## மனப்பகிர்வு

பட்டாசு படபடவென. யாருடா இது நடுச் சாமத்துல பட்டாசு கொளுத்துவது என கோபத்தோடு எழுந்து நேரத்தைப் பார்த்தேன். அது சாமம் அல்ல, அதிகாலை 5.00 மணி. வெளியில் "கவின், கவின் எழுந்துவா தலைக்கு எண்ணை வைத்துக் குளிக்க" என் மனம் சிறிது இளகியது தான்.

இருப்பினும் வெளியில் எழுந்து செல்வதற்குப் பதில் என் கரங்கள் போர்வையை தேர்ந்தெடுத்தன. சடங்குகள், சம்பிரதாயங்கள் என அனைத்தையும் சரியாகப் பின்பற்றுபவர் சரியாக ஐந்து மணிக்கு எழுந்து விடுவார் அலாரம் அடிப்பது போல்.

ஆனால் அப்பா அலாரம் வைப்பதில்லை எங்கள் வீட்டு அலாரம் அவர். என்னை ஐந்து மணிக்கு எழுப்புகிறார் என்றால், அவர் நேரத்துக்கு எழுந்து குளித்து தயாராகி விட்டார் என்று அர்த்தம். நல்ல நாள், பெருநாளில் அவர் கை பெரியவர் பாதம் பணிந்திடும். எனக்கும் ஆசைதான் என் அப்பா போன்று இருக்க. ஆனால், நான் செய்வதில்லை.

என் வயசுப் பசங்களுக்கு அது அழகல்லவே. என்னை கூப்பிட்டுக் களைத்து, பாவம் பிள்ளை தூக்கம் என அப்பா சென்று விட்டார்.

தீபாவளி வாழ்த்துக்கள் என வாட்ஸ் அப்பில் ஸ்டேட்டசும், பேஸ்புக்கில் போஸ்டும் போட்டுவிட்டு என் தூக்கத்திற்குக் கை கொடுத்தேன்.

என் வீடு நிறைய சிரிப்பு சத்தம். தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, பெரியம்மா, மாமா, பக்கத்து வீட்டுக் கவிதா அக்கா என அனைவரும் தீபாவளிக்காக எங்கள் வீட்டிற்கு வந்திருந்தனர். எனது தாத்தா, பாட்டியின் கால்களில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கியதுடன், எனக்குப் பரிசுகளும் கொடுத்தனர்.

என் வீடெங்கும் சிரிப்புச் சத்தம் மட்டுமன்றி சந்தோசமும், மகிழ்ச்சியும் நிறைந்து இருந்தன. ஒரு பெரிய மேசையில் உறவினர்கள், அயலவர்கள் கைப்பக்குவம் நிறைந்தது. புரியவில்லையா? உணவுப் பொருட்களைக் கூறினேன். கமகமவென வாசம் வீச அவ்விடம் நோக்கி நகர்ந்தேன். ஊருக்கே சமையல் நடந்து கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாத்தாவும் பாட்டியும் கூட முத்தமிட்டு, "நல்லா இருப்பாய்" என வாழ்த்தினர். உறவினர்களையும், அயலவர்களையும் அவர்களின் அன்பு நிறைந்த மனக்கிடக்கைகள் இதுபோன்ற நல்லநாள், பெருநாளிலே வெளிவருகின்றன.

தினமும் நேரத்தை வீணடிக்காது, கடிகாரம் போன்று செயற்படும் எனது அப்பா அன்றைய தினம் தன்னை மட்டுமல்ல நேரத்தையும் மறந்து முகத்தில் மகிழ்ச்சி படர, உதட்டில் புன்னகை ததும்ப, சந்தோசத்தின் உச்சத்திற்கே சென்றவர் போன்று இருந்தார். மாமன், மச்சான் என அனைவரின் வாய்களும் மாறிமாறி ஏதோ ஒரு மூலையில் நின்று முணுமுணுத்தபடி இருந்தன.

அத்தோடு மழலை மொழிகளும், சிரிப்பொலிகளும் நிறைந்திருந்தன. தினமும் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என அமைதியாக இருந்த வீடு கலகலவென நிரம்பி வழிந்தது. சந்தோசத்திற்கும், மகிழ்ச்சிக்கும் சலுகை கொடுப்பது போன்று அமைந்தது அந்தத் தீபாவளி.

அண்ணா, தம்பி, தங்கச்சி, மச்சான், மச்சாள் என என் வயதுப் பிரிவினருடன் எனது விளையாட்டு தொடர்ந்தது. அத்தோடு என் உறவுகளை வைத்து சில சில குறும்பு வாதங்கள் செய்தோம்.

எனது அம்மா சாப்பிட அழைக்கும் சத்தம் கேட்டு ஓடும் வழியில் விழுந்து விட்டேன். அம்மா....அம்மா.... வலி தாங்க முடியாது எழுந்தேன். என்னைச் சுற்றி அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி பாட்டியை விலக்கிவிட்டு வேறு யாரும் இருக்கிறார்களா என்று பார்த்தேன். எவருமில்லை.

எனது அப்பாவின் கண்கள் கடிகாரத்தை நோக்கியது நேரம் ஒன்பது ஆவதற்கு இன்னும் பத்து நிமிடம் உள்ளது. எனது அப்பாவைப் பார்த்துச் சிரித்த வண்ணம் மெதுவாக எழுந்து குளிக்கச் சென்றேன். குளித்துவிட்டு வந்தபோது, தாத்தாவும் அப்பாவும் ஒவ்வொரு மூலையில் பேப்பருடன் இருந்தனர். பாட்டி வெற்றிலை இடிக்கும் உரலுடன், டிவியின் முன்பு இங்கு மாமியாரும் மருமகளும் நண்பர்கள் என்று கூறும் அளவிற்கு நெருக்கம் இருவரும் டிவியின் முன்பு தான்.

**பண்டிகையின் பண்பாட்டையும்**
**கலாசாரத்தையும் நீ எப்பயாவது**
**பின்பற்றி இருக்கியா?**
**தலைக்கு எண்ணை வைத்து**
**குளிச்சியா?**
**சரி வந்து இவ்வளவு நேரம்**
**ஆச்சு ஆசீர்வாதம் வாங்கினியா?**
**அது என்னடா தல முடிய**
**ஒரு கலரா இருக்கு.**
**நல்ல நாளிலயும்**
**உனக்கு ஒன்பது மணி வரைக்கும்**
**தூக்கம். இப்படி இருந்தா**
**நல்ல நாள் பெருநாளும் ஒரே நாள்**
**தான் நமக்கு.**

நான் சென்றதும் அம்மா ரீ எடுத்து வந்தார். நான் என் பாட்டியிடம் கனவு பற்றிக் கூறினேன். இதெல்லாம் கனவுல மட்டும் தான் நடக்கும். இப்ப இதெல்லாம் எங்க நடக்குது?. மாமா மாமியையும், அப்பா அம்மாவையும் வீட்டுல வைத்திருப்பதே பெரிய விடயம்.

ஆனா, அந்த காலத்துல நல்ல நாட்களில் எல்லாரும் ஒண்ணா சேர்ந்து இருந்திருப்பம். இப்ப மனுசனுக்கு மனுசன் முகமே பாக்குறது இல்ல. அப்படியே பார்த்தாலும் ஏதோ பேயப் பாக்குற மாதிரி ஒரு முறைப்பு. கண்டும் காணாதது போல நடத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தங்கள் எல்லாம் எதுக்கு என்று நினைக்கிற இந்தக் காலத்துல உன் கனவு கனவா மட்டும்தான் இருக்கும். இப்ப எல்லாமே நம்ம கைக்கு உடனே கிடைக்கிறதால மனசுக்கு சோம்பேறித்தனம் கூடிப் போச்சு. இப்ப உங்க அம்மாவை எடுத்துக்கொள். கடையில தான் பலகாரம் என்ற பெயரில் ஏதோ வாங்கி வச்சிருக்கா. அதக் கடித்ததில் தாத்தாவுக்கு ஒரு பல்லே போயிட்டு.


நல்லவேளை என்கிட்ட ஒரு உரல் இருக்கு. இல்லன்னா என் பல்லும் பலகாரத்துக்கு இரையாகியிருக்கும். அம்மாவின் தலை பாட்டி பக்கம் திரும்பியது. பார்வையில் கௌதமரே தோற்றுவிடுவார் போல.

பாட்டியின் பார்வை என் பக்கம் திரும்பியது. பாட்டியிடம் இருந்து தப்பித்து வழமை போன்று பைக்கை எடுத்துக்கொண்டு ஊர் சுற்றத் தொடங்கினேன். இன்று பேச்சுக்குக் கூட பேசுவார் இல்லை. நல்ல நாள், பெரு நாள் முப்பது நாளில் ஒரு நாள் போன்றே போகிறது. ஆடிப்பாடி கூடி உண்ட காலம் போய்விட்டது.

பண்டிகையும் பாரம்பரியமும் டிவியின் முன்பே கடந்து போகின்றன. தேடல்களும் தேவைகளும் நிறைந்த உலகில் ஒரு மனிதன் உறவுகளையும் அயல்களையும் அடிக்கடி சென்று பார்வையிடவும் நேரமில்லாது சக்கரத்தை காலில் கட்டி ஓடுபவர்களுக்கு, உறவுகளை வலுப்படுத்தவும் சுற்றாருடன் சுற்றித்திரிந்து தங்களுக்கு இடையிலான இணைப்பினை வலுப்படுத்தவும் இறைவனால் கொடுக்கப்பட்ட புனித நாட்களே பண்டிகைகள். அந்த நாட்களையும் முப்பது நாட்களில் ஒருநாள் போல் கடந்து செல்லாதீர்கள். உங்கள் வாழ்வில் சிறப்பான நாளாக மாற்றுங்கள்.



இ.அனுஷி




தே. கவினயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

New Evergreen Printers (Pvt) Ltd. Jaffna. 021 222 9893